784

நொண்டிக் கிளி

தி. ஜ. ர.

2 FEB 1972

Book supplied by the University Co-op. Stores, Madurai.

கலைமகள் காரியாலயம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

முதற் பதிப்பு: ஸெப்டம்பர், 1949.
இரண்டாம் பதிப்பு: நவம்பர், 1959.

உரிமை பதிவு

விலை ரூ. 2/50 ந. பை.

76306

O31:3N01x

591

PRINTED AT THE M. L. J. BRANCH PRESS, TIRUVIDAIMARUDUR.

ஆசிரியர் குறிப்பு

இவை என் சிறுகதைகளின் இரண்டாவது தொகுப்பு. முதல் தொகுப்புக் காலத்திலேயே கையில் இருந்தும் விட்டுப்போன ஒன்றிரண்டும், பிற்காலத்தில் 'சக்தி', 'கலைமகள்', 'தனவணிகன்', 'குமரி மலர்' ஆகியவற்றில் எழுதிய சில கதைகளும் இதில் அடங்கியிருக்கின்றன. அந்தப் பத்திரிகைகளின் அதிபர்களுக்கு என் நன்றி.

கதைகள் பல மன நிலைகளில், சுமார் இருபது வருஷத்துக்கு மேற்பட்ட காலத்தில் எழுதப் பெற்றவை. ஒன்று போல் ஒன்று இல்லை என்பதை நான் உணர்கிறேன். அதுவே இதன் குறை; அதுவே இதன் பலம். ஒருவருக்கு ஒரு மன நிலையில் பிடிக்காத ஒரு கதை, அவருக்கே மற்றொரு மன நிலையில் பிடிக்கலாம்; மற்றொருவருக்கு நிச்சயமாய்ப் பிடிக்கலாம்.

இதற்கு என் ஆப்த நண்பர் மஞ்சேரி எஸ். ஈச்வரன் முன்னுரை எழுத ஒப்புக்கொண்டது என் பாக்கியம். அவருக்கு நான் நன்றி கூறினால், அது வெறும் உபசாரமாகும். கண்ணும் கையும் ஒன்றுக்கொன்று நன்றி கூறிக்கொள்வதில்லை. அவர் என்னைப் பாராட்டவும் குறை சொல்லவும் உரிமையுள்ளவர்; தகுதியும் மிக்கவர். அவைகளை ஏற்றுக் கொள்ள நான் கடமைப்பட்டவன்.

இதை அழகாக வெளியிடும் 'கலைமகள்' காரியாலயத்தாருக்கு என் மனப்பூர்வமான நன்றி.

— தி. ஜ. ர.

நண்பரும் சிறுகதையும்

மஞ்சேரி எஸ். ஈச்வரன்

முதலிலே ஒரு விஷயம்: முன்னுரை என்பது ஆளை மறந்துவிட்டு எழுதக்கூடியதல்ல; ஆசிரியரின் யோக்கியதைக்கு 'ஸர்டிபிகேட்' கொடுப்பதும் அல்ல. இந்தக் கதைகளின் ஆசிரியரைத் தமிழ்நாடு மிக நன்ருக அறியும். அதற்கு இவரை நான் அறிமுகப்படுத்த எண்ணிஞல் அது அநாவசியமாகும்; அசட்டுத்தனமும் ஆகும். சென்ற பதிஞறு வருஷ காலமாக, தி. ஜ. ரங்கநாதன் என் நண்பர். அவருடைய நம்பிக்கைகளிலும் அதைரியங்களிலும், இன்பங்களிலும் துன்பங்களிலும், சோர்வு நேரங்களிலும் உற்சாக நேரங்களிலும் அவரை நான் அறிந்திருக்கிறேன்; அவரும் என்னை இந்த நிலைமைகளிலெல்லாம் அறிந்திருக்கிருர். என்னுடைய பல ஆங்கிலக் கதைகளை அவர் தமிழில் மொழிபெயர்த்திருக்கிருர்; அவருடைய சில தமிழ்க்கதைகளை நான் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறேன். என் புத்தகங்களைப் பற்றிப் பத்திரிகைகளில் அவர் விமர்சனம் செய்திருக்கிருர்; அவைகளில் அவர் ஒரு குறையும் கண்டதில்லை. அவருடைய புத்தகங்களில் நான் ஒரு குறையும் கண்டதில்லை. ஆகவே, எதிலும் குற்றம் காண்பதையே தொழிலாகக் கொண்டவர்கள், "நண்பரின் அபிப்பிராயம் மதிக்கத்தக்க அபிப்பிராயம் அல்ல" என்று சொல்லத்தான் சொல்லுவார்கள். அதைப்பற்றிக் கவலைப்படாமலே என் கருத்துக்களை இங்கே தருகிறேன். இவைகளை, 'அபிப்பிராயம்' என்று நான் சொல்லவில்லை; இல்லவே இல்லை. கருத்துக்கள் என்றே சொல்லுகிறேன். தி. ஜ. ர. வின் குணுதியசத்தையும் இலக்கியக் கலைஞர் என்ற முறையில் அவர் இயல்பையும்பற்றி என் சிந்தனையில் எழுந்த கருத்துக்கள் இவை. அவர் அடக்கம் நிறைந்தவர். தொட்டாற் சுருங்கி. தம் உணர்ச்சிகளை முற்றும் அடக்கியாள்பவர். துன்பத்திலும் சர்விலும் தீரத்துடன் அநுதாபம் காட்டுபவர். ஒரு கணம் மலைத்து நிற்பார்; மறு கணம் வெற்றி காண்பார். ஆண்டவன்

உண்டோ என்று சந்தேகம் கொள்வார்; அவனைத் தொழவும் தொழுவார். சாந்தம் நிறைந்தவர்; கண்டிப்பும் காட்டுவார். சுருக்கமாய்ச் சொல்லுவார்; அது விளக்கமாய் இருக்கும். கேலி செய்வார்; அதில் பொருள் நிறைந்திருக்கும். களைத்திருப்பார்; மனம் சலிக்கமாட்டார். சகிப்புத்தன்மை, கச்சிதம், எளிமை, சாமர்த்தியம் இவை பொதிந்திருக்கும் அவர் எழுத்திலே. யாரோடும் சேராமல் ஒதுங்கியிருப்பார்; கூடி வாழ்வதில் வெறுப்பில்லாதவர். அவருடைய இந்தத் தன்மைகள் எல்லாம் இங்கே உள்ள கதைகளில் பிரதிபலிக்கின்றன; அவை பற்பல அம்சங்களாகப் பரவிக் கிடக்கின்றன; அவற்றையெல்லாம், அவருடைய நண்பனுகிய நான், அன்புடன் ஒருமைப்படுத்தி முழுமையாக ஏற்றுக்கொள் கிறேன். குறை சொல்வது நட்பல்ல; நம்பிக்கை ஊட்டுவதுதான் நட்புக்கு அழகு.

2

எந்தக் கலையிலும் விசேஷ ஆராய்ச்சி செய்ய விரும்பாத சாமான்ய மக்களுக்கு ஆனந்த மூட்டி, அதன் மூலம் புத்தகப் படிப்பு ஆசையை அவர்களிடம் தூண்டுபவை கதைகள்தாம். அன்னை இந்தியதேவியின் குழந்தைகள் நாம். நம் நாடே பிரம்மாண்டமான கதைப் பொக்கிஷம். நம் ராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்கள், வேத கீதங்கள், உபநிஷத்துக்கள், பஞ்ச தந்திரம், ஹிதோபதேசம் ஆகியவற்றிலிருந்து பெருகிய மகாநதிபோல் எண்ணற்ற கர்ணபரம்பரைக் கதைகள், பிராணிக் கதைகள், உவமைக் கதைகள், யோகினிக் கதைகள், குட்டிக் கதைகள் இவை நாட்டிலே நிறைந் திருக்கின்றன. அந்த மகா நதியிலே பற்பல உபநதிகளும் வந்து விழுந்து, அழகிய அருவிகள், கால்வாய்கள், ஏரிகள், மடுக்களையெல்லாம் நிறைத்து, எல்லையற்ற பெருங் கடலாய்ப் - கதா ஸரித் ஸாகரமாய் - பெருகிக் கிடக் கின்றன. மூலநதியை அறிந்த பின்பு, இந்த உபநதிகள் அனைத்திலும் நமது மனம் யாத்திரை புரிந்து திக்விஜயம் செய்யலாம். ஒரு கதையைப் படிப்பது நல்லதுதான்; ஆனால், அது போதாது; அதை நன்ருய் அனுபவிக்கா விட்டால் பயன் இல்லை. அனுபவியாமல் படித்த கதை அரைக்கதையே ஆகும். பள்ளிக்கூடப் பாடப்புத்தகங்

களைப் போல, மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே எழுப்பிய தடைச்சுவராகக்கூட அது முடியும். நம்மையெல்லாம் ஒன்று கூட்டி உறவு கொள்ளச்செய்யும் முறையில், தேசத்தின் கதைகளைத் திரும்பத் திரும்பச் சொல்வது மிக அவசியம்; இன்று மிக மிக அவசியம். உலகத்தின் உன்னதமான கதைகள் ஒவ்வொருவர் மனத்திலும் இருக்கவேண்டும். அவைகளை எல்லாரும் அநுபவிக்க வேண்டும்; அவைகளுக்கு நம் சிருஷ்டிகர்த்தாக்கள் புதுப்புது உருக் கொடுக்கவேண்டும். பிதுரார்ஜிதமாய் நாம் பெற்ற கலைச்செல்வத்திலேயே விலைமதிக்க வொண்ணாத பொக்கிஷம் அந்தக் கதைகள் தாம்.

மனிதனின் மனோதர்மத்தில் கதை என்பது எவ்வளவு அரிய சொத்து என்பது அநேகருக்குப் புரிவதில்லை. நாட்டிலே உள்ள ஓர் இடத்தை ஒரு கதை, மனோதர்மத்திலே புனிதப்படுத்துகிறது. அந்த இடம் நமது வீட்டையும்விட மிக உண்மையானதாக நம் மனத்தைப் பற்றிவிடுகிறது. தங்கள் பிரியத்தைக் கொள்ளைகொண்ட இடங்களைக் கவிஞர்கள் இதே விதமாகப் போற்றிவிடுகிறார்கள். அவர்களின் சிந்தனை போற்றிய இடமெல்லாம், விசேஷ அர்த்தமும் விசேஷ ஜீவனும் விசேஷ உணர்ச்சியும் பெற்றுவிடுகின்றன.

சரித்திர ஆரம்பகாலத்திலிருந்தே, கோயில் பிராகாரங்களிலும் ராணுவ முகாம்களிலும் யாத்திரிகர் சத்திரங்களிலும் சந்தைக்கூடங்களிலும் கதை கேட்க மக்கள் கூடிவிடுவார்கள். கதைசொல்லுவோரில் நகைச்சுவை மிகுந்தவர்கள், விகடம் செய்வதில் தங்கள் மேதையைக் காட்டி, கேட்போரை விழுந்து விழுந்து சிரிக்கச்செய்வார்கள்; அல்லது அவர்களின் உதட்டிலே ஒரு சிறு புன்சிரிப்பை எழுப்புவார்கள். காட்டாறு போன்ற மனம் படைத்தவர்கள், தங்கள் கதைகளிலே இடியும் மின்னலும் தீரச்செயல்களுமாக நிறைத்துவிடுவார்கள்; வீரத்தின் சுடரொளியும் காதலின் மென்மையான வர்ணங்களும் அவைகளிலே மின்னும். ரோஜாவும் சண்பகமும் போல - வர்ணமும் மணமும் நிறைந்த வேறு எந்த மலரையும் போல - உலகத்தோரின் மனத்தை, அழகும் அற்புதமும் நிறைந்த கதைகள் கவர்ந்துவிடுகின்றன.

3

மேல்நாட்டிலே சிறுகதை வளர்ந்த வரலாறு மிகவும் ரசமானது. ஆதிகாலத்துச் சிறுகதை ஆசிரியர்களான கிரேக்க சரித்திராசிரியர் ஹெரோடடஸ், ஞானி ஈசாப் (கி. மு. 570-இல் வாழ்ந்த பைதாகரஸ் என்ற கிரேக்க வேதாந்திக்கு ஸம காலத்தவர்) இந்த இருவரும் தங்கள் கதைகளில் செயலுக்கே முக்கிய ஸ்தானம் அளித்தார்கள்; ஏதாவது ஒரு நீதியை விளக்குவதாக அந்தச் செயல் அமைந்திருக்கும். காட்சி ஸ்தலம் அதாவது 'சூழ்நிலை' பற்றிய வர்ணனை சீக்கிரத்திலேயே வழக்கத்துக்கு வந்து விட்டது. ஆனால், ஜீவனுள்ள கதாபாத்திரங்களைச் சிருஷ்டிக்கும் முறை மெல்ல மெல்லத்தான் தோன்றியது. அவைகள் வேண்டுமென்று, பதினெட்டாம் நூற்றாண்டு வரையில் பொதுவாக வாசகர்கள் கோரவில்லை.

'கதை' என்பது, ''உண்மையான அல்லது கற்பித மான சம்பவங்கள், கர்ணபரம்பரையாக வழங்கிவரும் நிகழ்ச்சிகள், புராணம், சிறுதுணுக்கு, நாவல், விசித்திர விநோதம் இவைபற்றி வசனநடையிலோ கவிதையிலோ வாயால் சொன்னதாகவோ அச்சிலே பதித்ததாகவோ இருக்கலாம்; அது எந்த அளவு நீளம் வேண்டுமானாலும் இருக்கலாம்'' என்று சுருக்கமான ஆக்ஸ்போர்டு அகராதி (ஸி. ஓ. டி.) பொருள் தருகிறது. 'சிறுகதை' என்பது, ''பெரும்பாலும் ஒரே நிகழ்ச்சி பற்றியதாக இருக்கும்; ஒரு பத்திரிகையில் கட்டுரையாகவோ, ஒரு தொகுப்பில் ஒன்றாகவோ பிரசுரமாகியிருக்கும்'' என்று அது விளக்கு கிறது.

அகராதி அர்த்தம் ஒருபுறம் இருக்கட்டும். நறுக்குத் தறித்தாற்போல் கச்சிதமாகச் 'சிறுகதை'யை வர்ணிக் கும் சில விளக்கங்கள் என் கண்ணில் பட்டன. அவை களைப் பாருங்கள்:

அது சரேல் என்று எடுத்த போட்டோப் படம்.

அது நூறு கஜ தூரம் தலைதெறிக்க ஓடும் ஓட்டம்.

அது பரிபூர்ணமாய்ப் பக்குவம் செய்த அற்பம்.

அது ஒரு கண நேரத்தின் நிரந்தர ஞாபகச் சின்னம்.

அது நாவலின் இளையதாரக் குழந்தை.

இவையெல்லாம் மிகவும் சாமர்த்தியமான வர்ணனைகள்தாம். ஆனால், தீர்க்கமான விளக்கம் அல்ல. சிறுகதை என்பது என்னவாக வேண்டுமானாலும் இருக்கலாம்; ஒரு சிறு சம்பவம், சித்திரம், மனோராஜ்யம், நிகழ்ச்சிக் குறிப்பு, பாத்திர வர்ணனை, கோவைப்படுத்திச் சொல்லும் வரலாறு இவைகளில் எதுவும் சிறுகதைதான். அது மனம்போன போக்காகச் சுற்றி அலைந்துகொண்டிருக்கக்கூடாது; எந்த ஓரிடத்திலும் தயங்கித் தாமதிக்கலாகாது. அதில் ஒருபோதும் உபபாத்திரங்களோ, இடை நிகழ்ச்சிகளோ, சம்பந்தமற்ற சிந்தனைகளோ இருக்கக்கூடாது. அது ஒருமுனைப்பட்டதாக இருக்க வேண்டும்; மையப்புள்ளியைச் சுற்றிய வட்டம்போல, தன் முக்கிய விஷயத்தை ஒட்டியே செல்லவேண்டும். இந்த எல்லாவற்றுக்கும் மேலாக, அது சிறியதாக இருக்க வேண்டும். 1,500 முதல் 15,000 வரைக்கும் அதன் வார்த்தைகள் இருக்கலாம். என்றாலும், அது தன் அமைப்புக்கூட்டுக்குள்ளே நெருக்கமாய்ப் பின்னிக் கொண்டு, தன்னிலே தானே பூர்த்தியாக இருக்க வேண்டும்.

பதினெட்டு வருஷகாலமாக நான் சிறுகதைகள் எழுதிவருகிறேன். ஆயினும், சிறுகதை எப்படி எழுதுவது என்று யாராவது என்னைக் கேட்டால், என்னால் விளக்க முடியுமா என்பது எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறது. ஒவ்வொரு புதிய சிறு கதையை எழுதும் போதும், முதல் முதல் சிறுகதை எழுத ஆரம்பிக்கப் போகிறவனைப்போலவே எனக்குத் தோன்றுகிறது. ஒவ்வொரு சிறுகதையும் மனத்திலே உதிக்கும்போது, அதைச் சொல்ல அதற்கென்றே பிரத்தியேகமான சில முறைகள் தேவைப்படுகின்றன. ஒரு கதையைச் சொல்லப் பயன்பட்ட முறைகளை மற்றொன்றைச் சொல்லும் போது ஒதுக்கித் தள்ளவேண்டியிருக்கிறது. ஆனால், ஒன்றே ஒன்றுமட்டும் மனத்திலே நன்றாய்ப் பதிந்திருக்க வேண்டும்: ‘சிறுகதை’ சிறியதாக இருக்கவேண்டும்.

சிறுகதை என்றால் சிறியதுதானே என்று எண்ணி, பல எழுத்தாளர்கள் அதை எழுதுவது சுலபம் என்று நினைத்துவிடுகிறார்கள். ஆனால், மேலுக்குத் தோன்று

வதுபோல், அது அவ்வளவு சுலபம் அல்ல. கனிசமான மைய நிகழ்ச்சி, அதைத் தெளிவாக விளக்கும் வர்ணனை, நெருக்கடியான சிக்கல், அந்தச் சிக்கலை அவிழ்க்கும் முடிவு, திருப்திகரமான சூழ்நிலை, வாசகரின் மனத்தைத் தங்கள் செயல்களில் சிரத்தை கொள்ளச்செய்யும்படி அமைந்த கதா பாத்திரங்கள் இந்த எல்லா அம்சங்களும் சிறுகதைகளின் சில ஆயிரம் வார்த்தைகளுக்குள்ளே பொருந்தி யிருக்கவேண்டும். ஏழு முதல் இருபது நிமிஷங் களுக்குள் படித்துவிடக்கூடிய ஒரு சிறுகதையை எழுத ஒரு வாரமோ அதற்கும் அதிக காலமோ ஆகிவிடும். ஒவ்வொரு கதாசிரியரின் வாழ்க்கையிலும், காலையில் எழுதத் தொடங்கிய ஒரு கதை மாலையிலே பூர்த்தி யாகிவிட்ட பாக்கியநாட்கள் மிகவும் அபூர்வமாகத்தான் இருக்க முடியும். "நாலே மாதத்தில் பன்னிரண்டு நல்ல சிறு கதைகளை எழுதிவிட்டேன்" என்று பெருமை யாய்ச் சொல்லிக் கொள்ளக்கூடிய ஆசிரியர்கள் யாரா வது இருப்பார்களோ என்பது சந்தேகந்தான்.

4

சிறுகதையைப்பற்றி, தி. ஜ. ர. வும் நானும் எண்ணற்ற தடவை சம்பாஷித்திருக்கிறோம்; அதன் கலை உருவத்தையும், ஒவ்வோர் ஆசிரியரும் கைக்கொள் ளும் தனித்தனி முறைகளையும், சிறந்த சிறுகதை நிபுணர் களையும், சிறுகதையின் மூலம், கருத்தரிப்பு, கரு வளர்ச்சி, பிறவி வேதனை, பிறப்பு ஆகியவைகளையும் பற்றிச் சம்பாஷித்திருக்கிறோம். ஒரு சிறுகதையின் கருவளர்ச் சிக்காலம், சிலவேளை ஐந்தாறு வருஷங்கூட நீண்டு போகிறது! நாங்கள் இருவரும் பல சமயம் பல கதை களைப் பரஸ்பரம் சொல்லிக்கொண் டிருக்கிறோம். பஸ் அல்லது டிராமில் போய்க்கொண் டிருப்போம்; ஓட்டலில் சிற்றுண்டி அருந்திக்கொண் டிருப்போம்; ஒரு விசித்திர மான முகத்தைக் காண்போம்; ஒரு சுவரொட்டி விளம்பரம் கண்ணிலே தென்படும்; பாதசாரிகளின் கூட்டத்திலே அகஸ்மாத்தாக எவரோ பேசும் ஒரு வார்த்தை காதிலே விழும். — அப்போதெல்லாம், எங்களுக்கே சிறிதும் தெரியாத பின்புலத்துடன் பல கருத்துக்கள் எங்கள் மனத்தில் உதயமாகும். ஆனல், அந்தக் கருத்துக்களுக்கு உருக்கொடுத்து, பற்பல

விதமான உணர்ச்சிகளை ஏற்றி, காகிதத்திலே கதா ரூபத்தில் எழுதி நாங்கள் ஒருவரிடம் ஒருவர் காட்டுவோம். அப்போது, பின்புலம் தானாகவே அமைந்து, உருப்பெற்று, நிகழ்ச்சி நன்றாகச் சித்திரமாகி, பாத்திரம் ஜீவனோடு உருவாகியிருப்பதைக் காண்போம்.

சிறுகதை எழுதும் கலையை, 'உயர்தர' விமர்சனம் என்ற முள் வேலி இன்று சூழ்ந்திருக்கிறது. சிறுகதை எழுத ஆசைப்படுகிறவருக்கு, 'அது கூடாது', 'இது கூடாது' என்று நியமம் விதிக்கிறார்கள். ஆரம்பிக்கும் போதே பலவிதத் தடைகளை விதித்து அவரைத் திகைக்கச் செய்கிறார்கள். 'உங்கள் கதைக்கு எடுத்துக் கொண்ட விஷயத்தை நன்றாக வடிகட்டி, அமிர்த தாரையாகச் செய்யும்வரையில் எழுதத் தொடங்க வேண்டாம்', 'உங்கள் நடை துளியும் சதை ஒட்டாத எலும்பாக இருக்கவேண்டும்', 'அநாவசிய வர்ணனைச் சொல் ஒன்றே ஒன்றுகூட இருக்கக்கூடாது', அளவுக்கு மேல் ஒரே ஓர் அசைகூட இருக்கக்கூடாது', 'சம்பந்த மில்லாத வெளி விஷயத்தைப் புகுத்துவது மகாமோசம்', 'விஷயத்தை விட்டு எங்கெங்கேயோ தாவுவது பெரும் பாவம்', 'உங்கள் பாத்திரத்தின்மீது நீங்கள் அநுதாபம் காட்டினால் விபரீதம் விளைந்துவிடும்'—இப்படி, எத்தனை எத்தனையோ தடைகள்! அநேக வருஷங்களுக்கு முன்னே ஆங்கிலச் சிறுகதை நிபுணர் ஒருவர், ''சிறுகதை எழுத ஒன்பது வழியுமுண்டு; தொண்ணூறு வழியும் உண்டு. அத்தனையும் சரியானவைதாம்'' என்று சொல்லியிருக் கிறார். சிறுகதை எழுத முதல் முதலாக ஆசைப் படுகிறவருக்கு நான் கூறும் உதாரணம் இதுதான்: ''அவன் கதை விடுறான்.'' இந்தச் சொற்றொடரிலே சம்பூர்ணமான சிறுகதை அடங்கியிருக்கிறது; காட்சி, சூழ்நிலை, பாத்திரம், சம்பவம், முடிவு இந்த எல்லா வற்றையும் மிகச் சுருக்கமாக இதிலே சொல்லி முடித் தாயிற்று. மிகச் சிறந்த சிறுகதை, சகல விதிகளையும் பொத்து நொறுக்கிக்கொண்டு எங்கிருந்தோ வந்து குதிக்கிறது; தனக்குரிய உருவத்தைத் தானே சிருஷ்டித் துக்கொள்கிறது. 'ஆசிரியர், தம் சொந்த முறையிலே ஒன்றைக் காண்பதும் அதைத் தம் சொந்த முறையிலே சொல்லுவதுந்தான்' சிறுகதைக்கு மிக முக்கியம். கற்பனையும் கூர்ந்த திருஷ்டியும் அநுபவமும் இல்லாதவர் களுக்கு, எத்தனைதான் கலை நுணுக்கத் தந்திரங்களைச்

சொன்னாலும் பயன்படாது. அந்தத் தந்திரங்களே இப்போது உலகெங்கும் ஏராளமாய் மலிந்துவிட்டன. 'அநுபவம்' என்பது புறப்புலன்களால் அடைவதல்ல. அக அநுபவந்தான் இங்கே முக்கியம். உணர்ச்சியும் கூர்மையும் உள்ள கண்ணுக்கு, எந்தப் பொருளும் அற்பம் அன்று. மிக அற்பமான மலர் ஒன்று காற்றிலே வீசினால்கூட, கண்ணீர் வெள்ளம் பொங்கும் உணர்ச்சி உண்டாகிவிடலாம்.

5

தி. ஜ. ர. வின் எழுத்து, சொந்த விருப்பு வெறுப்பு என்ற களங்கம் சிறிதும் இல்லாதது. இன்று தமிழில் மிகச் சிறந்த அசல் சிறு கதைகளை எழுதும் ஆசிரியர்களுக்குள் ஒருவர் அவர். சர்வசாதாரணமான தந்திரங்களை அவர் கையாள்வதில்லை; விஷத்தைப்போல் அவைகளை அவர் ஒதுக்கிவிடுகிறார். இலக்கிய ஜால வேடிக்கை என்ற படுகுழியில் விழாமல் ஒதுங்கிச் செல்பவர். தமக்கு நிதமும் ஏற்படும் அநுபவங்களை மழுப்பிச் சொல்லுவதோ அவைகளை ஒதுக்கித் தள்ளுவதோ அவரிடம் கிடையாது. கதை என்பது, அவர் தம்முடைய அநுபவம் என்ற ஆரத்தைக் கொண்டு எட்டி வரையும் வட்டமாகும். ஆழ்ந்த தத்துவங்களைச் சொல்வதாக, அவர் ஒருபோதும் பாசாங்கு செய்வதில்லை. உணர்ச்சி மோஸ்தர் ஒன்றை அவர் அமைத்துக் கொடுப்பார். மனித இருதயத்திலும் மனத்திலும் உண்டாகும் குழப்பங்களையெல்லாங்கூட அதிலே பொருத்தக்கூடிய விதமாக அது நயமும் ஒழுங்கும் பெற்று விளங்கும். சமூக வாழ்வைப்பற்றிய கூர்மையான பிரக்ஞையோடு, சமூகக் காட்சிகளைப் பகுத்துக் கூறிட்டு, அந்தக் கூறுகளை ஒரு புதிய ஒழுங்குடன் இசைப்பவர் அவர். சதுரங்கக் கட்டத்தில் காய்களை நகர்த்துவதுபோல், தம் கதாபாத்திரங்களை இயக்குகிறார். அவர் கலை நுணுக்கம் மிகுந்தவர். இதுவே சில சமயம் அவர் கதைகளைப் பலவீனப்படுத்துகிறது; அவைகளுக்குத் தனிச் சிறப்பும் தருகிறது. இதற்குக் காரணம் உண்டு: வாழ்க்கையின் அடிப்படை உணர்ச்சிகளெல்லாம் கரடு முரடாகத்தான் இருக்கும்; அவரோ கதையின் அமைப்பு ஒத்தாற்போல் இருக்கவேண்டும்

என்பதற்காக, அவைகளையெல்லாம் இழைத்து நகாசு செய்துவிடுகிறார்.

இந்தக் கதைகள் அவருடைய இரண்டாவது தொகுப்பு. முதல் தொகுப்பான 'சந்தனக் காவடி' 1938-ஆம் வருஷம் பிரசுரமாகி, நான்கு பதிப்பு விற்றிருக்கிறது. கதை சொல்வதில் அவருக்குள்ள திறமைகள் எல்லாம் அதிலேயே வெளியாயின. அவைகள் இந்தத் தொகுப்பிலே மதுரமாய்க் கனிந்திருக்கின்றன. தலைப்புக் கதையான 'நொண்டிக் கிளி'யில் அவருடைய முழுத் திறமையும் வெளியாகியிருக்கிறது; அவருடைய அநுதாபம் எவ்வளவு பரந்தது, சக்தி மிகுந்தது, சம்பூர்ணமானது என்பதை இது காட்டுகிறது. 'ஹத்து மீறுமல் எழுதவேண்டும்' என்ற கட்சியைச் சேர்ந்த அவர், இதிலே துணிச்சல் கொண்டுவிட்டார். இது முதல் முதலில் வெளியானதும், இதை நான் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தேன். அப்போது இதைப்பற்றி இந்தக் குறிப்பை எழுதினேன்: "இந்தக் கதாபாத்திரத்தின் குணசித்திரம் அநேக அம்சங்களில் துர்கனேவ் என்ற ஆசிரியரின் ஆன் தி ஈவ் என்ற கதையில் வரும் எலீனு என்ற பாத்திரத்தை ஞாபகப்படுத்துகிறது. அதிலும் இப்படியே ஒரு வாலிபப் பெண் தன் வாழ்க்கையின் ஒரு முக்கியமான கட்டத்தில், கொஞ்சமும் மனங்கூசாமல் தீரமாய்த் தன் உள்ளத்தின் சிந்தனைகளையும் உணர்ச்சிகளையும் அலசி ஆராய்கிறாள்."

இந்தத் தொகுப்பில் உள்ள சகலமுமே, சிறு கதைக்குச் சிறந்த உதாரணங்களாக விளங்குகின்றன. இதிலே பற்பல விதமான கதைகள் இருக்கின்றன. இந்தத் தொகுப்பிலே எனக்கு அலாதியான ஒரு பிரியம். அதற்குக் காரணம், ஆசிரியரின் 'நாகரத்தினம்' என்ற கதையின் தொடர்ச்சியாக நான் எழுதிய 'நாகத்தின் பிராயச்சித்தம்' என்ற கதை இதில் இடம் பெற்றிருப்பதுதான். தி. ஜ. ர. தமது கதையை எழுதியதும், "மாணிக்கத்தை நீங்கள் கொன்றிருக்கக்கூடாது. அவன் அன்பு செய்யப் பிறந்தவன்; கிராமவாசிகளின் ஆண்மைக்கும் பால் போன்ற உள்ளத்துக்கும் உதாரண மகன். இதை நான் நாகத்திடம் சொன்னேன்; ஆம் என்று அது ஒப்புக்கொண்டது; பிராயச்சித்தமும் செய்துவிட்டது. எனவே இந்தக் கதை" என்று

அவருக்கு எழுதினேன். அசல் கதை, அதைத் தொடர்ந்த என் கதை இரண்டையும் பற்றி, சிறப்பு வாய்ந்த பிரிட்டிஷ் ஆசிரியரும் இலக்கிய விமர்சகருமான என் நண்பர் ஜான் ஹாம்ஸன் என் கதைத் தொகுப்பு ஒன்றுக்கு எழுதிய முன்னுரையில் கூறியிருப்பது இது: ''கவிதா நயத்துடனும் கற்பனையுடனும் சொல்லியுள்ள சோகக் கதை அது. நண்பர் ஈச்வரன் அதன் கீத இனிமையில் மனம் திளைத்தவராய், அநுதாபத்தால் எழுந்த துணிவுடன், கதாநாயகிக்கு மங்களமான முடிவு கொடுக்கும் ஒரு கதையை அதற்குத் தொடர்ச்சியாக எழுதியிருக்கிறார். நாட்டுப்புறக் கதைகளை இது ஞாபகப்படுத்துகிறது. நம் மனத்தைக் கொள்ளை கொள்ளும் ஜீவனுள்ள உளுந்தாயியின் உடைந்த மனத்துக்கு மீண்டும் உயிரளிக்கும் மாறுதலை, ஈச்வரனின் மந்திரசக்தியால் நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.''

மற்றக் கதைகளுக்குள், அந்தக் குஷியான போக்கிரி 'பீதாம்பர ஐயர்,' சூட்சுமமான கேலி நிறைந்த 'நவீன கதாசிரியன்,' அன்பும் உருக்கமும் ததும்பும் 'பொம்மை யானை' நம்பிக்கையும் கருணையோடு கூடிய சிலேடையும் பொதிந்த 'மரத்தடிக் கடவுள்' ஆகியவை எனக்கு விசேஷ இன்பம் கொடுத்தன.

தி. ஜ. ர: வின் நடையைப்பற்றி நான் சொல்லத் தேவையில்லை. பொருத்தமான பதப் பிரயோகம், கவிதையின் ஜீவ ஒளி, அசல் வார்த்தைகளின் மீது மின்னலைப்போல் ஒளி வீசி அவைகளை தெளிவுற்ற ரத்தினங்களாகச் செய்யும் அடை மொழிகளை உபயோகிக்கும் லாகவம் இவையெல்லாம் அவரிடம் விசேஷமாக அமைந்திருக்கின்றன. சாமான்ய மக்களிடம் தமக்குள்ள தீவிர அன்பினால், அவர்களை அவர் அசடர்களாகவோ வீரர்களாகவோ செய்துவிடுகிறார். கதை சொல்வதில் அவருக்குள்ள திறமைகள் அனைத்திலும் தலைசிறந்து நிற்பது அவரிடம் இயற்கையாய் அமைந்திருக்கும் சுலபமான நடை. அவருடைய ஒரு கதையைப் படித்தால், தெளிந்த ஊற்று நீரில் ஒரு குவளை குடித்தது போல் இருக்கும்; இன்னும் சிறப்பாகச் சொன்னால், வழுக்கைத் தேங்காயின் இனிப்பான இளநீரைக் குடித்தது போல் இருக்கும்.

மேல் நாடுகளைப் போலவே இங்கேயும் சமீப வருஷங்களில், சிறுகதை 'மதம்' ஒன்று தோன்றியிருக்கிறது; இலக்கிய டாம்பிகம் என்ற மர்மத்திரை ஒன்றும் அதை வந்து சூழ்ந்துகொண்டிருக்கிறது. அதன் பக்தர்கள், அந்த மதக் கோஷ்டியின் தாந்திரிகச் சடங்குகளில் ஈடுபட்டுத் தீட்சை பெற்று இயங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஞானம் மிகுந்த ஆந்தையைப் போல், சிலர் பயபக்தியோடு நடக்கிறார்கள்; அங்கியும் பாவாடையும் அணிந்து மினுக்கும் பள்ளிக்கூடப் பெண்களைப் போல், மற்றும் சிலர் ஆடம்பரம் பண்ணுகிறார்கள். இத்தகைய 'மதங்'களைப் பரப்பும் பல பத்திரிகைகளைத் தாம் பதிப்பித்திருந்தும், தி. ஜ. ர. நல்ல வேளையாக இந்த மாதிரி 'மதம்' ஒன்றிலும் சாரவில்லை.

சிறுகதை என்பது, அரைத் தூக்க நிலையில் இருப்பவர்களால் அநுபவித்துப் பாராட்டக் கூடியது அல்ல ஒரு சிறுகதையின் ஆசிரியர், 'அகல் விளக்கு ஒன்றை ஏற்றுகிறார்; தமக்குக் கிடைத்த சிறிது நேரத்துக்குள் அதை ஜாக்கிரதையாகப் பாதுகாத்துத் தூண்டி விடுகிறார். ஆனால் அந்தச் சொற்ப நேரத்துக்குள்ளே அதன்மீது அவருடைய மூச்சுப்பட்டால் அது அணைந்து போகும். அதற்குள்ளே சட்டென்று அதை அவர் வாசகரிடம் வழங்கிவிடுகிறார். அந்த அகல் விளக்கின் எண்ணெய் தூயதாக இருக்குமானால், அது வாசகரின் மனத்திலே இருளையெல்லாம் ஓட்டும் உன்னதமான பெருஞ் ஜோதியாக எழுந்து, அற்பமும் காம்பீர்யமும், இரக்கமும் இன்பமும், வாழ்க்கையின் பயங்கரமும் துலங்கும்படி ஒளி செய்யும்.' தி. ஜ. ர. தமக்கு இயன்ற முறையில், பணிவோடு, அந்த அகல் விளக்கை ஏற்றி, வாசகரிடம் அளித்து விட்டார். அது தூய சுடர்; வாழ்க்கையின் ஜீவசக்தி ஏறியது; ஒளியைப் பரப்பிக் கிரகிப்பது - கிரகித்துப் பரப்புவது.

பொருள் அடக்கம்

		பக்கம்
நொண்டிக் கிளி	...	1
புலி வேட்டை	...	16
ஸைக்கிள் தூது	...	26
பீதாம்பரையர்	...	41
பணக்காரி	...	53
மாரியின் குற்றம்	...	61
நவீன கதாசிரியன்	...	77
பவுன் செடி	...	88
பரிவர்த்தனை	...	94
ராஜத்தின் கூந்தல்	...	110
அரசகுமாரியின் ஆவி	...	116
மரத்தடிக் கடவுள்	...	131
பொம்மை யானை	...	142
நாகரத்தினம்	...	158
நாகத்தின் பிராயச்சித்தம்	...	179

★

MADURAI UNIVERSITY LIBRARY MADURAI-2.

நொண்டிக் கிளி

எனக்கு அண்ணன் தம்பி, அக்காள் தங்கை யாரும் இல்லை. நான் ஒரு தாய்க்கு ஒரு பெண். என் தகப்பனர் ஒரு பணக்கார வக்கீல். பணம் தாத்தா தேடி வைத்த பணம். 'எங்கப்பாவும் கோர்ட்டுக்குப் போய்' வந்தார். எதற்காக என்று கேட்டால், ஒரே ஒரு காரணந்தான் எனக்குத் தோன்றுகிறது. தாத்தா தேடிவைத்த பணத்துக்குச் செலவு வேண்டாமா? அதற்காகத்தான் எங்கள் அப்பாவுக்குக் கோர்ட்டு, கிளப்பு, மோட்டார், வைரம் இவையெல்லாம். எங்கள் வீட்டுக்கு ஆடிக்கு ஒரு கட்சிக்காரன், ஆவணிக்கு ஒரு கட்சிக்காரன்தான் வருவான். வாசலில் தொங்கவிட்டிருக்கும் போர்டின் நீள அகலத்தைப் பார்த்து மயங்கும் கட்சிக்காரனுகவே அவன் இருப்பான். கட்சிக்காரன் வந்ததும், முதல் முதலில் ஒரு ரகசியத்தை அவனுக்குத் தெளிவாக்கிவிட்டுத்தான் வழக்கு விவரத்தை அப்பா கேட்பார்: ''கேஸ் ஜயிப்பதோ தோற்பதோ ஆண்டவன் கையில் இருக்கிறது. என்னுல் முடிந்தமட்டும் சிரமப்பட்டு நான் நன்ருக வழக்கை ஆடுகிறேன். முடிவு எப்படியானுலும் என்னைக் கேட்கக் கூடாது. சம்மதமா?'' என்பார். இதைக் கேட்டதுமே சிலர், ''அப்புறம் வறேனுங்க'' என்று சொல்லிப் போய் விடுவார்கள். எங்கள் அப்பா மிகவும் கண்டிப்பாகப் பேசுகிறவர். தலையிலே கிராப் என்ருலும், நெற்றியிலே விபூதியும் அதன் நடுவே குங்குமமும் உண்டு. பெட்டியிலே கொள்ளைப் பணம்; வாயிலே கம்யூனிஸம். படிப்பதெல்லாம் நாஸ்திக வாதம்; போவதெல்லாம் பெருமாள் கோவிலுக்கு. இப்படியே இன்னும் பல விஷயங்களிலும்

அவர் பகலும் இரவும் கூடும் சந்தியா காலம் மாதிரி இருந்தார். "இதென்ன ராஜி?" என்று சில நண்பர்கள் அப்பாவைக் கேட்டுக் கேலி செய்வார்கள். "வாழ்வென்பது என்ன? அதுவே பிறப்புக்கும் சாவுக்கும் இடைப்பட்ட ஒரு ராஜிதானே?" என்பார் அப்பா. இதற்கு என்ன அர்த்தமோ எனக்குத் தெரியாது. அப்பாவைத்தான் கேட்க வேண்டும்.

"வாழ்க்கையிலே பொய்யும் புளுகும் மிக அவசியம்" என்று கூசாமல் வாய் நிறையச் சொல்லுவார் அப்பா. ஆனால் அவர் ஒரே ஒரு பொய் சொல்லி, நான் கேட்டதில்லை. கட்சிக்காரர்களை அவர் மிரட்டும் மிரட்டலால்தான் தொழில் வலுக்கவில்லையே தவிர, அதற்கு அப்பாவின் திறமைக் குறைவு காரணம் அல்ல. அவர் எடுத்த கேஸ் எதுவும் தோற்றதில்லை. அவர் மகாபுத்திமான்; ஆனால், விசித்திரமான குணஸ்தன். ஊருக்கெல்லாம் இது தெரியும்.

எங்கள் அம்மா ராஜாத்தி மாதிரி இருப்பாள். உபசாரமாகச் சொன்னால், அப்பா மாநிறம்; அம்மாவோ எலுமிச்சம்பழம்போல் சிவப்பு. அவள் படித்திருக்கிறாள்; ஆனால், அவளுக்குப் பாடத் தெரியாது. அவளைத் தற்காலத்துக்கு ஏற்ற நாகரிகக்காரி என்று சொல்ல முடியாது. வீட்டுக் காரியம் முழுவதும் தானே செய்வாள். வேலைக்காரர்களுக்கு எங்கள் வீட்டிலே வெகு கொண்டாட்டம். அவர்களுக்கு அம்மா ஒரு வேலையும் இடமாட்டாள். இதற்காக அவர்களை அவள் ஒரு குறையும் சொல்லவும் மாட்டாள். அவர்கள் அம்மாவைக் கொண்டாடாமல் வேறே என்ன செய்வார்கள்?

இனி எங்கள் குடும்பத்தில் நான் மிச்சம். அப்பாவையும் அம்மாவையும்பற்றிச் சொன்ன பிறகு, என்னைப்பற்றி வேறே தனியாகச் சொல்ல வேண்டுமா? 'நூலைப்போல் சேலை, தாயைப்போல் சேய்!' ஆமாம்; நான் அம்மா மாதிரிதான் இருக்கிறேனாம். எதிலே?

உருவத்திலே. ஊரார் சொல்லுவது இது. அப்பாவைப்போல் நான் சியாமள வர்ணம் அல்ல; ஆனால் அம்மாவைப்போல் எலுமிச்சம்பழ நிறம் என்றும் சொல்ல முடியாது. அதில் ஒரு மாற்றுக் குறைவு தான். எல்லாரும் அவரவருக்கு அவரவரே ரதி அல்லது மன்மதன். ஆனால், அம்மா மகா அழகி. என் கண்ணாரக் கண்டு இதை நான் சொல்லுகிறேன். நான் அம்மாவையே உரித்து வைத்திருப்பதாகப் பார்ப்பவரெல்லாம் சொல்லுகிறார்கள். என்னைப்பற்றி இவ்வளவுதான் நான் சொல்லிக்கொள்ள முடியும்: நான் ரதியல்ல; ரதியின் மகள்; என் மூக்கிலும் உதடுகளிலும் மட்டும் அப்பாவின் சாயல் கொஞ்சம் உண்டு. அப்பாவின் மூக்குக் கூர்மையானது; உதடுகள் தடித்தவை; அவை தச்சன் கடைசல் பிடித்தமாதிரி இருக்கும். மூக்குக்கும் மூளைக்கும் சம்பந்தம் உண்டாம்; உதட்டுக்கும் உள்ளத்துக்கும் சம்பந்தம் உண்டாம். இப்படிச் சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். மூக்கின் கூர்மை புத்தி கூர்மையையும் உதடுகளின் தடிப்பு உணர்ச்சி வேகத்தையும் காட்டுமாம். எனக்காக நான் இதைச் சொல்லிக்கொள்ளவில்லை. எங்கள் அப்பா விஷயத்தில் இந்த இரண்டு லட்சணப் பொருள்களும் உண்மை என்றுமட்டும் நான் கண்டிருக்கிறேன்.

எனக்கு வயசு பதினெட்டு. இன்று எங்கள் வீடு திமிலோகப்படுகிறது. பிள்ளையும் பிள்ளை வீட்டாரும் என்னைப் பார்க்க வந்திருக்கிறார்கள். வீட்டின் செல்வமகள் நான். எனக்கு விவாக ஏற்பாடு என்றதுமே என் பெற்றோர் என்ன என்னவோ விமரிசைகளைக் கோடிக்கத் தொடங்கிவிட்டார்கள். பிள்ளை பார்த்துத் திருப்தியடைய வேண்டும்; பிள்ளை வீட்டார் சம்மதிக்கவேண்டும். அதற்குப் பிறகுதான் நிச்சயதார்த்தம். ஆனால், என் சம்மதத்தைப்பற்றி யாருமே கவலைப்படவில்லை. ஏன், நானுங்கூடக் கவலைப்படவில்லை. ஆனால், என் உள்ளத்திலே எனக்கே புரியாத

ஒரு திகிலும் பரபரப்பும் ஏற்பட்டிருந்தன. என் அத்தைமார் இருவரும் அவர்களுடைய குழந்தைகளும் வந்திருந்தார்கள். என் விவாகம் முடிகிற வரையில் இருந்துவிட்டுத்தான் அவர்கள் போகப்போகிறார்களாம். இந்த வருஷம் எப்படியும் கண்டிப்பாக எனக்கு விவாகம் நடந்தேற வேண்டுமாம். இந்த வரன் இல்லையானால், வேறு எந்த வரனாவது; வரனா முக்கியம்? விவாகந்தானே முக்கியம்?

என்னை ஓர் அறையிலே உட்காரவைத்துச் சிங்காரிக்கத் தொடங்கினார்கள். இரண்டாவது அத்தை தலை வாரிப் பின்னிப் பூச்சூட்டினாள். மூத்த அத்தை திலகம் இட்டாள். குழந்தைகள் கண்ணாடி காட்டின. தமயந்தியைச் சுயம்வர மண்டபத்துக்கு அழைத்துச் செல்லுமுன், இப்படித்தான் அலங்கரித்திருப்பார்கள். வேறே எப்படி? பாதம் மறைய அரிய பட்டுச் சிற்றாடை ஒன்றை எனக்கு உடுத்துவிட்டார்கள். பாதம் மறைய....ஆமாம், பாதம் மறையத்தான். பூமாதேவி என் பாதத்தைத் தாங்கமாட்டாள்!....சீ! என்ன உலகம் இது? ஏமாற்று, சூழ்ச்சி, மேல் பகட்டு!

கூடத்திலே ஒரு சிறு கூட்டம் கூடியிருக்கிறது. பேச்சுக்குரல் கேட்கிறது. அவர்கள் என்ன என்னவோ பேசிக்கொள்கிறார்கள். நான் அறையிலே உட்கார்ந்திருந்தேன். அத்தைமார்கூட, அந்தப் பேச்சை ஒட்டுக் கேட்கப் போய்விட்டார்கள். என் மனசு சிறிது நேரம் ஒரே குழப்பமாக இருந்தது. பிறகு, ஒரே சூன்யமாகிவிட்டது. அலைகடலின் துரும்பு போல், உள்ளமும் உடலும் இயக்கம் இறந்து போயின. இந்த நிலையில் ஒரு பாட்டுக் குரல் என் அறைக்குள்ளே கேட்டது. இரண்டாவது அத்தையின் சிறு பெண் பாடுகிறாள். ஏதோ குழந்தைப் பாட்டு:

நொண்டிக் கிளிஒன்று வந்தது - அதை
நோஞ்சல் பூனைஒன்று கண்டது

அண்டிப் பிடிக்கத் துணிவின்றி - உயர்
அம்பரம் பார்த்தது நின்றது.

என்ன பாட்டு இது! ஐயோ! என்ன பாட்டு! இதைப் பாடுவது ஒரு குழந்தையின் குரலா? இல்லை, என்னை ஆள வந்த அசரீரியின் குரல்! அப்படித்தான்; அப்படித்தான் நினைக்க வேண்டும். நான் அடியோடு மறந்திருந்த பழைய ஞாபகங்களையெல்லாம் இது என்னிடம் கிளறிவிட்டது.

இரண்டொரு வருஷங்களுக்கு முன்புதான் அது நிகழ்ந்தது. அப்போது நான் பதினாறு வயசுப் பால குமாரி. அன்று பூத்துப் பனி படிந்த காலைப் புது மலர்போல் நான் இருந்தேன். என் மனசிலே எண்ணாத எண்ணமெல்லாம் எழுந்தன. என் கற்பனை வானம் முட்ட எட்டியது. வாழ்க்கையிலே ஒரு குதூகலம் நிறைந்தது. உலகம் ஒரே ஒளியும் வர்ணமும் நாதமுமாகத் தென்பட்டது. இவையெல் லாம் திடீரென்று என்னிடம் உற்றன. என்னை அறியாத ஒரு செருக்கும், காட்டாற்றைப் போன்ற ஓர் உல்லாசமும் எனக்கு ஏற்பட்டன. ஆடவர்களைக் கண்டால் ஓர் ஒய்யாரமும் என்னை எப்படியோ வந்து பற்றிக்கொள்ளும். ஆனால், அவர்களை நான் முகம் கொடுத்துப் பார்க்க மாட்டேன். ஆண்குலத்தையே அலட்சியம் செய்வதுபோல் ஒரு மிடுக்குடனே நடந்து கொள்வேன். அது ஏன் என்று எனக்குத் தெரியாது; அதனால் நான் அடைந்த உணர்ச்சி இன்பமா, ஏக்கமா என்று கேட்டால், அதையும் என்னால் பகுத்துச் சொல்ல முடியாது. உள்ளம் குறுகுறுக்கும் ஒரு பரபரப்பு மாத்திரம் எனக்கு உண்டானது தெரியும். இதற்கு முன், ஆண்பிள்ளைகளுடன் நான் பழகிய தில்லையா? நிறையப் பழகியிருக்கிறேன். என் படிப்பு முழுவதும் வீட்டிலேதான் நடந்தது. இங்கிலீஷ் வாத்தியார், பாட்டு வாத்தியார், தமிழ் வாத்தியார் ஆக மூன்று பேர் வந்து சொல்லிக்கொடுத்தார்கள்.

மூன்று பேரும் ஆண்பிள்ளைகள்; இளைஞர்கள். என் பதினைந்தாவது வயசிலே இந்த மூன்று படிப்பும் நின்றன. அதுவரையில் அந்த வாத்தியார்களுடன் சர்வசரளமாகப் பழகியிருக்கிறேன். இப்போது எங்கிருந்து வந்தது இந்த ஒய்யாரம்? இந்த ஒய்யாரத் துக்குள்ளே ஒரு கூச்சமும் ஒளிந்தே கிடந்தது. 'நான் பெண், நான் பெண், நான் பெண் - சீதை போல், தமயந்தி போல், சம்யுக்தை போல்' என்று எனக் குள்ளே ஒரு குரல் தனக்குத்தானே ஜபித்துக்கொண் டிருந்தது. ஆனால், சீதையின் உருவம் என் மனத் திலே எழுவதில்லை; தமயந்தியின் உருவம் எழுவ தில்லை; சம்யுக்தையின் உருவம் எழுவதில்லை. ராமனின் உருவந்தான் எழும்; நளனின் உருவம் எழும்; பிரித்வியின் உருவம் எழும். என்ன வேடிக்கை!

இந்த நாட்களிலேதான் அந்த நிகழ்ச்சி நடந்தது. எங்கள் வீட்டின் எதிரே, எதிர் சாரியில் ஒரு சின்ன வீடு இருந்தது. அதில் குஞ்சும் குளுவானுமாக நாலைந்து சிறுவர்களும் இரண்டொரு சிறுமிகளும் ஒரு நாள் அதுவரை இல்லாமல் புதிதாகத் தென் பட்டார்கள். குழந்தைகள் படிப்பதற்காக நகரத் துக்கு வந்த ஒரு புதுக் குடித்தனத்தைச் சேர்ந்தவர்கள் என்று பின்னால் அறிந்தேன். சிறுவர் களுக்கு எதைப்பற்றிக் கவலை? 'பரலோக ராஜ்யம் அவர்களுடையது' என்று ஏசுநாதர் சொன்னார். பூதவிழிக்குத் தெரியாத எங்கேயோ உள்ள பரலோக ராஜ்யம் எப்படிப்பட்டதோ? இந்தப் பூலோக சொர்க்கம் அவர்களுக்கே சொந்தம். வாழ்க்கையை நாசமாக்கும் வேற்றுமை விஸ்தாரங்களெல்லாம் அவர்களுக்கு இல்லை. தம்மவர், அயலார் என்றெல்லாம் பிரித்துக் காண அவர்கள் அறியார். அன்பு கண்ட இடத்திலே அவர்கள் ஒட்டிக் கொள்வார்கள். அந்நியருடன் அவர்கள் வெகு சீக்கிரத்திலே பழகி

விடுவார்கள். ஆண்டவன் படைத்தபடி அவர்கள் பூலோகத்தின் நுழைவாயிலே அடைந்திருக்கிறார்கள். மனிதன் செய்துவைத்திருக்கும் நூற்றுக்கணக்கான பொறிகளில் விழுந்த பிறகல்லவா அவர்களுக்கு வேற்றுமைகளெல்லாம் தெரியும்? நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவர்கள் வளர்கிறார்கள். தினம் ஒரு விலங்கும் கணம் ஒரு தளையுமாக அவர்களுக்கு நாம் மாட்டி வருகிறோம். தெய்வம் சிரிக்கிறது; கருணையற்ற தெய்வம்!

எதிர்வீட்டுச் சிறுவர் சிறுமியரைப்பற்றி அல்லவா சொல்ல வந்தேன்? எங்கள் வீட்டு வாயிலில் ஒரு வாதாமரம் இருந்தது. அந்தச் சிறுவர்கள் வெகு சீக்கிரத்திலே இங்கே வந்து வாதாங்கொட்டை பொறுக்கத் தொடங்கினார்கள். அதிலிருந்து என்னுடன் சிநேகமானார்கள். கொஞ்சம் பழகியபின், சிறுமிகள் வந்து, என்னிடம் சில புதிய பாட்டுக்கள் கற்றுக்கொண்டு போவார்கள். அப்புறம், அவர்கள் வீட்டிலிருந்து, எனக்குப் படிக்க நாவல்கள் கொண்டு வந்து தருவார்கள். என்னிடமிருந்தும் யாரோ படிக்க நாவல்கள் வாங்கிக்கொண்டு போவார்கள். முதலில் அது யார் என்று அறிய நான் கவலைகொள்ளவில்லை. ஆனால், இரண்டொரு நாவல்களின் வரவு செலவு முடியு முன்பே, விவரம் தெரிந்துவிட்டது: அந்த ஆசாமி நல்ல தேகக் கட்டும் லட்சணமும் வாய்ந்த ஒரு வாலிபன்.

வாலிபன் எதிர் வீட்டுத் திண்ணையிலே உட்காரத் தொடங்கினான். சிறுவரும் சிறுமியரும் பள்ளி செல்லும் வரையிலும் அவர்களோடு அவர்களுக்குச் சமமாகப் பேரிரைச்சலும் பேச்சும் சிரிப்புமாக விளையாடுவான். நடுநடுவே, தான் அவர்களை விடப் பெரியவன் என்ற ஞாபகம் வந்தவன்போல் மதிப்பாக உட்கார்ந்து கம்பீரமாக ஏதோ படிப்பான். படிக்கவாவது மண்ணாங்கட்டியாவது! படிப்பது போல் ஒரு

பாவனை, பாசாங்கு; அப்போதிருந்து நானுந்தான் எங்கள் திண்ணையிலே உட்காரத் தொடங்கினேன். ஆனால், தன்னந்தனியே. எனக்கு யாரும் தோழமை இல்லை. படிப்பு பாசாங்கெல்லாம் செய்யவில்லை. வெறுமையே உட்கார்ந்திருப்பேன். அதிலே எனக்குத் துளியும் அலுப்புத்தட்டவில்லை.

சிறுவரெல்லாம் அகன்ற பின்பு வாலிபன் என்னைக் கள்ளனைப்போல வெறித்து வெறித்துப் பார்ப்பான். ஐயோ! அந்த விழியிலேதான் என்ன குரூரம்! விழுங்க வரும் அக்கினி போல் என்ன வெம்மை! அந்த வெம்மைக்கு நடுவே ஓர் ஏக்கமும் கெஞ்சும் பாவனையும் இருந்தன. அந்த ஏக்கம் எனக்கு வெறுப்பாக இருந்தது. அந்தக் குரூரமே, வெம்மையே எனக்கு ஹிதமாக இருந்தது. ஏன்? ஏனென்றால் வாழ்வின் எத்தனையோ புதிர்களை என்னால் விடுவிக்கமுடியவில்லை; அதுபோல்தான் இதுவும். ஒரு விஷயம் சொல்ல வில்லையே. அவன் என்னை ஓயாமல் உறுத்துப் பார்த்தான். நான் அவனை நேருக்கு நேரே ஏறெடுத்து பார்க்கவில்லை, என் கடைவிழிதான் அவனுக்கு அருளினேன். எனக்குத் தைரியம் இல்லாமல் இல்லை; மனம் இல்லை. எதற்காக முழுவிழியும் அவனிடம் நான் செலுத்தவேண்டும்? அவன் மதுவுண்ட ஈயைப் போல் மயங்கித்தவித்தான். அதை நான் உணர்ந்தேன். அதுவே எனக்குப் பரவசமாக இருந்தது. 'நான் மாய மான், மாய மான்' என்று எனக்குள் நானே சொல்லிக் கொள்வேன். எனக்குச் சிரிப்பு வரும்.

காலையில் அவன் வருமுன், நான் திண்ணையில் உட்கார்ந்துவிடுவேன். அவன் உள்ளே போகும் வரையில் நான் திண்ணையை விட்டு எழுந்திருப்பதே இல்லை. இரண்டொரு சமயம் நானும் அவனை, ஒரு குறும்புத்தனத்துடன் நோக்கத் தொடங்கினேன். நான் அப்படி நோக்கும்போது அவன் முகத்தைப் பார்க்கவேண்டுமே; என்ன அசடு வழியும்! என்

பார்வைக்கு அது நன்ருகத் தெரிந்தது. அதில் நான் அடைந்த ஆனந்தத்தைச் சொல்லி முடியாது. இப்படியே பல நாள் கழிந்தன. அவனுக்கு முன்னே நான் எழுந்து உள்ளே செல்லுவதே இல்லை. அதில் மாத்திரம் எனக்கு ஒரு பயம் இருந்தது. ஏன்? ஏன்? அதை நான் எப்படிச் சொல்லுவேன்! என் குழந்தைப் பருவத்திலே – தெய்வம், குருட்டுத்தெய்வம் - என்... என்—அதை உங்களிடம் சொல்லவே எனக்குக் கூச்சமாக இருக்கிறதே; இளம் பிள்ளை வாதம்—காலிலே ...கணுக்காலிலே..சிறிது கோணல். ஆனால், வெளியே தெரியாது. என் வீட்டாரையன்றி வேறு யாருக்கும் அது தெரியாது. யாரும் தெரிந்து கொள்ளமுடியாதபடி நான் சமாளித்து நடந்துவிடுவேன். என் நடையை அன்னநடை என்றே எவரும் நினைப்பார்கள். அப்படி நடப்பேன். தரையில் சிற்ருடை புரள, பையப்பைய, நாகரிகமாக நடப்பேன். ஆனால், அவனுக்கு முன்னே நடக்க மட்டும் என்னல் முடியவில்லை. அதில் ஒரு பயம் வந்து என்னைப் பற்றிக்கொண்டது.

என் வீட்டுத் திண்ணையிலே நான்; எதிர் வீட்டுத் திண்ணையிலே அவன். என் கவனம் எப்போதும் பராமுகந்தான். இரண்டொரு முறைதான் ‘கடைக் கண்’ அருள்வேன். அப்படிப்பட்ட சில சமயங்களில் அவன் புன்சிரிப்புச் சிரிக்க முயல்வான். அதை நான் துளியும் லட்சியம் செய்யாதவளாகத் திரும்பிவிடுவேன். ஒரு சமயம் அவன் நன்ருகப் புன்சிரிப்புச் சிரித்துவிட்டான். எனக்கு அது இன்பமாகத்தான் இருந்தது. ஆனல், என் முகம்மட்டும் பரம கடுகடுப்புடன், ‘உர்ர்ர்’ என்று திரும்பிக்கொண்டது. பின்னல், மூன்று நாள்வரையில் ஏதோ பெரும் குற்றம் செய்தவன்போல், என்னைப் பார்க்கத் தைரியமின்றி, உள்ளும் புறமுமாக அவன் நடமாடிக்கொண்டிருந்தான், திண்ணையில் உட்காரக்கூட அவனுக்குப் பயம். நாவல்கள் வரவு செலவும் இரண்டொரு நாள் நின்றுவிட்டது.

இதோ அத்தையின் சிறு பெண்—இல்லை, என்னை ஆள வந்த அசரீரி – பாட்டின் அடுத்த அடிகளைப் பாடுகிறது:

பச்சைக் கிளிஒன்று வந்தது - அதைப்
பஞ்சைப் பூனைஒன்று கண்டது
இச்சை இறந்த தவசிபோல் - மனம்
ஏங்கிடக் கண்மூடிக் கொண்டது.

உண்மை; இந்தப் 'பஞ்சைப் பூனை' எங்கே? பிரித்வியும் சம்யுக்தையும் எங்கே? இந்தப் 'பஞ்சைப் பூனை'கள், பெண் குலம் முழுவதையுமே ஒரு பெரிய 'தாசி மண்டலம்' என்று நினைத்திருக்கின்றனவாக்கும்! இவைகளுக்கு மனோதர்மம் புரியாது; ஆசை புரியாது; ஆதர்சம் புரியாது. இதையெல்லாம் நான் அன்று அறியவில்லை. எல்லாமே எனக்கு ஓர் இன்ப விளையாட்டாக இருந்தது. ஆழம் தெரியாத சமுத்திரத்திலே காலை விட்டுவிட்டேன்.

நாவல்கள் பரிமாற்றத்தை மறுபடியும் நான் ஆரம்பித்து வைத்தேன். அப்புறந்தான் அவனுக்குத் தைரியம் வந்தது. பழையபடி கொஞ்சம் கொஞ்சமாக என்னை நிமிர்ந்து பார்க்கத் துணிவுகொண்டான். இப்போது நான் சிறிது சிறிது புன்சிரிப்புப் பூத்தேன். இதே சமயத்தில் என் வாய்மட்டும் துடுக்குத்தனமாய் அந்தக் குழந்தைகளிடம் அவனைப்பற்றி என்னவோ சொல்லிவிட்டது. உண்மையில் துடுக்கு அல்ல; அவன் யார் என்று அறிய ஆசை. நேராகக் கேட்கப் பயம். "உங்கள் வீட்டுத் திண்ணையிலே, 'திரு திரு' என்று விழித்துக்கொண்டு, குரங்கு மாதிரி உட்கார்ந்திருக்கிறானே; அந்தப் பிள்ளை யாரடீ?" என்று எதிர் வீட்டுச் சிறுமி ஒருத்தியைக் கேட்டுவிட்டேன். இதைச் சிறுவர்கள் அவனிடம் போய் எப்படிச் சொன்னார்களோ! மறுப்டியும் ஒரு வாரம் வரையில் அவன் வாசல்பக்கமே வரவில்லை; திரும்பவும் நானே

நாவல் வரவு செலவுமூலம் அவனுடைய தாபத்தைப் போக்கினேன்.

இவ்வளவோடு நின்றுவிடுவதா? நிற்கத்தான் முடியுமா? ஒரு நாவல் அவனிடம் திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது. அதன் ஒரு பக்கத்தைப் பிரித்தேன். பென்ஸிலை எடுத்தேன். ஓர் ஓரத்தில், 'என் ராஜா' என்ற இரண்டு வார்த்தைகளை எழுதினேன். என் இருதயம் 'திக்குத் திக்கு' என்று அடித்துக் கொண்டது. யாரோ என்னைப் பார்த்துவிட்டது போல் பயந்தேன். சட்டென்று புத்தகத்தை மூடினேன். சுற்றுமுற்றும் பார்த்தேன். யாருமே இல்லை. வெறும் பிரமை. கிரமப்படி புத்தகம் எதிர்வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தது. அன்றிரவு எனக்குச் சரியான தூக்கம் இல்லை. நல்லதும் பொல்லாததுமான என்ன என்னவோ கனவுகள். 'புத்தகம் பத்திரமாக அவனிடம் போய்ச் சேர்ந்ததோ? சேதியை அவன் கண்டானோ? அதன் அர்த்தத்தை அறிந்தானோ?'-இப்படி ஏதேதோ மாளாத யோசனை.

அடுத்த நாள் அவனிடமிருந்து மறுபுத்தகம் வந்து சேர்ந்தது. ஆவலுடன் தனிமையில் ஏகாந்தமாகப் போய்க் கதவை உட்புறம் தாழிட்டுவிட்டு உட்கார்ந்தேன். புத்தகத்தைப் பரபரவென்று ஏடு ஏடாகப் புரட்டினேன். ஒரு பக்கத்துக் கோடியிலே பதில் இருந்தது: 'என் ராணி' என்ற இரண்டு சொற்கள்! என் உள்ளம் பொங்கியது; தேகம் புளகித்தது; கண்ணிலே நீர் துளும்பியது! ஒரு பெருமூச்சு; அதன் உஷ்ணத்திலே, காமன் வெந்துபோயிருப்பான். பித்துப் பிடித்தாற்போல் புத்தகத்தை வாரி எடுத்து, அந்த இரண்டு சொற்களையும் கண்ணில் ஒத்திக் கொண்டேன்; முத்தமிட்டுக்கொண்டேன். "கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ? திருப்பவளச் செவ்வாய் தான் தித்தித்திருக்குமோ? . .சொல்லாழி வெண்சங்கே" என்று பாடி, ஆடிவிட்டேன். ஏதோ

ஒரு மதுவெறியில் இருப்பதுபோல், சிறிது நேரம் தலை கால் புரியாமல் நடந்துகொண்டேன். வெறி தணிந்தது. சுவரிலே மாட்டியிருந்த நிலைக் கண்ணாடியை எடுத்து முகம் பார்த்துக்கொண்டேன். 'அடி ராணி' என்று புன்சிரிப்புடன் அந்த முக பிம்பத்தைப் பார்த்துக் கூவினேன். அதன் கன்னத்தைக் கையால் கிள்ளவும் முயன்றேன். இப்போது நினைத்தால், அத்தனையும் என்ன பித்துக்கொள்ளித்தனமாகத் தோன்றுகிறது!

இதற்குமேல், வெகு சீக்கிரத்திலே, இந்த நாடகத்தின் பல படிகள் கடந்துவிட்டன. ஒவ்வொன்றும் எனக்குத் தெள்ளத் தெளிய ஞாபகம் வருகிறது. ஆனால், அது என்ன வேதனை! அவன் மெல்ல மெல்ல எங்கள் வீட்டுத் திண்ணைக்கு மிக அருகிலே நடக்கத் தொடங்கினான். தெருவிலே குறுக்கும் நெடுக்குமாக, ஏதோ காரியம்போல் பாவனை செய்துகொண்டு, அடிக்கடி எங்கள் வீட்டுத் திண்ணையின் பக்கமாக அவன் நடமாடுவான். அப்போது எனக்கு ஒரு விசித்திர யோசனை தோன்றியது. ஒரு பை நிறையச் சிறு மணியாம் பருக்கைக் கற்களைப் பொறுக்கி வைத்துக் கொண்டேன். அவன் போகும்போதும் வரும்போதும் அவைகளை ஒவ்வொன்றாக, மெல்ல மெல்ல, அவன் முதுகிலே குறும்புத்தனமாக எறிந்தேன். அவன் சிரித்துக்கொண்டே, "ஈசனே கல்லால் எறியுண்டான். அதற்கு முன்னே இது எம்மாத்திரம்?" என்று சொல்லி, அந்தக் கற்களில் இரண்டொன்றை எடுத்துப் பத்திரமாக ஜேபியிலே போட்டுக்கொண்டு போனான். இதையெல்லாம் நினைக்க நினைக்கத் தாங்காத வேதனைதான் உண்டாகிறது. முடியாது! இன்னும் நடந்ததை எல்லாம் விரித்து வர்ணித்துச் சொல்ல என்னால் முடியாது! இதன் பின்பு, சிறு சிறு துண்டுக் கடிதப் போக்குவரத்துக்களில் தொடங்கிக் கடைசியில் நேருக்கு நேரே சந்திக்கும்வரையில் நிலைமை முற்றி

விட்டது. அந்தப் பாவி நள்ளிரவு நேரத்திலே கரியிலும் தடித்த மாய இருளில், என்னைக் கட்டி அணைந்து கொண்டான். இல்லாத பிரமாணமெல்லாம் செய்து கொடுத்தான். அதற்கு எங்கள் வீட்டு முன்புள்ள வாதாமரமே சாட்சி. அதன் பரந்த கிளைகளுக்குக் கீழேதான் நாங்கள் சந்தித்தோம். மறுநாள் காலையில், அதற்கு முன் என்றும் இல்லாதபடி, முதல் முதலாக, அந்த மரத்தை நான் கூர்ந்து பார்த்தேன். "தாயே! நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று அதைக் கெஞ்சுவதுபோல் இருந்திருக்க வேண்டும் என் பார்வை. அப்போது அதன் இலைகளிலே உறங்கிய பனித்துளிகள் பொலபொலவென்று உதிர்ந்தன. இப்போதுதான் அதன் மர்மம் எனக்குத் தெரிகிறது. "ஐயோ, மகளே!" என்று அது கண்ணீர் சொரிந்திருக்கிறது. வருங்காலமெல்லாம் அதற்குத் தெரிந்திருக்கிறது.

என் உள்ளத்திலே ஒரு புதிய பரவசம் உண்டாயிற்று; ஒரு புதிய வேதனையும் உண்டாயிற்று. அவனை இப்போது, என் கைக்கு எட்டாத ஓர் அந்நியனாக நான் நினைக்கவில்லை. நானும் அவனும் ஒன்று என்று நினைக்கத் தொடங்கினேன். ஆயினும் இந்தச் சந்திப்புக்கு மேல் வேறே சந்திப்புக்கள் நடக்கவில்லை; நடக்க வசதி இல்லை. நாட்கள் கழிந்தன. பகலிலே அவனைக் கண்டால், எனக்கு ஒரு வெட்கம் உண்டாயிற்று. தலை குனிந்து எழுந்து மரியாதை செய்வேன். "இது என்ன விநோதம்!" என்று எங்கேயோ பார்த்தபடி சொல்லிக்கொண்டு அவன் சிரிப்பான்.

ஒரு நாள் எப்படியோ அவன் எங்கள் அப்பாவைச் சிநேகம் பிடித்துக்கொண்டு, எங்கள் வீட்டுக்கு வந்தான். நான் சட்டென்று எழுந்து, பரபரப்புடன் அவனுக்கு முன்னே உள்ளே ஓடினேன். அவன் பார்த்துவிட்டான். அவசரத்திலே விந்தி விந்தி நான்

நடப்பதை அவன் பார்த்துவிட்டான். ஐயோ! இறைவன் படைத்த படைப்பிலே துளிக் கோணல் கூடாதா? அது என் குற்றமா? நான் என்ன நாட்டியமா ஆடப் போகிறேன்? சாமுத்திரிகா லட்சணத்தைக் கரைகண்ட சித்திரகாரனோ அவன்? சீ! மனித உள்ளத்தின் பெருமையை அறியாத, மதியாத மூடன் அவன்! போய்விட்டான்! வேடனைக் கண்டு பயந்தோடும் விலங்கைப்போல் அவன் போய் விட்டான்! போகும்போது, அவன் எழுதி என்னிடம் போட்ட ஒரு சிறு நறுக்குத்தான் என் மனசை என்றென்றும் உறுத்திக்கொண்டிருக்கிறது: 'நொண்டி பெற்ற சொல் செல்லாது!' ஏன் செல்லாது? அட பாவி! ஏன் செல்லாது? உன் சொல்லைத் துஷ்யந்தன் கொடுத்த கணையாழி என்றல்லவா நான் மதித்தேன்? பேதை! நான் ஒரு பேதை!

அப்புறம் பல மாதங்கள் கழிந்தன. காதல்! மண்ணாங்கட்டி! அதெல்லாம் வெறும் புரளி. உண்மையில். மனிதனின் கற்பனையில் தோன்றிய உருவெளி தானே காதல், கற்பு, ஏகபத்தினி விரதம் என்பவை எல்லாம்? அவை வெறும் மனமயக்கம்; கள்வெறி போன்ற மனமயக்கம். துளித்துளியாக இந்தச் சம்பவத்தை யெல்லாம் நான் மறக்க முயன்றேன்; ஓரளவு மறந்தே போனேன். அலைகடல் துரும்பானேன். விதிச்சுழல் இழுத்த இழுப்பிலே செல்ல மனம் பண்பட்டேன்.

எனக்கு நிச்சயதார்த்தத்துக்கு ஏற்பாடு நடக்கிறது. பிள்ளையும் பிள்ளைவீட்டாரும் வந்திருக்கிறார்கள். கூடத்திலே பேச்சு நடக்கிறது. இந்தச் 'சுயம்வர மண்டப'த்துக்குச் செல்வதற்காக எனக்கு அலங்காரம் நடந்திருக்கிறது!

அத்தையின் சிறுபெண் - என்னை ஆள வந்த அசரீரி - மறுபடியும் பாடுகிறது. அந்தக் குழந்தைப் பாட்டின் கடைசி அடிகள்:

கொண்டைக் கிளி ஒன்று வந்தது - அதைக்
கோயில் பூனை ஒன்று கண்டது
மண்டிடும் ஆசையொ டம்புபோல் - பாய
மாயக் கிளிஅங்கே செத்தது.

சாவதா? இந்தக் கிளி சாகாது. அது செத்தது; இது சாகாது. அந்தப் 'பஞ்சைப் பூனை'க்குப் பின்னே, இந்தக் 'கோயில் பூனை' வந்திருக்கிறது. பணக்கார வரனும்! பெரிய இடமாம்! இது எந்த முடிவுக்கோ? வேண்டாம். இனி ஒருவனைத் தொட்டு நான் மாலை யிடமாட்டேன். என் உடம்பெல்லாம் ஒரு வேதனை எடுத்தது; மனத்திலே ஒரு வெறி பிடித்தது; வாக்கிலே ஒரு தெளிவு பிறந்தது.

கூடத்துக்கு ஓடினேன். அப்போது, என் அளகந் தான் அவிழ்ந்ததோ; ஆடைதான் குலைந்ததோ; பணி கள்தாம் சிதறினவோ? எனக்கு ஒன்றும் பிரக்ஞை இல்லை. யாராரோ கூடத்திலே உட்கார்ந்திருந்தார் கள். யாரையும் நான் பார்க்கவில்லை. அவர்களெல்லாம் ஏதோ நிழல்கள் போல்தான் எனக்குத் தோன்றினர் கள். எங்கள் அப்பாவிடம் நேரே சென்றேன். "அப்பா, நான் எவனுக்கும் மாலையிடமாட்டேன். கண்டிப்பாய் மாட்டேன். இது சத்தியம்!" என்று கத்தினேன். அப்படியே மூர்ச்சித்து விழுந்து விட்டேன்.

அத்தைமாரும் அம்மாவும் என்னை வந்து பிடித்துக் கொண்டார்கள்.

பிரக்ஞை வந்தபோது, மனமும் மிகத் தெளிந்து விட்டது "என்ன, கண்ணகிபோல் ஆடிவிட்டாயே! அவர்களெல்லாம் பயந்தேபோனார்கள். இப்படிச் செய்யலாமா? உன் மனசிலே என்ன குறை?" என்று அப்பா கேட்டார்.

"அப்பா, இது ஒரு நொண்டிக்கிளி. சாகாத நித்திய கன்னிகையாக இருக்க விரும்புகிறது" என்றேன்.

அப்பாவுக்கு ஒன்றும் புரியவில்லை; புரிந்திருக்க முடியாது. எப்படி முடியும்?

''யாரும் குழந்தையைத் தொல்லை செய்யாதீர்கள். அவள் மனசு இன்னமும் என்னவோ குழம்பியிருக்கிறது. அது தெளியட்டும்'' என்று அப்பா எல்லாரையும் அப்பால் போகச் சொன்னார். ''என் ராணி, நீ தூங்கு. உன் இஷ்டப்படி செய்யலாம்'' என்றார். அவர் கண்களினின்றும் சில நீர்த்துளிகள் முத்துப் போல் உதிர்ந்தன.

அதை என்னால் தாள முடியவில்லை. என் கண்களை மூடிக்கொண்டேன்; பல்லைக் கடித்த வண்ணம் இறுக மூடிக்கொண்டேன்.

★

புலி வேட்டை

சிட்டிபாபு ஒரு 'முட்டாள்பையன் என்பது' அவனுடைய வாத்தியாரின் அபிப்பிராயம். சுப்பையா வாத்தியார் ஒரு 'ராட்சஸன்' என்பது சிட்டிபாபுவின் எண்ணம்.

மாசத்திலே முப்பது நாள் சிட்டிபாபு பள்ளிக்கூடத்திலே 'ஆப்ஸெண்ட்'; ஊருக்கு ஒதுப்புறமான ஐயனார் கோயில் காட்டிலே 'ப்ரஸன்ட்', பகல் முழுவதும் மரத்துக்கு மரம் தாவி, பாலைப்பழமும் நாவல்பழமும் பறித்துச் சாப்பிட்டுக்கொண்டிருப்பான். பள்ளிக்கூடம் விடும் மணி அடித்ததும் கீழே இறங்குவான். இறங்கி நேரே கோயிலுக்குப் போவான். பிள்ளையாருக்கு நூறு தோப்புக்கரணம் போடுவான். நூற்றெட்டுத் தடவை, 'இந்தச் சுப்பையா வாத்தியார் தொலையணும், தொலையணும்! தொலையணும்' என்று ஜபித்துவிட்டு, வீட்டுக்குச் செல்வான்.

இப்பேர்ப்பட்ட சிட்டிபாபு சென்ற சில தினங்களாக மிக ஒழுங்காகப் பள்ளிக்கூடத்துக்கு வருவதைக் கண்ட சுப்பையா வாத்தியாரே பெரிதும் ஆச்சரியப்பட்டுப் போய்விட்டார்.

"சிட்டி, காட்டுக்குப் போகலே?"

"இல்லே, ஸார்."

"நாளைக்கிப் போவையோ?"

"மாட்டேன், ஸார்."

"பொய் சொல்றே?"

"இல்லே, ஸார்."

"நிசம்மா?"

"ஆமாம், ஸார்."

வாத்தியார் சுப்பையாவுக்கு நம்பிக்கையில்லை. 'இந்தப் பயல் ஏதோ இரண்டு நாள் இப்படி இருக்கான். நாளைக்குப் பழையபடி அந்தப் புத்தி வந்திடும்' என்று நினைத்தார்.

"ஏண்டா இப்ப நீ காட்டுக்குப் போறதில்லே?" என்று மீண்டும் கேட்டார்.

வாத்தியாரின் இந்தக் கேள்வியைக் கேட்டதும், சிட்டிபாபு பேந்தப் பேந்த விழித்து, நாலுபக்கமும் கண்ணோட்டம் விட்டு, இரண்டடி முன்னே எடுத்து வைத்து, மாறிய குரலில், விசேஷ சுரங்களோடு, ஏற்றியும் இறக்கியும், "அங்கெ, ஸார், காட்டிலே, ஸார், புலி ஸார், ஒண்ணு, ஸார், வந்திருக்கு, ஸார்" என்றான்.

புலி என்ற பெயரைக் கேட்டதுமே சுப்பையா வாத்தியார் கலகலத்துவிட்டார். "புலியா! புலி.... அட பயலே, கேலி பண்ணினியோ தொலச்சிடுவேன். நிசம்மா நீ புலி பாத்தே?" என்று கடுமையாகக் கேட்டார்.

சிட்டிபாபு கொஞ்சங்கூடத் தளராமல் மிக உறுதியாக, தான் 'நிசம்மாய்'ப் புலி பார்த்ததாகச் சாதித்தான்.

இதற்குமேல் சுப்பையா வாத்தியார் ஒரு மூன்றும் வாசகப் புத்தகத்தை எடுத்து, "இதோ பார், இந்த மாதிரிப் புலியா?" என்று ஒரு படத்தைக் காட்டிக் கேட்டார்,

"இதே மாதிரிதான் ஸார்!" என்றான் சிட்டிபாபு.

வாத்தியாரின் மனக்கதவைக் 'கிலி' வந்து தட்ட ஆரம்பித்து விட்டது. காலையிலே, பல் துலக்கக் கருவேலங் குச்சி ஒடிக்க அவர் அந்தப் பக்கந்தானே போகிறார்? புலி மேலே வந்து பாய்ந்துவிடுமோ? முந்தாநாள் அந்தக் காட்டாமணக்குப் புதரிலே சல சலவென்று ஏதோ சத்தம் கேட்டதே; அது இந்தப் புலியாகத்தான் இருக்குமோ? இப்படி யெல்லாம் அநேகம் எண்ண அலைகள் அவர் மூளையில் குறுக்கும் நெடுக்குமாக எழும்பி ஓடலாயின.

"சரி, சிட்டி, நீ உன் இடத்துக்குப் போ" என்று கம்பீரமாகக் கூறிவிட்டு, மறுபடியும் நீண்ட யோசனை புரியத் தொடங்கிவிட்டார்.

2

மகிழம்பூர்க் காட்டிலே புலி வந்திருக்கிற சமாசாரம் முதல் முதலாக இவ்வாறு சுப்பையா வாத்தியாரின் பள்ளிக்கூடத்திலேதான் பிரகடன மாயிற்று. விஷயம் அங்கிருந்து மெல்ல மெல்ல ஊர் முழுவதும் பரவியது; காட்டிலே புலி என்ற செய்தியை ஒருவருக் கொருவர் மிக மெல்லிய குரலில் வெகு ரகசியமாகப் பரிமாறிக் கொண்டார்கள். ஒருகால் புலியின் காதிலே இது விழுந்து அது எங்கேயாவது கோபித்துக்கொண்டுவிடப் போகிறதே என்ற பயம் போல் இருக்கிறது! ஊரார் ஒவ்வொருவரும் புலி

தங்கள் தங்களையே குறிவைத்துத் தேடிக்கொண் டிருப்பதுபோலப் பதுங்கிப் பதுங்கி நடமாடினார்கள்.

பையன்கள் அந்தப் பக்கம் ஆடுமாடு மேய்க்கப் போவதையே நிறுத்திவிட்டார்கள்; சிறுமிகள் சுள்ளி பொறுக்கச் செல்வது தடைப்பட்டது. ஊரிலே எங்கே பார்த்தாலும் 'கிலி'.

இந்த நிலைமையில், உள்ளூர்ப் பட்டாமணியக் காரர் சொக்கநாத பிள்ளைக்கு ஒரு யோசனை தோன்றிற்று.

பக்கத்துப் பட்டணத்திலேதான் 'சப் கலெக்டர்' இருக்கிறார். அவர் ஓர் ஐ. ஸி. எஸ். சீமைத் தேசங் களுக்கெல்லாம் போய்வந்தவர். காந்தியின் சத்தியாக் கிரகம் நடந்ததல்லவா? அப்போது, துப்பாக்கியால் 'சடசட' என்று ஆகாசத்திலே சுட்டு, ஜனங்களை யெல்லாம் தடியால் அடிக்கச் செய்து வெகு சீக்கிர மாகக் கலையச் செய்தவர்; மிகவும் கெட்டிக்காரர்; தைரியசாலி. போன மாசம் இதே மகிழம்பூர்க் காட்டிலே காட்டுப் புரு வேட்டையாடியவர். அவ ருக்குப் புலி சுடக் கட்டாயம் தெரிந்திருக்கும். ஆகை யால் அவரிடம் போய் முறையிட்டுக்கொள்வது என்று முடிவு செய்தார் சொக்கநாதபிள்ளை.

3

"ப்யூன்" என்று உள்ளேயிருந்து புறப்பட்டது ஒரு சப்தம்.

வாசலிலே கிசு, முசு, கிசு முசு என்று நடந்து கொண்டிருந்த சம்பாஷணை சடக்கென்று நின்றது.

மறுபடியும் "ப்யூன்" என்ற சப்தம் எச்சு ஸ்தாயி யில் கிளம்பியது.

பியூன் சின்னதுரை உள்ளே ஓடிவிட்டான். அவ னுடைய 'நாஸ்தா'வுக்குச் சில்லறை எடுத்த கையை

மறுபடியும் ஜேபியிலே போட்டுவிட்டார் சொக்கநாத பிள்ளை.

சற்று நேரத்துக்கெல்லாம் வெளியே வந்த சின்ன துரை, "எடு, எடு, எடு காசை" என்று மெல்லிய குரலிலும் படபடப்பாகவும் கூறினான்.

பிள்ளையவர்கள் இரண்டணாவை அவன் கையில் வைத்து அமுக்கினார். "இதென்ன பிச்சைக் காசா? நீயே வச்சுக்கோ, மணியாரரே" என்றான் சின்னதுரை.

கொஞ்சநேரம் பேரம் நடந்தது. இன்னும் ஓர் அணா சின்னதுரையின் கையில் ஏறியதும், "சட்டுனு போங்க, சட்டுனு போங்க; குளிக்கப் போயிடப் போறாரு" என்று பிள்ளையை அவன் துரிதப் படுத்தினான்.

பிள்ளை தம் சட்டை, துணி வகையறாக்களை யெல்லாம் ஒழுங்கு படுத்திக்கொண்டு, பயபக்தியோடு உள்ளே பிரவேசித்து, இரு கையும் கூப்பி ஒரு கும்பிடு போட்டார்.

ஆட்டுக்குட்டியை நோக்கும் சிங்கம்போல் சப் கலெக்டர் மேனன் கம்பீரமாகப் பிள்ளைமீது பார்வையைச் செலுத்தி, "என்னங்காணும், என்ன? நீர் மகிழம்பூர்ப் பட்டாமணியமில்லே?..... ப்யூன்" என்றார்.

"ஆமாம், எஜமான்" என்று மகிழம்பூர்ப் பட்டா மணியக்காரர் சொன்னதைக் காதில் வாங்காமலே மறுபுறம் திரும்பிய மேனன்முன் பியூன் சின்னதுரை வந்து நின்றான்.

"அதோ அந்தப் பேனாவை எடுத்து இங்கே வை; இதோ இந்தப் பேப்பரை எடுத்து அங்கே வை" என்றார் மேனன்.

பியூன் அந்த வேலைகளைச் செய்துகொண் டிருந்த சமயத்தில், சொக்கநாதபிள்ளை மெல்லத் தாம் வந்த காரியத்தைச் சப் கலெக்டருக்கு எடுத்து ஓதினார்.

"மகிழம்பூரிலே புலியா?—ப்யூன், என் துப்பாக்கி எங்கேடா? கொண்டாடா இங்கே" என்று வெகு ஆவேசத்தோடு மேனன் கூறியபோது, தம்மைத்தான் எங்கேயாவது சுட்டுவிடப் போகிருரோ என்றுகூடச் சொக்கநாதபிள்ளை பயந்தார். அவ்வளவு மிடுக்காக இருந்தது மேனனின் தொனி.

இறுதியில் மேனன் தாம் நேரே வந்து அந்தத் திருட்டுப்புலியை ஹதம் செய்வதாகச் சொக்கநாத பிள்ளைக்கு அபயம் கொடுத்தார். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் சொல்லி அனுப்பினுர்.

சப் கலெக்டர் மேனன் புலிவேட்டையாடுவதற்காக, மகிழம்பூர்க் காட்டின் நடுவிலே ஓர் பரண் கட்டியாயிற்று. ஊரிலுள்ள அத்தனை தென்னமரங்களிலிருந்தும் இளநீர்களை வீழ்த்திஞர்கள். அவற்றில் பொறுக்கி எடுத்த சில இளநீர்களை நன்ருகச் சீவி, பரண் மீது எலுமிச்சம்பழம் ஸகிதமாக வைத்தார்கள்.

பரணுக்குச் சற்று எட்டப் 'பே! பே!' என்று சிறிது நேரத்துக்கு ஒரு தரம் கத்திக்கொண்டும் எதிரேயிருக்கும் புல்லை மென்றுகொண்டும் இருந்தது ஓர் ஆட்டுக்குட்டி. புலியை இழுக்கும் இரையாக அந்த ஆட்டுக்குட்டியை ஒரு மரத்தில் கட்டியிருந்தார்கள்.

காட்டைச் சுற்றி நாற்புறமும் பல கொம்பு தம்பட்டைக்காரர்கள் ஈட்டி, பிச்சுவா முதலிய ஆயுதங்களோடு முஸ்தீப்பாக நின்றுகொண்டார்கள். புலி தப்பித் தவறி வெளியே வர முயன்ருல், பயமுறுத்தி உள்ளே அனுப்புவதற்காக இந்த ஏற்பாடு.

சப் கலெக்டர் மேனனின் கார் வந்துவிட்டது. முதல் தரமான சிக்காரி மாதிரி தோளிலே துப்பாக்கியுடன் இறங்கினுர் மேனன்.

"ப்யூன்!"

"எஜமான்" என்று கைகட்டி எதிரே வந்து நின்ருன் சின்னதுரை.

"எங்கே அந்த மணிகார்?"

எதிரேயுள்ள மணியக்காரரை அவருக்குத் தெரிய வில்லை; அந்தச் சமயம் அவ்வளவு ஆவேசமாக இருக் கிருர்.

மணியக்காரர் எதிரே போய் நின்ருர்.

"எங்கே ஐயா, அந்தப் புலி?"

காட்டுக்குள்ளே இருப்பதாகவும், நடுக்காட்டிலே பரண் எல்லாம் கட்டியிருப்பதாகவும் தெரிவித்தார் பிள்ளை.

"பரணை ஏனையா அங்கே போய்க் கட்டினீர்? இப்ப எப்படி ஐயா அங்கே போறது? போய்ப் பரண்லே ஏறத்துக்குள்ளே அது வந்திட்டா என்னையா பண்றது?" என்று கேட்டார் சப் கலெக்டர்.

"காட்டுக்கு வெளிலே பரணைக் கட்டினல் புலி வராதுங்களே" என்ருர் மணியக்காரர்.

"என்ன, மான், உளர்றே? - ப்யூன்" என்ருர் மேனன்.

பியூன் எதிரே வந்து நின்ருன்.

"சரி; துப்பாக்கியைக் கண்டால் புலி மிரண்டுடும். அதுனலே, எல்லாரும் என்னைச் சுத்தி வட்டமா வளைச் சுக்குங்கோ. உள்ளே போவோம்" என்ருர் மேனன்.

'துரை' உத்தரவுக்கு மாறு உண்டா? மனிதச் சுவர் ஒன்று புடைசூழ மேனன் பரணருகே போய்ச் சேர்ந்தார்.

"ப்யூன், என்னைப் பரண்மேலே ஏத்து" என்ருர் மேனன்.

அப்படியே செய்தான் சின்னதுரை.

"நீயும் ஏறிக்கோ."

சின்னதுரையும் ஏறிக்கொண்டான்.

"எங்கே அந்த மணிகார்? அவரையும் ஏறச் சொல்."

சொக்கநாதபிள்ளையும் ஏறிக் கொண்டார். மற்றவரெல்லாம் அகன்றார்கள்.

பரணில் ஆரோகணம் செய்துகொண்ட மூவருக்கும் ஆரம்பத்தில் வெகு பரபரப்பாக இருந்தது.

ஏறிய உடனேயே சப் கலெக்டருக்கு உடம்பெல்லாம் வேர்த்தது. இளநீர் ஒன்றைச் சீவச் செய்து, எலுமிச்சம்பழத்தைப் பிழிந்து, பாதி மேலும் கீழும் சிந்த வாயிலே ஊற்றிக்கொண்டார்.

பட்டாமணியக்காரர் பிள்ளைக்கோ தாகமே எடுக்கவில்லை. அவர் ஆகாசத்தை வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்.

பியூன் சின்னதுரை மாத்திரம் எக்கவலையும் இல்லாமல், இளநீர் வழுக்கையைச் சுரண்டிச் சுரண்டித் தின்றுகொண் டிருந்தான்.

"பே! பே!" என்று ஆட்டுக்குட்டி சற்று நேரத்துக்கு ஒரு தடவை கத்திக்கொண் டிருந்தது. ஆட்டுக்குட்டியின் ஒவ்வொரு கத்தலின்போதும், புலியின் சீறலைக் கேட்டாற்போலத் துள்ளி நிமிர்ந்து உஷாராகி வந்தார் மேனன்.

இருந்தாற்போல் இருந்து சின்னதுரை, "அதோ! அதோ! அதோ பாருங்க" என்று கூச்சலிட்டுப் பின்புறம் இருந்த ஒரு மரத்தைச் சுட்டிக் காட்டினான்.

லகான் போட்டு இழுத்த குதிரைகளைப்போல் மேனனும் பிள்ளையும் ஏககாலத்தில் தலையைக் குலுக்கித் திரும்பிப் பார்த்தார்கள்.

சின்னதுரை சுட்டிக்காட்டிய மரத்தின் கிளையிலே வாலில்லாக் குரங்கைப்போல் கொல் என்ற சிரிப்புடன் ஒரு சிறுவன் ஊஞ்சலாடிக்கொண்டிருந்தான்.

"அட மூடா! புலிதான் வந்திடுத்தோன்னு பயந்திட்டேண்டா! இப்படித்தான் கத்தறதோ?" என்று கோபித்துக்கொண்டார் மேனன்.

"ஓ! அது அந்தச் சிட்டிபாபு இல்லே! குரங்குப் பயல்! என்ன சேட்டை பண்றான் இவன்!" என்றார் மணியக்காரர்.

இந்தச் சமயத்தில் திடீரென்று, "ப்யூன்! ப்யூன்" என்று உரக்கக் கத்திக்கொண்டே பரணுக்குள்ளே பிரளய மாடினார் மேனன்.

"என்ன எஜமான்!" என்றான் சின்னதுரை.

"எட்டுக்கால் பூச்சி!-தடி எங்கே? கொண்டா - அடி - கொல்லு" என்று கத்தினார் மேனன்.

சின்னதுரை அந்த எட்டுக்கால் பூச்சியைக் கொல்லுவதற்காகக் குச்சி தேடினான்; அகப்படவில்லை.

"மணிகார்! எட்டுக்கால் பூச்சி! கிட்டப் போகாதீங்கோ, ரொம்ப விஷம்! நான் படிச்சிருக்கேன் ப்யூன்! - எங்கே - என்னடா பண்றே - கொல்லு - அடி" என்று ஓயாமல் 'சளசள' என்று கத்தினார் மேனன்.

இதற்குள் பியூன் சின்னதுரை ஒரு தேங்காய் மட்டையை எடுத்து, எட்டுக்கால் பூச்சியைத் தாக்கினான். அது தப்பித்துக்கொண்டு, மேனன் பக்கமாக ஓடியது.

"அட முட்டாளே! ஏண்டா இங்கே விரட்டினே?" என்று சொல்லி, அந்த எட்டுக்கால் பூச்சிக்குத் தப்புவதற்காகக் காலைத் தூக்கி நாட்டியமாடினார் மேனன். கால்தவறிப் பொதீர் என்று பரணிலிருந்து கீழே

விழுந்தார். அவருடைய துப்பாக்கிக் கொக்கி ஏதோ கட்டையில் மோதி, 'டபார்' என்று சுட்டது. நல்ல வேளையாக யார்மீதும் படாமல் தப்பினார்கள்.

ஆனால், மேனன்மட்டும் புலியோடு போராடியவர் என்ன களைப்பும் பரபரப்பும் அடைவாரோ அவ்வளவும் அடைந்து நிஸ்திராணியாகக் கீழே கிடந்தார்.

அவரை எல்லாருமாகத் தூக்கிக்கொண்டு போய்ச் சைத்யோபசாரங்களும் சிகிச்சையும் நடத்தியதோடு வேட்டையும் முடிந்தது.

4

மறுநாள் சிட்டிபாபு பள்ளிக்கூடத்துக்கு வரவில்லை.

வாத்தியார் சுப்பையாவுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. வீட்டிலே விசாரித்ததில் காலையிலேயே அவன் பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்டுவிட்டதாகத் தெரிந்தது.

மாலைக்குள் எப்படியோ அவனைத் தேடிப் பிடித்தே விட்டார் சுப்பையா.

பையன் பாலைப்பழப் பிசுக்கு வாயுடன், வாத்தியாரைக் கண்டதும், ஆந்தைமாதிரி விழிக்க ஆரம்பித்தான்.

"எங்கடா போயிருந்தே?"

"காட்டுக்கு."

"அங்கே புலி இல்லையா?"

"அதான் சுட்டாச்சே."

"யார்ரா சுட்டா?"

"நேத்து வந்தாரே ஒரு துரை; அவுரு."

"என்னடா கதை பண்றே?"

"நிசம்மாச் சொல்றேன். சுட்டுட்டாரு. புலி காட்டிலே செத்துக் கிடக்குது."

இந்தப் பயல் வார்த்தையை நம்பிக் காட்டுக்குப் போகச் சுப்பையா வாத்தியாருக்குப் பயம். இருந்தாலும் இருக்கட்டும் என்று, ஈட்டி, வாள் முதலியவை சகிதம் மற்றும் பலரையும் அழைத்துக்கொண்டு காட்டுக்குப் போனார்.

காட்டின் நடுவிலே செத்துக்கிடந்த ஒரு பெரிய ஜந்துவை, சிட்டிபாபு, "இதோ" என்று காட்டினான்.

அது ஒரு பெரிய பழந்தின்னி வௌவால். மேனனின் துப்பாக்கியிலிருந்து அவரை அறியாமலே வெளிக்கிளம்பிய தோட்டா, சிட்டிபாபுவின் 'புலி' யான அதன்மீது பாய்ந்து அதைக் கொன்றுவிட்டது.

சிட்டிபாபுவின் அறியாமையில் பிறந்த புலி இப்படி வெறும் புரளியாக முடிந்துவிட்டதென்றாலும், மகிழம்பூர்க் கிராமவாசிகளின் கிலி மாத்திரம் இன்னும் நீங்கவில்லை. "எங்கள் ஊரிலே புலி இருக்கிறது" என்று அவர்கள் ஒவ்வொருவரும் இன்னும் பெருமை யடித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

★

ஸைக்கிள் தூது

மூலைவீட்டு முருகேசம்பிள்ளையவர்களைவிட, என் மனத்தில் அதிகமாக ஆழப்பதிந்த மனித சொரூபம் இந்த உலகில் வேறொன்றும் இல்லை. அதன் காரணம் அவருடைய புராதனமான — அவரது அபிப்பிராயப் படி—மகா உறுதியான ஸைக்கிள் அல்லது துவிச்சக்கர வண்டிதான்.

அந்தக் காலத்தில் முருகேசம்பிள்ளை ஸதா காலமும் ஸைக்கிளிலேயே போவார்; நான் ஸதா காலமும் என் வாசகப் புத்தகத்தில் துவிச்சக்கர வண்டிப் பாடத்தையே படிப்பேன். அந்தப் பாடத்தால் முருகேசம்பிள்ளையும் முருகேசம்பிள்ளையால் அந்தப் பாடமும் பரஸ்பரம் முட்டுக்கொடுத்துக்

கொண்டு என் உள்ளத்திலே கால் ஊன்றிவிட்டார்கள். நீங்கள் எப்போதாவது குழந்தையாக இருந்திருந்தால், நான் சொல்லுவதன் உண்மை உங்களுக்குப் புரியும். உங்கள் விஷயம் எனக்குத் தெரியாது; என் சம்பந்தப்பட்ட மட்டில், நான் ஒரு காலத்தில் குழந்தையாக இருந்திருக்கிறேன்.

அந்தச் சிறு பிராயத்தில், ஸைக்கிள் என்றால் எனக்குப் பேராச்சரியம்; பெரியவன் ஆனவுடனே முதல் முதலிலே செய்யவேண்டிய காரியம் ஒரு ஸைக்கிள் வாங்குவதே என்று நான் திட்டம் போட்டிருந்தேன்.

ஆனால், அப்படி ஸைக்கிள் வாங்க வேண்டிய கெடு வந்ததும், ஒரு சிக்கலான பிரச்னை எழுந்து விட்டது. ஏனென்றால், இடையில் போனகிராப் என்ற மற்றொரு வஸ்துவும் என் உள்ளத்தைக் கொள்ளைகொண் டிருந்தது. ஸைக்கிளில் இரண்டு சக்கரங்கள் சுற்றி ஓர் ஆளையே தூக்கிக்கொண்டு போகின்றன; போனகிராப்பில் ஒரு சக்கரம் சுற்றிப் பாட்டெல்லாம் பாடுகிறது, பேச்செல்லாம் பேசுகிறது. ஸைக்கிளா, போனகிராப்பா எதை முதலில் வாங்குவது என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது. ஸைக்கிள் என்பது வேலையின் சின்னம்; போன கிராப்போ போகத்தின் சின்னம். வேலைக்குப் பிறகு தான் போகம். ஆகையால், ஸைக்கிளையே முதலில் வாங்கத் தீர்மானித்தேன்; வாங்கவும் வாங்கி விட்டேன்.

ஆமாம்; வாங்கியாகி விட்டது. ஆனால் அதில் எப்படிச் சவாரி செய்வது? இந்த விஷயத்தைப் பற்றி முன்னே அவ்வளவாக நான் யோசிக்கவில்லை. அது மிகவும் சுளுவாக இருக்கும் என்றே நினைத்திருந்தேன். நினைத்தபடி அவ்வளவு சுளுவில்லை. பழக்கித்தர ஓர் ஆள் பிடித்தேன். அவன் ஒரு சின்னப்பயல்; மகா விஷமக் காரன்; துறுதுறுத்த வால். மூன்றே நாளில் எனக்கு

அவன் ஸைக்கிள் பழக்கி வைத்துவிட்டான். ஆனால் ஸைக்கிளிலே இருபத்தெட்டு பஞ்சர்; என் உடம்பிலே நூறு ஊமைக்காயம்; தெருக்கோடியிலிருந்த ஒரு குட்டிச்சுவரும் விழுந்து விட்டது. குட்டிச்சுவர் விழுந்தது பெரிதல்ல; அப்போது அதற்குப்பின்னால் நின்ற ஒரு கழுதை பிரமாதமாக சங்கீதம் பாட ஆரம்பித்ததுதான் எனக்குச் சகிக்க முடியவில்லை.

நான்காவது நாள் எனக்கு ஸைக்கிள்விட நன்றாகத் தெரிந்துவிட்டது. அந்தப் பெருமையைத் தெருவில் உள்ளவர்களுக்கெல்லாம் காட்ட வேண்டாமா? தெருவுக்குள்ளே விட்டுக் கொண்டு போனேன். "வேண்டாமடா, வேண்டாமடா" என்று நான் எவ்வளவோ கத்தியும், அந்தப் பயல் அதைக் கேட்காமல் பின் சக்கரத்தில் உள்ள 'புட்பார்' மீது தாவி ஏறித் தானும் நின்றுகொண்டான். அவன் ஏறியவுடனே, பூகம்பம் வந்த மாதிரி ஸைக்கிள் ஆடத்தொடங்கியது; எனக்கு நடுக்கமாக இருந்தது. அப்படியே இறங்கிவிட எண்ணினேன். ஆனால் அவன் இறங்கினால்தானே நான் இறங்க முடியும்? அவனோ, "சும்மா விடு, அண்ணே! என்ன இப்படிப் பயப்படறே!" என்று என்னை உற்சாகப் படுத்தினானே ஒழிய, தான் இறங்குகிற வழியாக இல்லை. சிந்துபாத்தின் கழுத்திலே ஏறிக் கொண்டானே ஒரு கிழவன் அந்தக் கதியாகி விட்டது! பையன் இறங்குகிற வரையில், நான் ஸைக்கிளை நிறுத்தாமல் விட்டுக் கொண்டே இருக்க வேண்டியதுதான். அப்போது எனக்கு வந்த எரிச்சலில், அப்படியே ஸைக்கிளை பிள்ளையார் கோயில் குளத்தில் கொண்டு போய்த் தள்ளிப் பயலை நடுத்தண்ணீரில் அமுக்கி விடலாமா என்று தோன்றிற்று. நானும் கூட அமுங்குவதைப்பற்றி அக்கறையில்லை. ஆனால், புதிய ஸைக்கிளாயிற்றே. அதைக் கெடுக்கக்கூடாது என்ற ஒரே எண்ணத்தினால்தான், அந்த யோசனையைக் கைவிட்டேன்.

எங்கள் தெரு, மேடும் பள்ளமும் நிறைந்தது. நடுத் தெருவில், இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடி வரையில், குப்பை, முள், கல் எல்லாம் கிடக்கும்; குழந்தைகள் குறுக்கும் நெடுக்குமாக ஓடும்; இரண்டொரு மாடு கன்றுகள் மெல்ல அசைபோட்டுக் கொண்டு திரியும். மற்றப்படி, சந்தடியற்று வெறிச் சென்றுதான் இருக்கும். சென்னைமா நகரம் போன்ற பட்டணங்களில் கேட்கும் சப்த ஜாலங்களை அங்கே கேட்க முடியாது. என் சைக்கிள் சவாரியின் வெள்ளோட்டம் இந்தத் தெருவிலேதான் நடந்தது.

மாலை நேரம்; 'மஞ்சள் வெய்யில் எறிக்குதே! மயிலைக்காளை பாயுதே!' என்று பாடிக்கொண்டு சில குழந்தைகள் ஓடின. சுப்பண்ணு – இதுதான் என் சைக்கிள் குருநாதனின் திருநாமம்—அவன் என்ன செய்தான் என்றால், ஸைக்கிளில் நின்றபடியே, சொடேர் என்று அந்தச் சிறுவர்களில் ஒருவனை அறைந்து, "இனிமேல் இப்படி குறுக்கே வந்தாயோ கன்னந்தாடை பன்னிரண்டு" என்று உறுமினன். அடிபட்ட, சிறுவன், "அக்கா! அக்கா!" என்று கத்திய வண்ணம் கண்ணைப் பிசைந்துகொண்டு ஒரு புறம் ஸைக்கிளின் பக்கமாகவே ஓடினன். பெண் சப்தம் என்றால், எந்தப் புருஷனுக்கும் அது யார் என்று கவனிக்கத் தோன்றுவது சகஜந்தானே? நான் கண்ணைக் கொஞ்சம் திருப்பினேன் அந்த 'அக்கா'வைப் பார்க்க. அது, அதா, அந்த......

"டே டே டே!......"

கிலுக்!

நான் கீழே; ஸைக்கிள் என் மேலே. பக்கத்திலே வாயெல்லாம் பல்லாக நிற்கும் சுப்பண்ணு; வீச் என்று ஒரு குழந்தையின் கதறல். அந்தப் பெண்ணின் காலிலே 'பிரேக்' கம்பி குத்திய காயம். இத்தனையும் கண் மூடிக் கண் திறப்பதற்குமுன் நடந்துவிட்டது.

சுப்பண்ணு இன்னும் இளித்தபடியேதான் நின்று கொண்டிருந்தான். தான் முன்னுடியே பத்திரமாகக் கீழே குதித்துவிட்ட சந்தோஷத்திலே, ஸைக்கிளைத் தூக்கி எனக்கு உதவி செய்யக்கூட அவனுக்குத் தோன்றவில்லை. எதிரே நின்ற அந்தப் பெண், தன் கால் வலியையும் கவனியாமல், 'தொத், தொத், தொத்' என்று அங்கலாய்த்துக் கொண்டே ஸைக்கிளைச் சற்றுப் பிடித்து நிமிர்த்தினுள். நான் எழுந்தேன். எனக்கு வலி துளியும் தெரியவில்லை. என் மனம் அப்போதிருந்த நிலையை என்னுல் வர்ணிக்க முடியாது. அது ஒரு கவிதை உணர்ச்சி:

காதில் ஊசல் ஆடும் அந்தக்
கர்ணகுழை ஆகேனே
கோதிவிட்ட குழலும் ஆகிக் கன்னந்
தொட்டுக் களியேனே ✢

என்ற மாதிரிப் பாட்டெல்லாம் மிகவும் உண்மை.

அவளை நான் எத்தனையோ தடவை பார்த்திருக்கிறேன். குளத்திலே, கோயிலிலே, ஈரத் துணியோடு, ஆபரண பூஷிதையாக - பல விதத்திலுந்தான். ஏற்கனவே, என் கவனத்தைக் கொஞ்சம் இழுத்தவள் தான் அவள். ஆனுலும் அன்று எனக்கு ஏற்பட்ட மனக்குழைவும் பரபரப்பும் வேறு என்றும் எனக்கு உண்டானதில்லை. அவள் உருவத்திலே ரதி அல்ல; குரலிலே கொஞ்சும் கிளி அல்ல; நடையிலே அன்னம் அல்ல; அறிவிலே வாணி அல்ல. ஆனுல், இந்த அத்தனை இயல்பும் சேர்ந்தாலும், அந்த நிமிஷத்திலே அவள் என்னைப் பார்த்து அன்புடன் பூத்த ஒரு புன் முறுவலுக்குச் சிறிதும் ஈடாகாது.

குனிந்து அவளுடைய காலைப் பார்த்தவண்ணம், "ரொம்பக் காயம் பட்டுவிட்டதோ? வலிக்கிறதோ?" என்று நான் கேட்டேன்.

✢ டி. ஸி. தீத்தாரப்பன் இயற்றிய பாட்டு.

"ஒன்றும் இல்லை" என்று சொல்லிய அவள், அழும் குழந்தையை ஒரு கையிலே பிடித்துக்கொண்டு, எதிர் வீட்டிலே புகுந்தாள். அதன் மண்டையிலும் ஓர் ஊமைக் காயம். அதுவும் என்று கொட்டைப் பாக்கு மாதிரி வீங்கியிருந்தது. குழந்தை அலறிக் கொண்டே உள்ளே போயிற்று.

ஐயோ பாவம்! உள்ளே சென்று, வீட்டாருக்குச் சமாதானம் சொல்லி வர, நான் விரும்பினேன்.

"சுப்பு! இந்த ஸைக்கிளைப் பார்த்துக்கொள். இதோ வருகிறேன்" என்று திரும்பினேன்.

"ஆமாம், அதிருக்கட்டும். ஒரு சந்தேகம், அண்ணு! – நீ விழுந்ததுதான் விழுந்தே. அதெப்படிக் கணக்காய் அவளுக்கு நமஸ்காரமாய் விழுந்தே?" என்றுன் சுப்பு.

"சீ! காலிப்பயலே!"

"இல்லேண்ணு! நீ கையை நீட்டினது நல்ல யோசனை. கால் ரெண்டையும் கெட்டியாப் பிடிச்சுக் காமே விட்டுட்டையே; அதுதான் சுகப்படவில்லை" என்று மறுபடியும் அவன் கிண்டல் செய்தான்.

களுக்கென்று எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. பதில் பேசாமல் வீட்டில் நுழைந்தேன்.

கூடத்தில் ரகளைப்பட்டுக்கொண் டிருந்தது; என் பேரும் அடிபட்டுக்கொண் டிருந்தது. "குஞ்சா வாத்துச் சுந்தரேசனு? அவன் காலாடின்னு எனக்கு ரொம்ப நாளாத் தெரியுமே!" என்றது ஒரு புருஷக் குரல்.

"அதென்ன படுவெட்டிலே போறது! கொழந்தை மேலே பைசிக்கிளை ஏத்தவாவது! காலையும் கையையும் ஒடிச்சுப்போட வாண்டாமா?" என்றது ஒரு கிழக் கோட்டானின் குரல்.

"பாட்டி! நான் நேரே பாத்துண்டிருந்தேன். அந்தப் பிள்ளை வேணுமின்னு செய்யலே. அதுவுங்

தான் விழுந்துடுத்து. என்னவோ போராத காலம். வெய்யாதே. கொழந்தைக்கி ஏதாவது ஒத்தடம் போடேன்'' என்றாள் சொர்ணம்பாள். இவள்தான் அந்தப் பெண்.

இந்த நிலைமையில் நான் உள்ளே தலையை நீட்டினேன்.

''வாடாப்பா, மகாராஜா! வா! குழந்தை இன்னும் உயிரோடே இருக்கான்னு பார்க்க வந்தையோ?'' என்றாள் பாட்டி.

''ஏதோ தவறிப்போச்சு....'' என்று நான் ஆரம்பித்தேன்.

''தவறுமோ! அவ்வளவு துப்பில்லேன்னு சைக்கிள் என்ன வேண்டியிருக்கு, பவிஷு!'' என்றார் புருஷ சிகாமணி.

பாட்டியும் மேலே 'படபட' என்று பொரிந்தாள்.

இந்தக் கர்ஜனைகளுக்குச் சுருதி போடுவதுபோல், 'ஓ ஓ ஓ ஓ......ஓ...ஓ' என்று அலறியது குழந்தை.

எல்லாம் ஒரே 'பாபேல் கோபுர'மாக இருந்தது.

சித்திரம்போல் நின்ற சொர்ணம் மாத்திரம் பரிதாபத்தோடு என்னைக் கடைக்கண்ணால் பார்த்தாள். 'இந்த மிருகக்காட்சிச் சாலைக்குள் நீ ஏன் வந்து அகப்பட்டுக்கொண்டாய்?' என்று கேட்பதுபோல் இருந்தது அந்தப் பார்வை. நான் வெளியே வந்துவிட்டேன்.

இதிலிருந்து எங்கள் வீட்டுக்கும் அந்த வீட்டுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டு, அது தீராத விரோதமாக முற்றிவிட்டது. ஆனால் சொர்ணத்தினிடம் எனக்குச் சற்றும் குரோதம் உண்டாகவில்லை. ரோமியோ - ஜூலியத் நாடகம் உங்களுக்கெல்லாம் தெரியாதா? 'புகை நடுவிலே தீ இருப்பதைப் பூமியில் கண்டோமே — நன்னெஞ்சே! பூமியில் கண்டோமே' என்று நீங்களெல்லாம் பாடியிருக்கக்கூடும். ஆனால்,

உண்மையில் அதை நான் கண்டேன்; அது அந்தச் சொர்ணந்தான்.

அதற்கு முன்னே என்னைப்போல் புத்தகம் படிப்பவன் இல்லை; வேலை செய்பவன் இல்லை; விளையாடுபவனும் இல்லை. இந்தச் சம்பவத்துக்குப் பிறகு, எல்லாம் தட்டுக்கெட்டுவிட்டது. ஐம்பது கஜ தூரத்துக்கு அப்பால் இருந்துகொண்டு சொர்ணத்தைக் கடைக்கண்ணால் பார்ப்பதற்காகச் சகல தியாகமும் செய்துவந்தேன்.

அவளோடு பேசத் தைரியம் உண்டா? இல்லை. ஒரு கடிதம் எழுத? ஊஹும்; மகா நடுக்கம்; பார்வையோடு சரி. அதுவும் எப்படி? காக்கைப் பார்வை! இப்படியாகப் பல நாட்கள் கழிந்தன.

அந்த விஷமக்காரச் சுப்பண்ணா, என் சைக்கிள் பயிற்சியை அபிவிருத்தி செய்துகொள்ள என்னைப் பல தடவை அழைத்தான். 'இனி சைக்கிளே ஏறுவதில்லை' என்று நான் ஒவ்வொரு முறையும் சொல்லி வந்தேன். வெறிநாயைக் கட்டிப் போடுவதுபோல், சைக்கிளை ஒரு தூணில் சங்கிலியால் பிணைத்துப் பூட்டி வைத்திருந்தேன். அப்படியும் சுப்பண்ணா விடுவதாக இல்லை. ஊர்ப் பயல்களையெல்லாம் அழைத்து வந்து நான் இல்லாத சமயம் பார்த்து, சைக்கிளின் ஆசனத்தில் உட்காரவைத்துப் பெடல் செய்யப் பழக்கிவிடுவான். இதனால் சைக்கிளின் பிடி, பிரேக்கு, ஹப் ஆகிய எல்லாம் கலகலத்துக்கொண்டே வந்தன. அதைப்பற்றியெல்லாம் நான் கவனிக்கவே இல்லை.

இந்த நிலைமையில் சொர்ணத்துக்குக் கல்யாணம் நிச்சயமாகிவிட்டது. என் மனம் பட்ட பாட்டை யாரிடம் சொல்வேன்? சென்னப்பட்டணம் காலேஜில் படிக்கும் யாரோ பையனும். சொர்ணத்தின் தமையனும் பட்டணத்திலிருந்து வந்து கல்யாண

காரியங்களில் ஈடுபட்டான். அவன் என்னுடைய பழைய சிநேகிதன். அவனுடன் பேச முயன்றேன். அவன் துளியாவது முகங்கொடுத்தால்தானே? என் துயரத்தை எப்படியாவது சொர்ணம் அறிந்தால் போதும் என்ற ஆவல். அறியச்செய்வது எப்படி? அதுதான் தெரியவில்லை.

இதோ கல்யாணப் பந்தலெல்லாம் போடத் தொடங்கிவிட்டார்கள். எங்கள் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து, அந்தத் தென்னங்கீற்றுக்கள், மூங்கில் கால்கள் சகலத்தையும் சபித்துக்கொண் டிருந்தேன். மனிதர்கள் மட்டும் அல்ல; அந்த ஜட வஸ்துக்களும் எனக்கு விரோதமாகச் சூழ்ச்சிசெய்வதுபோல் அப்போது எனக்குத் தோன்றியது.

இந்தச் சமயத்தில், வேர்க்க விறுவிறுக்கச் சுப்பு என்னிடம் ஓடி வந்தான். "அவசரம்; ஒரே வார்த்தையில் பதில் வேண்டும். என்ன? சைக்கிளோ உனக்குப் பிரயோசனம் இல்லை. விற்கிறாயா?" என்றான்.

விஷயம் இதுதான். சொர்ணத்தின் சகோதரனுக்குக் கல்யாண காரியங்களை அவசரமாகக் கவனிக்க ஒரு சைக்கிள் வேண்டும். இதற்காக இந்தப் பயல் தூது வந்திருக்கிறான்.

அந்தக் கல்யாணம் எனக்குப் பிடிக்கவில்லை. இருந்தாலும் அவள் சம்பந்தப்பட்ட ஒரு காரியத்துக்கு, சைக்கிளை மறுக்க உள்ளம் துணியவில்லை. என்னவோ குழப்பத்துடன் அதைத் தரக் கடைசியில் இசைந்தேன். ஆனால் இரவலாகத்தான்; விலைக்கு அல்ல.

அந்தச் சமயம் மின்னல்போல் எனக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. இந்த சைக்கிளையே நமக்குத் தூதாகச் செய்தால் என்ன என்று ஓர் எண்ணம் உண்டாயிற்று. ஒரு கடிதத்தை எழுதி, சைக்கிளின்

கைப்பிடிக் குழாய்க்குள் திணிப்பது என்று முடிவு செய்தேன்.

சரி; ஆனால் கடிதத்தை யாருக்கு எழுதுவது? சொர்ணத்துக்கா, அவளுடைய சகோதரனுக்கா? யார் கையில் அது அகப்படுமோ? அல்லது அகப்படாமலே போய் விடுமோ? எப்படியானாலும் சரி; சொர்ணத் துக்கே எழுதுவது என்று தீர்மானித்தேன். கடிதத்தை எழுதினேன். 'மானே! தேனே!' என்றெல்லாம் எழுத வில்லை. 'கண்ணே! மூக்கே!' என்றுகூட ஆரம்பிக்க வில்லை. அப்படியெல்லாம் யோசித்து வர்ணனையாக எழுத எனக்கு நேரமும் இல்லை. 'பிஸினெஸ் லைக்'காக இப்படி எழுதினேன்:

''சொர்ணம்! என் மனசு உனக்குத் தெரியும். இந்தக் கல்யாணம் நடந்துதான் தீரவேண்டுமா? என் ஆயுள் முழுவதும் நான் பிரம்மசாரியாகத்தான் இருக்க வேண்டுமா?

— சுந்தரேசன்.''

என்னுடைய இந்தக் கடிதத்தைத் தாங்கிக் கொண்டு, அந்தக் கல்யாணப் பந்தலின் ஒரு காலண்டை போய் ஒண்டி நின்றது என் ஸைக்கிள். வெகு நேரம் வரையில் அதையே நான் பார்த்துக் கொண்டிருந்தேன்.

நான் ஆசைப்பட்ட வண்ணமே சொர்ணம் ஸைக்கிளைப் பார்த்தாள். அது என் ஸைக்கிள் என்று உடனே அறிந்துகொண்டாள். பிறகு என்னை நோக்கிப் புன்சிரிப்புச் சிரித்தவண்ணம், செல்லமான ஒரு கன்றுக்குட்டியின் கொம்புகளைத் தடவிக் கொடுப்பது போல், என் ஸைக்கிளின் கைகளை அவள் தடவிக் கொடுத்தாள். பின்பு சரேல் என்று உள்ளே போய் விட்டாள். என் கடிதம் அவள் கையில் அகப்படும் என்று எண்ணிய என் எண்ணம் அவலமாகப் போய் விட்டது. என்ன என்னவோ நினைப்புடன் அப்படியே

மனங்குன்றி நான் உட்கார்ந்திருந்தபோது, ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் அவள் திரும்பவும் வந்தாள். அவள் கையிலே ஒரு சிறு கடிதம் இருந்தது. சுற்று முற்றும் பார்த்து யாரும் அருகில் இல்லையென்று நிச்சயம் செய்துகொண்டு பிறகு என்னை நோக்கிய வண்ணம் அந்த் நறுக்கை ஸைக்கிளின் மற்ருெரு கைப்பிடிக் குழாய்க்குள் செருகி மூடிருள். இன்னொரு முறை என்னைப் பார்க்க முயன்ருள். ஆனல் வெட்கத்தால் முகம் சிவந்தளாக, நாணிக் கவிழ்ந்த தலையுடன் உள்ளே ஓடிவிட்டாள்.

அதென்ன கடிதம்? என் இருதயம் படபட வென்று அடித்துக்கொண்டது. ஓடிப்போய் அதை எடுத்துப்பார்க்க வேண்டும் என்று மனம் துடித்தது. ஆனல், அந்தக் கிழக் கோட்டான் வாசலில் வந்து, சரியாக அந்த ஸைக்கிளின் பக்கத்திலே நின்று கொண்டு, "ஏண்டா முத்து, இன்னும் நாயனக் காரனுக்குச் சொல்லலேயா? எப்பச் சொல்றது? விடிஞ்சா முகூர்த்தம். கிடுகிடுன்னு கீத்தைப் போடுங்கோடா; விளையாடறகளே!" என்று ஆட்களைக் கூப்பிட்டுக் 'கார்வார்' செய்யத் தொடங்கினுள். அதனல் நான் கிட்ட அண்ட முடியவில்லை.

நடுப்பகல் ஒரு மணி இருக்கும். சொர்ணத்தின் சகோதரன், கல்யாண காரியமாக எங்கேயோ கிளம்பி விட்டான். மாலையில்தான் ஸைக்கிள் திரும்பி வந்தது. தாயில்லாப் பிள்ளை மாதிரி, பழைய பந்தல் காலடியிலேயே மறுபடியும் நின்றது என் ஸைக்கிள்!

ஒருவரும் இல்லாத சமயமாகப் பார்த்து, ஸைக்கிளிடம் சென்றேன். அந்த நேரத்தில் வெகு சுகமாக நிலவு காய்ந்துகொண் டிருந்தது. அக்கம் பக்கம் ஒரு கண்ணோட்டம் விட்டு விட்டு, சொர்ணத்தின் மலர்க் கை பட்ட அந்த ஸைக்கிள் பிடியை அன்புடன் நானும் ஒரு முறை தடவிக் கொடுத்தேன். இந்தச் சமயத்தில் ஏதோ ஆள்

அரவம் கேட்கவே, அந்தக் கிழக் கோட்டானோ என்ற பயத்தால் திடுக்கிட்டுத் திரும்பினேன். இல்லை; சொர்ணந்தான் தன் மோகனப் புன்னகையுடன் கலீர் என்று சிலம்பொலிக்க உள்ளே பாய்ந்தோடினாள். அவளைக் கூப்பிட வாயெடுத்தேன். ஆனால், நாவு கல்லாகிவிட்டது. பிறகு, ஸைக்கிள் பிடியின் மூடிகளைத் திறந்தேன். இரண்டும் காலி; இரண்டு கடிதங்களையும் காணவில்லை! திகைத்து விட்டேன். அவை யார் கையில் சிக்கினவோ? என்ன விபரீதம் நேரிடுமோ? இந்தக் கிலியுடன் கால்கள் தள்ளாடப் பழையபடி என் வீட்டுத் திண்ணைக்குத் போய்ச் சேர்ந்தேன்.

சற்று நேரத்துக்கெல்லாம் என்னைப்போலவே, சொர்ணமும் வந்து, அந்தப் பிடிகளைச் சோதனை போட்டாள். தன் கடிதத்துக்கு என் பதிலை எதிர் பார்த்தாளோ என்னவோ? ஒன்றும் அகப்படாமல் போகவே, முகம் சுண்டி, உள்ளே சென்றுவிட்டாள். அந்தச் சனியன் பிடித்த ஸைக்கிளுக்குத் பேசத்தான் தெரிந்ததா!

மறுநாள் பெண் வீட்டில் ஒரே கலவரமாக இருந்தது. என் சம்பந்தமாகத்தானோ என்று நான் நடுங்கிப்போனேன். திண்ணையில் சொர்ணத்தின் சகோதரன் சந்திரன் மட்டும் கவலையற்று உட்கார்ந்து கொண்டிருந்தான். அரை மணி நேரம் கழித்து, அவனை உள்ளே அழைத்தார்கள். ஒரு மணி நேரம் ஆயிற்று. பிறகு எல்லோருமாக வெளியே வந்தார்கள்.

இதற்குப் பின்பு, ஒரு பேராச்சரியம் நிகழ்ந்தது. சந்திரனின் தகப்பனார் விரு விரு என்று என்னிடம் நேரே வந்தார். என் மனம் விதுக்கு விதுக்கு என்று அடித்துக்கொண்டது. எழுந்து ஓடிப்போய் விடலாமா என்றுகூட நினைத்தேன். அவர் சமீபித்து விட்டார். நான் பயந்ததற்கு நேர்மாறாக. "என்னவோ; என்ன இருந்தாலும் நாம் உள்ளூர்க்

காராள் அல்லவா? ஸௌஜன்யமாகப் போய்விட வேண்டும். எங்க பேர்லே ஏதாவது தப்பிருந்தா மன்னிச்சுக்கணும்'' என்று சொல்லி, என் பதிலை எதிர்பாராமலே எங்கள் வீட்டுக்குள்ளே நுழைந்தார். ''மாப்பிளே, ரொம்பக் கோவிச்சுண்டுடாதேயுங்கோ. இதோ வந்துட்டேன்'' என்று சிரித்துக்கொண்டே கூறிய சந்திரனும் அவர் பின்னால் நுழைந்து விட்டான்.

எல்லாம் எனக்கு ஏதோ கண்கட்டுவித்தை மாதிரி இருந்தது. என் கட்டைவிரலைக் கடித்துக் கொள்ள வேண்டும்போல் தோன்றியது; கனவா, நனவா என்று நிச்சயிப்பதற்காக அல்ல; ஒன்றும் புரியாத குழப்பத்தால்தான். அப்படியே கடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். சற்று நேரம் கழித்து, சந்தோஷ முகத்துடன் தகப்பனும் பிள்ளையும் வெளியே வந்து, ''போய் வரோம்'' என்று என்னிடம் விடைப்பெற்றுச் சென்றார்கள்.

என்னை என் தகப்பனார் உள்ளே அழைத்தார். ''அந்தக் குட்டி சொர்ணத்தைக் கலியாணம் பண்ணிக்க உனக்கு இஷ்டமாடா?'' என்று திடுதிப் பென்று என்னைக் கேட்டார்.

கூச்சத்தோடு தலையை அசைத்து என் சம்மதத் தைத் தெரிவித்தேன்.

நடந்த விவரங்களைப் பிறகு என் தகப்பனார் சொன்னார். சொர்ணத்துக்கு நிச்சயித்திருந்த பிள்ளை வீட்டாரிடமிருந்து திடீர் என்று ஒரு தந்தி வந்ததாம். ''பிள்ளைக்குச் சம்மதமில்லை. உங்கள் அட்வான்ஸ் ரூபாய் ஐந்நூறையும் அனுப்பிவிட்டோம். நாங்கள் வரவில்லை; மன்னியுங்கள்'' என்று தந்தி. முகூர்த்தத்தை நிறுத்த இவர்களுக்கு இஷ்டமில்லை. உள்ளூரிலே எங்கள் வீட்டுச் சம்பந்தமே நல்லது என்று எண்ணிவிட்டார்கள். என் சம்மத

முண்டானால், தமக்கு ஆட்சேபம் இல்லை என்று என் தகப்பனார் தெரிவித்துவிட்டார்.

அப்புறம் என்ன? கல்யாணத்தை வர்ணிக்க வேண்டுமா? அது மிகவும் விமரிசையாகவே நடை பெற்றது. ஆனால், முன்னே என்னவோ ரோமியோ ஜூலியத் மாதிரி சொர்ணமும் நானும் பரஸ்பரம் நயன மின்னல்களை வீசினோமே! கல்யாண காலத்திலே நானாவது தேவலை; சொர்ணம் ஏதோ காட்டிலே இருந்து பிடித்து வந்த மான்குட்டி மாதிரி, நாணிக் குனிந்துவிட்டாள்.

மாங்கல்யதாரணம் முடிந்து, பெரியவர்களை நமஸ்கரிக்கச் சென்றோம். முதல் முதலிலே பாட்டி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தபடி, "மகாராஜனாய். ஆயிரங்காலத்துப் பச்சையாய் வாழணும், அப்பா! என்னவோ இந்தக் கிழம் என்னிக்கோ உளறித் தேன்னு மனசிலெ வெச்சுக்காதே. கிழங்களுக்குப் புத்தி ஏதுடாப்பா!" என்றாள்.

எனக்கும் கண்ணீர் வந்துவிட்டது. "இல்லை. பாட்டி! என்மேலே தப்பு. நீங்க என்ன பண்ணுவக? நீங்கதான் என்னை மன்னிக்கணும்" என்று உபசாரம் சொன்னேன்.

நாலு நாள் கல்யாணமும் நடந்து சேஷ ஹோமமும் பூர்த்தியாயிற்று.

அன்றிரவு தாவல்யமான நிலவு காய்ந்துகொண் டிருந்தது.

என்னைச் சந்திரன் அழைப்பதாக, சுப்பு வந்து கூப்பிட்டான். இந்தத் துறுதுறுத்த வாலை நம்ப எனக்கு இஷ்டமில்லை. என்றாலும் நிஜமாக இருந்து, சந்திரனுக்கு வருத்தம் வரக்கூடாதே என்பதற்காக, எழுந்து சென்றேன்.

கோயில் நந்தவனத்திலே சந்திரன் உட்கார்ந் திருந்தான். பக்கத்திலே அவன் தங்கை சொர்ணம்.

என்னைக் கண்டதும், விறுக்கென்று எழுந்து அவள் ஓட முயன்றாள். அவளை ஓடவிடாமல் பிடித்துக் கொண்ட சந்திரன், "வாருங்கள், மாப்பிள்ளை! இப்போது நான் ஒரு கதை சொல்லப்போகிறேன்" என்றான்.

"சந்திரா! என்ன தமாஷ் இது?" என்று கேட்டுக் கொண்டே, அவன் பக்கத்தில் உட்கார்ந்தேன்.

"தமாஷா, தமாஷ்! ஒரு சந்திரன் இல்லாவிட்டால், இன்று நிலைமை எப்படிப் போயிருக்கும் என்று யாருக்குத் தெரியும்?" என்று சொல்லி, இரண்டு காகிதத் துண்டுகளை ஜேபியிலிருந்து எடுத்து, பீதாம்பரையரைப்போல், லாகவமாக வெளியே போட்டான்.

ஒன்று, நான் எழுதி ஸைக்கிள் பிடியில் வைத்தது. மற்றது, சொர்ணத்தின் கையெழுத்து; அதைப் படித்தேன்:

"சுந்தரம்! என் மனசு உங்களுக்குத் தெரியும்: இந்தக் கல்யாணம் நடந்துதான் தீர வேண்டுமா? என் ஆயுள் முழுவதும் நான் கன்னியாகத்தான் இருக்க வேண்டுமா?

—சொர்ணம்."

என்னைத் தூக்கிவாரிப் போட்டது.

இந்த இரண்டு கடிதங்களும் சந்திரன் கையில் சிக்கவே, மாப்பிள்ளைப் பையனை என்னவோ மிரட்டி, ஏதோ தந்தியடித்துக் கலைத்துவிட்டான். பிறகு ஏற்பட்ட குழப்பத்தில், தான் தலையிட்டு, இந்தக் கல்யாணத்தை முடித்து விட்டான்; இதுதான் ரகசியம்.

"இதெல்லாம் சரி; எனக்கு ஒரே ஒரு சந்தேகம். உங்கள் இரண்டு பேர் கடிதங்களின் வாசகமும் ஒரே விதமாக இருக்கிறதே, இதெப்படி? ஒருவர்க்

கொருவர் பேசிக்கொண்டோ எழுதினீர்கள்?" என்று கேட்டான் சந்திரன்.

"மனசுதான் காரணம்" என்று நான் சுலபமாகப் பதில் சொன்னேன்.

ஆனால், சொர்ணம் சிறிது நகைப்புடன், "அவர் கடைசியாகப் படித்த நாவல் என்ன? அதைக் கேளு, அண்ணு" என்ருள்.

'என்ன நாவல்' என்று அவளைப் பார்த்துக் கொண்டே பதில் அளித்தேன்.

"அதில்தான் சூட்சுமம் இருக்கிறது. அந்த நாவலிலே வரும் கதாநாயகியின் கடித வாசகம் இது தான்" என்று சொல்லி மீண்டும் நகைத்தாள் சொர்ணம்.

"சொர்ணம், இனிமேல் நாவல் படிக்காதே; நானும் படிக்கவில்லை. சண்டைக் கடிதம் ஏதாவது அந்த நாவலிலே அகப்பட்டால் விபத்தாகிவிடுமே!" என்று நான் சொன்னதும் எல்லோரும் 'கொல்' என்று சிரித்தோம்.

★

பீதாம்பரையர்

ஊருக்கு ஒரு பீதாம்பரையர் வந்தார். கோடி வீட்டுத் திண்ணையில் அவர் உட்கார்ந்திருப்பதாக, ஒவ்வொரு வீட்டுக்கும் செய்தி எட்டியது. உடனே நான் - அப்போது சிறு பையன் - என் வானர சைன்யத்துடன் கிளம்பினேன்.

சிறு வயதில், என்னைச் சுற்றி எப்போதுமே ஒரு சிறிய வானர சைன்யம் உண்டு. இங்கே என் குழந்தைப் பருவத்தில் ஒரு கிழவனுர் எனக்குச் சூட்டிய ஒரு பட்டம் ஞாபகத்துக்கு வருகிறது. இப்போதுகூட அதைச் சொல்ல எனக்குக் கொஞ்சம் வெட்கமாகத்தான் இருக்கிறது. வெட்கம் இரண்டு

விதங்களில். ஒன்று: 'என்ன மோசமான பட்டம்' என்ற எண்ணம்; மற்றது, 'அந்தப் பட்டம் வாங்கிய நாமா இப்படி இருக்கிறோம்?' என்ற வருத்தம். அப்படி என்ன விசேஷமான பட்டம் என்று கேட்பீர்கள். ஒன்றும் இல்லை; 'மந்திரிக் குரங்கு' என்ற (பரிணாம ரீதியான) பட்டம்! இன்னொரு பையனுக்கு 'ராஜாக் குரங்கு' என்பது கிழவனார் சூட்டிய பட்டம். எல்லாப் பையன்களும் நான் சொன்னபடி ஆடுவார்கள், 'ராஜாக் குரங்கு' உள்பட. "இதோ இந்த நடைவண்டியில் அதோ அந்த எருமைக் கன்றைக் கட்டி வண்டி ஸவாரி செய்' என்று ராஜாக் குரங்குக்கு ஒரு முறை நான் யோசனை சொல்ல, அவன் அப்படியே செய்து மூன்று குட்டிக் கரணங்கள் அடித்துப் பல் உடைய, அவனுடைய அருமை அம்மாள் என்னிடம் குஸ்திக்கு வர நான் ஓட்டமாக ஓடிய ஒரு நாள் சம்பவமும், எனக்கு மரம் ஏறத் தைரியம் இல்லாவிட்டாலும் ஊரிலுள்ள பையன்களை எல்லாம் கொய்யா மரங்களைக் காலி செய்யும்படி செய்து பலனில் நானும் பங்கு கொண்ட பல நாட்களும் எனக்கு இன்றும் நினைவிருக்கின்றன; ஆனால் இந்தப் பீதாம்பரையர் வந்தது அந்த ஊரில் அல்ல; வேறு ஊரில். என்றாலும், அங்கேயும் ஒரு சிறிய படை என்னிடம் திரண்டுதான் இருந்தது. படையுடன், பீதாம்பரையரைப் பார்க்கப் புறப் பட்டேன்.

பீதாம்பரையர் நல்ல வாலிபம்; செக்கச்செவேல் என்ற மேனி; வைதிகத் திருக்கோலம்; விபூதி, ருத்திராட்சங்கள் கச்சிதமாய், அவற்றுக்குரிய அங்கங்களில் விளக்கமாகத் துலங்கின. மேலே ஒரு சிவப்புப் பட்டை, அரையும் குறையுமாக அவர் போர்த்திருந்ததிலும், ஒரு லாகவம் தென்பட்டது. கையிலே, கம்பராமாயணம்...கம்பனுக்கு இப்போதுதான் யோகம் என்று நினையாதீர்கள்; அப்போதெல்லாம்

கிராம கிராமாந்திரங்களில் இருந்த கம்பன், இப்போது மெள்ளப் பட்டணம் பார்க்க வந்திருக்கிறான்; அவ்வளவுதான் விஷயம். கிராமத்துச் சரக்குகள் பட்டணத்துச் சந்தைக்கு வந்தால், என்ன ஆகும்? கலப்படம் மலியும். ஆனால், அந்தப் பிரச்னை நமக்கு எதற்கு இங்கே? நம் பீதாம்பரையர் என்ன செய்து கொண்டிருந்தார் என்றல்லவா சொல்லவந்தேன்? அவர் கம்பராமாயணப் பிரசங்கந்தான் செய்துகொண் டிருந்தார். 'அலங்கலில் தோன்றும் பொய்ம்மை அரவென...' என்ற மாயா விளக்கத்தைத் துலக்கிக் கொண்டிருந்தார். அப்போது எனக்கு அது ஒன்றும் புரியவில்லை. 'இப்போது புரிந்ததா?' என்றால், 'இப்போதைக்கப்போதேமேல்' என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆயிற்று; தெய்வ வணக்கம் ஆயிற்று. அடுத்த பாட்டு, பிறகு அதற்கும் அடுத்த பாட்டு. இப்படி யாக, மூன்று, நான்கு பாட்டுக்களைப் படித்து வியாக்கியானம் செய்தார் பீதாம்பரையர். வாசாம கோசரமாக வர்ஷித்து விட்டார். நல்ல வியாகரண பண்டிதரான சாம்பசிவ சாஸ்திரிகளே திறந்த வாய் மூடாமல், மகாவியப்புடன் அந்தப் பிரசங்க மாரியைக் கேட்டுக்கொண் டிருந்தார். எனக்கும் ஆச்சரியந்தான் - பிரசங்கத்தில் அல்ல; ஊரெல்லாம் தம் புலமைக்கு வணங்கி மரியாதை செலுத்தி வரும் சாஸ்திரிகளே மயங்கிய காட்சியைக் கண்டு ஆச்சரியம். ஆனால், என் பசை ஆச்சரியப்படவில்லை. அது என்னைப் பின்வாங்குமாறு முடுக்கிக்கொண்டும் இருந்தது. கக்கரிப்பந்தலைப் படையெடுத்தாலும் ஏதாவது பயன் உண்டு என்பது அதன் எண்ணமாக இருந்திருக்கலாம். ஆனாலும், நான் இன்னும் கொஞ்சம் காத்திருந்தேன், இந்தக் கம்ப ராமாயணம் எங்கேதான் போய் முடிகிறது என்பதைப் பார்க்க லாம் என்று.

அது வெகு சீக்கிரத்திலேயே முடிந்து விட்டது. நாலாவது பாட்டில் பாதியோடு, பீதாம்பரையர் நிறுத்திக் கொண்டு, தலைநிமிர்ந்து, "இப்படியே போகிறது" என்று பரத நாட்டிய அபிநய தோரணையில், எல்லையற்ற அகண்டத்தைக் குறிப் பிடும் முத்திரை போல் தமது லளிதமான கையை வானை நோக்கி ஏறிட்டுத் தூக்கிக் காட்டினார். கம்ப ராமாயணம் கால் தலை காண முடியாப் பெருங்கடல் என்றார், அதில் கை சளைக்காமல் என்றென்றும் தாம் நீந்திக்கொண்டே இருக்க முடியும் என்றார், ஆனால் அது எதிரே இருப்போருக்குக் கஷ்டமாகுமே என்ற கருணையினாலேயே தாம் நிறுத்த வேண்டி இருப்ப தாகவும் தொனித்தது அவர் குரல் ... அப்பாடா! பிரசங்கம் முடிந்தது!

பின்பு, பீதாம்பரையர், ஊர் யோக க்ஷேம விசாரணைகளில் இறங்கினார். தம் தாத்தாவுக்கும் இந்த ஊரிலிருந்த தாத்தாக்களுக்கும் இருந்த சம்பந்தம், ஸ்தல மூர்த்தியின் மகிமை, நெல்விளைச்சல் இப்படியாகப் பல விஷயங்களைப் பற்றிப் பேசிவிட்டு, மாலையிலே தமது வித்தையைக் கொஞ்சம் காட்டு வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று, அவர் கேட்டுக் கொண்டார். முதல் வீட்டுக்காரரான சாஸ்திரிகளும் அதற்கு இசைந்தார். பீதாம்பரையர் ஸ்நானத்துக்கு எழுந்தருளினார்.

அடுத்த காட்சி, எங்கள் வீட்டுத் திண்ணையிலே நடந்தது.

"அடடா! என்ன போங்கள்! பீதாம்பர வேடிக்கை என்றால், வெறும் கூத்தாடித்தனம் என்று அல்லவா நாம் நினைக்கிறோம்? ஆனால், அவரிடம் என்ன வித்பத்தி நிறைந் திருக்கிறது! அடேயப்பா! அவர் கம்பராமாயணம் சொன்னால், இன்றெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கலாம்; அவ்வளவு அற்புதம்..." என்று புகழ்ந்தார் சாஸ்திரியார்.

தலையை ஆட்டினார் என் சிற்றம்மையின் கணவர்; "சரி; சாயங்காலம் ஆடச் சொல்லி, ஏதாவது கொடுத்து விட்டால் போகிறது. விஷயமெல்லாம் இதற்குத்தானே?"

ஆம்; அதற்குத்தான். 'சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்...' நாம் செய்வதெல்லாம் 'நாழி அரிசிக்கே' தானே?

மாலையில், டண் டண் டணார், டண் டண் டணார் என்ற ஓசை தெருக் கோடியிலே கேட்டதும், எல்லாருக்கும் முன்னே நானும் என் படையும் ஆஜராகிவிட்டோம். கூட்டமும் நன்றாகவே திரண்டது. பீதாம்பரையரும் அவருடைய சிஷ்யர்களும் பல வித்தைகள் காட்டினார்கள். எல்லாம் எனக்கு ஞாபகத்தில் இல்லை. பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை என்ற நூலில் இந்திர ஜாலம் என்று வருகிற கதையைப் படித்திருந்த எனக்கு, ஐயரின் இந்த வித்தைகளில் ஒன்றோ இரண்டோதான் சற்று ஆச்சரியமாக இருந்தது. மற்றவை சாதாரணமாகவே தோன்றின.

மாத்திரைக் கோலை வைத்துக்கொண்டு, கோலிக் குண்டுகளை ஒரு கிண்ணத்திலிருந்து மறு கிண்ணத்துக்கு ஐயர் போகச் செய்தார். அவருடைய சீடனே, வாயால் குடித்த தண்ணீரைக் காதால் வெளிவிட்டான். குட்டிச் சீடன் அபூர்வமான அந்தர்கள் அடித்தான். சிக்கிச் சிடுக்காக்கிக் கசக்கி ஒரே வாயாக மென்று விழுங்கிய நூல், பச்சை, சிவப்பு, மஞ்சள், ஊதா, நீலம், கறுப்பு முதலிய பல வர்ணங்களில் நீளமாக இழுக்க இழுக்க வெளியே வந்தது. மண்ணில் புதைத்த மோதிரம் எலுமிச்சம் பழத்துக்குள்ளிருந்து வந்து குதித்தது. சீட்டுக்கள், விளையங்கள், இன்னும் பல தளவாடங்கள் ஆகியவைகளைக் கொண்டும் ஐயரின் கோஷ்டியார் பல வேடிக்கைகள் செய்தார்கள்.

பிறகு, நான்கு சிறு கம்பங்களை ஐயர் நட்டார்; மேலே ஒரு விதானம் கட்டி, நாலுபுறமும் திரையிட்டு மூடினார். ஒரு புறத்தில் திரையைத் திறந்து, வித்தை யாடிகளில் ஒருவனை, ஒரு கம்பத்தில் கயிற்றால் கட்டி, கடைசி முடிச்சை யார் வேண்டுமானாலும் போடச் சொன்னார். பின்பு கை இரண்டையும் சேர்த்து விலங்கிட்டுப் பூட்டிச் சாவியை எங்களிடம் கொடுத்து விட்டார். என்னவோ மந்திரம் உச்சரிப்பவர்போல் ஏதேதோ சொல்லித் திரையை மூடி மூடித் திறந்தார். ஒவ்வொரு தடவை திறக்கும் போதும், கட்டுக்கட்டி விலங்கிட்ட வித்தையாடி, கட்டு அவிழாமல் கம்பத் துக்குக் கம்பம் மாறி நின்றான்.

இன்னும் வித்தையாடி திரைக்குள்தான் இருக் கிறான். திரை மூடியபடி இருக்கிறது, உள்ளே இருக்கும் வித்தையாடிக்கும் வெளியே இருக்கும் பீதாம்பரையருக்கும் தர்க்கம் நடக்கிறது.

"அடே, வா வா! வெளியே வா."

"நான் மாட்டேன்."

"ஏன் மாட்டாய்?"

"பறக்கப் போகிறேன்."

"எவ்விடத்துக்கு?"

"டில்லிப் பட்டணத்துக்கு."

"அடடே! எங்களை விட்டுப் போய்விடாதே."

பதில் இல்லை.

"அட தம்பீ! மோசமா செய்துவிட்டாய்?"

ஈன சுரத்தில் பதில் வருகிறது: "நான் இப்போது திருவாரூருக்கு மேலே பறந்துகொண்டிருக்கிறேன். நொடியில் திரும்பிவருகிறேன். வரும்வரையில் திரை யைத் திறக்க வேண்டாம்; திறந்தால், பறந்தே போவேன்."

"ஐயையோ! அப்படிச் செய்துவிடாதே. வா, வா. கீழே வா."

"வருவேன். ஆனால் தாகமாக இருக்கிறது."

"சுத்த ஜலம் ஒரு செம்பு வேண்டுமா?"

"வேண்டாம்."

"மோர் ஒரு படி வேண்டுமா?"

"வேண்டாம்."

"பால் ஒரு குடம் வேண்டுமா?"

"வேண்டாம்."

"உன் தாகத்துக்கு என்னதான் வேண்டும்?"

"சிவப்பாக இருக்குமே, அது வேண்டும்."

"ரத்தமா?"

"ஆமாம்."

"ஆடு வெட்டவா?"

"ஐயோ! வேண்டாம்."

"கோழி அறுக்கவா?"

"சை! வேண்டாம்."

"எதுதான் வேண்டும்? சொல்லித் தொலை."

"நர பலி."

எங்கள் அத்தனை பேரையும் தூக்கிவாரிப் போட்டது. பீதாம்பரையர் மட்டும் துளிக்கூட மனம் கலங்கவில்லை. டமாரத்தைப் பலமாக அடிக்கச் சொன்னார். குட்டிச் சீடனைத் திரைக்கு முன்னே கொண்டு வந்து நிறுத்தினார்.

"தம்பீ, மேலே போன அண்ணனுக்காக உன் உயிரை கொடுப்பாயா?"

"ஆஹா! கொடுக்கிறேன். ஆறிலும் சாவு நூறிலும் சாவு" என்று வீரதீரமாகச் சொல்லிய சிறுவன், கம்பீரமாக மார்பைத் திறந்து காட்டினான்.

பீதாம்பரையரும் உறையிலிருந்து ஒரு கத்தியை எடுத்து விறுவிறு என்று நீட்டினர். டும் டுடும் டும், டும் டுடும் டும் என்று அலறியது முரசம். கூட்டத்திலிருந்த அனைவரும் பரபரப்போடு பார்த்துக்கொண்டிருந்தோம். திடீரென்று ஒரு மூலையிலிருந்து ஒரு குரல் கேட்டது.

"அடபாவி! விடு என்னை!"

"அட இழுக்காதே, ஐயா!"

"ஐயோ, இதென்ன மோசம்! என்னைச் சுற்றிக் கட்டிக்கொண்டிருக்கிறானே!"

"நானா கட்டினேன்? என்னைத்தான் கட்டி விலங்கிட்டிருக்கிறதே!"

இந்தக் கலவரம் நடந்த திசையிலே, பலர் சிரிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

அங்கே பார்த்தால் திரைக்குள் இருந்த வித்தைகாடி, கட்டும் விலங்குமாக வெளியே நிற்கிறான். அவனுடைய கட்டிலே, கம்பத்துக்கும் பதிலாக, வேடிக்கை பார்க்க வந்த ஓர் அப்பாவி மனிதன் மாட்டிக்கொண்டிருக்கிறான்! இப்படி ஒருவருக்கும் தெரியாமல், மாயமாக வித்தையாடி வெளியே வந்துவிட்டான்!

இந்த அரிய வித்தைக்குப் பிறகு, ஐயரின் பெரிய வித்தையான வாயுஸ்தம்பம் நடைபெற்றது. நாலு கம்பங்களுக்கும் நடுவே ஒரு சிறிய கழி நட்டிருந்தது. அதன் பக்கத்தில் முகத்தை விலக்கி உடம்பெல்லாம் அழகிய பட்டினால் மூடி, ஐயர் கால் நீட்டிப் படுத்துக்கொண்டார். சேஷசயனப் பெருமாள்போல் ஒரு கையைத் தலைக்கு முட்டுக்கொடுத்து, மறு கையால் தரையில் நட்டிருந்த சிறு கழியின் அடியை வருடிக்கொண்டு, கண்ணை மூடி, சுவாஸ பந்தனம் செய்வது போல் தோன்றினர். திரை விழுந்தது.

சில நிமிஷம் கழித்துப் பிரதம சீடன் திரையை நீக்கினான். என்ன ஆச்சரியம்! ஐயர் தரைக்குமேல் இரண்டடி உயர்ந்து, அந்தரத்தில் அநாயசமாகப் பஞ்சணைமீது படுத்தவர் மாதிரி கால் நீட்டி உறங்குகிறார். தரைக்கும் அவருக்கும் தொடர்பே இல்லை. சிறு கழியின் அடியை விட்டு, இப்போது அதன் முடியைக் கைப்பிடித்திருக்கிறார். இந்த அற்ப ஆதாரத்தை அல்லாமல் வேறேதும் இல்லை; ஆகாச சயனம் என்றே சொல்லவேண்டும். பிரமித்துப் பரம மௌனத்துடன், அந்த அற்புதக் காட்சியை அனைவரும் கண்ணாரக் கண்டோம். ஒரு விநாடி சென்று, இரு விநாடியும் கழிந்தன; திரை மூடி, மீண்டும் திறந்தது. முன்போலவே ஐயர், தரைக்கு வந்திருந்தார். ஆனால், கண் விழிக்கவில்லை; சுவாஸ பந்தனமும் தளரவில்லை. ஐயரின் முகத்திலே சீடர்கள் பரபரவென்று தண்ணீரை அடித்து, மூர்ச்சை தெளிவித்தார்கள். கண்ணைத் திறந்த ஐயர், ஏதுமே நடவாததுபோல், மௌனப் புன்னகையுடன், எழுந்து உட்கார்ந்தார். வித்தை முடிந்தது. எனக்கு மட்டும் எல்லாம் ஒரே தந்திரங்களாகவே தோன்றின. ஏன் நாமும் செய்யலாகாது என்றும் எண்ணினேன்.

வீட்டுக்குச் சென்றோம். என் வானர சைன்யத்தைக் கொண்டு, சீட்டுக்கட்டு, கோலிக்குண்டுகள், கொட்டாங்கச்சிகள், கோலாட்டக்கழி ஆகிய உபகரணங்களைத் தருவித்தேன். கோலாட்ட மாத்திரைக்கோலின் சகாயத்தோடு, கோலிக் குண்டுகளைக் கொட்டாங்கச்சிகளுக்குள் ஆச்சரியமாக ஒன்றில் இருந்து ஒன்றுக்கு மாற்றிக் காட்டினேன். சீட்டுக்கட்டிலே கடிகார வித்தை முதலியவைகளைச் செய்து காட்டினேன். அந்தர்கள் என்னால் போட முடியாது. உடல் வணங்கி வேலை செய்வது எப்போதுமே என் வழக்கம் அல்ல; அது காந்திதர்மத்துக்கும் பொது உடைமைத் தத்துவத்துக்கும்

விரோதமோ என்னவோ நான் அறியேன். ஆனால், என் தந்தை எனக்கு வகுத்த தர்மம் அதுதான். என் சிறு விரலை அசைக்கக்கூட அவர் சம்மதியார். ஆகையால், பிற பையன்களை அந்தர் அடிக்கச் செய்தேன். அதன்பின், என் வித்தைகளைப் பெரியவர் களுக்கு முன்பு செய்து காட்டத் தொடங்கினேன். அவர்கள் ஓரளவு ஆச்சரியப்பட்டார்கள்; ஆனால் பரிகாசமும் செய்தார்கள்.

''பீதாம்பரையர் இப்படித்தான் செய்தாரோ? கோலிக் குண்டுகளைக் கைக்குள் ஒளிக்கிறாயே. அவர் மந்திரமல்லவா செய்தார்?''

''மந்திரமும் இல்லை, மாயமும் இல்லை. எல்லாம் வெறும் தந்திரந்தான்.''

''தந்திரமா? எங்கே உன்னை இந்தக் கம்பத்தில் கட்டுகிறேன்; அந்தக் கம்பத்தில் போய் நில், பார்ப் போம்.''

''வித்தையாடியைக் கட்டியதுபோல் என்னையும் பின்புறமாகவே கயிற்றைவிட்டுக் கட்டுங்கள். தளர்ந்த விலங்கையும் போடுங்கள். கையை இடுக்கால் இழுத்துக் கழற்றி, மற்றொரு கம்பத்திடம் போய்த் திரும்பவும் மாட்டிக்கொள்கிறேன்.''

''கம்பத்துக்குக் கம்பம் போனதுதான் இப்படித் தந்திரம் என்கிறாய். அத்தனை ஜனங்களும் பார்த்துக் கொண்டிருக்க ஒருவருக்கும் தெரியாமல் திரைக்குள் இருந்தவன் மாயமாக வெளியே வந்தானே; அதெப்படி?''

ஆம், அதுதான் எனக்கும் புரியவில்லை. மை வேலையாக இருக்குமோ; மந்திரமாகத்தான் இருக் குமோ? உள்ளுக்குள்ளே பலவிதமாக யோசித்தேன். என்றாலும், ''எல்லாம் தந்திரந்தான்'' என்று அவர் களிடம் ஒரே அடியாகச் சாதித்தேன்.

''அதென்னப்பா! எப்படி என்று சொல்லு?''

எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

"அதுவாவது போகட்டும்; ஒரே ஒரு சிறு கழியின் முனையைத் தொட்டுக்கொண்டு, ஆகாசத்தில் அவர் படுத்திருந்தாரே; அதற்கென்ன சொல்லு கிறாய்?"

அதுவும் எனக்குப் புரியவில்லை.

மறுநாள் பொழுது விடிந்தது. நான் ஏதோ வேலையாகப் பக்கத்து ஊர்க் கோயில் மானேஜரைப் பார்க்கச் சென்றேன். அந்த வீட்டுத் திண்ணையிலே உட்கார்ந்திருந்தார் பீதாம்பரையர். அதே கம்ப ராமாயணத்தில், அதே சுந்தரகாண்டத்தில், அதே அலங்களில் தோன்றும் பொய்ம்மை அரவினைப்பற்றி, அதே பிரசங்கந்தான் ஆரம்பமாகியிருந்தது. என்ன பொருத்தம்! 'பொய்ம்மை அரவு'தானே பீதாம்பர ஜால வேடிக்கை?

அங்கேயும் அதே மூன்றரைப் பாட்டுக்களுக்குப் பிறகு, 'இப்படியே போகிறது' என்ற அதே அகண்டாபினய முத்திரையோடு, பிரசங்கத்தை முடித்தார் பீதாம்பரையர். பிரசங்கத்தில் நேற்றைக் கும் இன்றைக்கும் எள்ளளவும் மாறுதல் இல்லை. எனக்கு அது புளித்துப்போன சரக்கு; ஆனால், கோயில் மானேஜரோ அங்காந்து, பெரு வியப்புடன், அதைச் செவிமடுத்துப் பூரித்தார். 'ஆஹா! என்ன வித்பத்தி!' என்று வாய்விட்டுப் புகழவும் புகழ்ந்தார். ஆனால், பீதாம்பரையருக்கு ஐந்தாவது பாட்டுத் தெரியுமா? அதை யார் கேட்பது? நான் சிறுவன்; கேட்டேனானால் அதிகப் பிரசங்கித்தனம் ஆகும்; கேட்கவில்லை; முடிவு மாத்திரம் செய்துகொண்டேன்: ஐந்தாவது பாட்டு அவருக்குத் தெரியவே தெரியாது!

அன்று மாலை அந்த ஊரிலேயும் வித்தை நடந்தது. என் வானர சைன்யத்துடன் நானும் சென்றேன். முதல்நாள் நடந்த சிறிய வித்தைகள்

எல்லாம் அன்றும் நடந்தன. அவைகளில் நாங்கள் அதிகக் கவனம் செலுத்தவில்லை. திரைகட்டும் கட்டம் வந்தது. வெகு ஜாக்கிரதையாக, என் படையைப் பல கூறுகளாகப் பிரித்து, திரைக்கு நான்கு திசைகளிலும் காவல் போட்டேன். கட்டுக் கட்டிய வித்தையாடி கம்பத்துக்குக் கம்பம் மாறினுன் என்ருலும், யாரும் அறியாமல் வெளியே வர வேண்டுமே? அதற்காக நேற்றுப் பூர்த்தியாகாத சிறுத்தொண்டர் நாடகம் இன்றும் ஆரம்பமாயிற்று. "நர பலியா வேண்டும்? இதோ குத்துகிறேன், பார்; வெட்டுகிறேன், பார்" என்று ஆர்ப்பரித்தார் ஐயர். நேற்று வேடிக்கை பாராத ஜனங்க ளெல்லாம், 'அண்ணனுக்காக உயிரை விட வந்த' சிறுவனை, வைத்த கண் வாங்காமல்தான் வெகு கவலையோடு பார்த்துக்கொண் டிருந்தார்கள். ஆனுல், என் காவல் படைமட்டும், வைத்த கண் வைத்தபடி திரையையே கவனித்தது. அதன் கவனத்தைத் தம்மிடம் இழுக்க, ஐயர் எவ்வளவோ பாடுபட்டார். பலிக்கவில்லை. கட்டுக் கட்டிய வித்தையாடி, வேறு வழியில்லாமல், என் படையின் முன்னிலையிலே தலைகுனிந்து, ஜனங்கள் கைகொட்டி நகைக்க, பகிரங்கமாக ஓடி வந்தான். ரகசியத்தை நாங்கள் கண்டுபிடித்து விட்டோம். அன்றிரவு வீட்டுக்குச் சென்று பெரியவர்களிடம் இதைத் தெரிவித்தோம்.

"இருக்கட்டும்; அந்த வாயு ஸ்தம்பனத்துக்கு என்ன சொல்லுகிருய்?"

வாயு ஸ்தம்பனமாவது, ஜல ஸ்தம்பனமாவது! எல்லாம் ஒரே மாதிரியான புரளிதான் என்று எனக்குத் தோன்றியது. ஆனுல், இன்று வரையில் எனக்கு அது எப்படி என்று மட்டும் புரியவில்லை. வாயுஸ்தம்பனம் எப்படிச் செய்தார்? மற்ற வித்தை களின் மர்மம் தெரிந்துவிட்டதால் அவை எனக்கு மறந்துகூடப் போய்விட்டன. ஆனுல், அற்புதமான

அந்த வாயுஸ்தம்பனக் காட்சி இன்றும் என் கண் எதிரே நிற்கிறது. 'வாழ்வோர் வாழ்வென்றுரைக்கும் இந்த வர்ணத்திரையைத் தூக்காதே' என்று பாடினார் ஓர் ஆங்கிலப் புலவர். அந்த வர்ணத் திரையைத் தூக்க முயன்றால், உண்மையை நாம் கண்டுவிடலாம்; கண்டு விடுகிறோம். ஆனால் கண்டு அடையும் பயன் என்ன? வெறும் ஏமாற்றந்தான்; சில சமயம் பயங்கரமாகவும் இருக்கும். சத்தியம் ஏமாற்றத்திலும் பயங்கரத்திலுந்தானா இருக்கிறது? அழகிலும் இன்பத்திலும் இல்லையா?

★

பணக்காரி

இரண்டு குடும்பங்களும் ஒரே ஊர்தான். என்றாலும், குழந்தையும் தாயும் ஒரு பக்கம்; புருஷன் ஒரு பக்கம். இமயமலைக்கும் கன்னியாகுமரிக்கும் இடையே உள்ள தூரத்தில் இருந்தால் எப்படியோ அப்படித்தான் அந்தத் தம்பதிகள் வாழ்ந்தார்கள். வாழ்ந்தார்கள் என்று சொன்னால், என்ன அர்த்தம்? பிறந்து தொலைந்த கடனைத் தீர்த்துத்தானே ஆக வேண்டும்? அப்படிச் செய்தார்கள் என்று அர்த்தம் செய்துகொள்ளலாம்.

பெண்களுக்குச் சொத்து வேறு உண்டா? இருக்கத்தான் இருக்கலாமா? என்றாலும், குஞ்சிதம் பணக்காரி; பாலு ஏழை. பணக்காரக் குஞ்சிதம் உண்மையில் பணக்கார வீட்டுப் பெண்; அவ்வளவு தான். பாலுவுக்கும் குஞ்சிதத்துக்கும் கல்யாணம் நடந்து ஏழு வருஷமும், குழந்தை பிறந்து ஐந்து வருஷமும், சண்டை நடந்து மூன்று வருஷமும் ஆயின. சண்டை நிஜமாகவே புருஷனுக்கும் மனைவிக்கும் நடந்த சண்டை அல்ல; அவ்விதம் நடந்திருந்தால் தான், சமரசம் ஏற்பட்டு இரண்டு வருஷம் பதினொரு மாதம் இருபத்தொன்பது நாட்கள் ஆகியிருக்குமே.

அவர்கள் அப்படிப்பட்ட தம்பதிகளே என்பது இப்போது நன்ருகத் தெரிகிறது. புருஷன் வீட்டாருக்கும் மனைவி குடும்பத்தினருக்கும் நிகழ்ந்த சண்டை முற்றித் தம்பதிகளின் பிரிவில் முடிந்தது; சமாசாரம் இதுதான்.

குஞ்சிதம் தன் சண்டையைப்பற்றி, தோழி எவளிடமும் பேசியதில்லை; பாலு இந்த விஷயத்தில் இடித்து வைத்த புளி; பாக்கி விஷயத்திலெல்லாம் மகா வாயாடி. ஆனால், குஞ்சிதத்தின் தாய் தந்தையும் சரி, பாலுவின் பெற்ருேரும் சரி, இதைப் பற்றி எல்லோரிடமும் வெகு விஸ்தாரமாக வாதப் பிரதிவாதங்கள் செய்வார்கள். புது மாடு, பொழித் தகரார், காந்தி இயக்கம், மிளகாய்ப் பொடி என்ற சங்கதிகளைப்பற்றி அவர்கள் எவ்வளவு அநாயாசமாகவும் வேகமாகவும் பேசுவார்களோ அதே மாதிரிதான் செல்லும், இது சம்பந்தமான அவர்கள் பேச்சும். அந்தப் பேச்சையெல்லாம் அப்படியே இங்கே 'ரிக்கார்டு' செய்ய வேண்டியதில்லை; 'ஸாம்பிள்' மாத்திரம் பார்க்கலாமே.

பாலுவின் அப்பா ஒரு தடவை சொன்னுர்: "அவன் நூறு வேலிக் குடித்தனக்காரனுக இருந்தால், அவன் வீட்டோடே. அந்தச் சிறுக்கி இனிமேல், என் வீட்டில் காலடி எடுத்து வைக்கக் கூடாது. எங்கேயோ ஒரு பிச்சைக்காரி எனக்கு அகப்பட மாட்டாளா? இந்த வருஷம் வேண்டாமே; அடுத்த வருஷம் ஒரு கால்கட்டுக் கட்டி விட்டால் போகிறது."

குஞ்சிதத்தின் தந்தை பேச்சின் போக்குக்கு ஒரு சின்ன உதாரணத்தைப் பாருங்கள்: "அவன் ஒரு குட்டிச் சுவர். அவனேடு வாழ நான் என் பெண்ணை விடமாட்டேன். படித்தானும்! என்ன படிப்பு வேண்டியிருக்கிறது! அந்தக் கழுதை என் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டால், என் வீட்டில் வந்து வாழலாம். அதற்கு வேண்டுமானுல் இடம் கொடுப்

பேனே தவிர. அந்தக் கிராதகன் வீட்டுக்கு என் பெண்ணை அனுப்புகிற பேச்சு இனிமேல் கிடையாது...''

ஊரார் பேச்சின் தோரணை வேறு: ''குஞ்சிதம் பணக்காரி. அந்த 'ராங்கி' இல்லாமல் போகுமா? பணக்காரப் பெண்ணைப் பாக்கிப் பெண் மாதிரி நடத்தப் போகுமா?''—''தகப்பனார் பணம் அவளுக்குத் தான் கிடைக்கப் போகிறது. இந்தப் புருஷன் இல்லாத போனால், என்ன? அவளுக்கு வேண்டிய தெல்லாம் தானே நடக்கிறது.'' —''என்ன பணம் இருந்தென்ன? கண் நிறைந்த கணவன் இல்லாத வாழாவெட்டி வாழ்க்கை என்ன வாழ்க்கை?''-இப்படி யெல்லாம் ஊரில் உள்ளவர்கள் இரண்டு தரப்பும் பேசினார்கள். ஆனாலும், எல்லாரும் குஞ்சிதத்தின் பணத்தைச் சுற்றிச் சுற்றி மாத்திரம் கும்மியடிக்கத் தவறியதில்லை, தங்கள் பேச்சுக்களில். இந்தப் பணக்காரக் குஞ்சிதம் தனியே பிரிந்ததற்குக் காரணம் 'ஒரு முட்டை புளி' விவகாரம்; அது எல்லாருக்குந் தெரிந்ததுதான்; என்றாலும் குஞ்சிதம் பணக்காரி என்பது ஊர் வம்பு.

இப்படியாக பாலுவும் குஞ்சிதமும் பிறந்து வளர்ந்து வாழும் கதை, ஊரிலுள்ளவருக்குச் சந்திக்கரை வம்பு; பெற்றோருக்குப் பிரமாதமான விவகாரம், ஆனால், அந்தத் தம்பதிகளுக்கு அது என்ன? அது யாருக்கும் தெரியாது; அதைப்பற்றி யாரும் கவலைப்பட்டதாகவும் தெரியவில்லை.

இந்தப் பூலோகத்தில் இருக்கும் கஷ்ட நஷ்டங்களோ, சுக துக்கங்களோ, அந்தச் சந்திரனுக்குத் தெரிகிறதா? பகலெல்லாம் கொளுத்து கொளுத் தென்று கொளுத்திற்று வெயில். அதே வெயிலை அந்த மந்திரவாதிச் சந்திரன் விழுங்கி, தன் எச்சிலைப் பூமிமீது உமிழலானான். மனிதர்கள் அதைக் குளிர் நிலவு என்று கொண்டாடலானார்கள்.

பெட்டிக்குள் வைத்திருந்த பட்டுப் புடைவைகள் வெளியே கிளம்பின; மெருகழியாது இருளில் ஒளித்துக் கிடந்த ஒட்டியாணமும், வைர ஒளியும், காசுமாலையும் சில வீடுகளில் மின்னலாயின. சக்தியானுசாரம் அவரவருக்கு இயன்ற அலங்காரங்களை அந்த அந்த வீட்டுப் பெண்கள் செய்துகொண்டார்கள். குஞ்சிதத்துக்கு மாத்திரம் சேலை இல்லையா, நகை இல்லையா, மலரும் சீப்பும் வாங்கக் காசுதான் இல்லையா? ஆனால், அவள் மாத்திரம் வழக்கம் போலவே இருந்தாள்.

ஊரெல்லாம், ஸ்திரீ புருஷர், குஞ்சு குழந்தைகள் எல்லாருமாகச் சேர்ந்து ஆற்றங்கரைக்குப் போனார்கள். வருஷத்துக்கு ஒரு நாள் அல்லவா? இருப்பது பத்து வீடு. ஆகையால் எல்லாரும் ஜண்டையாக, நிலாச் சாப்பாட்டுக்குப் புறப்பட்டார்கள்; வேறொன்றுக்கும் அல்ல.

பத்து வீடும் ஒன்றுக்கொன்று ஏதோ தொட்டும் நெருங்கியும் சொந்தம் உடையவை. 'அந்த ஊரே எல்லாம் ஒன்றுக்குள் ஒன்று' என்று அடுத்த ஊர்க்காரர் சொல்லுவதுண்டு; அது நிஜந்தான்.

ஆற்றங்கரை என்று சொல்லுவது உள்ளூர்ச் சம்பிரதாயம். உண்மையில் அது ஒரு சின்னஞ் சிறு வாய்க்கால்தான். ஆனால், ஓர் ஆள் 'புருஷம்' ஆழம் உடையது; படித்துறை ஒன்றும் இல்லை. எல்லா ஊர் ஆற்றங்கரையையும்போல அல்ல; இரு கரையும் கற்பாறை போன்ற சுக்காங் தரை. ஜலத்தின் வேகம் கரைத்து வடிகட்டிய பொடிமணல் இரு பக்கத்திலும் தண்ணீரடியிலும் இல்லாமல் போகுமா? அது உண்டு.

வழக்கமான துறையில், மேட்டிலிருந்து வெகு வேகமாகத் தண்ணீர் பாய்ந்து விழுந்து சலசல வென்று சப்தித்துக்கொண் டிருக்கிறது. அந்த

ஊருக்கு அதுதான் பெரிய நீர்வீழ்ச்சி. அந்த இடம் அதிக இழுப்புடையது. ஸ்திரீகளும், குழந்தைகளும் முழங்காலுக்குமேல் இறங்க மாட்டார்கள்.

பத்து வீட்டுக்காரர்களும் கரைமீது உட்கார்ந்து கொண்டும் தண்ணீரில் நின்றுகொண்டும் நானாவித உண்டிவகைகளை ருசி பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். இடையிடையே கலகலப்பான பேச்சு. ஜலம், கரை, ஈ. எறும்பு, மனிதர், குழந்தைகள் எல்லார்மீதும் ஒரே திறுசாகத் தனது நிஷ்களங்கமான நிலாவைச் சந்திரன் வீசிக்கொண் டிருந்தான்.

கரையில், ஓர் ஓரமாக உட்கார்ந்திருந்தாள் குஞ்சிதம். அவள் குழந்தை மங்களம் அங்கும் இங்கும் ஓடி விளையாடிக்கொண் டிருந்தாள். பாலு வேறோர் பக்கமாகத் தண்ணீரில் நின்றுகொண் டிருந்தான். பாலுவின் அருமையான நாய்க்குட்டி ஒவ்வொரு குழந்தையிடமும் ஓடி ஓடிக் கொஞ்சி விளையாடிற்று.

அந்த நாய்க்குட்டிக்கு இந்த நிலாவில் யாருடனாவது கொஞ்சம் அதிக சிநேகம் செய்து கொள்ள வேண்டுமென்று ஆசையுண்டாயிற்றோ என்னவோ தெரியவில்லை. குழந்தை மங்களத்தைச் சுற்றிச் சுற்றி அதிகமாகத் துள்ளிக் குதிக்கலாயிற்று. அவள் பாவாடையைப் பிடித்துக் கடிக்கும். வாலை வாலை ஆட்டும். மென்று விழுங்கிய மெதுவான உறுமலும் கனைப்பும் உண்டு. இத்தனையும் அந்த மங்களத்துக்கு வேண்டியிருந்தது. அந்த நாய்க்குட்டியுடன் அவள் ஓடியாடித் துள்ளிக் குதித்துச் சிரித்து விளையாடலானாள்.

"ஏ, நாயே! இங்கே வா" என்று திரும்பத் திரும்பத் தன் குழந்தையைக் குஞ்சிதம் கூப்பிட்டாள்.

"ராஜீ! ராஜீ! வாம்மா" என்று பாலு தன் நாய்க்குட்டியைப் பல தடவை கூப்பிட்டான்.

நாய்க் குட்டியோ மங்களமோ, குஞ்சிதத்தையோ பாலுவையோ லட்சியம் செய்யாமல் விளையாடிக் கொண்டிருந்தன.

சற்று நேரத்துக்கெல்லாம், 'அது போய்த் தொலைகிறது' என்று இருவரும் - குஞ்சிதமும் பாலுவும் - சேர்ந்தாற்போல அலுத்துக் கொண்டு பேசாமல் இருந்தார்கள்.

அரை நாழிகை கழித்து, எல்லாரும் சந்தனம் பூசித் தாம்பூலம் தரித்துக்கொண்டபோது, வள் வள் என்று ராஜி என்ற அந்த நாய்க்குட்டி குலைக்கலாயிற்று. "சனியன்! குழந்தையை எங்கேயாவது கடித்துவிடப்போகிறதே" என்று சொல்லிக் கொண்டே திரும்பிப் பார்த்தாள் குஞ்சிதம். மங்களத்தைக் காணவில்லை. "ஐயோ! குழந்தையைக் காணோமே?" என்று உரத்த குரலில் ஏங்கிக் கொண்டே நாலு திசையும் பார்த்தாள்.

இதனிடையில் தன்னைப் பார்த்துக் குலைத்துத் தன் துணியைப் பிடித்து நாய் இழுப்பதைக் கண்ட பாலுவுக்குத் திடீரென்று என்னவோ ஓர் எண்ணம் உண்டாயிற்று. அவன் தண்ணீரில் குதித்து முழுகினான். நாயும் அவனுடன் குதித்து நீஞ்சியது.

"ஐயோ, மங்களம்! மங்களம்! அடியம்மா, எனக்கு என்ன கதியடி அம்மா!—நான் வாழ்ந்த வாழ்வில் நீயுமா மண்ணைப் போட வேண்டும்?" என்று குஞ்சிதம் என்ன என்னவோ கதறத்தொடங்கினாள்.

இடையில் நாய்க்குட்டி ஒரு துணியைக் கௌவிக் கொண்டு, தண்ணீரில் தத்தளித்தது. அதுதான் மங்களத்தின் பாவாடை. பாலு வெகு வேகமாகக் கைம்மாறு போட்டு நாயின் அருகே சென்றான். மங்களம் அகப்பட்டு விட்டாள்.

அவன் கரைக்கு வந்து சேர்ந்ததும், அவனைச் சூழ எல்லாரும் காக்காய்க் கூட்டம் மாதிரி கத்திக் கொண்டு வந்து சேர்ந்தார்கள்.

உடம்பு துவண்டு, கண் பிதுங்கி, பாலுவின் கைகளில் வளைந்து கிடந்த மங்களத்தைப் பார்த்த குஞ்சிதம், "மங்களம்! மங்களம்!" என்று மறுபடியும் கத்தினுள். அந்தத் தாயை அப்போது உற்றுப் பார்த்தான் பாலு. அவன் உடம்பு வெலவெலத்துப் போயிற்று.

மங்களத்துக்கு அப்படி ஒன்றும் ஆபத்தில்லை. ஒரு பெரியவர் கையில் வைத்துக்கொண்டு சிறிது சக்கரமாகச் சுற்றினுர். கையைக் காலை ஏதோ சிறிது அசைத்தார். பிறகு உடம்பில் சூடு உண்டாகத் தேய்த்தார். எப்படியோ ஏதேதோ சிகிச்சை செய்த பிறகு, மங்களத்துக்கு ஸ்மரணை வந்தது; "அம்மா, நாய்க்குட்டி" என்று கத்தினுள் மங்களம்.

சற்று நேரம் வரையில் எல்லாம் அல்லோலகல்லோலப்பட்டிருந்தது. இப்போது எல்லாரும் முகம் மலர்ந்தார்கள். வீட்டுக்கும் புறப்பட்டார்கள்.

பாலு சற்று எல்லாருக்கும் பிந்தி நடந்தான். அவனுக்குப் பின்னே நாய்க்குட்டி, மங்களத்தை மார்பில் அணைத்துக் கொண்டு, நாய்க்குட்டியின் பக்கத்திலே நடந்தாள் குஞ்சிதம். ஏனென்ருல் மங்களம் இன்னும் நாய்க்குட்டி ஜபத்தை விடவில்லை.

பாலுவின் வீடு வந்து சேர்ந்தது. பாலுவின் பெற்ருேரும் அந்த வீட்டைச் சேர்ந்த மற்றவரும் உள்ளே நுழைந்தார்கள். பாலு தயங்கித் தயங்கி வெளியே நின்ருன்.

குஞ்சிதம் அங்கே வந்தாள். அவள் கால்கள் தள்ளாடின. இரண்டொரு கேவலுக்கு இடையே, "அம்மா, நாய்க்குட்டி" என்ருள் மங்களம்.

UNIVERSITY LIB

நாய்க்குட்டி வாலை ஆட்டிக்கொண்டு, குஞ்சிதத்தைச் சுற்றிச் சுற்றி வந்தது.

மங்களம் கீழே இறங்க வேண்டுமென்று பிடிவாதம் செய்தாள்.

கீழிறங்கிய மங்களம், நாய்க்குட்டி ராஜியின் கழுத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கட்டிக் கொண்டாள்.

இரண்டொரு நிமிஷ நேரம் குஞ்சிதமும் பாலுவும் அந்த இரண்டு 'குழந்தைகளை'யும் இமை கொட்டாமல் பார்த்தார்கள். பிறகு ஒருவரை ஒருவர் பரஸ்பரம் நேருக்கு நேரே நோக்கி நின்றார்கள்.

குஞ்சிதத்தின் கண்களில் கண்ணீரும், தீப் பொறியும் சேர்ந்தாற்போல் குடியேறி விட்டனபோல் தோன்றிற்று.

"இந்த—இந்த — நாய்க்குட்டியின்" என்று ஆரம்பித்தவள் தலையை மறுபுறம் திருப்பி, "இதன் இருதயம்கூட மனிதர்களுக்கு இருக்கவில்லை" என்று முடித்தாள்.

"குஞ்சிதம்!" என்று திடமான, ஆனால் மிக மெல்லிய, குரலில் அழைத்த பாலு, "நீ பணக்காரி; உனக்குப் பணம் வேண்டும். நான் ஏழை...." என்றான்; முடிக்கவில்லை.

"மனிதர்களுக்குக் கண்ணுமா இல்லாது போக வேண்டும்? என்னைப் பார்த்தால் பணக்காரியாகவா தோன்றுகிறது?" என்று இரைந்த குரலில் சொன்னாள் குஞ்சிதம். அவள் ஆடையாபரண பூஷிதையாக இருக்கவில்லை என்பது யாருக்கும் தெரியும்.

பாலு பேசாமல் நின்றான்.

குஞ்சிதம் குனிந்து மங்களத்தை நோக்கி, "வா, மங்களம் - இல்லை. இங்கேயே நீ இரு. நான்தான் பணக்காரி; நீயுமா பணக்காரி? - நீ ஏழை; ஏழையாக வாழவேண்டும். எனக்குப் பணம் இருக்கிறது; காசு

இருக்கிறது. அப்புறம் வாழ்வு எதற்கு?" என்று சொல்லி, "வாழ்வே வேண்டியதில்லை" என்று கம்பீரமாகத் திரும்பினாள்.

பாலு தன்னை அறியாமலே குஞ்சிதத்தின் கையைப் பற்றினான்.

"ஐயோ! இந்த மனிதர்களுக்கு..." என்றான் பாலு. அதற்குமேல் ஒன்றும் சொல்லத் தெரியாமல் பெருமூச்சு விட்டான்.

குஞ்சிதம் தாரை தாரையாகக் கண்ணீர் விட்டாள்.

ராஜியும் மங்களமும் மாத்திரம், - அந்த இரண்டு குழந்தைகளும் - ஆற்றங்கரையில் செய்தது போலவே, இங்கேயும் குதித்து மகிழ்ந்து விளையாடத் தொடங்கி விட்டன.

★

மாரியின் குற்றம்

திருச்சி சென்டிரல் ஜெயிலில்தான் முதல் முதலாக எனக்கு அவனுடைய பரிசயம் கிடைத்தது. நானும் ஒரு கைதி; அவனும் ஒரு கைதி. கைதிக்குக் கைதி என்ன பிரமாதமான வித்தியாசம்? எங்கள் எல்லாருக்கும் மேலே சிறை அதிகாரிகள் இருந்தார்கள். அப்படியிருக்க, நாங்கள் எல்லாரும் ஒன்றுதானே? ஒன்றோ இல்லையோ, நாங்கள் ஒருவருடன் ஒருவர் அப்படித்தான் பழகினோம்; பழகும்படி நேர்ந்தது.

என் குற்றம் என்னவென்றால், அந்த 'அரை நிர்வாணப் பக்கிரி' காந்தி இல்லையா, அவருடைய உபதேசங்களால் மனம் 'பேதளித்து' மாட்சிமை தங்கிய மன்னர்பிரானின் சட்டத்தை, 'தெரிந்து, வேண்டுமென்றே' மீறியதுதான். ஒழுங்கான விசாரணைக்குப்பின் பத்திரமான சிறைக்கு வந்து சேர்ந்த மாரிமுத்துவின் குற்றமோ, வேறுவிதமானது.

அவன் யாரோ ஒரு மனிதருடைய கால் எலும்பில் தனது பலத்தைப் பரீட்சை பார்த்துவிட்டான். மனத்தத்துவ ரீதியில் அதன் காரணம் என்னவோ பொருத்தமாகத்தான் இருக்கிறது. ஆனல், சட்டந் தான் அந்தக் காரணத்தை ஒப்புக்கொள்ளவில்லை. மதியூகமுள்ள மேதாவிகள் தயாரித்துள்ள சட்டம் என்ற சமாசாரம் ஒன்று உலகத்தில் உண்டு என்ற விஷயமே அவனுக்குத் தெரியாது. அந்தச் சட்டம் ஒவ்வொன்றும் எந்த மனிதன்மீது பாய்ந்து கௌவலாம் என்று எந்த நேரமும் தருணம் பார்த்துக் கொண்டே இருக்கும். விவரத்தையும் அவன் அறியான். ஆனல் சம்பந்தப்பட்ட கால் எலும்பை முறிக்கும் விஷயத்தில் அவன் தெரிந்தே தீர்மான மாகத்தான் செய்தான் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனல் அவன் அந்தக் காரியத்தைச் செய்தவுடனே, சட்டம் அவனைக் கைப்பற்றிவிட்டது; பலன்தான் சிறை.

புதிதாக வரும் கைதிகளை முதலில் 'குவாரன்டைன்' என்ற தனி இடத்தில் கொஞ்ச நாள் வைத்திருப்பார்கள். அந்தக் குவாரன்டைனில் தான் நான் முதல் முதலாக மாரிமுத்துவைச் சந்தித் தேன். அன்று எனக்கும் ஒரு வார்டருக்கும் ஒரு தகராறு ஏற்பட்டது. அதில் இந்த மாரிமுத்து என் கட்சியாக இருந்தான். அதிலிருந்தே எனக்கும் அவனிடம் சற்றுப் பற்றுதல் ஏற்பட்டது. தான் ஒரு சக்கிலி என்று அவன் கூறினன். மகாத்மாவோ ஹரிஜனங்களின் முன்னேற்றத்துக்கு உழைக்க வேண்டுமென்று வற்புறுத்துகிருர். ஆகையால், மாரிமுத்துவின் விஷயத்தில் எனக்குக் கொஞ்சம் விசேஷ அக்கறையும் உண்டாயிற்று.

கொஞ்ச நாளில் அவன் என்னைத் தன் விசேஷ குருநாதராக வரித்துவிட்டான். மாரிமுத்துவைச் சிஷ்யனுகப் பெறுவதென்ருல், அதை அற்ப சங்கதி

யாக யாரும் கருத முடியாது. ஏனென்றால், நல்ல தேகக் கட்டும், வீரப் பார்வையும், துடித்த பேச்சும் அவனுக்கு உண்டு. என்னத்துக்கு இவ்வளவு வர்ணனை? 'வைவா வில்லா' என்ற இங்கிலீஷ் சினிமாப் படத்தில் 'வாலஸ் பீரி'யைப் பார்த்திருக்கிறீர்களா? பார்த்திருந்தால் மாரிமுத்துவைப் பார்க்கத் தேவையே இல்லை; அதே அச்சு எங்கள் மாரிமுத்து. எனவே, சிறைச் சாலையிலுள்ள எல்லாருக்குமே பொதுவாக என்னிடம் ஒரு தனி மதிப்பு ஏற்பட்டு விட்டது.

மேலும், மாரிமுத்துவின் உதவியும், ஒத்தாசையும் எனக்கு இன்றியமையாதவை ஆகிவிட்டன. ஆரம்பத்தில் 'திருட்டுத்தன'மான பொருள்களை உபயோகிக்க, நான் மறுத்தேன். காலக் கிரமத்தில் மாரிமுத்துவின் பிடிவாத வேண்டுகோளும் என் நாவின் ரசிகத் தன்மையும் சேர்ந்துகொண்டு 'திருட்டு'த்தனமான தின்பண்டங்களில் என் மனத்தை இழுத்துவிட்டன. இந்தப் பிரகாரமாகக் கொஞ்சகாலம் கழிந்தது.

ஒரு நாள் மாரிமுத்துவுக்குத் திடீரென்று என்ன தோன்றிற்றோ தெரியவில்லை. கவலை பாய்ந்த பார்வையுடன் தலையை ஒருபுறமாகச் சாய்த்துக்கொண்டு, "சாமி, உங்களுக்கு வீடு வாசல் இல்லையா? சம்சாரம், குழந்தை குட்டிகள் இல்லையா?" என்று கேட்டான்.

நான் புன்னகை புரிந்தேன். அது மலர்களிலோ, வான நட்சத்திரங்களிலோ, காணும் புன்னகை அல்ல; பாய்ந்தோடும் வெள்ளப் புனலின் சுழிகளில் தோன்றும் புன்னகை. என் புன்னகைக்குப் பின்னே கிளர்ந்த உணர்ச்சிப் பெருக்கை அவன் என்ன, யாருமே அறிந்திருக்க முடியாது.

இருந்தாலும் கம்பீரமான குரலில், "எனக்கு வீடும் வாசலும் இல்லாவிட்டால், நான் இங்கே

வந்திருப்பது என்ன பெரிய காரியம்? தியாகந்தான் ஆகுமா?'' என்று சொன்னேன்.

எனது கருத்தை அவன் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை.

''அப்படியானால், அவர்கள் கஷ்டப்பட மாட்டார்களா?'' என்றான் மாரி.

''படத்தான் படுவார்கள்.''

''ஆனால் சாமி'' என்று சற்றுத் தளர்ந்த குரலில் கூப்பிட்ட மாரி, ''வீடு வாசலைப்பற்றி நாம் இப்போது நினைக்கலாமா? அது அசட்டுத்தனம்'' என்று நிதானமாகச் சொன்னான்.

''அசட்டுத் தனந்தான். அதோடு மனத்துக்குச் சங்கடமும் உண்டாகும்.''

மாரிமுத்து சிறிது நேரம் மௌனமாகச் சிந்தித்துக்கொண்டிருந்துவிட்டு, பிறகு மிக மெல்லிய குரலில், ''சாமி, இன்று மாலை ஒரு தேங்காய் கொண்டு வருகிறேன். ஓர் ஆளைச் சரிசெய்து வைத்திருக்கிறேன்'' என்றான்.

''தேங்காயை வைத்துக்கொண்டு நான் என்ன செய்வது? பிள்ளையார் இருந்தால் அவருக்கு உடைக்கலாம்'' என்று சிரித்துக்கொண்டே சொன்னேன்.

''பிள்ளையார் வேண்டுமா? வேண்டுமானால் நாளைக்குத் தருவிக்கிறேன்'' என்று வெகு தீவிரமாகக் கேட்டான் மாரி.

''இல்லை யப்பா; வேடிக்கைக்குச் சொன்னேன்.''

''என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள், சாமி'' என்ற மாரி, மேலே பேச எனக்கு எதுவும் தோன்று முன் போய் விட்டான்.

சொன்னபடியே மாரிமுத்து மாலையில் வந்து சேர்ந்தான். கொண்டுவந்தது தேங்காய் அல்ல; அரைப்படி வெங்காயத்தைக் கொண்டுவந்திருந்தான்.

அதை என்னிடம் கொடுத்துக்கொண்டே, "முட்டாள் பயல், சாமி. இந்த வார்டர் பசங்களை நீங்கள் நம்பவே கூடாது. அவர்கள் அத்தனை பேரும் மோசக் காரர்கள். இத்தனை நாளும் எங்களுக்கு உடந்தை யாக இருந்த வார்டரே இன்று அவனைக் காட்டிக் கொடுத்துவிட்டான். என் பேரைக்கூட இழுத்து விடுவானோ என்னவோ? பயமாக இருக்கிறது. சூப்பரிண்டு துரை தங்கமானவர்தான் என்றாலும், மகா கோபக்காரர். அவர் முன்னே அந்தப் பயல் என் பேரையும் பிதற்றிவிட்டானானால் விலங்குதான்" என்று முணு முணுத்தான் மாரி.

"உன் பேரும் வெளிவந்தால், அவர்கள் உன்னை என்ன செய்வார்கள்?" என்று கேட்டேன்.

"என்னை வெளி வேலைக்கு அழைத்துப்போக மாட்டார்கள் ஆனால், இன்று நான் கட்டாயம் வெளியே போக வேண்டும்."

மாரிமுத்து சொற்ப காலத் தண்டனையடைந்த கைதி. அப்படிப்பட்ட கைதிகளைப் பொதுவாக வெளி வேலைக்கு அழைத்துப்போக மாட்டார்கள். என்றாலும் மாரியின் விஷயத்தில் சூப்பரிண்டுக்கு மிகவும் திருப்தி. அதனால், அவனை மாத்திரம் வெளி வேலைக்கு அழைத்துச் செல்ல விசேஷ அநுமதி கொடுத்திருந்தார்.

வெளி வேலை என்றால், கைதிகள் சம்பந்தப்பட்ட மட்டில் அது சாமான்ய விஷயமல்ல. சற்றுக் கவிதை உள்ளம் படைத்தவர்களாக இருந்தால், பரந்த உலகத்தைக் கண்நிறைய மறுபடியும் ஒரு முறை தட்டுத் தடங்கலின்றிப் பார்த்துக் களிப்ப தொன்றே பெரும் பாக்கியம் அல்லவா? அது போக, எப்படிப்பட்ட வாழ்க்கையையும் சாரமுடையதாகச் செய்யக்கூடிய புகையிலை, பொடி, பீடி ஆகிய சாமான்கள் சிறைக்குள் வருவதற்கும் வெளி வேலை

மிக ஏற்ற சாதனமாகும். இதெல்லாம் எனக்குத் தெரிந்ததுதான்.

என்றாலும் நான் அவனைப் பார்த்து, "வெளி வேலைக்குப் போகாவிட்டால் என்ன மோசம்? இன்னும் பதினைந்து நாட்களில் விடுதலை அடைந்து விடுகிறாய். அப்புறம் ஜோராக உன் இஷ்டப்படி வெளியில் எங்கே வேண்டுமானாலும் கையை வீசிக் கொண்டு போகலாம். இந்தப் பதினைந்து நாளை உள்ளுக்குள்ளே கழிப்பது பெரிய காரியமா?" என்று கேட்டேன்.

"பதினைந்து நாள்!" என்று அழுத்தந் திருத்த மாகப் பல்லைக் கடித்துக்கொண்டே உச்சரித்த மாரி, "பதினைந்து நாள்!—ஒன்றுமில்லை—பரவா யில்லை—" என்று சொல்லி எழுந்தான். அப்படி எழுந்தவன், மேலும் பேசலானான்; குரல் வலுத்தது: "ஆனால் சாமி, ஒரு சமாசாரம் உங்களிடம் சொல்ல வேண்டு மென்று எனக்கு வெகு நாளாக ஆவல்" என்றான்.

"என்ன சமாசாரம்?" என்று நான் தலையை அசைத்தேன்.

"நான் டம்பம் பேசுகிற வழக்கமில்லை, சாமி. என் சம்சாரம் நல்ல அழகாயிருப்பாள். விடுதலை யானதும் அவளை நீங்கள் பார்க்க வேண்டும், சாமி" என்றான்.

இருக்கலாம். முட்டாள் புருஷர் அத்தனைபேர் மனைவிகளும் அழகிகள்தான். சந்தேகப் புருஷர் அத்தனைபேர் மனைவிகள் மீதும் எப்போதும் பிறர் வலைபோட்டுக் கொண்டிருப்பது போலத்தான் அது. ஆனால், மாரியின் கதை எங்கே?

"சமாசாரத்தைச் சொல்" என்றேன்.

"அதைத்தான் சொல்ல வாயெடுத்தேன். அவசரப் படுகிறீர்களே" என்ற மாரி, கனைத்து ஒரு பெருமூச்சு விட்டு, "அவள் மிக அழகி. என்னிடம்

அவளுக்கு ரொம்பப் பிரியம். அவளால் எனக்கு எத்தனையோ வசதி! ஜோடு தைப்பது என்றால் அது ஜோக் இல்லை, சாமி. பல்லும் விரலும் எவ்வளவு கெட்டியாக இருக்கவேண்டும், தெரியுமா? அவள் எனக்கு எத்தனை ஒத்தாசை செய்வாள்! யாருக்கும் தெரியாது. எங்கள் ஜாதிப் பெண் எதுவும் அப்படி இருக்காது, சாமி. அவள் டவுன் மனுஷி. அவளுக்கு எழுதப் படிக்கத் தெரியும். அவள் ரொம்பவும் கெட்டிக்காரி'' என்ற மாரி, நின்றுவிட்டான்.

சிறிது நேரம் கழித்து, ''இன்னொரு சமயம் சொல்லுகிறேன் சாமி'' என்று மொட்டையாகச் சொல்லி, வாய் பேசாமல் நடந்து விட்டான்.

'இவன் கதை என்ன? ஏன் இப்படி நீட்டி முழக்கித் தயங்கிக்கொண்டே பேசுகிறான்?' என்று நான் ஆச்சரியத்தோடு யோசித்துக்கொண் டிருந்தேன்.

ஆனால், சில நிமிஷ நேரத்தில் மாரி திரும்பவும் வந்து சேர்ந்தான்.

''என்மேல் கோபமா, சாமி'' என்றான்.

நான் சிரித்தேன்.

''என் சமாசரத்தைச் சொல்லிவிடுகிறன், சாமி'' என்ற அவன், ''அப்படி ஒன்றும் பிரமாதமில்லை. சுருக்கமான சங்கதிதான்'' என்றான்.

''அப்படியானல் ஏன் இப்படி என்ன என்னவோ ஊரை வளைத்துப் பேசிக்கொண் டிருக்கிறாய்?'' என்றேன்.

அவன் புருவத்தை நெளித்துக்கொண்டு, மூலைப் பார்வையோடு சொல்லலானான்: ''உம்! நான் இங்கே இருக்கிறேன், சாமி. அவள் எப்படி இருக்கிறாளோ? என்ன தவிக்கிறாளோ? நீங்கள் சர்க்காரோடு சண்டை போட்டு இங்கே வந்திருக்கிறீர்கள். நான் ஏன் ஜெயிலுக்கு வந்தேன்? அவள் மனசு வருந்தலாமா? இதில் சர்க்காருக்கு என்ன லாபம், சாமி? எதற்குச்

சோறு போடுகிறார்கள்? துணி கொடுக்கிறார்கள்? என்ன கட்டிடம்? இந்த மாதிரியான கட்டிடம் வெளியில் எங்களுக்குக் கிடைக்குமா? இந்தச் செலவெல்லாம் செய்கிறார்களே! இந்தச் சர்க்காருக்கு, ஏன் சாமி, ஒன்றும் விளங்கவில்லை? என்னை இங்கே வைத்திருக்கிறார்களே, இதனால் அந்த ஆளின் நொண்டி சுகமாகிவிடுமா?''

மாரி தன் பேச்சை முடிக்கவில்லை. அவன் கண்களில் நீர் ததும்பியது. சுருதி கூட்டிய ஒரு வீணையின் தந்திகளைச் சங்கீத நிபுணன் ஒருவன் மீட்டினால் எப்படி அதிருமோ அப்படி அதிர்ந்தன அவன் உதடுகள்.

''அசட்டுத்தனமாகப் பேசாதே. நீ என்ன குழந்தையா?'' என்ற நான், ''இப்படியெல்லாம் பேசிக் குருட்டு யோசனை செய்துகொண் டிருப்பதால், என்ன நன்மை? பதினைந்து நாளில் ஊருக்குப் போய் விடப் போகிறாய். அவ்வளவுதானே'' என்று ஆறுதல் சொன்னேன்.

என் ஆறுதல் பயன்படவில்லை. அவனையும் அறியாமல் விம்மி விம்மி அழலானான். அப்போதும் தான் சொல்லவந்த கதையை முடிக்காமலே போய் விட்டான்.

ஒவ்வொரு நாளும் மாலை 'லாக் அப்'புக்குச் சிறிது முன் என் அறைக்கு வந்து செல்லும் மாரி அன்று மாலை என்னவோ வரவில்லை.

வழக்கப்படி எங்களைப் பத்திரப்படுத்துவதற்காக, சாவிக்கொத்தை ஜல் ஜல் என்று சப்தித்துக்கொண்டு வார்டர் வந்து சேர்ந்தான். ஒவ்வொரு கதவாகத் தடார் தடார் என்று சாத்திப் பூட்டுகிற நடமாடும் யந்திரம் போன்ற வார்டர், கடைசியில் என் அறைக்கு முன்னும் தோன்றினான்.

''சலாம், சாமி!''

வார்டர் தினந்தோறும் என் சம்மந்தப்பட்ட மட்டில் சலாம் வைப்பது வழக்கம்.

நானும் பதில் சலாம் வைத்தேன்.

"சூப்பரிண்டு துரைக்கு உங்கள் மாரிமேல் ரொம்பவும் கோபம் சாமி" என்று சொல்லிய வார்டர், "காலையில் விவரம் சொல்லுகிறேன்" என்று முடித்து அடுத்த கதவுக்குப் போய்விட்டான்.

'மாரியின் கதை என்ன? வெங்காயத் திருட்டு விஷயத்திலா சூப்பரிண்டுக்குக் கோபம்? என் பேரும் என்னவாவது அம்பலத்துக்கு வந்துவிடுமோ?' என்றெல்லாம் யோசித்துக்கொண்டே, முரட்டுச் சணல் பாயை விரித்துப் படுத்தேன்.

என் அறையின் இரும்புக் கம்பிகளை யாரோ 'தட தட' என்று தட்டும் சத்தம் கேட்டது. 'சீ, மாரி முத்துவின் விசித்திரமான போக்கைப்பற்றி நெடு நேரம் சிந்தனையில் மூழ்கிவிட்டதால், யாரோ கதவை தட்டுவதுபோல் உண்டான ஒரு தோற்றந்தான்' என்று முதலில் எண்ணினேன். ஆனால் அந்தச் சத்தம் ஓயவே இல்லை. தலையை நிமிர்த்திச் சத்தம் வருகிற இடத்தைப் பார்த்தேன்; உச்சந் தலையில் இருந்து உள்ளங்கால் வரையில், கான்விக்ட் வார்டர்களுக்கு உரிய வெண்மையான உடையில் மாரிமுத்து நின்று கொண்டிருந்தான்.

நான் எழுந்து அருகில் போனதும், 'உரக்கப் பேசக்கூடாது' என்று எனக்கு மாரிமுத்து சமிக்ஞை செய்தான். அதன்பின் அவன் கண்களிலிருந்து கண்ணீர் சொட்டுச் சொட்டாகச் சிந்தியது. "தங்களிடம் சொல்லிக் கொண்டு போகலாம் என்று வந்திருக்கிறேன்...என்னை மறந்துவிடாதீர்கள். இதோ, இதை வைத்துக்கொள்ளுங்கள்" என்று ரகசியமாக வாயோடு வாய் பேசிக்கொண்டே என் அறைக்குள் எதையோ விட்டெறிந்தான். அதைத்

திரும்பிப் பார்ப்பதற்குள்ளாக அந்தக் கட்டுமஸ்தான மாரிமுத்துவின் உருவம் மறைந்துவிட்டது.

இந்தச் சம்பவம் நடந்து அரை மணி நேரந்தான் கழிந்திருக்கும். உடனே சிறைச்சாலை அதிகாரி களுக்குள் ஏதோ பரபரப்பு ஏற்பட்டது. அதிகாரிகள் அங்குமிங்கும் ஓடிக்கொண் டிருந்தார்கள். என்னைப் போன்ற கைதிகள் பலர் வெகு உற்சாகமாக அரட்டை யடித்துக்கொண் டிருக்கும் சத்தமும் என் காதில் விழுந்தது.

சிறிது நேரம் சென்றதும், அதிகாரிகள் எல்லாக் கைதிகளையும் எண்ணிப் பார்த்தார்கள். எல்லோரை யும் திறந்துவிட்டு வரிசையாக நிறுத்திவைத்து, உற்று உற்றுப் பார்த்துக்கொண்டே வந்தார்கள். திரும்பவும் ஒரு முறை எண்ணினார்கள். பிறகு அவரவர்களை அவரவர்களுடைய அறைகளில் அடைத்து மூடிவிட்டுப் போனார்கள். கொஞ்ச நேரம் கழித்துத் திரும்பவும் வந்து எண்ணி எண்ணிப் பார்த்தார்கள். அவர்களுடைய சந்தேகம் மூன்று மணி நேரம் கழித்து, ஒரு வகையாகத் தெளிந்தது; எவனோ ஒரு கைதியைக் காணவில்லை! சில அதிகாரி கள் 'இது வீண் சந்தேகம்' என்றும், 'கணக்குச் சரி தான்' என்றும் சொன்னார்கள். ஆகவே, எல்லோரு மாகச் சேர்ந்து கைதிகளின் பதிவுப் புஸ்தகத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தார்கள். இதற்கு ஓர் அரை மணி நேரம் பிடித்தது—கடைசியாக, சந்தேகப் பட்டது உண்மையாயிற்று; அதாவது, "எவனோ ஒரு கைதியை நிச்சயமாகக் காணவில்லை!" என்று எல்லா அதிகாரிகளும் ஏகோபித்துக் கண்டு பிடித்தார்கள்! எனக்கு மட்டும் ஆரம்பத்திலேயே 'விஷயம் இன்னது தான்' என்று புலப்பட்டுவிட்டது. காணமல்போன பேர்வழி மாரிமுத்துவைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்? என்றாலும் நான் ஒன்றும் தெரியாதவன் போலவே நடந்து கொண்டேன்.

ஆம், அவன்தான்; அந்த மாரிமுத்துதான் எப்படியோ தப்பி ஓடிவிட்டான். அவனைப் பயங்கரக் குற்றவாளி என்கிற ஜாபிதாவில் சேர்த்துத் திரும்பவும் பிடித்துச் சிறையில் அடைக்க அதிகாரிகள் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டார்கள்.

மாரி என் அறைக்குள் விட்டெறிந்த சாமானை மறுநாள் காலையில் பார்த்தேன். கையால் பின்னிய அழகான பல வர்ணச் சின்ன நூல் பை அது. அதைத் திறந்து பார்த்தேன். அதற்குள் ஒரு கடிதத் துண்டு இருந்தது. அதில் பென்சிலால் ஒரு சிறு குழந்தை எழுதுவதைப்போல் கிறுக்கி எழுதியிருந்த எழுத்தைப் பார்த்தேன். சிறிது சிரமப்பட்டுப் படித்தேன்:

"இப்போது நான் ஒரு காந்திப் பெண். நம் நகரத்தில் மறியல் செய்கிற காந்தி மனிதர்களுக்கெல்லாம் பாதரட்சை கொடுத்து வருகிறேன். ஆகா! இப்போதுமட்டும் நீ என்னுடன் இருந்தால்!— இன்னொரு விஷயம்; உன்னிடம் கால் முறிபட்டவன் என்னைத் தொந்தரவுபடுத்திக்கொண்டே இருக்கிறான். நான் என்ன செய்வது என்று தெரியாமல் விழிக்கிறேன்" என்பது அந்தக் கடிதத்தின் சுருக்கம்.

சில நாட்கள் கழிந்ததும், சிறைச்சாலைக்கு ஒரு புதிய கைதி வந்தார். அவர் கிட்டத்தட்ட என்னைப் போன்றவர்; இளைஞர். முகத்தில் ஓர் அலாதியான களை இருந்தது. முதல் முதலில் அவரைப் பார்த்ததும் மிகுந்த புத்திசாலி என்றும் இளகிய இருதயம் உடையவர் என்றும் எனக்குத் தோன்றிற்று. ஆகவே அவருடன் மிகுந்த நெருக்கம் ஏற்படுத்திக்கொண்டு ஓய்வு நேரத்தில் முக்கால் பாகத்தை அவருடனேயே கழித்துவந்தேன். என்ன இருந்தாலுங்கூட, அந்தச் சக்கிலி மாரியிடம் எனக்கு ஏற்பட்ட சந்தோஷம் இந்தப் புதிய நண்பரிடம் உண்டாகவில்லை என்றே சொல்லவேண்டும்.

இப்படியாக ஒரு மாதம் கழிந்தது. ஒரு நாள் காலை நானும் என் புதிய நண்பரும் வழக்கம்போல் குளத்தில் குளித்துக்கொண் டிருந்தோம். அப்போது ஒருவன், "ஸார், கடைசியாக அந்தப் பயலைப் பிடித்து விட்டார்கள்" என்றான். "யாரை, மாரிமுத்துவையா?" என்றேன்.

"ஆமாம் ஸார், அந்தப் பயலைத்தான்!" என்று அவன் ஊர்ஜிதம் செய்தான். திரும்பவும் நான், "அவனை இப்போது எங்கே வைத்திருக்கிறார்கள்? இங்கே கொண்டுவந்து விட்டார்களா அல்லது வேறு எங்கேயாவது வைத்திருக்கிறார்களா?" என்று கேட்டதற்கு, "இங்கேதான் இருக்கிறான்; சிவப்புக் குல்லாய்க் காரர்களை வைக்கிற இடத்தில் அவனையும் வைத்துப் பூட்டியிருக்கிறார்கள்" என்றான் அந்தப் பேர்வழி. நான் உடனே பரபரவென்று சிவப்புக்குல்லாய்க் கைதிகள் இருக்கிற இடத்தை நோக்கிப் போனேன். என்னுடன் என் புதிய நண்பரும் வந்தார். குறிப்பிட்ட அறையைத் தேடிப் பிடித்தேன். மாரிமுத்து என்னைக் கண்டவுடன் ஒரே துள்ளாகத் துள்ளிக் குதித்து என்னிடம் வந்தான். அவன் வந்த வேகத்தைப் பார்த்தால் இரும்புக் கதவைத் துகள் துகளாக உடைத்தெறிந்து என்னிடம் வந்து விடுவான்போல் இருந்தது. ஆனால் மறு நிமிஷம் அவன் முகத்தில் ஒரு பெரும் மாறுதல் தென்பட்டது. கால்கள் தயங்கின; முன்னே வைத்த காலைப் பின்னே இழுத்தான். எதையோ – என் பின்புறத்தில் தென் பட்ட ஏதோ ஒன்றை – உற்று நோக்கிக்கொண் டிருந்தான். ஆத்திரமும் கோபக்குறியும் ஒன்றாகச் சேர்ந்து அவன் முகத்திலே விசுவரூபம் எடுத்துக் கொண்டிருந்தன. எதைப் பார்த்து இவ்வளவு கோபப்படுகிறான் என்று பின்னால் திரும்பிப் பார்த்தேன். அங்கே ஒன்றுமே இல்லை. என்னுடன் வந்த

புதிய நண்பர்தான் என் பின்புறத்தில் நின்றுகொண்டிருந்தார். மாரியைப் பார்த்தேன்.

அதற்குள்ளாக ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு, "அடே பயலே! நீ கூடவா இங்கே இருக்கிறாய்? - நான் அப்போதே நினைத்தேன்; நீ ஒரு சண்டாளன், கொலைகாரன்! என்றைக்காவது ஒரு நாள் இந்த மாதிரியான நிலைமைக்கு வந்துவிடுவாய் என்று ஏற்கனவே நினைத்தேன். அது சரியாய்ப் போச்சு; - ஏண்டா, உன் கால் சரியாகப் போய்விட்டால்போல் தெரிகிறதே. அப்படியிருந்தும் என் பிராணனை ஏன் இப்படியெல்லாம் வாங்கித் தொலைக்கிறார்கள்?" என்றான். நான் வாய்க்குள்ளாகவே, 'காலம் மாறிவிட்டது. கண்ணுக்குக் கண்ணையும், பல்லுக்குப் பல்லையும் பழிவாங்கும் வழக்கம் இனி நிலையாது' என்று சொல்லிக்கொண்டேன்.

"நான் இயக்கத்தில் சேர்ந்துவிட்டேன். அதனால்தான் என்னை இங்கே கொண்டுவந்து விட்டார்கள்" என்று ஒரு சம்பந்தமும் இல்லாமல் என் புது நண்பர் சொன்னார்.

"ஏண்டா, இன்னொருவனுக்குச் சொந்தமான ஒரு பெண்ணிடமிருந்து ஒரு ஜோடி செருப்பு வாங்குவதற்காக இயக்கத்தில் சேர்ந்து நீயும் ஒரு காந்தி மனிதன் ஆகிவிட்டாயா? அப்படியானால், அந்த இயக்கம் நாசமாய்ப் போக! அந்தக் காந்தியின் - சேச் சே, அவர் மகாத்மா; அவரைப்பற்றி ஒன்றுமே சொல்லக்கூடாது" என்றான் மாரி. எனக்கு இன்னது சொல்வதென்று புரியவில்லை.

"மாரிமுத்து!" என்றேன்.

"அப்புறம் பேசிக்கொள்ளலாம், சாமி" என்று எனக்குக் கொஞ்சங்கூட இடம் கொடுக்காமல் மாரி பேசி விட்டான். அவன் கோபம் இன்னும் தணிய

வில்லை. சட்டென்று நானும் அந்த இடத்தை விட்டு அகன்றேன்.

சிறிது நேரம் கழித்துப் புது நண்பர் என் அறைக்கு வந்தார். நான் அவரிடம் ஒரு விதமாக நடந்துகொண்டதைக் கண்ட அவர், "கோபு, நீங்கள் என்னைத் தவறுதலாக நினைக்கிறீர்கள். நான் நடந்த விஷயத்தைத் தெரிவிக்கிறேன். அந்தப் பயல் என்னைப்பற்றித் தாறுமாருக நினைத்துக்கொண்டிருக்கிருன்" என்று என்னைச் சமாதானப்படுத்திஞர்.

"சரி, இந்த வளர்த்தலெல்லாம் எதற்கு? சட்டென்று விஷயத்தைச் சொல்லுங்கள்" என்று கடுகடுத்துக் கூறினேன்.

"இவன் அந்தப் பெண்ணின்பேரில் பைத்தியம் பிடித்து அலைகிருன். இவன்தான் மயங்கிக்கிடக்கிருனே ஒழிய, அவள் அவ்வளவு விசேஷமாக, மயக்கவல்ல அழகியல்ல; ஒரே ஒரு சின்னக் குற்றந்தான் இவ்வளவுக்கும் காரணம். அந்தப் பெண் இருக்கிருளே, அவள் மிகவும் குறும்பு பிடித்தவள். இந்த ஜன்மத்தில் தனக்குக் கிடைக்க முடியாதவைகளையெல்லாம் அடைந்துவிட அவள் ஆசைப்படுகிருள். இவனுக்கு அவளிடம் மோகம். இவன் மோகத்தைத் தீர்த்துக் கொள்வதற்குச் சிறை குறுக்கே நிற்கிறது. அவளுக்காக வேண்டி இவன் யாரையாவது அடிக்கிருன்; அவளாலேதான் இப்போது சிறைச்சாலையை மீண்டும் அடைந்து தவிக்கிருன். இவன் அகப்பட்டுக்கொண்டதற்கு அவள்தான் காரணம்., ஒளிந்துகொள்வதற்கு இவனுக்கு இடந்தர அவள் மறுத்துவிட்டாள். இவன் இத்துடன் நிற்கமாட்டான். அவளைத் திருப்தி செய்வதற்கு இன்னும் ஏதாவது செய்துகொண்டுதான் இருப்பான். அது கடைசியில் கோர்ட்டுக்கு வந்து நிற்க வேண்டிய விஷயமாகவே முடியும்..."

இப்படி சுற்றி வளைத்து என்னவோ சொல்லிக் கொண்டிருந்த போதிலும், அவர் சொன்னது ஏதோ ஓரளவு உண்மைக்குப் பொருத்தமாக இருப்பதாகவே நான் நினைத்தேன். அவர் மேலும் சொல்ல ஆரம்பித்தார்:

"மறதி என்பது எல்லோருக்கும் பொது. உண்மையில் நான் ஒரு மோட்டார்க்கார் ஓட்டுகிறவன். ஒரு நாள் என் எஜமானரின் மோட்டாரை ஓர் ஓரமாக நிறுத்திவிட்டு எஜமானர் இறங்கிச் சென்றதும், நானும் சிறிது பராக்குப் பார்த்துக்கொண் டிருந்தேன். பிறகு மோட்டாரில் யாரோ வந்து ஏறினார்கள். என் எஜமானர்தான் ஏறியிருப்பார் என்று நினைத்து நான் மோட்டாரில் வந்து உட்கார்ந்து ஓட்ட ஆரம்பித்தேன். மோட்டார் வெகு தூரம் சென்றபோதிலும், மோட்டாரில் எனக்குப் பின்னால் உட்கார்ந்திருப்பவர் என் எஜமானர் அல்ல, ஒரு பெண்தான் உட்கார்ந்து கொண்டு சத்தம் போட்டுக் கொண்டேவந்தாள் என்பது எனக்குத் தெரியாது. ஏனென்றால் நான் ஓட்டின மோட்டாரின் லொட லொடத்த சத்தம், அந்தப் பெண் போட்ட சப்தத்தை அமுக்கிக் கொண்டே வந்திருக்கிறது. இப்படி நெடுந்தூரம் சென்றபின், நான் திரும்பிப் பார்த்துத் திடுக்கிட்டு மோட்டாரை நிறுத்தினேன். அந்தப் பட்டிக்காட்டுப் பெண் வேடிக்கை பார்ப்பதற்காக அந்த மோட்டாரில் ஏறி உட்கார்ந்ததாகவும், அதைக் கண்டவுடன் வேண்டுமென்றே மோட்டாரை நான் ஓட்டிக்கொண்டு வந்துவிட்டதாகவும் என்னை அவள் கோபித்துக் கொண்டாள். நான் எவ்வளவோ சொல்லியும், என்னை அவள் நம்பவில்லை. மிகவும் கேவலமான ஜனங்களைப்போல, என்னைக் கண்டபடி திட்டிக் கொண்டிருந்தாள். எவ்வளவோ சொல்லிச் சொல்லிப் பார்த்தும், என்னைச் சிறிதுகூட நம்பாததால், நான் மோட்டாரை எடுத்துக்கொண்டு திரும்பவும்

என் எஜமானர் இருந்த இடத்துக்குப் போய் விட்டேன்.

"மறுநாள் அந்தக் கிராமத்துச் சக்கிலியைப் பார்த்தேன். அவன் என்னைக் கண்டதும் திடீரென்று என்மேல் பாய்ந்து என்னைத் தாக்கினான். அதனால் என் கணுக்கால் முறிந்து எலும்பு நழுவிவிட்டது. மோட்டார் சம்பவம் என்னை அறியாமலே நடந்த தென்பது ஊரார் அனைவருக்கும் தெரியும். அதனால் தான், இவனுக்குத் தண்டனை கிடைத்தது. நடந்த விஷயம் இவ்வளவுதான்" என்று நண்பர் முடித்தார்.

இப்போது அந்தப் பெண்ணைப்பற்றிக் கற்பனை செய்து பார்த்தான். இந்த நண்பருக்கு ஒரு விதம், மாரிக்கு ஒரு விதம் இப்படி இரண்டு விதமாகக் காட்சி அளிக்கும் அவள் ஒரு விசித்திரப் பிறவியாகத்தான் இருக்கவேண்டும்! எனக்கு மாரி பரிசளித்துச் சென்றதை ஞாபகம் வந்தது. அது அவனுக்கு அவள் அனுப்பியதாகத்தான் இருக்கவேண்டும். கடிதத்தை மறந்து பையோடு என்னிடம் போட்டுச் சென்றிருக்கிறான்!

நான் வாய்திறக்காமல் தலையை அசைத்துக் கொண்டே, "சரி, இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?" என்று அந்த நூல்பையிலிருந்த துண்டுக் கடிதத்தை நண்பர் கையில் கொடுத்தேன்.

அவர் என் முகத்தைப் பார்த்துக்கொண்டே அந்தக் கடிதத்தை வாங்கினார். கடிதத்தைப் படித்து விட்டு, வாய் விட்டு ஒரு சிரிப்புச் சிரித்து, "ஓ! அந்தப் பெண் தன்னைப் பெரிய ரம்பை என்று நினைத்துக் கொண்டாள்போல் இருக்கிறது. அவள் இந்த இயக்கத்துக்கு ஆதரவாயிருந்தாள். நான் இதில் சேர்ந்தேன். எல்லோரையும்போல் நானும் ஒரு ஜோடி செருப்பு அவளைக் கேட்டது வாஸ்தவந்தான். அவள் எனக்குக் கொடுக்க மறுத்துவிட்டாள். நான் அதைப் பொருட்படுத்தவே இல்லை. திரும்ப நான் எத்தனையோ

தடவைகள், அவளை வீதியில் சந்தித்திருக்கிறேன். நான் என்னவோ அவளை ரம்பை என்று நினைத்துக் கொண்டுதான் சகலமும் செய்து வருவதாக அவள் கனவு காண்கிறாள்போல் இருக்கிறது. சுத்த முட்டாள் பெண்! இது எதில் போய் முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், சட்டம் என்ற ஒன்று இருக்கிறது'' என்று நண்பர் தமக்குத்தாமே பேசினார்.

ஆம், எப்போதும்போல்தான் சட்டம் இப்போதும் இருந்துகொண் டிருக்கிறது. அந்தப் பெண்ணும் இருக்கிறாள். ஆனால், மாரிமுத்துவின் கதி என்ன? — எனக்கு ஒன்றுமே புரியவில்லை! மாரியின் விஷயம் என்ன என்று யார் சொல்ல முடியும்?

★

நவீன கதாசிரியன்

அந்த அபலையின் பணத்தை அவன் பறித்துக் கொள்ளப் பார்க்கிறான்; துரோகி! இவனை நம்பி, அத்தனை சொத்தையும் இவனிடம் ஒப்பித்தானே? அந்த முட்டாளைத்தான் நோக வேண்டும். அது எப்படியானாலும் போகிறது. விஷயம் என்ன? தான் பொய்ச்சாட்சி சொல்லித்தான் தீர்வதா? சொன்னால்.. ஐயோ! அதை நினைத்தாலும் உள்ளம் நடுங்குகிறதே! சர்வ பாக்கியங்களோடு வாழ்ந்த அந்த உத்தமி, தெருவிலே நின்று தவிப்பாளே! செல்வமாக வாழ வேண்டிய அவள் குழந்தைகளின் கதிதான் என்ன ஆகுமோ? முடியாது, பொய்ச்சாட்சி சொல்ல முடியாது; அவனால் முடியாது. ஆனால், சொல்லாவிட்டால்....? அந்தக் கிராதகன் தன்னை ஊரிலே குடியிருக்க விடமாட்டான். என்ன செய்வது? மோகனின் மனம் இவ்வாறெல்லாம் எண்ணி வெகு நேரம் ஊசலாடியது.

இந்தக் கட்டம் வரையில் ஆசிரியர் சோமு, கதையை எழுதிவிட்டார். பிறகு, கொஞ்ச நேரம் வரையில் தலையில் கையை வைத்துக்கொண்டு யோசிக்கத் தொடங்கினார்.

"அடே சோமு! என்னடா தலையிலே கை! நன்றாகத்தான் இருக்குப் போ! நல்ல நாளும் பொல்லா நாளுமாய்த் தலையிலே கை! எழுந்திரு; நேரம் ஆகலையா? அவள் பறக்கிறாள்; நாலு பேருக்குப் பாஸ் வாங்கிண்டு வந்திருக்கையாமே மோகனாங்கி ஸினிமாவுக்கு? சரியான காலத்திலே டிபனைச் சாப்பிட்டுட்டுப் புறப்பட வாண்டாமா? எழுந்திரு" என்று தாயார் வந்து, நம் கதாசிரியரை விரட்டினாள்.

"இந்தா அம்மா! இப்ப மணி ரெண்டரைதான் ஆறது. அஞ்சு மணிக்குப் புறப்பட்டால் போரும். என்ன அவசரம்? இந்தக் கதையை இன்னிக்கு முடிச்சாகணும். அவுட்டுச் சிரிப்புப் பத்திரிகாசிரியர் கேட்டிருக்கிறார். நாளைக்கே வேணுமாம். என்னை இப்ப யாரும் தொல்லை பண்ணக்கூடாது" என்று தலையைக் குனிந்த சோமு, என்னவோ எழுத முயன்று, முடியாததால் எதிரே விழித்த கண்களும் ஏங்கிப் பிடித்த பேனாவுமாக உட்கார்ந்திருந்தார்.

அதற்குள் உள்ளேயிருந்து வேகமான ஒரு குரல் புறப்பட்டது. "அவா என்ன சொல்றா, அத்தை! இன்னிக்குச் சினிமாவுக்குப் போக வாண்டாம்னா சொல்றா?" - ஆம்; இது ஆசிரியர் சோமுவின் மனைவி குரல்தான். நாலரைக் கட்டை ஆர்மோனிய சுருதியில் அது பேசியது.

சோமு நிமிர்ந்து பார்க்கவில்லை. அவருடைய பேனா மள மள என்று ஓடத் தொடங்கியது:

மோகனின் மனது திக்குத் திசை தெரியாமல் தவித்த இந்த நேரத்தில், குழலோசை போல் ஒரு குரல் கேட்டது: 'நாதா! உங்கள் மனம் ஏன் வாட்டமுற்றிருக்கிறது? உடம்பு அசௌக்கியமா?'

'உடம்புக்கு ஒன்றுமில்லை.'

'மனக் கவலையானால், என்னிடம் தெரிவிக்கலாமே!'

'தெரிந்து உன்னால் செய்யக் கூடியது ஒன்றுமில்லை.'

'உங்கள் வேதனையையாவது நானும் பங்கிட்டுக் கொள்ளுகிறேனே. அந்தப் பாக்கியங்கூட எனக்குக் கிடைக்கலாகாதா?'

'கண்ணே! உன்னிடம் ஒளிக்க வேண்டுமென்று எனக்கு ஏதுவும் இல்லை; பயனற்ற காரியத்துக்கு உன் மனமும் எதற்காக வருந்தும்படி செய்ய வேண்டும்?'

'விஷயம் இன்னதென்றே அறியாமல், உங்கள் முக வாட்டத்தைமட்டும் பார்க்கும்போது எனக்கு உண்டாகும் கவலைதான் தாங்க முடியாத சங்கடம்.'

மோகனுக்கு எரிச்சல் வந்தது, மனைவியின் முகத்தை ஆத்திரத்தோடு நிமிர்ந்து பார்த்தான்......

இந்த நேரமெல்லாம், அடைமழை போல், 'சள பள, சள டள' என்று ஆசிரியர் சோமுவின் காதில் ஏதோ சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது. சோமு அதைக் கொஞ்சங்கூட லட்சியம் செய்யாமல் எழுதிக்கொண்டிருந்தார். ஆனால், இப்போது இடியிடித்தாற்போல் ஓர் ஓசை வரவே அவர் உடம்பு தானாக ஒரு துள்ளுத் துள்ளியது.

''அடேயப்பா! உங்க காது என்ன செவிடா? கண்தான் அவிஞ்சு போச்சா? மழையிலே விறைக்கிற தவளை மாதிரி ஒருத்தி கத்தறேனே; காது கேக்கலே? இடிச்ச புளி மாதிரி எதிரே நிக்கறேனே; கண் தெரியிலே? உங்க ராயசத்தைக் கொஞ்சம் நிறுத்திண்டு, பதில் சொல்லுங்கோ. அப்பறம் நடக்கட்டும் நீங்க கதை கட்டறதும் காணம் போட்டு ஆடறதும்...'' என்று சோமுவின் மனைவி சுப்பம்மாள் கூறினாள்.

சோமு கதை கட்டுவது வாஸ்தவம். காணம் போட்டு ஆடுகிறார் என்று அவள் சொன்னதற்கு என்ன அர்த்தம் என்று நீங்கள் சந்தேகிக்கலாம். கதைக்கும் காணத்துக்கும் பிராசம் இருக்கிறது என்றுதான் அர்த்தம்; வேறோர் அர்த்தமும் இல்லை.

சோமு குனிந்தபடியே ஏதோ முணுமுணுத்தார். தலை நிமிரப் பயம்.

“முணுமுணுப்பென்ன முணுப்பு! தைரியமாக வாய் திறந்து பேசுங்களேன், ஆண்பிள்ளைச் சிங்கம் மாதிரி! உங்களை நான் ஒண்ணும் கடிச்சு முழுங்கிப் பிடலே. இன்னிக்கு ஸினிமா உண்டா, இல்லியா? சொல்லிடுங்கோ. இல்லையானு எதிர் வீட்டு எச்சுமியோடே பீச்சுக்காவது போயிட்டு வரேறன்” என்றாள் தேவி சுப்பம்மாள்.

“ஸினிமாவுக்குப்போக இன்னும் இரண்டுமணி நேரத்துக்கு மேல் இருக்கு. ஒரு மணி நேரத்தில் இந்தக் கதை பூர்த்தியாகிவிடும்! உனக்குச் சம்மத மானுல் எழுதறேன்; இல்லையானுல் இப்பவே எழுந்திருந்துடறேன்” என்று குனிந்தபடியே மிக இங்கிதமான குரலில் சோமு சொன்னுர்.

“சரி; கணக்காக ஒரு மணி நேரத்தில் முடிக்கணும். அப்புறம் எழுதினீர்களோ! உங்க கதை, கைக்குட்டை எல்லாத்தையும் கிழிச்சுக் காத்தாடி பண்ணிப்பிடுவேன்” என்று சொல்லிச் சுப்பம்மாள் உள்ளே போய்விட்டாள்.

சோமுவுக்குச் சுப்பம்மாள் சொந்த அம்மான் மகள். நந்தவனத்தில் சந்தித்த சுந்தரக் கன்னி அல்ல. அண்ணனும் தங்கையும் தீர்மானித்தார்கள்; மகளுக்கும் மகனுக்கும் முடிபோட்டு விட்டார்கள். அவள் சொன்னுல் சொன்னதுதான்; அன்னிதாக் கிடையாது. சோமுவின் தாய் எப்போதும் மருமகள் பக்கமே சேர்ந்துவிடுவாள். மருமகளும் மாமியும் மகா ஒற்றுமை. எதில்? சோமுவின் கண்ணிலே விரலைக் கொடுத்து ஆட்டி வைப்பதில். ஆகையால் சுப்பம்மாள் உள்ளே போனதும், தாய், கடிகாரத்தின் பக்கத்திலே போய் உட்கார்ந்துகொண்டாள்; ‘நிமிஷம் ஒண்ணு, நிமிஷம் இரண்டு, நிமிஷம் மூணு’ என்று கணக்கும் எடுத்துக்கொண் டிருந்தாள். எதற்காக? மணி ஒன்று கழிந்ததும், மருமகளிடம் போய் ‘ரிப்போர்ட்’ செய்வதற்காகத்தான்.

சோமு தலை நிமிராமல் எழுதுகிறார்; அவருடைய சுந்தரக் கதை தொடர்ந்து உருவாகிறது.

மனோகரிபாய் - அவள்தான் மோகனின் மனைவி - ஏதோ பெருங் குற்றம் புரிந்தவள்போல் உடம்பெல்லாம் குன்றி, 'நாதா, மன்னியுங்கள்' என்று மருண்ட குரலில் கூறினாள்.

'யாரை, யார் மன்னிப்பது, மனோ?'

'நான் பிடிவாதம் செய்தது தவறுதானே?'

சிறிது நேரம் மௌனம்.

'நாதா!'

'என்மேல் கோபமா?'

'யாரை யார் கோபிப்பது, நாதா?'

மோகன் புன்முறுவல் பூக்கிறான். அவனை அறியாமலே அவன் கை, மனோகரியின் இளம் தளிர்க்கரத்தைப் பற்றி இழுக்கிறது. அவள் கையை விலக்கி நகர்ந்து நிற்கிறாள். 'மனோ, நிலவிலே மலர்ந்து சிரிக்கும் பூ, யாரைக் கண்டும் வெட்கப்பட வேண்டியதில்லை.'

'பூ எங்கே?'

'நீதான்.'

'நிலவு?'

'அதுவும் நீதான்.'

மனோகரி சிரிக்கிறாள். 'உங்கள் கவிதா சக்தியைக் கண்டு, காளிதாசன் திகைத்துத் திணற வேண்டியது தான்.'

'நிச்சயமாய்.'

'அப்படியா! ஏனோ?'

'என்னிடம் கவி விக்கிரகமே இருக்கிறது!'

மனோகரி மலர்ந்த கண்களோடு, அவனை அப்படியே விழுங்கிவிடுபவள்போல் சற்று நேரம் உற்றுப் பார்த்தாள். பிறகு தலை குனிந்து திரும்பி, உள்ளே செல்ல நகர்ந்தாள். 'மனோ, நில்! அதை..?' மோகனின் முகம் இருள் கவிந்தது.

'என்ன விஷயம்?' என்று கேட்டு அவள் நின்றாள்.

'அதை.. அதைச் சொல்லிவிடுகிறேன்..' என்றான்.

''கண்ணில்லாக் கபோதி, அம்மா, ஊரெல்லாம் சுத்தியாச்சே, ஒரு பிடி அரிசி கிடைக்கலையே. ஏழைக்கு இரக்கப் படுங்கோ, சாமி.'' - இப்படி வாசலிலிருந்து ஒரு குரல் வருகிறது. இந்தப் பிச்சைக்காரன் கூட, தம்முடைய மனைவியோடும் தாயாரோடும் சேர்ந்து சூழ்ச்சி செய்வதுபோல் சோமுவுக்குத் தோன்றுகிறது. ''சனியன்! சனியன்!! கண் இல்லாமல் படைத்தது தெய்வத்தின் குற்றம். அதனிடம் போய் முட்டிக்கொள்'' என்று தமக்குத் தாமே சொல்லிக்கொண்டார். ஒரு வெற்றிலைச் சுருளை எடுத்து வாயில் போட்டு மென்றார். மறுபடியும் பேனாவை எடுத்து விறு விறு என்று எழுதத் தொடங்கினார்.

மனோகரியாய், ஒன்றும் தோன்றாதவளாய், ஆவல் நிறைந்த கண்களுடன் நின்றாள். 'சொல்லட்டுமா, மனோ!'

'சொல்லக் கூடியதாக இருந்தால் சொல்லுங்கள். இல்லையானால் வேண்டாம்.'

மோகன் மீண்டும் சிறிது நேரம் நின்றான். 'மனோ, நாம் சிறிது காலம் பிரிந்திருக்க வேண்டும்.'

மனோகரிக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் என்ன குற்றம் செய்தாள்? ஏதாவது அவளை அறியாமலே தவறு செய்திருப்பாளோ ஒருவேளை! திடீரென்று அந்த எண்ணத்தால், அவள் உடம்பு குலுங்கியது; மனம் நடுங்கியது; நாக் குழறியது. 'நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? எதற்காக இந்தத் தண்டனை?' என்று அவள் படபட வென்று கேட்டாள்.

'மனோ, கோபித்துக்கொள்ளாதே; நீ ஒரு தவறும் செய்யவில்லை. விதியின் சூழ்ச்சி யாரை விட்டது? சீதையும் ராமனும் பிரியவில்லையா? நளனும் தமயந்தியும் பிரியவில்லையா?'

'நளனைப்போல் என்னை விட்டுச் செல்லாதீர்கள்.'

மோகன் பெருமூச்சு விட்டான். எட்வர்டும் வாலிசிம்ப்ஸனுந்தான் தற்கால லட்சிய தம்பதிகள் என்ற ஓர் எண்ணம் அவன் மனத்தில் தோன்றியது. ஆம், நளன் ஒரு பேடி; ராமன் ஒரு பேதை!.. என்ன, என்ன!

தர்மாத்மாவும் சத்தியசந்தனும் அல்லவா ராமன்? பிதுர்வாக்கிய பரிபாலனத்துக்காக, சுய உரிமையான ராஜ்யத்தையே....சேச்சே! ராஜ்யமாவது, ராஜாவாவது! அதெல்லாம் பழங்கதைத் தத்துவம். இன்று அந்த உதாரணங்களே பொருந்தமாட்டா....எங்கெங்கோ சுற்றியது மோகனின் மனம். பின்பு கொஞ்சம் நிதானப்பட்டு, 'மனோ!' என்று அழைத்தான்.

'என்ன?' என்றாள் மனோகரி.

'என்ன என்னவோ பேசிக் குழம்புகிறது என் உள்ளம். உள்ள விஷயத்தை உன்னிடம் சொல்கிறேன். நீ மதி நுட்பம் உள்ளவள். உன் யோசனையை அளிப்பாயா?'

'சொல்லுங்கள்.'

மோகன் நிதானமாக, தன் தர்ம சங்கடத்தைச் சொல்ல வாயெடுத்தான். அப்போது....

அப்போது, "அத்தை, மணி என்ன ஆச்சு?" என்று உள்ளே இருந்து இடிக்குரல் வந்தது.

"இன்னும் அரைமணிதான் இருக்கடா, சோமு. சுருக்க முடி உன் கதையை" என்றாள் ஆசிரியர் சோமுவின் அம்மாள்.

"இந்தா, அம்மா! இந்த மாதிரி உபத்திரவம் பண்ணினீர்களோ, இன்னிக்கு நான் வெளியே கிளம்பவே போறதில்லை" என்று கொஞ்சம் தைரியமாகச் சொன்னார் சோமு.

"அப்படியா! உன் பாடு, அவள் பாடு; எனக்கென்ன வந்தது? உள்ளே போய் அவளை வரச் சொல்றேன்" என்று சலிப்புடன் சொன்ன தாய் உள்ளே சென்று விட்டாள்.

அவள் வந்தாலும் சரி, அவளுடைய தாத்தா வந்தாலும் சரி, இன்று சண்டை போட்டே தீர்வது என்று மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, மிடுக்காக நிமிர்ந்து உட்கார்ந்தார் சோமு. கதையை இப்போதே எழுதிப் பூர்த்தி செய்யாமல் விடுவதில்லை என்று சங்கல்பமும் செய்துகொண்டார். பேனாவை

அழுத்தமாகக் கையிலே பிடித்தார். எழுதப்போனார். என்ன ஆச்சரியம்! பேனா ஓடவில்லை. மனம் ஓடினால் அல்லவா, பேனா ஓடும்?

கதை எங்கே ஆரம்பித்தது? எங்கே வந்து நிற்கிறது? முதலிலிருந்து படித்துப் பார்க்கலானார். கதை என்ன கதை என்று அவருக்கே புரியவில்லை. எந்த இடத்தையாவது அடித்துத் திருத்திச் செப்பனிடலாமா என்று, சிறிது பரிசீலனை செய்தார். ஆரம்பம் வெகு சுவாரஸ்யமாக இருக்கிறது. தம்பதிகளின் சம்பாஷணை கொஞ்சம் அதிகப்படிதான். இருந்தாலும் அதைவெட்ட அவருக்கு எப்படி மனம் வரும்? அதிலே காதலும் சிங்காரரஸமும் கலந்து ததும்புகின்றனவே! இன்னொரு முறை ஆரம்பத்திலிருந்து படித்துப் பார்த்தார். எப்படியும் கதையை முடிக்க வேண்டியதுதான். எப்படி? பிரத்தியட்ச வாழ்க்கையின் ஏதாவது ஒரு மகத்தான பிரச்னையில், ஓர் உன்னத உணர்ச்சியைப் புகுத்தி, சித்திரத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். அவ்வளவுதானே கதை? முடிவு ஜோராக அமைய வேண்டும். பேனாவைப் பல்லிலே கடித்துக்கொண்டு தீவிரமாக, நிதானமாக, சிந்தாக்ராந்தராக யோசிக்கத் தொடங்கினார்.

இதற்குள் அரைமணி நேரமும் பூர்த்தியாகி விட்டது.

"முடிஞ்சுதா? கிளம்புங்கள்" என்று கம்பீரமாகக் கட்டளை இட்டுக்கொண்டே இடுப்பியம்மாள்—இல்லையில்லை—சுப்பம்மாள் வந்து சேர்ந்தாள்.

கண்களில் தீ ப் ப ற க் க விழித்துக்கொண்டு, "இன்னிக்கு எங்கேயும் வர என்னால் முடியாது" என்று திடமான குரலில் பதிலளித்தார் சோமு.

சுப்பம்மாள் ஆச்சரியத்தோடு அவரை மிரள மிரள விழித்துப் பார்த்தாள். தன் புருஷன்தானா,

வேறு யாராவதா என்று அவளுக்குச் சந்தேகம் வந்ததுபோல் தோன்றிற்று அவள் பார்வை.

கொஞ்சம் கேலி கலந்த குரலில், ''ஏனும்?'' என்று அவள் கேட்டாள்.

''என் இஷ்டம்'' என்றார் சோமு!

''நியாயம். ஆனால், இன்னிக்கு ராத்திரி உங்களுக்கு யார் வீட்டில் சாப்பாடு?'' என்று கேட்டாள் சுப்பி.

''நம் வீட்டில்தான்.''

''இன்று இங்கே சமையல் இல்லை.''

''ஏன்?''

''என் இ...ஷ்...ட...ம்'' என்று நீண்ட அழுத்தமான குரலில் சொன்னாள் சகதர்மிணி. சோமுவின் மனத்தில் அழுகையும் சிரிப்பும் சேர்ந்தாற்போல் வந்து ஒன்றை ஒன்று ரத்துச் செய்துவிட்டன.

''பார்க்கலாம்'' என்று பெருமூச்சோடு வேறு பக்கமாகப் பார்த்துக்கொண்டே, ''என்னை இப்போது யாரும் தொந்தரவு செய்ய வேண்டாம்'' என்று சொல்லிவிட்டுக் கதையிலே ஆசிரியர் ஆழ்ந்த கவனம் செலுத்தினார்—செலுத்தவாவது! செலுத்த முயன்றார்.

சுப்பம்மாள் ஒரு புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டு, ''அத்தை, இன்னிக்கி வீடெல்லாம் ஒரே வீராவேசக் கூத்தாக இருக்கு. யார் வெச்ச சூனியமோ? எவள் போட்ட மருந்தோ? குடித்தனம் தலைகீழாகப் போயிண்டிருக்கு; இனிமே என்னாலே அரைக்ஷணம் இங்கே இருக்க முடியாது. எனக்குத் தலையை வலிக்கிறது...'' என்று சொல்லிப் பரபர என்று ஓடி மூலையில் போய்ப் படுத்துப் போர்வையை இழுத்து மூடிக்கொண்டாள்.

சோமு இதை லட்சியம் செய்யவே இல்லை: துளியும் தம் பிகுவை விடாமல், மிடுக்காக உட்கார்ந்து, பேனாவைக் கையில் எடுத்தார்.

ஆனல் இந்த அவந்தரையில், கதை எப்படி ஓடும்? அது பிடிவாதமாக, நகரவே மாட்டேன் என்றது. மென்னியைப் பிடித்துக் கதையை முன்னே தள்ள முயன்ருர் சோமு. தத்துக்கிளி மாதிரி, தத்தித் தத்தி, தந்தி பாஷையில், கதை வெளிவரத் தொடங்கியது.

....அப்போது..ஊம்..அவள் வந்துவிட்டாள்.. இல்லே..அந்தக் கிராதக ஜமீன்தார் வந்துவிட்டான்.. இருவருமே வரவில்லே..தான் அந்தக் கிழவிக்கு விரோதமாகச் சாட்சி சொல்லாவிட்டால், ஜமீன்தார் தன்னேத் துன்புறுத்துவான். தான் குடியிருப்பது அவன் வீடு. தன்னே வீட்டை விட்டே துரத்துவான். அந்த அவமானங்களெல்லாம் நடப்பதைப்பற்றி, மோகனுக்குக் கவலேயில்லே. ஆனல், அந்தச் சமயத்தில் தன் காதல் மனேவி மஞ்ஜுகரி துன்புறுவாளே? அதை நினேக்கத்தான் அவனுக்குச் சங்கடமாக இருந்தது. ‘மஞ்ஜு, உனக்காக நான் பொய்ச்சாட்சிகூடச் சொல்லத் தயாராக இருக்கேன்’ என்கிருன். ‘ஐயோ பாவம்! எனக்காக ஒரு பேதை ஸ்திரீயின் குடும்பம் அழிவதா? வேண்டாம் வேண்டாம்’ என்று இரங்குகிருள் மஞ்ஜுகரி.

‘இல்லேயானல் நம் குடும்பம் சிதையுமே?’ என்கிருன் மோகன்.

‘ராமன் இருக்கும் இடம் சீதைக்கு அயோத்தி; நீங்கள் இருக்கும் இடம் எனக்கு இந்திரலோகம்’ என்கிருள் மஞ்ஜுகரி.

கண்டிப்பாய் மோகன் நிஜமான சாட்சியமே சொல்வதென்று முடிவாகிறது. அப்படியே சொல்லி விடுகிருன். அவன் பயந்தபடியே எல்லாம் நடக்கின்றன. அவனேக் கோலாகலம் செய்கிருன் கிராதக ஜமீன்தார். வீட்டை விட்டு அவர்களே விரட்டுகிருன். அவர்களுடைய சொத்தையெல்லாம் பறித்துக்கொள்கிருன். கொஞ்சகாலம் கழித்துக் காவேரி நதி தீரத்தில், குடமுருட்டி ஆற்றங்கரையில் ஒரு காட்சி: அதோ ஓர் அழகான ஆசிரமம். அதற்குள்ளே வனதேவதைபோல் ஒரு ஸ்திரீ எளிய ஆடை புனேந்து, ஆபரணங்கள் எதுவும் இல்லாமல் அமர்ந்து பாடிக்கொண்டே ராட்டினம் சுற்றுகிருள். அவள் அருகே ஒரு புருஷனும் அதேவிதமாக உட்கார்ந்து நூல் நூற்கிருன். ‘ரகுபதி ராகவ

ராஜாராம், பதீத பாவன சீதாராம்' என்ற இன்னிசை இருவர் நாவலிருந்தும் புறப்பட்டு, அமிருததாரையாக வருஷிக்கிறது.

"அட பாவி! நாசமாய்ப் போக!" என்று வாசலில் சோமுவின் தாயாருடைய குரல் கேட்டது.

துருத்தி சுருதி மாதிரி, "ஊம் ம்ம்...ஊம் ம் ம்... உம் ஊம் ம் ம்...ஊம் ம் ம்' என்று ஓர் அழுகைக் குரலும் கூடவே கேட்டது.

"எங்கேடா தொலெச்சே? எங்கேடா அவன்? ஓங்க அப்பனுக்கோ ஒரு கவலையும் இல்லே. அவளோ கைகேயி மாதிரி போத்திண்டு படுத்துண்டுட்டா... எங்கேடா?"

பதில் இல்லே. சுருதிமாத்திரம் தொடர்ந்தது.

பளீர் என்று ஓர் அறை விழுந்தது.

"ஐயோ! ஐயோ! அவன்.....அவன்......அதோ... அதோ......" என்று வீரிட்ட சத்தம் எழுந்தது.

தம் கதைக் கற்றையைத் தூக்கிப் பிடித்த வண்ணம் சோமு வாசலிலே ஓடினார்.

"வாடாப்பா, வா. உன் சமத்துப் பிள்ளெ செய் திருக்கற காரியத்தைக் கேளு. யாரோ பிச்சைக்காரக் குழந்தை வந்துதாம். நேத்திக்குப் புதிசாய்த் தச்சயே சொக்காய், அதைக் கழட்டி அவன்கிட்டக் குடுத்திட்டு ரிக்கறது. ஏண்டான்னு, அந்தக் குழந்தை அழுது தாம்; பரிதாபமா இருந்துதாம்!'' என்றாள் அம்மாள்.

ஆசிரியர் சோமுவுக்கு மகா ஆத்திரம் வந்தது. தாமும் பளீர், டளீர் என்று சிறுவனுக்கு நாலு அறை வைத்தார். பிறகு, பையனைப் பரபர என்று பிடித்து இழுத்துக்கொண்டு வாசலிலே ஓடினார். பிச்சைக்காரக் குழந்தையைக் கண்டே பிடித்துவிட்டார். புதுச் சொக்காயைத் திரும்பவும் கைப்பற்றி, அந்தக் குழந்தைக்கும் இரண்டு பிரகரம் வைத்துவிட்டு வீடு திரும்பினார்.

ஒரு கையில், இழந்து திரும்பிய புதுச் சொக்காய்; மறு கையில், கதைக் கற்றை. சொக்காயை ஒரு முறை ஆனந்தமாகப் பார்த்தார். காணமல் போய்த் திரும்பி வந்த சொக்காய் அல்லவா? கையிலே உள்ள நூறு ரூபாயை விட, காணமல் போய் அகப்பட்ட ஒரு ரூபாயின் ஆனந்தமே பெரிது என்று ஏசு பகவானே சொல்லியிருக்க வில்லையா? பிறகு மறு கையிலுள்ள கதை முடிவை ஒரு முறை கண்ணேட்டம் விட்டார். அதுவும் அவருக்குச் சந்தோஷமே தந்தது.

"ரகுபதி ராகவ ராஜாராம், பதீத பாவன சீதாராம்" என்று பாடிப் பார்த்துக்கொண்டார். 'நல்ல முடிவு! அற்புதமான முடிவு! நல்ல முடிவு!' என்று தமக்குத் தாமே சபாஷ் சொல்லிக்கொண்டார். சோமுவுக்கு இரட்டைச் சந்தோஷம். ஒரு மனிதனுக்கு இதைவிட வேறே என்ன இன்பம் வேண்டும்? அவர் முகம், வசந்தகால சந்திரனைப்போல் பிரகாசித்தது. ஆனல் அடுத்த நிமிஷம் அதை ஒரு வியாகுல மேகம் சூழ்ந்தது; ராத்திரிச் சாப்பாடு எங்கே? லங்கணந்தானே?

★

பவுன் செடி

அடுத்த வீட்டுச் சொர்ணத்துக்குக் குழந்தை ராதாவைக் கண்டால் வெகு ஆசை. தினம் மூன்று நான்கு தடவை, ராதாவைத் தூக்கிக்கொண்டு போய் விடுவாள். இன்றும் அவளைத் தவிர, வேறு யார் தூக்கிக்கொண்டு போயிருக்கப் போகிறார்கள்?

"ராதாவுக்குக் காபி கொடுத்தாகிவிட்டதோ?" என்றார் சாமிநாதன்.

வெற்றிலைத் தாம்பாளத்தை மேஜைமீது வைத்துக்கொண்டே முகத்தில் சுளிப்புடன் கலந்த ஒரு புன்சிரிப்போடு அவர் மனைவி கூறலானாள்: "அது

என்ன, சேர்ந்தாற்போல் அரைமணி நேரம் வீட்டில் இருக்கமாட்டேன் என்கிறது'' என்ருள்.

ராதாவுக்கு வயது மூன்று நிறையவில்லை. பேசத் தெரியாது. கொஞ்சம் கொஞ்சம் சமிக்ஞை தெரியும். அரையும் குறையுமாக ஓர் உளறல் மாத்திரம் இப்போது வர ஆரம்பித்திருக்கிறது. தாஞக நடந்து அடுத்த வீட்டுக்கு அவள் போகமாட்டாள். சொர்ணந் தான் எடுத்துக்கொண்டு போயிருக்க வேண்டும். என்ருலும், 'ராதா வீட்டில் இருக்கமாட்டேன் என் கிறது' என்றுதான் அவளுடைய தாய் சொல்லுகிருள். ஊரில் உள்ளவர் செய்ததையெல்லாம் ராதா செய்த தாகச் சொல்லுவதில் அவளுக்கு ஒரு சந்தோஷமா? இல்லை; அவள் மனத்துக்கு அப்படித்தான் தோன்று கிறது. அவள் என்ன செய்வாள்?

''சரி; குழந்தையைப் போய்ப் பார்.''

சாமிநாதனின் மனைவி தங்கம், ''நல்ல வேலை இது! - தெருவெல்லாம் நான் சுற்றமாட்டேன். வறபோது வரட்டும்'' என்று தலையைப் பலமாக அசைத்துக்கொண்டு திரும்பிஞள்.

''பின்னே யார் போய்ப் பார்ப்பது? அந்த ஏழை வேலைக்காரியையும் துரத்தியாகிவிட்டது'' என்ருர் சாமிநாதன்.

படம் எடுத்த சர்ப்பம்போல் ஒரு சுற்றுச் சுற்றிக் கம்பீரமாக நின்ற தங்கம், ''வேலைக்காரியா அவள்? திருட்டுச் சிறுக்கி; பச்சைக் குழந்தை கழுத்தில் போட்ட பவுன்காசைத் தஸ்கரம் செய்துவிட்டாள்! கிராதகி, அவள் வேறே எதைத் தூக்கிக்கொண்டு போஞலும் பொறுத்துக்கொண் டிருப்பேன். பச்சைக் குழந்தை..'' என்று அடுக்கிக்கொண்டே போஞள்.

சாமிநாதன் கல கல என்று சிரித்தார். தங்கத் துக்கு ஆத்திரம் அதிகமாயிற்று.

"என்ன சிரிப்பு, நாசமாய்ப் போகிற சிரிப்பு! அந்தப் பரட்டை திருடியிருக்கமாட்டாள் என்றே இன்றும் நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அந்தக் கழுதையை ஜெயிலில் போட்டிருக்கவேண்டும். நம் வீட்டில் செய்தது போதாதா? இன்னும் யார் வீட்டிலாவது செய்யவேண்டுமென்று விட்டு விட்டீர்கள்" என்றாள் தங்கம்.

"நான் விட்டுவிட்டேனா? நான் வருவதற்குமுன் நீயே துரத்திவிட்டாயே. நான் இருந்தால் அவளை இப்படி அனுப்பியிருக்க மாட்டேன். அந்த ஏழைப் பரட்டை ரொம்பப் பயந்தவள்; சாது. பவுனைக் கொண்டுபோய் அவள் என்ன செய்வாள்?"

"ரொம்பச் சரி" என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்ன தங்கம், "வெளியே போய்த் தேடிக் கண்டு பிடித்து ஒரு பல்லாக்கு வைத்து வேண்டுமானால் அழைத்து வாருங்களேன்" என்றாள்.

"பல்லாக்கு அவளுக்கு எதற்கு? அது உனக்கும் எனக்குந்தான் வேண்டும். அவள் நடந்து வருவாள். அதில் ரொம்பச் சந்தோஷமாகவும் வருவாள்."

இதற்குமேல் தங்கத்தினால் தாள முடியவில்லை. "நீங்கள் புரொபஸர்; சித்திரமாகப் பேசுவீர்கள், இதுக்கெல்லாம் பதில் சொல்ல என்னால் முடியுமா?" என்று சொல்லி அப்பால் போய்விட்டாள்.

ராதாவின் கழுத்திலிருந்த தங்கப் பவுன் காணாமல் போனதென்னவோ வாஸ்தவம். சாமிநாதன் ஒரு புரொபஸர் என்பதும் நிஜந்தான். சரித்திரத்தை விடத் தர்க்க சாஸ்திரத்தில் அவருக்கு ஒரு பிரியம். தாம் காலேஜுக்குப் போயிருந்த சமயத்தில் பவுன் காசு காணாமல் போனது, பரட்டையை மனைவி துரத்தியது ஆகிய இரண்டு சம்பவங்களும் நடந்து விட்டன. பவுன்காசு காணாமல் போனதை எப்படி, எப்போது, எந்த இடத்தில் மனைவி கண்டுபிடித்தாள்

என்பதை, 'ஸ்காட்லண்டுயார்டு' துப்பறியும் உத்தியோகஸ்தரைப்போல் விசாரித்துப் பார்த்தார். மனைவி படபடவென்று பதில் சொன்னாளே தவிர, துப்புத் துலங்க ஒரு வழியையும் காணவில்லை. 'பரட்டை திருடியிருக்கமாட்டாள்' என்று மாத்திரம் என்னவோ அவர் மனத்தில் பட்டது. அப்படியானால், யார் திருடியிருப்பார்கள்? சொர்ணத்தினிடம் சாமிநாதனுக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. அதற்குக் காரணம் இல்லை. சொர்ணம் சம்பந்தப்பட்ட மட்டில் அவருடைய தர்க்கசாஸ்திர மூளை, காரணத்தைப்பற்றிக் கவலைப்படவும் இல்லை. அந்தச் சொர்ணம்! தாம் அவளோடு சண்டைபோட வேண்டுமென்றுகூட அவருக்குத் தோன்றிற்று. நாற்காலியில் உட்கார்ந்தபடியே - அது சுழல் நாற்காலி - இரண்டு மூன்று பிரதட்சிணம் செய்த வண்ணம் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தார்.

அடுத்த வீட்டுச் சொர்ணம் ராதாவைக் கொண்டு வந்து விட்டுவிட்டு, "அதோ பார், உன் அப்பா" என்று நகைத்துக்கொண்டே சுட்டிக் காட்டினாள். ஒரு நாணம், அதிலே ஒரு நகைப்பு – இரண்டோடும் மின்னலைப்போல் சாமிநாதனை ஒரு பார்வை பார்த்து விட்டு, "குழந்தையைப் பாத்துக்குங்க, ஐயா" என்று சொல்லி, மருள்கொண்ட மான்போல் துள்ளிக் குதித்து ஓடிவிட்டாள் சொர்ணம்.

சண்டைபோடத் தயாராக இருந்த சாமிநாதன், சொர்ணத்தை நேரே கண்டபோது, வாய் திறவாமல் ஊமையாயிருந்தார். வெட்கமா, பயமா, மன இளக்கமா - அது என்ன? அவருக்கே தெரியவில்லை.

இன்று மாத்திரம் அல்ல; ஏறக்குறைய ஒரு வாரத்துக்குமேல் ஆகிவிட்டது. வழக்கம்போலச் சொர்ணமும் வந்துகொண்டும் போய்க்கொண்டுந்தான் இருக்கிறாள். ஒரு நாள்கூடச் சொர்ணத்துடன் சண்டைபோடச் சாமிநாதனுக்கு மனம் துணிய

வில்லை. அதுமாத்திரம் அல்ல; சொர்ணத்தைக் கண்ணால் பார்ப்பதைக்கூட நிறுத்திவிட்டார். அதில் என்னவோ அவருக்கு ஒரு பயம் உண்டாகிவிட்டது. ஆனால், சொர்ணத்தைப்பற்றி இப்படி என்ன என்னவோ யோசனைகள் அவர் மனத்தில் உதயமாயி னவே எதையாவது மனைவியிடம் சொல்லலாமே? சொல்லவே இல்லை. அது ஏதோ குற்றம்போல் அவர் மனத்தில் ஓர் உணர்ச்சி உண்டாயிற்று.

சுமார் பத்து நாள் கழிந்திருக்கும். குழந்தை ராதா தள்ளாடித் தள்ளாடிக்கொண்டு உள்ளே ஓடி வந்தாள். உள்ளே கூடத்தில் சாமிநாதன், தங்கம் இருவரும் சிரிப்பும் கேலியுமாகப் பேசிக்கொண் டிருந் தார்கள். "அடசெல்லக் குஞ்சு! - எப்படித் தனியா வந்தது?" என்று கையில் ராதாவை வாரியெடுத்து தங்கம், ஆர்வத்துடன் முத்தமிட்டுக்கொண்டாள்.

ராதாவோ கீழே கையைக் காட்டி இறங்க வேண்டுமென்று சமிக்ஞை செய்து கத்தினாள். இறக்கி விட்டாயிற்று.

தங்கத்தின் சேலை முன்றானையைப் பிடித்து இழுத் துக்கொண்டு, "ஓ! ஓ!" என்று மறுபடியும் கத்திய துடன், உருப்புரியாமல் ஏதோ உளறிக் கொட்டினாள்.

'எங்கேயோ கூப்பிடுகிறாள்!' என்று தங்கம் கூடவே போனாள்; சொர்ணத்தின் வீட்டுக்குத்தான். உள்ளே போயாயிற்று. அங்கும் நிற்கவில்லை. கொல்லைப் பக்கம் அழைத்துச் சென்றாள். சொர்ணம் இதைப் பார்க்கவில்லை. அவள் சமையல் அறையில் ஏதோ வேலையாக இருந்துவிட்டாள்.

வீட்டுப் புறக்கடையில் குப்பைமேட்டுக்குப் பக்கத்தில் சொர்ணத்தின் மகன் - ஆறு, ஏழு வய துடைய மாணிக்கம் – குனிந்து உட்கார்ந்திருந்தான். அவனுடைய முப்பத்திரண்டு பல்வரிசையும் தெரியும் படி குதூகலத்தோடு, "அது முளைச்சிடுச்சு; நான்தான்

உங்களைக் கூட்டிவரச் சொன்னேன் – பாருங்கம்மா'' என்று, ஏதோ ஒரு முளையைக் கையால் தொட்டுக் காட்டினான். 'என்னவோ குழந்தை விளையாட்டு' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்ட தங்கம், ''இது என்ன செடி, அப்பா?'' என்று கேட்டாள்.

''ஓ! அது காசு காய்க்கப் போகுது. நல்லா முளை விட்டிடுச்சு'' என்றான் மாணிக்கம்.

தங்கத்துக்குச் சட்டென்று ஒரு சந்தேகம் தோன்றிற்று. அந்த முளை இருந்த இடத்தைக் கையினால் கல்லிப் பார்த்தாள். நினைத்தபடி, காணாமல் போன பவுன் அகப்பட்டுவிட்டது! தங்கத்துக்குப் பரம சந்தோஷம். பத்து வயதுச் சிறு பெண்ணைப்போல், ராதாவை இடுப்பில் தூக்கி வைத்துக்கொண்டு, இரண்டு எட்டில் வீட்டுக்கு ஓடி வந்தாள். சாமிநாதனிடம் பவுனைக் காட்டினாள். இரைக்க இரைக்க அரை அரை வாக்கியமாக நடந்த சங்கதியைச் சொன்னாள்.

அந்த இரைப்போடு இரைப்பாக, ''பாவம்!— அந்தப் பரட்டையைத் துரத்திவிட்டோம். – அவள் தான் வந்து உங்களையாவது பார்க்கப் படாதோ–'' என்றாள்.

''ஆகா! வந்து பார்க்க மாட்டாளோ? எங்கே வேலை கிடைத்ததோ? அல்லது பிச்சையெடுத்துச் சோற்றுக்குத்தான் அல்லாடுகிறாளோ?'' என்றார் சாமிநாதன்.

தங்கம் அழாக்குறையாக, ''என்னைக் கண்டால் ஏன் உங்களுக்குக் கரிப்பாக இருக்கிறது? நான் என்ன செய்வேன்? அந்த அசட்டுப் பரட்டை வ ந் தா ல்,......'' என்று சொல்லி முடிக்குமுன், சொர்ணம் அங்கே வந்து சேர்ந்தாள்.

வழக்கம்போல் அன்ன நடைதான்; மின்னல் பார்வைதான்; குறும்பு நகைப்பும் தளுக்கு நாணமும் கூட உண்டு.

"ராதா இங்கே வந்திடுச்சா? நான் அங்கெல்லாம் தேடிக்கிட்டிருக்கேன்" என்றாள் சொர்ணம்.

சாமிநாதன் அவளை ஒரு முரட்டுப் பார்வை பார்த்துவிட்டு, ருத்திரன்போல் முகத்தைக் கடுத்து, "இந்தா, இனிமேல் இந்தப் பெண்பிள்ளையை இங்கே வரவிடாதே!" என்று கத்தினார்.

இடிகேட்ட நாகம்போல் ஒடுங்கிய சொர்ணம் பதில் சொல்லாமல், பூனைபோல் நடந்து வெளியே போய்விட்டாள். சாமிநாதனின் கோபத்துக்கு அவள் காரணம் கேட்கவில்லை. ஆனாலும், அது நியாயந்தான் என்று அவள் உணர்ந்ததுபோல் தோன்றியது அவள் நடந்துகொண்ட பாவனை. அன்று போனவள் தான்; அப்புறம் அவள் இந்த வீட்டுப்பக்கம் திரும்பிப் பார்க்கவே இல்லை.

காரணம் கேட்டிருந்தால்தான் என்ன? தங்கம் பின்னால் எத்தனையோ தடவை வேடிக்கையாகவும் கேலியாகவும் வினயமாகவும் கேட்டுப் பார்த்தாளே; சாமிநாதனால் அவரது அந்தக் கோபத்துக்கு என்ன காரணம் சொல்ல முடிந்தது? என்னவாவது சொல்லிச் சிரித்து மழுப்புவார்; அல்லது ராதாவை எடுத்துப் பெருமூச்சுடன் கொஞ்சி இரண்டொரு முத்தம் கொடுத்து, "நம் கண்ணு! பவுன் செடி முளைக்கப் போட்டுவிட்டது, பவுன் பவுனாகக் காய்க்க! நமக்கென்ன குறை?" என்று நகைத்து, பேச்சை மறக்கடிப்பார்.

★

பரிவர்த்தனை

ராஜா சுந்தரநாதரைச் சுற்றி ஒரே புகை மண்டலமாக இருந்தது. அவருடைய பாரமான உடலத்தைச் சுமந்துகொண்டிருந்த வில் நாற்காலி இரண்டு விநாடிக்கு ஒரு தடவை 'கிரீச்' என்று சத்தமிட்டுத் தன் பிரம்மாண்டமான பொறுப்பின்

சிரமத்தை விளம்பரம் செய்துகொண் டிருந்தது. சுந்தரநாதரின் கனத்த சரீரத்தைத் தாங்குவதென்றால் எப்படிப்பட்ட உறுதியான நாற்காலி ஸோபாக்களும் கொஞ்சம் சிரமப்பட்டுத்தான் தீரும். அதிலும் ராஜா சாகேப் அவர்கள் சிகரெட்டை வாயில் பற்றவைத்துச் சிந்தாக்கிராந்தராய்ப் புரள ஆரம்பித்துவிட்டால் அகில லோகமுமே நெளியாமல் ஸ்திரமாக இருப்பது ஆச்சரியமாகத் தோன்றும். சுந்தரநாதரின் உடம்பு உண்மையிலேயே ராஜசரீரம்; மலைபோன்றது.

சாயங்கால சூரியனின் மனோகரமான கிரணங்கள், சாரளங்களின் பலவர்ணக் கண்ணுடிகளினூடே பாய்ந்து குளிர்ச்சியுடன் அங்குமிங்கும் அலங்கரித்துக் கொண்டிருந்தன. அந்த வர்ணக் கதிர்களுடன் இசை பயில்வதுபோல் சின்னஞ்சிறு படிக மலையருவியை ஒத்த சங்கீத நாதம் ஒன்று ஆற்றலாய் அடக்கமாக ஓடிக்கொண் டிருந்தது.

கனவிலிருந்து எழுந்தவர்போல் தலையை உயர்த்திச் சிலிர்த்த சுந்தரநாதர், "என்ன இழவு!" என்று முகத்தைச் சிணுங்கி, "உம்; பம்பாய் அழுது வழிகிறதே? கல்கத்தாவைப் போடும் பார்ப்போம்" என்று ஆக்ஞாபித்தார்.

குமாஸ்தா ரேடியோவின் குமிழிகளைத் திருகினர். அது பல ஊதல்கள் ஊதி, பிரஞ்சு, சிங்களம், மலாய் ஆகிய பல்வேறு பாஷைகள் பேசிப் பாடி, இறுதியில் கல்கத்தாவைப் பிடித்தது.

"சனியன்; இந்தப் பழைய ஸிஸ்டத்தைத் தொலைத்துப் புதிய செட் வாங்க வேண்டும் - கல்கத்தாவுந்தான் அழுது வழிகிறது. நமது மெட்ராஸ் கார்ப்பொரேஷனையே போடும் - சுற்றிச் சுற்றிக் கடைசியில் மெட்ராஸில் வந்து விழ வேண்டியிருக்கிறது – இன்று கிராமபோன் பிளேட்டு இல்லையே - யார் பாட்டு? என்ன ஐயா, முழிக்கிறீரே?......" என்று பொரியலானர் சுந்தரநாதர்.

குமாஸ்தா வெகு சாவதானமாக, "டாக்கி அரசி மீனுபாய் பாட்டு" என்றார்.

"மீனுவா?...அந்தக் கழுதையா?...எப்போது திரும்பி வந்தாள்?...படம் முடிந்து கல்கத்தா விலிருந்து வந்துவிட்டாளா?...விளம்பரத்தையே காணவில்லையே...நாசமாய்ப் போகிற படம் வந்திருக்கிறது...நான் மாத்திரம் சமஷ்டி அரசியலில் மந்திரிப் பதவி ஏற்றால் இந்தப் படங்களை ஒரு கை பார்த்துத் தான் விடுவேன்...உஸ்!....அந்தச் சனியனை நிறுத்தும் ...மீனுள் குரல் இப்படிப் போய்விட்டதா என்ன?.... போகாமல் எப்படி வாழும்?...ஒரே குழறலாக இருக்கிறதே...நிறுத்தும் ஐயா!" என்று, படபட வென்று பொரிந்தார் சுந்தரநாதர்.

ரேடியோ நின்றது.

சுந்தரநாதர் மறுபடியும் புகை மண்டலத்தைச் சிருஷ்டித்து, அதனுள் ஆழ்ந்த யோசனையில் இறங்கி விட்டார்.

சிறிது நேர மௌனத்துக்குப் பிறகு, கமலதாஸை உடனே அழைத்து வரும்படி, குமாஸ்தாவுக்குச் சுந்தரநாதர் கட்டளையிட்டார்.

சொத்தோ பதவியோ தொழிலோ வியாபாரமோ இல்லாமலே, ஆனாலும் சர்வ போகங்களுடன் சுதந்தர மாக வாழும் மகா புருஷர்களுடைய கோஷ்டி ஒன்று உலகில் உண்டல்லவா? அதில் சேர்ந்தவர் கமலதாஸ். காலும் கையும் அற்று, முடமும் நொண்டியுமாகக் கெஞ்சும் பிச்சைக்காரனைத் தட்டிவிட்டுப் போய்விட, எந்தக் கனவானும் அஞ்ச வேண்டியதில்லை; உடுப்பிலும் தோற்றத்திலும் கம்பீரமான கமலதாஸ் அதிகாரமாக எந்தக் கனவானிடமேனும் பணமோ பணமதிப்புப் போடக்கூடிய வேறு சாமானோ கேட்கும்போது, இல்லையென்பது எந்தக் கனவானுக் குத்தான் அழகாகும்? கௌரவந்தான் குறைந்து

போகாதா? யாரும் மறுக்கமாட்டார்கள். இரண்டணு முதல் இரண்டாயிரம் ரூபாய் வரையில், அவரவர் அந்தஸ்துக்கும் சமய சந்தர்ப்பத்துக்கும் ஏற்றபடி, கமலதாஸ் கனவான்களிடம் தண்டிக்கொள்ளுவார். அது கடன் அல்ல; யாசகம் அல்ல; வரியும் அல்ல. பின் என்ன? பின் என்ன என்பதை யாரும் யோசித்துப் பார்த்ததே இல்லை.

கமலதாஸுக்கு அபிஸீனியா தெரியும்; இத்தாலீ தெரியும்; ஐரோப்பா தெரியும்; அமெரிக்கா தெரியும்; பூகோள சாஸ்திரம் முழுதும் தெரியும். அரசியல், பொருளாதாரம், சமுதாயம் — அந்தச் சங்கதிகளும் அவர் அறிவார். பொது உடைமைத் தத்துவத்திலிருந்து, பாஸிஸ்டுக் கொள்கை வரைக்கும் எந்த ராஜீய தத்துவத்தை வேண்டுமானுலும் விளக்கிச் சொல்ல, - அது முடியாவிட்டால் விவாதித்து எதிரியை வெருட்டிவிட, - சக்தியும் படிப்பும் அவருக்கு உண்டு.

மகாத்மா காந்தி, முசோலினி, பால்டுவின், ஹிட்லர், லவால், ரூஸ்வெல்ட், மாஜி-கெய்ஸர் எவரைப்பற்றியேயானுலும் வெகு அலட்சியமாகப் பழித்துப் பேசுவார்; அல்லது அபாரமாகத் தாங்கிப் பேசுவார். நீங்கள் மகாத்மாவை முதல் வாக்கியத்தில் ஆதரித்தால், இரண்டாவது வாக்கியத்தில் அவர் எதிர்ப்பார். மகாத்மா எங்கேயோ இருக்கிருர், சிறிது நேரம் கமலதாஸுடன்தான் சேர்வோமே என்று நினைத்து, மூன்ருவது வாக்கியத்தில் நீங்களும் மகாத்மாவைக் கண்டித்தீர்களானுல், நான்காவது வாக்கியத்தில் மகாத்மாவுக்கு அதிருஷ்டம் அடித்து விடும்; அதாவது மகாத்மாவைக் கமலதாஸ் பலமாக ஆதரிப்பார். மொத்தத்தில் நீங்கள் எதைச் சொன்னுலும் கமலதாஸ் எதிர்ப்பார். அவர் முன்னிலையில் நீங்கள் எதைப்பற்றி என்ன அபிப்பிராயம் கூறினுலும் விவாதமில்லாமல் தப்பித்துக்

கொள்ள முடியாது. அபிப்பிராயம் கூருமலே தப்பித்துக்கொள்ளலாம் என்ருல், அப்படியும் தப்பித்துக் கொள்ள முடியாது; அவர் உங்களை ஏதாவது கிளறிக் கொண்டே இருப்பார். இத்தனையும் ஒருபுறம் இருக்கட்டும். கமலதாஸ் சாதுதான்; சாது என்ருல், ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? வாழ்க்கைக் கடலில், ஒரு நோக்கத்தையும் உண்மையையும் காண விரும்பி ஆழ்ந்து துழாவும் மனிதர்கள், திக்குத்திசை தெரியாமல் தவித்து, வழிகாணப் போராடுவார்கள் என்று இருந்தாலும் அவர்கள்தான் ஆபத்தான மனிதர்கள். வாழ்க்கைக் கடலில் வெட்டி எறிந்த மரச்சில்லைப் போல் மிதந்து, அற்ப சுகத்தோடு திருப்திபடையும் மனிதர்கள் மிஞ்சினல் கெஞ்சுவார்கள்; கெஞ்சினல் மிஞ்சுவார்கள். கமலதாஸ் இந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவர். ஆனல், இது எல்லாருக்கும் எப்படித் தெரியும்?

இப்போது பல நாளாக, ராஜா சாகேப் சுந்தரநாதருக்குக் கமலதாஸ் வலது கையாக இருந்து வருகிருர். "இந்தச் சுந்துவை யார் மதித்தார்கள்? எல்லாம் நான் பண்ணிவிட்ட வேலைதான். இன்று சுந்து மந்திரிப் பதவிக்கும் போட்டி போடுகிருன் என்ருல், ஒரு கமலதாஸ் பின்னல் இருந்து பெரும் விசையை முடுக்கி வைத்திருக்கிருன் என்று நினையுங்கள்" என்று கமலதாஸ் சர்வ சாதாரணமாக, சர்வ சாதாரணமான நண்பர் கோஷ்டியில் கூறி ஒரு வேளைக் காபி தட்டிவிடுவார். ஆனல் அதில் ஓரளவு உண்மை உண்டு. சுந்தரநாதர் திடீரென்று அரசியலில் முன்னணிக்கு வந்ததற்குக் கமலதாஸின் தூண்டுதலும், பத்திரிகைச் சண்டைகளும், பின்னணிக் காரியங்களும் பெரிதும் காரணந்தான். சுந்தரநாதருக்குச் சிக்கலான என்ன பிரச்னைகள் தோன்றினலும் உடனே கமலதாஸை அழைக்கும் நிலைக்கு வந்து வெகுநாளாயிற்று.

ராஜா சாகேபு சுந்தரநாதர் இன்னும் நாற்காலியில் சாய்ந்தபடியே இருக்கிறார். புகைப்படலமும் இன்னும் அவரைச் சூழ்ந்துகொண்டுதான் இருக்கிறது. ஆனால், சூரிய கிரணங்களும் ரேடியோ சங்கீதமும் போய்விட்டன. மின்சாரத் தீபங்கள் ஜொலிக்கின்றன. கமலதாஸ் வந்து எதிரே ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார்.

"இன்னும் நாம் தேர்தல் அறிக்கை தயார் செய்யாமல் இருக்கலாமா?" என்றார் ராஜா சாகேபு.

"அதற்கு எத்தனை நாழிகை ஆகப் போகிறது? 'டைபிஸ்ட்' இருக்கிறாரல்லவா? அவரை இரண்டு மணிநேரம் கொடுங்கள். அறிக்கை தயார்" என்று அநாயாசமாகப் பதிலளித்தார் கமலதாஸ்.

"அறிக்கையில் என்ன விஷயங்களைக் கூறப் போகிறீர்கள்?" என்று கேட்டார் ராஜா சாகேபு.

"சகல விஷயங்களையுந்தான் சொல்லிப் போட வேண்டும்" என்று அழுத்தந் திருத்தமாக உரைத்த கமலதாஸ், மேலும் சொன்னார்: "வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பது; ஜனங்களுக்கு வெகு சுலபமாக ஏராளமான பணம் கிடைப்பதற்கு வழிகள் கண்டுபிடிப்பது; வரியையெல்லாம் அடியோடு குறைத்து விடுவது; சுதேசித் தொழில்களை வளர்ப்பது; சுதந்தரம் பெறுவதற்காக ஸகலமான தியாகமும் செய்து, சட்ட வரம்புக்கு உட்பட்ட பல் வேறு வகையான போராட்டங்களை, இந்தப் பிரிட்டிஷ் சர்க்காரோடு தீவிரமாய் நடத்துவது; ஓர் ஐந்து வருஷத் திட்டம் போடுவது—நடத்துவதல்ல, போடுவது என்பதை ஞாபகத்தில் வையுங்கள். இந்த மாதிரி இன்னும் இல்லையா, அது இது எல்லாவற்றையும் குறிப்பிட வேண்டியதுதான்."

இப்படிக் கண்டபடியெல்லாம் ஜனங்களுக்கு வாக்குக் கொடுத்தால் பின்னுக்குக் கஷ்டமாகுமே என்று ராஜா சாகேபு சற்றுத் தயங்கினர்.

கமலதாஸ் கூறிய சமாதானம் இது: "நம்மைக் கண்டது யார், பின்னைக் கண்டது யார்? பொதுஜனங்களுக்கு ஞாபகசக்தி மிகவும் குறைவு. அன்றன்று நடப்பதன் நன்மை தீமைகளையே அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளுவதில்லையே. பொதுஜனங்கள், சென்ற சரித்திரத்தை அலசி ஆராய்ந்து நிதானமாக யோசித்து எந்தக் காரியமும் செய்வதில்லை. அந்த அந்த நிமிஷத்தில் உண்டாகும் பரபரப்பில் மிக அற்ப விஷயங்களால் உணர்ச்சியடைந்து, செயல் செய்கிறார்கள்; அவ்வளவுதான். ஆகையால், அந்த அந்தச் சமயத்துக்கு ஏதாவது 'டானிக்' கொடுத்துக்கொண்டே காலத்தை ஓட்டுபவர்களே சிறந்த அரசியல்வாதிகளாகப் பிரகாசிக்க முடியும்."

ராஜா சாகேபு புன்முறுவல் பூத்தார்.

"எப்படியிருந்தாலும் சரி; அறிக்கை ஜனங்களின் உள்ளங்களைக் கிளற வேண்டும்; உணர்ச்சி ததும்ப வேண்டும். விஷயம் அவ்வளவு முக்கியமல்ல" என்றார் ராஜா சாகேபு.

"ஆகட்டும்" என்று கம்பீரமான குரலில் பதில் அளித்த கமலதாஸ், ராஜா சாகாபையே அறிக்கை உருக்கிவிடும் என்று உறுதி கூறுவதுபோல் இருந்தது.

"கமலதாஸ், இன்னொரு விஷயம்" என்று, எங்கேயோ பார்த்தபடி, மெல்லிய, குளுமையான, வெகு அமைதியான குரலில் சொன்னார் ராஜா சாகேபு. அவர் முகத்திலே ஓர் அசட்டுச் சிரிப்பு நர்த்தனம் செய்தது.

கமலதாஸும் சிரித்த முகத்துடன், "என்ன?" என்று கேட்கும் பாவனையில் தலையை மேலும் கீழும் அசைத்தார்.

''ஒன்றும் இல்லே. உங்கள் தம்பி என்னவோ 'டாக்கி'யில் நடிக்கப் போகிருனுமே...'' என்ற சுந்தர நாதர் முடிக்கவில்லே.

''ஆமாம்; தறிதலே'' என்று இடைமறித்துச் சொன்ன கமலதாஸ், ''அதுதான் எங்கும் முழக்கமாக இருக்கிறதே!...'' என்று சட்டென்று என்ருர்.

''அதில்—சரி—பூபாலகன்—உம் தம்பி பெயர் பூபாலகன் தானே?—அவன் வந்துவிட்டானே?'' என்ருர் சுந்தரநாதர்.

''ஆஹா! எல்லாம் உங்கள் போட்டி ஜமீன்தாரின் வேலேதான். என்னவோ சினிமாக் கம்பெனி என்று சொல்லி யாரோ ஒருத்தியைக் கல்கத்தாவுக்கு இழுத்துக்கொண்டு போனுர். பெரிய இடங்களில் எங்கும் இதே புரளிதான்'' என்ற கமலதாஸின் முகத்தில் ஒரு விஷமப் புன்சிரிப்புத் தென்பட்டது.

ராஜா சாகேபின் முகம் வாட்டமடைந்தது.

''சரி; அறிக்கை நாளேக் காலேயில் தயார் ஆகி விடுமா?''

''ஆகிவிடும்'' என்ருர் கமலதாஸ்.

''காலேயில் மறுபடியும் சந்திக்கலாமா?'' என்று ஜாடையாக விடைகொடுத்தார் ராஜா சாகேப்.

''பேஷாக'' என்ற கமலதாஸ் அசையாமல் உட்கார்ந்திருந்தார்.

சற்றுநேரம் பேசாதிருந்த சுந்தரநாதர், ''ஏதாவது வேறு விசேஷம் உண்டா?'' என்று கேட்டார்.

ராஜாசாகேபின் கேள்விக்குப் பதில் சொல்லாமல், ''என்னிடத்தில் தாங்கள் எந்த விஷயத்தையும் ஒளிக்க வேண்டியதில்லே. தங்கள் தம்பிபோலவே என்னேப் பாவியுங்கள்'' என்று உடம்பையெல்லாம் தளுக்கிக் குலுக்கிக் கொண்டே கூறிய கமலதாஸ், ''அதனல்—உங்களுக்கு—நிச்சயம் நன்மையே உண்டாகும்'' என்ருர்.

"ஏதோ புதிர் போடுவதுபோல் பேசுகிறீரே?"

"கோபமானால் நான் போகிறேன்" என்ற கமல தாஸ், "அந்த — அந்த — மீ — சரி, நாளைக் காலை அறிக்கையோடு வரட்டுமா?" என்று போட்டிப் பந்தய வாசகம்போல், பேச்சை விழுங்கி, ஆனாலும் கம்பீரமாக முடித்தார்.

சுந்தரநாதருக்குக் கோபமோ, கலக்கமோ, அச்சமோ, வெறியோ, என்ன உண்டாயிற்றோ தெரிய வில்லை. குதித்து எழுந்து நின்றார்.

"அது வாஸ்தவந்தான். யார் என்ன செய்ய முடியும்? நீர் நையாண்டியாகக் குத்தலாகப் பேச வேண்டியதில்லை. எனக்கும், ஜமீன்தார்—ஜமீன்தார் என்னவேண்டியிருக்கிறது, ஜமீன்தார் — எனக்கும் அந்த ராஜூவுக்கும் விரோதம் வந்ததற்குக் காரணம் அவள்தான்; அந்த மீனாள்தான்" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினார் சுந்தரநாதர்.

"அதைப்பற்றி நான் ஒன்றும் குற்றமாகச் சொல்லவில்லையே" என்று ஈனசுரத்தில் இழுத்துச் சொன்ன கமலதாஸ், "அந்த மீனாள் நாம் இழுத்த இழுப்புக்கு வரக்கூடிய நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. அதைத் தங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்றுதான் விரும்பினேன். கொஞ்சமாவது மாறான எண்ணம் கொண்டு இதை நான் சொல்ல வில்லை. என்னவோ அந்தரங்கமாகப் பழகிவிட்டோம். இனிமேல் வெளிவேஷம் போடுவது சரியல்ல. அந்நியோந்நியமாக நடந்துகொள்ள வேண்டும். தர்மம், ஒழுக்கம், வேதாந்தம் எல்லாம் ஊரராருக்கு சிநேகிதர்களுக்குள் அந்தப் பாசாங்கெல்லாம் எதற்கு? சிநேகிதர்களுக்குள், மனங் கரவாத பூர்ணவாஞ்சை, நன்மையிலும் தீமையிலும், அறாது இருந்துவர வேண்டும். இதுவே என் அபிப்பிராயம்" என்று அடுக்கினார்.

சுந்தரநாதரின் காதில் இதெல்லாம் அரையும் குறையுமாகத்தான் விழுந்தது. ஆனாலும், கமலதாஸ் வஞ்சகமற்றுப் பேசுவதாக, அவரது முழு அபிநயமும் தொனியும், சுந்தரநாதருக்குத் தோன்றின.

''கமலதாஸ்'' என்று உரக்கக் கூவிய அவர், ''உம்மை நம்புகிறேன். நீர் இதில் பொய் சொன்னாலும் என் தலை ஒன்றும் போய்விடப் போவதில்லை'' என்று சற்றுக் கனைத்துக்கொண்டார். ''நீர் சொல்லுவது நிஜமானால், அந்த விவரத்தைக் கேட்பதில் எனக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை'' என்று என்னவோ சுற்றிவளைத்துக்கொண்டு, தமது பதிலை முடித்தார்.

கமலதாஸுக்குத் தெம்பு உண்டாயிற்று. பேச்சை வளர்த்தாமல், தமது யோசனையை நறுக்குத் தெறித்ததுபோல் சொன்னார்.

மீனுபாய் அயன் ஸ்திரீபார்ட் போட்ட அதே படத்தில், கமலதாஸின் தம்பி பூபாலகன் அயன் ராஜபார்ட் போட்டு நடித்ததால், இருவருக்கும் நல்ல பழக்கம் ஏற்பட்டுவிட்டது. பூபாலகனைக் கொண்டு, மீனுபாயை மறுபடியும் 'மடக்கி' ராஜாசாகேபின் கையில் கொண்டுவந்து சேர்ப்பது வெகு சுலபம் என்று கமலதாஸ் கருதினார். அந்தக் கருத்தை ராஜாசாகேபிடம், கமலதாஸ், வெகு அழகாகவும், மனங்கவர் முறையிலும், அதே சமயத்தில் வெகு சுருக்கமாகவும் சொல்லி முடித்தார்.

இந்த இங்கிதத் தகவலைக் கேட்ட ராஜாசாகேபு, தமது சந்தோஷத்தை வெளிக்குக் காட்டாமல், ''வேறொன்றும் இல்லை, கமலதாஸ். அந்த ராஜுவின் திமிரை அடக்கவேண்டும். அவ்வளவுதான் என் விருப்பமெல்லாம்'' என்று சொல்லி, ''நாளைக்குச் சாத்தியமானால் பூபாலகனை இங்கே — வேண்டாம். உம் உசிதப்படி நடவும்'' என்று முடித்தார்.

ராஜா சுந்தரநாதர் பரம்பரைப் பிரபல வம்சத்தைச் சேர்ந்தவர். மிகப் புராதனமான ராஜவம்சம் என்றுகூடப் பிரஸ்தாபம். அவருக்கு ஒரு பெரிய ஜமீன் இருக்கிறது. வருஷந்தோறும் லட்சரூபாய் வரையில் வரும்படி வருகிறது ஆனால், அது அரண்மனைச் செலவுக்குக் கட்டவில்லை. ஜமீன் பணவருவாய் குதிரைப்பந்தயம் கட்டுவதற்குக்கூடப் போதவில்லை யென்றால், அப்புறம் என்ன சொல்லக் கிடக்கிறது! இப்போது ராணி வேறே பத்திரிகைச் சித்திரப் போட்டிப் பந்தயங்களில் இறங்கி யிருப்பதால், அரண்மனையின் செலவினம் மிகவும் மிகவும் பெருகி விட்டதாம்.

வருஷத்துக்கு ஒரு கவர்னர் விருந்து, மூன்று கலெக்டர் விருந்து ஆகிய பிரம்மோத்ஸவங்களை நடத்தாமல் இருக்கத்தான் முடியுமா? ஜமீனையே அடகு வைத்து அவர் ஏதோ கடன் வாங்கியிருப்பதாகச் சிலர் சொல்லுகிறார்கள். வேறு சிலர் அதெல்லாம் நிஜம் அல்ல என்றும், அவர் வீட்டுத் தோட்டத்தில் ரகசியமாகப் புதைத்து வைத்திருக்கும் தங்கமே இன்னும் ஏழெட்டுத் தலைமுறைகளுக்குக் காணும் என்றும் சொல்லுகிறார்கள் இருக்கலாம்; பெரிய இடத்து ரகசியத்தைக் கண்டது யார்?

ஜமீன்தார் காமேசுவர ராஜு, வம்ச பரம்பரை ஜமீன்தார் அல்ல. பணங்கொடுத்துச் சம்பாதித்த ஜமீனுக்கு உரியவர். லேவாதேவிக்காரருடைய குமாரர் ஆகையால், லேவாதேவிக் கடைகள் பல அவருக்கு உண்டு. இளைஞர். அவரை ராஜீயத்தில் ஒரு பிரபலஸ்தராக்கிய பெருமை உண்மையிலேயே சுந்தரநாதரைச் சேர்ந்ததுதான். நான்கு மாதங்களுக்கு முன்வரையில் ஜமீன்தார் ராஜு, ராஜாசாகேபு சொன்னபடி ஆடிவந்தார். இருவரும், தேசோத்தாரணக் கட்சியைச் சேர்ந்தவர்கள். சேர்ந்தவர்களாவது? இவர்கள்தான் அந்தக் கட்சி; இவர்களுக்

காகத்தான் அந்தக் கட்சி. இப்போது, இந்த இரு வருக்கும் வருத்தம் நேரிட்டிருக்கிறது. ஏதோ பெரிய அரசியல் அபிப்பிராய பேதம் ஏற்பட்டுவிட்டதாகப் பத்திரிகை நிருபர்கள் எழுதிவிட்டார்கள்; எல்லாம் தங்களுடைய க்ஷேமத்தை உத்தேசித்தே இந்த மாபெருந் தலைவர் இருவரும் வருத்தப்படும்படி நேரிட்டதாகப் பெரும்பாலான ஜனங்கள் நம்பி இருவர் கட்சியும் பேசிவந்தார்கள்; விஷயம் அறிந்த மிகச் சில 'பெரிய' மனிதர்கள் மட்டில் இவர்கள் வருத்தத்தின் காரணத்தைப்பற்றித் தமாஷாகப் பேசிக் கண்ணடித்து வந்தார்கள்.

அந்த 'டாக்கி அரசி' மீனுபாய் சமீபத்தில்தான் 'டாக்கி அரசி' யானாள். அவள் பிறப்பு வளர்ப்பு யாருக்கும் தெரியாது. ஆனால் தெரிந்தவர்போல் பேசுவோர்க்கு எங்கும் குறைவில்லை. அவளைப்பற்றிய வம்புகளோ அநந்தம். அவள் சம்பந்தமான மனஸ்தாபங்களும் சில பெரிய இடங்களில் குடிபுகுந்தன. நாடகமேடையில் அவளுக்குக் கீர்த்தி வந்தது முதல் அவள் பல கனவான்களுக்குத் 'தூரத்துப் பச்சை' யாக இருந்து வருகிறாள். ஒரு பெண்ணுக்கு அழகும் கீர்த்தியும் சுயேச்சையும் சேர்ந்து கொண்டால், கோர மனத்தைப் படைத்த துஷ்ட நாவுகளுக்குக் கேட்க வேண்டுமா? ஆனால், உண்மையில் மீனாள் விஷயம் என்ன? அதை எப்படிச் சொல்லுவது, என்ன சொல்லுவது? பாவ புண்ணியத்துக்குத் திட்டமான லட்சணம் சொல்லும் துடுக்குத்தனம் படைத்த மனிதர்களுக்கு நடுவே அவள் வாழ்கிறாள். அவள் ஸ்திரீ; திக்கற்ற ஸ்திரீ. எத்தனைத்தான் பொருளும் வசதியும் பெற்றிருந்தாலும் அவள் திக்கற்ற ஸ்திரீ தான். அதை அவளும், அவளைப் படைத்த ஆண்டவன் இருந்தால் அவனும் அறிவார்கள். அவள் சிலருக்கு மாயமான்; ஆனால், மாரீசன் அல்ல. தூரத்தே

இருப்பவர்களைக் கிட்ட இழுப்பாள்; கிட்ட வந்தவர்களுக்கு எட்டாமல் இருப்பாள்.

இந்த மீனுளை, சுந்தரநாதரின் மனம் நாடிற்று. அது மந்திரிப் பதவியில் நாட்டங்கொண்டால், மற்றெதிலும் நாட்டங்கொள்ளலாகாதா என்ன? தேச வெறி படைத்த ஒரு ஹிட்லர் பிரம்மச்சாரியாயிருக்கலாம். பூமியிலே சொர்க்கத்தை ஸ்தாபித்து விடும் பித்துப்பிடித்த ஒரு காந்தி ஏழையாய் வாழலாம். எல்லாரும் அப்படியே இருக்க முடியுமா?

காமேசுவர ராஜா ஒரு 'டாக்கி'த் தொழில் ஆரம்பித்தார். இப்பொழுது 'டாக்கி' தானே ஓங்கி வரும் தொழில்? காலும் அரையுமாய் வட்டிவாங்கிப் பணம் சேர்ப்பதற்குள், நூற்றுக்கு நூறு, இருநூறு, முந்நூறு விகிதம் லாபமளிக்கும் 'டாக்கி'த் தொழிலில் அவருக்கு ஆவல் விழுந்தது ஆச்சரியமா? மீனுள் அந்த 'டாக்கி'யில் ஆடப் போய்விட்டாள். ஜமீன்தாரும் கூடவே போனுர். அப்புறம் ஊரிலே என்ன பேச்சு நடக்கும்? கிரமமாய் நடக்க வேண்டிய பேச்சுத்தான். சுந்தரநாதரின் மனம் குமுறியது. அவர் தேசோத்தாரணக் கட்சியை விட்டு ராஜீநாமாச் செய்தார். நண்பர்கள் வற்புறுத்தியதன்மேல் ராஜீநாமாவை வாபஸ் வாங்கிக்கொண்டார். சென்னைச் சட்ட சபைக்குத் தேர்தல் வந்துவிட்டது. ராஜா சாகேபும் ஜமீன்தாரும், கட்சி அபேட்சர்களில் இருவர். என்றுலும் இருவரும் தம் பாட்டைப் பார்த்துக்கொண்டார்களே தவிர, மற்றவருக்கு உதவி செய்யவில்லை.

கமலதாஸனுக்கு இப்போது இரட்டிப்பு வேலை. ஒன்று தேர்தலில் சுந்தரநாதருக்கு வெற்றி கிடைப்பதற்கு வேண்டிய முயற்சி; மற்றது, 'டாக்கி' அரசி மீனுளை ராஜாசாகேபின் அந்தப்புரத்தில் கொண்டு வந்து சேர்ப்பது.

இரண்டாவது விஷயத்தைப்பற்றித் தம்பி பூபாலகனிடம் பிரஸ்தாபித்தார்; அவன் திட்டை வாங்கிக் கட்டிக்கொண்டார். ஆனாலும், முயற்சியைக் கைவிடவில்லை. வெற்றி தோல்விகளைச் சமமாகப் பாவித்து, கடமையை ஆற்றும் 'வீரர்' கமலதாஸ்.

தேர்தல் முடிவடைந்தது. ராஜா சாகேபு வெற்றி பெற்றார்; ஜமீன்தாரும் வெற்றி பெற்றார். தேசோத்தாரணக் கட்சிக்கு எதிர்க்கட்சியல்ல. சர்க்காருக்கே எதிர்க்கட்சியான தீவிர முன்னேற்றவாதிகளே மிகப் பெரும்பான்மை பெற்றார்கள். என்றாலும், கவர்னரின் கருணையும், இந்திய ராஜீய வாழ்வின் நெருக்கடியும் ஒன்று சேர்ந்து, மந்திரிப் பதவி வகிக்கும் பாக்கியத்தைத் தேசோத்தாரணக் கட்சிக்கே தரும் போன்ற நிலைமை ஏற்பட்டது. ஆனால், ஜமீன்தாரும் ராஜா சாகேபும் சேர்ந்தாற்போல் மந்திரிப் பதவிகள் வகிக்க முடியாதென்று கூறிவிட்டார்கள். இருவருக்கும் முதல் மந்திரி ஸ்தானத்தில் விருப்பம். ஒருவர் முதல் மந்திரி ஸ்தானம் வகித்தால், மற்றவர் மந்திரிப் பதவியே வகிக்க முடியாதென்று பிடிவாதம் செய்து வருகிறார்கள். அந்தச் சிக்கலான நிலைமையில் கமலதாஸ் பிரமாதமாய் யோசித்துக்கொண் டிருந்தார். அவருக்கு ஒரு யுக்தி பளிச்சென்று உதயமாயிற்று. அந்தரங்கமாய், ஜமீன்தார் காமேசுவர ராஜுவைப் பேட்டி கண்டு பேசப் புறப்பட்டார்.

அன்று மாலை, தேசோத்தாரணக் கட்சிப் பிரபல தினசரி யொன்றின் அரசியல் நிருபர் வெளியிட்ட செய்தியாவது: "கடைசியாகச் சமரசம் ஏற்பட்டு விட்டது. பொதுஜனங்களின் நன்மையையே குறிக்கோளாகக்கொண்ட ராஜா சுந்தரநாதர், தீவிர முன்னேற்றக் கட்சி அதிகாரத்துக்கு வந்தால் தேசத்துக்கு ஆபத்து நேரிடும் என்ற காரணத்தால், தமது மந்திரிப் பதவியையும் விட்டுக்கொடுத்து, தேசோத்தாரணக் கட்சியைப் பலப்படுத்தி, அது

மந்திரிப் பதவி ஏற்கும்படி செய்தார். ராஜா சாகேபு சட்டசபைப் பதவியையே ராஜீநாமாச் செய்துவிட்டுப் போவது நிச்சயம். ராஜா சாகேபின் இந்தப் பெருந் தியாகத்தை அரசியல் கோஷ்டிகள் பெரிதும் புகழ்ந் துரைக்கின்றன.''

இந்தச் செய்தியை அந்தத் தினசரி, ''ராஜா சாகேபுக்கு ஜே!'' என்ற கொட்டையெழுத்துத் தலைப்போடு பிரசுரித்தது.

இந்தச் செய்தியைப் படித்த அநேக வாசகர் ராஜா சாகேபின் பெருமையை வியந்துரைத்ததாகவும் கேள்வி.

''ராஜா சாகேபு இந்த நெருக்கடியான நிலைமையில் இப்படிப்பட்ட தியாகத்தைச் செய்து கட்சி ஒற்றுமைக்கு அடிகோலியது பொன்னெழுத்தில் பொறிக்கத்தக்க அருஞ்செயலாகும்'' என்று சில பத்திரிகைகள் அவர் புகழ்பாடின.

இரவு ஒன்பது மணி இருக்கும். புரசைவாக்கம் 'மீனு விலாஸ்' வாசலில் ஓர் அழகான புதிய மோட்டார் கார் வந்து நின்றது. சர்வாலங்கார பூஷிதராக ஒரு 'பெரிய' மனிதர் வண்டியைவிட்டு இறங்கி உள்ளே போனார்.

மீனுபாய் கூடத்திலே, அவரை மரியாதையாய் வரவேற்றாள்.

'பெரிய மனிதர்' சுற்றுமுற்றும் பார்த்தார். எட்ட நிற்கும் வேலைக்காரிகள் இருவரையும் கவனித்து, சிறிது நேரம் மௌனமாயிருந்தார்.

பிறகு, ''மீனு, மந்திரிப் பதவி ஒன்றும் பிரமாத மானதல்ல'' என்றார்.

''எனக்கு ராஜீய விஷயம் எதுவும் தெரியாது'' என்று பணிவுடன் சொன்ன மீனுள், ''ஏதோ தொழில் விஷயமாய்த் தாங்கள் என்னிடம் பேச

விரும்பியதாக, ஜமீன்தார் ராஜு அவர்கள் தெரிவித்தார்கள். அது என்னவோ?" என்றாள்.

சுந்தரநாதர் சற்றுநேரம் திகைத்து நின்றுவிட்டு, "எனக்கும் ராஜுவுக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது" என்றார்.

"பெரிய மனிதர்களுக்குள் எத்தனையோ இருக்கும். என்னிடம் வந்த விஷயத்தைத் தெரிவிப்பீர்களா?" என்றாள் மீனா.

"உன் விஷயமாகத்தான் ஒப்பந்தம்" என்று சற்று இழுத்த குரலில் சொன்னார் சுந்தரநாதர்.

"சற்று விளக்கமாகச் சொல்லுங்கள்."

"நீ ஒரு மந்திரிப் பதவிக்குச் சமானம்" என்றார் சுந்தரநாதர்.

சந்தேகம் நிறைந்த மீனாவாய் எழுந்து அப்பால் போய்விட்டாள்.

வேலைக்காரி ஒருத்தி ராஜா சாகேபிடம் வந்து, மரியாதையாக, அவரை வெளியே அனுப்பிவிட்டாள்.

உடனே, மீனாள், ஜமீன்தார் ராஜுவுக்குச் சொல்லியனுப்பினாள்.

ராஜுவும் தட்டாமல் வந்து சேர்ந்தார்.

"ஜமீன்தார் அவர்களே, தாங்கள் இப்போது ஏதோ புதிய வர்த்தகத்தில் இறங்கியிருக்கிறீர்கள் போல் இருக்கிறதே" என்றாள் மீனாள்.

ஜமீன்தார் அசட்டுப் புன்சிரிப்புடன், "அிதென்ன?" என்றார்.

"சற்றுமுன் சுந்தரநாதர் இங்கே வந்தார்" என்ற மீனாள், "லேவாதேவி, டாக்கி உற்பத்தி இரண்டும்போதாது என்று அடிமை வர்த்தகம் ஆரம்பித்திருக்கிறீர்களோ?" என்று படபடப்புடன் வினவினாள்.

"ஆத்திரப்படாமல் நிதானமாய்ப் பேசு; விஷயம் என்ன?"

"நீங்கள் ஒரு மந்திரி!" என்று கடினமாய் உச்சரித்த மீனாள், "ஆனால் என் விலை ஒரு மந்திரிப் பதவியல்ல. இதை நீங்கள் அறியவேண்டும்" என்றாள்.

"அரசியலில் என்ன என்னவோ நடக்கும். ஆனால், நீ உன் இஷ்டம்போல் நடந்துகொள்ளேன்" என்று வெகு அநாயாசமாகக் கூறினார் ஜமீன்தார்.

"எனக்கு அரசியல் தெரியாது. ஆனால், அரசியல் வாதிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ளும் மார்க்கத்தைக் கண்டுபிடித்துவிட்டேன். இனி, தாங்கள் முன்போலக்கூட என்னிடம் நெருங்கிப் பழக முடியாதென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்" என்று உதடு அசையாமல் சொன்ன மீனாள் ஒரு கடிதத்தை அவரிடம் நீட்டினாள்.

பூபாலகனுக்கும் மீனாவுக்கும் நடந்த ரெஜிஸ்டர் மண அத்தாட்சிச் சீட்டு அது.

முதல் மந்திரி, சந்தடியில்லாமல், மெல்ல எழுந்து, தமது தேசோத்தாரண காரியத்தைக் கவனிக்க வெளிக் கிளம்பிவிட்டார்.

★

ராஜத்தின் கூந்தல்

நம் உள்ளத்தில் களிப்பு இருந்தால், நாம் பார்க்கும் பொருள்களிலெல்லாம் மகிழ்ச்சி நிறைந்திருப்பதாகத் தோன்றுகிறது; நம் உள்ளம் துக்கமாயிருந்தால், உலகமே விசனக்கடலில் ஆழ்ந்திருப்பது போல் காண்கிறது. ராஜம்மாள் விஷயத்தில், தற்போது இது மிகவும் உண்மையாய் இருந்தது.

தோட்டத்திலிருந்து புஷ்பவாசனையைத் திரட்டிக் கொண்டுவந்த மந்தமாருதம் அவளுக்கு

இன்பமளிக்கவில்லை. புத்தகங்கள் வெறும் புலம்பலாய்த் தோன்றின. வீணையை மீட்டிப் பார்த்தாள். அதன் கீதம் அழுகுரலாய் ஒலித்தது.

''ராஜம்மா, ஒருவிதமாய் இருக்கிறாயே இன்று; ஏன் இப்படி?'' என்று வினவினாள் சுந்தரம்.

''சுந்தரம் – சுந்தரம்'' என்று திக்கித் திக்கிப் பேசிய ராஜம், ''இதோ பார்!'' என்று அவிழ்ந்து தொங்கிய தன் கூந்தலை எடுத்து விசிறினாள். அவளுடைய சுந்தரக் கண்களினின்றும் 'பொல பொல' என்று கண்ணீர்த் துளிகள் சிந்தின.

ராஜம் ஒரு பிராம்மண விதவைப் பெண். அறிவு வராத காலத்திலேயே அவள் கைம்பெண் ஆகிவிட்டாள். செல்வக் குடும்பத்தில் பிறந்த ராஜம் துன்பமறியாமல் வளர்ந்தவள். இப்போது அவளுக்கு வயது வந்துவிட்டது. இனிமேல் அவள் தலையில் கூந்தல் கூடாதாம். இந்த அலங்கோலச் செயலுக்கு அவளுடைய அண்ணனும் உடன்பட்டான். அண்ணனின் ஆதரவில்தான் அவள் தற்சமயம் இருந்து வந்தாள்.

''சுந்தரம், இந்தத் தலைமயிர் என்ன பாவத்தைச் செய்தது? ஐயோ! நினைத்தால் நடுங்குகிறதே!'' என்றாள் ராஜம்.

அவளுடைய தோழி சுந்தரம் அளவிறந்த வேதனை அடைந்தாள். ராஜத்துக்கு அவள் என்ன ஆறுதல் சொல்லுவாள்? சொல்ல முடியும்? திடீரென்று அவளுக்கு ஓர் எண்ணம் தோன்றியது.

''ராஜம், உனக்கு இந்த வீடு எதற்கு? இவர்கள் உன் பந்துக்கள் அல்ல; சத்துருக்கள்!'' என்று சம்பந்தம் இல்லாமல் என்னவோ ஆத்திரத்துடன் சொன்னாள்.

சுந்தரத்தின் முகத்தை ராஜம் உற்று நோக்கினாள். அவள் வாய் ஒன்றும் பேசவில்லை.

சுந்தரத்தின் கணவன் தாராள சிந்தையும் சீர் திருத்தக் கருத்துக்களும் உள்ளவர். இளம் விதவைகளுக்கு மறுமணம் செய்விப்பதில் சாதகமான அபிப்பிராயம் கொண்டவர். இதைப்பற்றித் தன் அருமைத் தோழியிடம் பிரஸ்தாபிக்க வேண்டுமென்று சுந்தரம் பலநாள் எண்ணியதுண்டு. ஆனால், ஒருவிதக் கூச்சத்தால் இதுவரையிலும் சொல்லாமல் இருந்தாள். இப்போது சொல்லலாம் என்று நினைத்தாள்; சொல்லிவிட்டாள்.

கொடுமையும் செருக்கும் கலந்த ஒரு குறுநகை புரிந்தாள் ராஜம். சிறிது சிந்தித்துப் பின்பு நெடுமூச்செறிந்தாள். "மறுமணமா? – சுந்தரம்! - இல்லை, இல்லற சுகம் எனக்கில்லை. – இந்த ஜன்மத்தில் இல்லை – எனக்கு வேண்டாம்" என்று அழுத்தமாய்ச் சொன்னாள். சற்று நின்றாள். மறுபடியும் சொன்னாள்:

"நான் வேண்டுவது அதுவல்ல. என்னை அலங்கோலம் செய்யாமல் விட்டால் போதும். என் புத்தகம், என் வீணை, என் சிறு தொழில்கள் இவைகளுடன் என் வாழ்நாள் முழுதும் கன்னிகழியாமலே இருந்து நிம்மதியாய்க் காலங் கழிப்பேன். இதற்கு உன் புருஷனின் உதவி கிடைக்குமா?" என்று கேட்டாள்.

ராஜத்தின் பிடிவாத குணத்தைச் சுந்தரம் நன்கறிந்தவள். தன் கணவர் என்ன செய்வாரென்று திட்டமாய்ச் சொல்லவும் அவளால் முடியவில்லை. பந்துக்களும் உடன் பிறந்த சகோதரனுங்கூடப் பரம 'சத்துரு'க்கள் ஆகிவிட்ட ராஜத்துக்கு, அவர்களுடைய விரோதத்தின்மேல் சுந்தரத்தின் கணவர் என்ன உதவி செய்ய முடியும்? சட்டந்தான் இடங் கொடுக்குமோ, என்னவோ? இருந்தாலும் பக்கத்து நகரில் இருந்த அவருக்கு எழுதிக் கேட்கலாமென்று இருவரும் கலந்து முடிவு செய்தார்கள்.

சுந்தரம் தன் கணவருக்கு ஒரு கடிதம் எழுதினாள். அதைப் படித்துப் பார்த்து ராஜம் ஒப்பம் வைத்தாள். கடிதத்தைத் தபாலில் அனுப்பாமல் ஆள்மூலம் அனுப்புவதென்று தீர்மானித்தார்கள். ராஜம் அதற்குக் குப்பனைக் குறிப்பிட்டாள்.

"குப்பனா? யாரது? உங்கள் குடியானவன்தானே! அவனை நம்பலாமா?" என்று விசாரித்தாள் சுந்தரம்.

"நன்றாய் நம்பலாம். அவன்தான் என்னைச் சிறு குழந்தை முதல் தூக்கி வளர்த்தவன். அவனுக்கு ஒரு பெண் குழந்தை இருந்து தவறிவிட்டது. மனைவியும் காலமானாள். இன்றைக்கும் நாளைக்கும் என்னிடம் அவனுக்கு அளவற்ற வாஞ்சை. இந்த உலகத்தில் அவனுக்கு யார் இருக்கிறார்கள்? என்னைப் போல் அவனும் ஓர் அகதி" என்று ராஜம் கனிவுடன் சொன்னாள்.

"ஆனால், அவன் குடிகாரனாயிற்றே?" என்று சிறிது வெறுப்புடன் கேட்டாள் சுந்தரம்.

"சில வேளை அவன் குடிக்கிறான் என்பது உண்மைதான். ஆனால், எப்படி அம்மா அவன் அதை விடமுடியும்? மாயாத போதைத் தொலைக்க / உனக்கும் எனக்கும் படிப்பு உண்டு; பாட்டு உண்டு; அழகிய சித்திர வேலைகள் உண்டு: கள் வெறியைத் தவிர, அவனுக்கு வேறே என்ன உண்டு?" என்று கேட்டாள் ராஜம்.

"ஆமாம்! அதோடு, இப்படிப்பட்ட ஆட்களுக்குக் கள்ளு, சாராயம் இல்லையானால், நாம் இடும் வேலைகளை அவர்களால் செய்ய முடியாது; செய்யவும் மாட்டார்கள். கொஞ்சம் வித்தியாசமும் வேண்டுமல்லவா?" என்று சுந்தரம் ஒப்பமிடுவதுபோல் சொன்னாள்.

"நான் அப்படி நினைக்கவில்லை" என்று சுருக்கமாய்ப் பதில் சொன்ன ராஜம், "அவனிடந்தான்

இந்தக் காரியத்தை ஒப்படைக்கவேண்டும். அவன் குடித்தால் என்ன? அவனுடைய வாத்ஸல்யம் அல்லவா பெரிது?'' என்றாள்.

உண்மையிலே குப்பன் ராஜத்திடம் அளவற்ற பிரியம் உடையவன். தன் துக்கத்தை அவனிடம் அவள் தெரிவித்தபோது, அவன் பெரிதும் வருத்தப் பட்டான். ஆனாலும், 'அது பாப்பாரச் சாத்திர மாயிற்றே' என்று அவன் கொஞ்சம் தயங்கினான். ராஜம் பெரிதும் சமாதானம் சொன்ன பின்புதான், அவளுக்கு ஒத்தாசை புரிய அவன் இசைந்தான்.

குப்பன், விடிய நான்கு நாழிகைக்கு எழுந் திருந்து, நகரை நோக்கிப் புறப்பட்டான். நகரம் சுமார் பத்து மைல் தூரத்தில் இருந்தது. நாகரிக மான கப்பி ரஸ்தா கிடையாது; மண் சாலைதான்.

மெல்ல மெல்ல நடந்து சென்றான். ஏழாவது மைலில் ஒரு சிறு தோப்பு; அதற்குள்ளே ஒரு குடிசை.

அவன் வாலிபமாக இருக்கையில், அந்தத் தோப்பைக் கண்டாலே அவனுக்கு ஒரு வெறுப்பு வந்துவிடும். அதே தோப்பு இப்போது அவனுக்குத் தேவலோகத்தைக் கண்டதுபோல் ஆனந்தம் தந்தது. ஏன்? அந்தக் குடிசை ஒரு கள்ளுக்கடை. பாவம்! அவன் அதற்கு இப்போது அடிமையாகிவிட்டான். வழிச் செலவுக்குக் கொண்டுவந்த காசில் ஒரு பகுதி அங்கே தீர்ந்தது. குடிசையிலிருந்து திரும்பியபோது, அவன் கால் தள்ளாடியது. ரஸ்தாவுக்கு வந்து சேர்ந்து ஒரு மரத்தடியில் தொப்பென்று விழுந்தான். அமிதமாகக் குடித்ததால் ஏற்பட்ட மயக்கம் அது.

மயக்கம் நன்றாய்த் தெளியவில்லை. தள்ளாடித் தள்ளாடிக் கொண்டு எழுந்தான். எதிரே ஒரு வண்டி வருவதைக் கண்டான். அதிலிருந்த ஆளை மட்டும் அவனுக்கு நன்றாக அடையாளம் தெரிந்தது.

அந்த ஆள் ராஜத்தின் சகோதரனே. குடிமயக்கத்தில் நிதானமில்லாத குப்பனுக்கு ஒரு வெறி உண்டாயிற்று. வண்டியின் எதிரே போய் நின்றுகொண்டு, "இது யார் வண்டியடா? இதோ வந்திருக்கிறேனடா காட்டு ராஜா. என் ராஜத்தை மொட்டையடிக்க உன்னால் ஆகுமாடா? இதோ பாரடா?'' என்று கனைத்து, வண்டியின் மூக்கணையைப் பிடித்துப் பலமாக அசைத்தான். இதனால் மருண்டமாடு ஒன்று அவனை முட்டித் தள்ளிவிட்டது.

குப்பனின் பிதற்றல் ராமுவுக்குப் பரிதாபமாயிருந்தது. மாடு முட்டியதால் கீழே விழுந்து போதையினால் பிதற்றிக் கொண்டு புரண்ட குப்பனை அவன் உற்றுப் பார்த்தான். அவன் மடியிலிருந்து ஒரு கடிதம் தரையில் விழுந்திருக்கக் கண்டான். அதை எடுத்துப் பிரித்துப் படித்தான். அவன் முகம் கறுத்தது. சாதிக் கட்டுப்பாடு, சமூக பகிஷ்காரம், ஊர்வம்புப் பேச்சு, அவமானம் முதலியவை அவன் மனக்கண்முன் தோன்றின. குப்பனைச் சாலையின் ஒரு புறமாய்ப் புரட்டித் தள்ளிவிட்டு வண்டியிலேறி விரைவாக ஓட்டச் சொன்னான்.

அதற்கும் ஒரு நாள் - ஒரு கன்னியின் தலைமயிரை எடுக்கவும் ஒரு நாள் - பார்த்திருந்தார்கள். பொழுது விடியவில்லை. ராஜம் 'சிறை' இருந்த அறையில் ராமு போய்ப் பார்த்தான். அவளுடைய அழகான வீணை மென்னி முறிந்து கிடந்தது; புத்தகங்கள் சாம்பராகி இருந்தன; மணிகளும் பட்டு நூலும் சிதறிக் கிடந்தன; சில அரும்புகளையும் மலர்களையும் அங்கும் இங்கும் கசக்கி எறிந்திருந்தது. ராஜத்தை மட்டில் அங்கே காணவில்லை. ராமு இரைந்தான்; கூக்குரல் போட்டான். ஆனால், பலன் ஒன்றுமில்லை. அங்குமிங்கும் ஓடினான். வீடு முழுவதும் பரபரப்பு. தோட்டத்தில் ஒரு மரத்தடியில் ராஜத்தின் அழகிய மேனி கிடந்தது. அவள் அருகே

ஓர் ஆள் நின்றான். ஈனஸ்வரத்தில், "குப்பா! குடி வெறியிலே நீ எனக்குச் செய்த உபகாரத்தை நான் தேவலோகத்திலும் மறக்கமாட்டேன்" என்றாள் 'கன்னி கழியாத' ராஜம்.

குப்பன் முகத்தில் அறைந்துகொண்டு, "ஐயோ! ராஜம், உன் முகத்தையும் இழந்துவிட்டேனே - ஐயோ!" என்று கதறினான்.

'ராஜத்துக்கு விஷக் கிழங்கு கொண்டுவந்து கொடுத்த குற்றத்துக்காகக் குப்பன் இப்போது கடுஞ் சிறைவாசம் புரிந்துகொண் டிருக்கிறான். அது எவ்வளவு உண்மையோ, நமக்குத் தெரியாது. ஆனால் ராஜத்தின் தற்கொலைக்குத் தானே காரணம் என்று குப்பன் ஒப்புக்கொள்கிறான்.

"பாழுங் கள்ளைக் குடித்தேன் அல்லவா பாவி!" என்று அடிக்கடி புலம்புகிறான். இனிப் புலம்பி என்ன பயன்? நடந்தது நடந்துவிட்டது.

★

அரசகுமாரியின் ஆவி

"இது நிஜமாய் நடந்தது" என்றார் நண்பர். அவர் சொன்னால், அதில் சந்தேகத்துக்கே இடமில்லை. அவர் ஆவியுலக ஆராய்ச்சியாளர் அல்ல; மூட நம்பிக்கை உள்ளவரும் அல்ல. என்னைப்பற்றித்தான் உங்களுக்குத் தெரியுமே. நான் எந்த விஷயத்தையும் சுலபத்தில் நம்புவதில்லை. நன்றாய்த் தீர விசாரித்து, உண்மை என்று ஏற்பட்டதைத்தான் நம்புவேன்; அல்லது உண்மை என்று எற்படக்கூடியதாகவாவது இருக்கவேண்டும். நண்பர் சொன்னார். நான் நம்பினேன். சத்தியம் வலைக்குள் விழுந்து விட்டது.

அநேக வருஷங்களுக்கு முன்னே, வடக்கே எங்கேயோ இருந்து - ஹைதராபாதிலிருந்து என்று நண்பர் சொன்ன ஞாபகம்—கால் பந்தாட்டக் கோஷ்டி

ஒன்று சென்னைக்கு வந்தது. அந்த வடக்கத்திக் கோஷ்டியுடன், சென்னைக் கோஷ்டி ஒன்று விளையாட ஏற்பாடு ஆகியிருந்தது.

வடக்கத்திக் கோஷ்டியார் சென்னையின் விருந்தாளிகள் அல்லவா? அவர்கள் தங்க ஒரு புராதன மான மாளிகை ஏற்பாடாகியிருந்தது. க்ஷேத்திர கணிதக் கருவிகளைக்கொண்டு அமைத்தவை போன்ற வளைவுகளையும் கோணங்களையும்கொண்ட வெகு கணக்கான கட்டிடம். உயிர்ப் பிராணியோ இயற்கை யில் காணும் செடி கொடியோ எதையும் சுட்டிக் காட்டக்கூடிய சிற்பம் அல்லது சித்திரம் ஒன்றுகூட இல்லாமல், மகா சுத்தமாக இருந்தது அதன் அமைப்பு. தாஜ்மகலின் சலவைக்கல் சௌந்தரியம் எந்தச் சிற்பக்கலைக்கு உரியதோ, அதே கலைக்கு உரிய தாகத் திகழ்ந்தது இந்தக் கட்டிடமும். பூர்வகால ஆர்க்காட்டு நவாபின் பரிவாரத்தைச் சேர்ந்த எவரோ ஒருவர் இந்த மாளிகையின் சொந்தக்காரர் என்று சொல்லுகிறார்கள்.

மாளிகையைச் சூழ ஒரு பெரிய சுற்றுச் சுவர் நின்றது. அது இங்கே கொஞ்சம் அங்கே கொஞ்சம் சிறிது சிறிது இடிந்து வெள்ளிப் பூண் கட்டிய செம் பற்களைக் காட்டிக் கோரமாய்ச் சிரிக்கும் பூதவாய் போல் மூளியாக இருந்தது. பழுது பார்க்காத சுவர்; ஆனால், அதற்குத் துணையாகப் புதிய முட்கம்பி வேலி ஒன்று அமைந்திருந்தது. சுவர் கறுத்துப் பாசி படர்ந்து 'புண்யபுஷ்கரணி'களின் வாசனையைப்போல் வாசனை வீசிக்கொண் டிருந்தது.

மாளிகையின் நாலு புறத்திலும் அகன்ற தோட்டம் ஒன்று இருந்தது. அதில் அங்கங்கே இரண்டொரு மரங்கள் நின்றன. நவாபு மாளிகை யிலே துளசி நாச்சியாருக்கு என்ன வேலை என்று நாம் நினைப்போம். ஆனால் நாச்சியார் அப்படி நினைக்க வில்லை. அந்தத் தோட்டத்திலே தோன்றிய இடங்

களிலே தாராளமாய் அவரும் கோயில்கொண் டிருந் தார். நம் சூரிய பகவான் முஸ்லிம்களுக்கு காய்கிருர்; நம் வருண பகவான் அவர்களுக்கும் பெய்கிருர்; நம் வாயு பகவான் அவர்களின் மூக்கிலும் உலவுகிருர். அவர்களுடைய அல்லா நம்மையும் படைத்து அளித்துப் பாதுகாக்கிருர். நவாபு வீட்டிலே துளசி நாச்சியார் போய்க் குடிபுகுந்ததும் இந்த மாதிரி ஒரு விஷயந்தான். காட்டுப் பூஞ்செடிகளும் நெருஞ்சி முள்ளும் சிற்சில இடங்களை ஆக்கிரமித்துக்கொண் டிருந்தன.

மாளிகை ஜன்னல்களில் பச்சை, சிவப்பு, மஞ்சள் கண்ணுடிக் கதவுகள் போட்டிருந்தன. ஆனல் அவற்றில் சில உடைந்து, காகிதப் பிளாஸ்திரியோடு துலங்கின. ஓர் ஆள் கட்டியணைக்க முடியாத வட்டத் தூண்கள், முன் ஹாலில் நின்றன. நாலு புறமும் அறைகள். நடுவிலே பெரிய பண்டபம்.

மண்டபத்தின் ஒரு மூலையிலே, ஒரு பீரோ கிடந்தது. இரண்டு மடக்கு மேஜைகளும், ஒரு டஜன் மடக்கு நாற்காலிகளும் இன்னொரு பக்கத்தை அலங் கரித்துக்கொண் டிருந்தன. இவையெல்லாம் விருந் தாளிகளின் உபயோகத்துக்காக வந்திருப்பவை. அவர்கள் போனதும் இவையும் போய்விடும்.

மற்றவர்களெல்லாம், உள்ளூர் நண்பர்களின் அழைப்புக்கு இணங்கி வெளியே போய்விட்டார்கள். இப்திகாருத்தீன் மட்டில் பின் தங்கிவிட்டான். இப்தி ஒரு கவிஞன்; அப்படியென்ருல் பாட்டுக்கள் பல கட்டியிருக்கிருன் என்று அர்த்தமல்ல. பாட்டுக் கள் கட்டினுல்தான் கவிஞனு? பாட்டுக்கள் கட்டுகிற வனெல்லாந்தான் கவிஞன் ஆகிவிடுவானு? கொட்டினு லும் கொட்டாவிட்டாலும், தேள் தேள்தான்; பிள்ளைப் பூச்சியாகாது. தேளுக்குக் கொடுக்கே ருசு; கவிஞனுக்குக் கற்பனையே ருசு. கவியுள்ளம் படைத் தவனே கவிஞன்; தனிமையில் இன்பம் காண்பவனே

கவிஞன். இப்தி இப்படிப்பட்ட ஒருவனே. அவன் ஈயும் எறும்பும்போலச் சமுதாயப் பிராணி அல்ல; ஏகாந்த ஜீவன். அவன் எப்படி விளையாட்டுக் கோஷ்டியில் சேர்ந்தான் என்றால், அதை இயற்கை விசித்திரங்களில் ஒன்று என்றுதான் சொல்ல வேண்டும்.

மாலை வெயில், ஜன்னல் கண்ணாடிகளின் வழியே மண்டபத்தின் உள்ளே வர்ணக்கோலம் போட்டுக் கொண்டிருந்தது. இப்திக்கு அது பிரமாத ஆனந்தம் உண்டாக்கியது. அதை அவன் உற்று உற்றுப் பார்த்தான். அற்புத தீபத்தை எடுக்கப்போன அல்லாவுத்தீன், பொன்னும் மணியும் முத்தும் ரத்தின மும் குவிந்து கிடந்த குகைக்குள் புகுந்தபோது என்ன குதூகலம் அடைந்திருப்பானோ அதேபோல் இப்தியின் உள்ளமும் குதூகலம் அடைந்தது.

இப்தி இந்தப் பரவச நிலையில் ஆழ்ந்திருந்த போது சமையற்காரன் அந்தப் பக்கமாக வந்தான்.

"ஐயா எல்லாரும் எப்ப வருவாங்க?" என்று அவன் கேட்டான்.

இப்திக்கு அது காதில் விழவேயில்லை. புருவத்தைச் சுளித்தபடி இப்தி எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தான்.

சமையற்காரனுக்கு எரிச்சலாக இருந்தது. அவன் பொறியை அவன்தானே தொலைக்கவேண்டும்?

"என்னுங்கோ? இப்ப வருவாங்களா? ராத்திரி தான் வருவாங்களா? பாலு வாங்கணும்" என்றான் சமையற்காரன்.

சமையற்காரனின் நச்சரிப்பு இப்திக்குத் தாங்க வில்லை. "போப்பா. எல்லாரும் ராத்திரிதான் வருவாங்க. என்னைத் தொல்லை பண்ணாதே. போ" என்றான் இப்தி.

சமையற்காரனுக்கு வெகு சந்தோஷம். ஒரு சின்ன லோட்டாவுடன் அவன் வெளியே போய் விட்டான்.

இன்பச் சிந்தனைகளைக் கலைத்தால், தூங்கும் பம்பரத்தைத் தள்ளிவிட்ட தத்தளிப்பை அடைகிறது மனசு. அது மீண்டும் ஒரு நிலை கொள்ளும் வரையில் தான் என்ன வேதனை! இப்தியின் மனசு எங்கெங்கோ தாவியது. ஊர் நினைவு, ரெயில் பிரயாணத்தில் பட்ட அவஸ்தையின் நினைவு, பெஜவாடா பிளாட்பாரத்தில் அன்ன நடை போட்ட ஒரு பூதகியின் நினைவு (அப்பாடா! அவளை நினைத்தாலே, உடல் எப்படிக் குலுங்குகிறது!), நாளைக்கு நடக்கப்போகும் போட்டி விளையாட்டின் நினைவு - ஆம், அந்த நினைவுந்தான் வந்தது. இரண்டு வருஷத்துக்கு முன், காசியில் இப்தி ஒரு 'கோல்' போட்டானே, ஆகா, அது என்ன விறுவிறுப்பு! எதிர்த்த கட்சியில் இருந்த ஒரு குண்டோதரன் கடைசி நிமிஷத்தில் என்ன பாடு படுத்திவிட்டான்! மல்லுக் கட்டி அவனையும் எற்றிப் பந்தை உந்திவிட்டானே இப்தி; அப்போது என்ன கரகோஷம்! எப்படித்தான் அவனை இவன் ஜயித்தானோ? இப்திக்கே அது மகா ஆச்சரியமாக இருந்தது.

மேஜையின் மேலே பூநூல் தொப்பி ஒன்று கிடந்தது. அதை என்னவோ ஞாபகமாக இப்தி தன் கையிலே எடுத்தான். அதைப் பிசைந்து சுருட்டினான். பாதி பச்சையும் பாதி வெள்ளையுமான கால் பந்தாட்டச் சல்லடம் ஒன்றைப் பீரோவி லிருந்து எடுத்து இந்தத் தொப்பி மீது உருட்டிக் கட்டினான். பிறகு, அதைக் கால் பந்து போல் கீழே போட்டு, காலால் எற்றத் தொடங்கிவிட்டான். காசிக் குண்டோதரனுடன் மல்லுக் கட்டும்போது, எப்படி முழங்கை முட்டியது? கால் பின்னி இழுத்தது? அதையெல்லாம் இப்தி மறுபடியும் நடித்துப் பார்க்க

லானுன். போராட்டம் ஒரு முறையா நடந்தது? பல முறை அல்லவா?

இப்தி பலவிதமாய் நடித்தான். ஓத்திகை வர வர மும்முரமாகிவிட்டது. இப்தி ஓடினுன்; ஆடினுன். ஒவ்வொரு நாற்காலியும் பந்தைப் பறிக்க வந்த எதிரிபோல் அவனுக்குத் தோன்றியது. நாற்காலிகளைத் தள்ளினுன்; முட்டினுன்; வீழ்த்தினுன். தாலும் சில சமயம் விழுந்தான். சண்டை வேறே; விளையாட்டு வேறே; விளையாட்டின் நடிப்பு வேறே - இப்படிப் பாமரர்கள் நினைக்கலாம். இப்திக்கு அந்த வித்தியாசமெல்லாம் இல்லை. அவன் கவியுள்ளம் படைத்தவன்.

நெற்றியிலே முத்துப்போல் துளித்த வேர்வையை இப்தி கட்டைவிரலால் வழித்து எறிந்தான். பெருமூச்சுவிட்டான். படம் எடுத்தாடும் சர்ப்பத்தின் பெருமூச்சு; குஸ்திப் பயில்வான்கள் உடம்பிலே எண்ணெய் தடவி, அத்தனையும் வேர்வையால் சுத்தியாகும்வரையில் பஸ்கிபோடும்போது உண்டாகும் உச்சுவாஸ நிசுவாஸப் பெருமூச்சு. அவன் உடல் துவண்டது. நா வறண்டது. தாகமெடுத்தது. அதையெல்லாம் இப்தி லட்சியம் செய்யவேயில்லை. கடைசியிலே பந்து எதிரிகளையெல்லாம் - அவை தான் நாற்காலிகள் - கடந்துவிட்டது. இப்தி கோல் போட்டு விட்டான்.

வெறி பிடித்ததுபோல், அவன், "கோல் கோல்!" என்று கத்தவும் கத்திவிட்டான்.

அப்போது என்ன அதிசயம்! என்ன அதிசயம்!

படார் என்று ஒரு சத்தம் கேட்டது. கலகல வென்று ஒரு சிரிப்பொலி எழுந்தது.

அந்தி மயங்கும் நேரம். மண்டபத்திலே இருந்த வர்ணக்கோலங்கள் மறைந்துவிட்டன. இதுதானே தூண் பிளந்து, நரசிங்கமூர்த்தி தோன்றிய நேரம்?

ஆனால், இந்தச் சத்தம், அண்டம் கிடுகிடுக்கத் தூண் வெடித்த சத்தம் அல்ல. இந்தச் சிரிப்பொலியும், மேகங்கள் முட்டி மின்னி உருண்ட இடிச் சிரிப்பல்ல.

இப்தியை ஏதோ ஒரு மோகன மந்திரவலை வந்து கவிந்ததுபோல் இருந்தது. அது அவன் மனசைத் திகைக்கச் செய்தது. ஆனால், அவன் உடம்பு என்னவோ புளகிதம் அடைந்தது.

அந்தச் சத்தம்! ஏதோ ஒரு பொன்னுலகின் கதவு திறந்ததுபோன்ற சத்தமே அது. சிரிப்பொலியோ சொர்ண கலசத்தில் மெல்லக் குலுங்கிய முத்தொலி தான்!

இப்தி இமையா நாட்டம் பெற்ற தேவனைப் போல் பார்த்தான். ஆனால், அவன் கண்கள் சிறிது இடுங்கியிருந்தன.

ஒரு கை! அந்தரத்திலே திடீரென்று எங்கிருந்தோ ஒரு கை வந்து தோன்றியது! இளந்தளிர் போன்ற கை! ஓவியன் எழுதிய சித்திரம் போன்ற கை! வளையல் கிணு கிணுத்த கை! எவளோ ஒரு வன தேவதையின் கை!

அந்தக் கையிலே ஒரு வெண்மையான தட்டு. அதன் மேலே ஒரு டீ கப்! தேவமடந்தையின் கையிலே டீ கப்! ஏன் இருக்கக்கூடாது? நாகரிகம் என்பது மானிடரின் ஏகபோக உரிமையா? தேவ லோகத்திலும் நவநாகரிக டீ பரவியிருக்கக் கூடா தென்பது என்ன கட்டாயம்? அவர்களும் சோம பானத்தைக் கைவிட்டிருக்கலாம்.

அந்தக் கை-டீ கப் பிடித்த கை-லாகவமாய் அந்த ரத்திலே மிதந்து, மெல்ல மெல்ல இப்தியின் உதட் டருகே வந்தது.

ஓ! இதோ இன்னொரு கை தோன்றிவிட்டது. புஜத்திலிருந்து அலைந்த தாவணி நுனியைத் தள்ளி

விட்டு, இப்தியின் தலையைப் பிடித்தது. அந்த மறு கை.

பிறகு, ஒரு சிரிப்பு வட்டம் வெட்டவெளியிலே தோன்றியது. ஆலிஸ் கண்ட அற்புத உலகத்தின் மாயப் பூனை சிரித்த சிரிப்பு மட்டிலும் தனிப்பட்டு அந்தரத்திலே சுழன்றதல்லவா? பூனை மறைந்த பின்பு, சிரிப்பு வட்டம் போட்டது அங்கே. இங்கே சிரிப்புத் தோன்றிய பின்பு, ஓவியன் தீட்டிய சித்திரம்போல், சந்திரபிம்ப முகம் ஒன்று உதயமாயிற்று.

அதன் பிறகு, மெல்ல மெல்ல ஒரு சம்பூர்ண உருவமே - 'மகா சுகிர்த ரூபசுந்தரி' ஒருத்தியின் உருவம் – கொடிபோல் துவண்டு, இப்தியின் எதிரே திரண்டு நின்றது.

அந்த அதிரூப மோகினி, தன் பவளவாய் திறந்து, முத்துப் பற்கள் தெரிய, அன்பு கனியும் புன்சிரிப்புப் பூத்து, இப்தியின் தலையை ஒரு கையால் பிடித்து, மறு கையால் டீ கப் பானத்தை அவன் உதட்டில் வைத்து அவனைக் குடிக்கச் செய்தாள்.

அவள் சிரித்தாள். உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சிரிப்பு. ஆனால் பேசவில்லை. இப்தியும் பேசவில்லை. மகுடிக்குக் கட்டுப்பட்ட பாம்புபோல் அவன் அவசமாய் மயங்கி நின்றான். பானத்தையும் மடக்கு மடக்கென்று குடித்தான்.

படீரென்று ஒரு சத்தம் கேட்டது. இப்தியைத் தூக்கிவாரிப் போட்டது. கனவிலிருந்து விழித்தது போல் கண்ணைத் துடைத்துக்கொண்டு சுற்று முற்றும் பார்த்தான். எதிரே இருந்த மோகன சுந்தரியைக் காணவில்லை; அவள் மறைந்துவிட்டாள்.

அப்போது சமையற்காரன் ஏற்றிவந்த பெட்ரோமாக்ஸ் விளக்கொளியில், கீழே சிதறிக்கிடந்த தட்டும் டீ கப்பும் அவன் கண்ணுக்குத் தென்பட்டன.

"எலெக்டிரிக் விளக்கு ரிப்பேராயிடிச்சிங்க. இந்த விளக்கை வெச்சுக்கச் சொன்னுங்க...அடேடே! இதென்னுங்க? தட்டும் கப்பும் உடைஞ்சு கிடக்கு!... பரவாயில்லே. போகுதுங்க. யாரு பணம்? எவனே குடுக்கருன்; எவனே வாங்கருன்; எவனே உடைக்கிருன்" என்று பாதி இப்தியை நோக்கியும் பாதி தனக்குத் தானேயும் பேசிக்கொண்டு, அந்த விளக்கை ஒரு மேஜைமீது வைத்துவிட்டுப் போனுன் சமையற்காரன்.

அவன் பேசியது ஒன்றையும் இப்தி காதில் வாங்கவேயில்லே. தான் கண்ட அற்புதக் காட்சியைப் பற்றிய சிந்தனையிலே மூழ்கியவனுக, ஒரு சாய்வு நாற்காலியில் படுத்து, அவன் ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

நண்பர்கள் வந்துவிட்டார்கள். ஒரே கலகலப்பு. இப்தி மட்டிலும், என்னவோ ஒரு மாதிரி ஒதுங்கியிருந்தான். எல்லாரும் உணவு கொண்டார்கள். இப்தி உண்ணவில்லே. "தலேவலி" என்று சொல்லிவிட்டான்.

விஷயத்தை யாரிடமாவது சொல்லலாமா? இதென்ன பைத்தியக்காரத்தனம்! சொன்னுல், யார் நம்புவார்கள்! ஆனுல், அவனுக்குச் சந்தேகமே இல்லே. கண்ணுக்குக் கண்ணெதிரே கண்ட காட்சி பொய்யா? அப்படியானுல், இந்த உலகமே பொய் என்று சொல்ல வேண்டியதுதான்.

இரவு எட்டு மணியாயிற்று. லேசாக நிலவெறித்தது. நண்பர்களெல்லாம் மாளிகையைச் சூழ்ந்த தோட்டத்திலே மெல்ல உலவினுர்கள்; உட்கார்ந்தார்கள்; வம்பளந்தார்கள். அடுத்த நாள் ஆட்டம் பற்றிச் சர்ச்சை செய்தார்கள்; சிரித்தார்கள்; கூச்சலிட்டார்கள். இப்தி எதிலும் கலந்துகொள்ளவில்லே. மாளிகையைவிட்டு வெளியே போகவே அவனுக்குப் பயமாக இருந்தது. உள்ளேயும்

அவனுக்கு வெறிச்சென்று தோன்றியது. இப்தி முன்வாயிற்படியில் போய் உட்கார்ந்தான். அங்கேயும் தலைநிமிரப் பயம். நிலவொளியிலே காற்றில் ஆடிய மரங்கள் பேய்களைப்போல் தோன்றின, இப்தியின் கண்ணுக்கு.

அந்தக் காட்சியை—மோகினி தரிசனத்தை-நினைத்தால், ஒரு புறம் பரவசமாக இருக்கிறது; மறுபுறம் ஓர் ஏக்கமும் வேதனையும் உண்டாகின்றன. நண்பர்களிடம் சொல்லுவதா, சொல்லாது விடுவதா? மறுபடியும்...மறுபடியும் அது நிகழுமானால்...? அதன் விளைவு என்ன ஆகுமோ? யாரிடமாவது சொன்னால் தான், அவனது ஆதங்கம் தீரும்.

அந்தக் கோஷ்டிக்குள்ளேயே அவனுக்கு மிகவும் நெருங்கிய நண்பன் பிரபாசங்கர்தான்.

"சங்கர், இங்கே வா ஒரு விஷயம்" என்றான் இப்தி.

சங்கரிடம் இப்தி அந்த விஷயத்தைச் சொன்னான். கதை முழுவதையும் கேட்டு முடித்தான் சங்கர். இந்தப் பேய் பிசாசு விஷயங்களில், சங்கருக்கு மனசுக்குள்ளே கொஞ்சம் நம்பிக்கை, கொஞ்சம் சந்தேகம் இரண்டும் உண்டு. ஆனால், துளிகூட நம்பிக்கை இல்லாதவன் போல்தான் வெளிக்குப் பேசுவான்.

சங்கர் சிரித்துக்கொண்டே நகர்ந்தான்.

சிறிது நேரத்தில், விஷயம் எல்லாரிடமும் பரவி விட்டது.

சமையற்காரனை விசாரித்தார்கள். அவனுக்கு என்ன தெரியும்? "இப்தி ஐயா தனியாக இருக்கையில், யாரும் வரவேயில்லை" என்று அவன் கண்டிப்பாகச் சொல்லிவிட்டான்.

"ஐயாவுக்கு யாரோ ஒரு பெண்பிள்ளை டீ கொண்டுவந்து கொடுத்தாளாமே! அவள் யார்?

இங்கே எவளாவது வருகிற வழக்கமுண்டா?'' என்று கோபி ரெட்டி கேட்டான்.

சமையற்காரன் சிரித்துக்கொண்டே கண்ணைக் குறும்பாகச் சிமிட்டிவிட்டு, "பெண்பிள்ளையா? இங்கே கூட்டுக்காரிகூடக் கிடையாதே. நான் தானுங்க டீ கொடுத்தேன். ஐயா வாங்கிக்கிட்டாரு. நான் போய் விளக்கேத்திக்கிட்டு வந்தேன்'' என்றான்.

"நானா? டீயா? உன் கையிலேயிருந்து வாங்கினேனா? என்னடா உளறுகிறாய்?'' என்றான் இப்தி.

"உங்கமாதிரிதானுங்க இருந்திச்சு. ஆனா அந்தி மயங்கின அந்த நேரத்திலே என்னத்தைச் சொல்றதுங்க!'' என்று சொல்லிப் போய்விட்டான் சமையற்காரன். அநாவசியக் குறுக்கு விசாரணைக்கெல்லாம் அவன் இடம் கொடுக்கவில்லை.

விஷயம் யாருக்கு எப்படித் தோன்றினாலும் சரி; இப்தி மட்டும், தான் கண்ட மோகினியின் உருவத்தைத் திரும்பத் திரும்ப ஞாபகப்படுத்திப் பார்த்தான். அவன் மனசு நிலைகொள்ளவில்லை. ராத்திரி அவள் வந்து மீண்டும் இவனைச் சந்திப்பாளோ? சந்திப்பதில் இவனுக்கு ஆசைதான். என்றாலும், தனியே படுத்திருக்க இவனுக்குப் பயமாக இருந்தது. ஓர் அறையிலே, லேசான ஒளிகொண்ட ஒரு விடிவிளக்குடன் சங்கரையும் துணைக்கு வைத்துக் கொண்டு இப்தி படுத்தான்.

இப்தி தூங்கினான். நல்ல தூக்கந்தான். என்றாலும், புரண்டுகொண்டே இருந்தான். எத்தனை நேரம் தூங்கியிருப்பான் என்று சொல்ல முடியாது.

பாதி ராத்திரி இருக்கலாம். ஏதோ ஒரு கீதக் குரல்: "இப்தி, இப்தி, என் மன்னவா!'' என்று அழைத்தது.

இப்தி பல்லைக் கடித்துக்கொண்டு சஞ்சலத்துடன் தூக்கத்திலே, "ஊஹாூம்! ஊஹாூம்!" என்று முனகினுன்.

அந்தக் குரல், "இப்தி, இப்தி, என்னை மறந்தாயோ? என்னுடைய மறந்தாயோ?" என்று மறுபடியும் கேட்டது.

இனி முடியாது. இனி அந்தக் குரலின் கவர்ச்சியை நிக்கிரகிக்க முடியாது. அது பாசக்கயிறுபோல் இப்தியை இழுத்தது.

இப்தி பாதி மூடிய கண்ணுடன் எழுந்திருந்தான். குரல் வந்த திசையிலே, "வந்தேன், வந்தேன்; இதோ வந்தேன், மோகினி!" என்று முணுமுணுத்துக்கொண்டே ஓடினுன். அவனுல் கத்த முடியவில்லை. அவன் வாயை யாரோ தைபல் போட்டுவிட்டதுபோல் இருந்தது.

சூரிய ஒளி மாலையிலே கோலம் போட்ட அதே மண்டபந்தான். நிலவொளியுந்தான் இப்போது கோலம் போட்டிருந்தது. ஆனுல் மகா மங்கலான கோலம்.

மோகினி பரிபூர்ணமாய் இப்தியின் முன்னே பிரத்தியட்சமாகி நின்ருள். சற்று நேரம் அவனுடன் அவள் ஓடி விளையாடினுள்.

"நீ யார்?" என்ருன் இப்தி.

"நானு? நான் நான்தான்" என்று சொல்லிக் கல கலவென்று சிரித்தாள் மோகினி.

மறுபடியும் கொஞ்ச நேரம் என்னவோ வாக்கு வாதம் — மோகனராஜன், மோகினிராணி தர்க்கம் மாதிரி ஒரு வாக்குவாதம்.

கடைசியில், அந்த மோகினி தன் கதையைச் சொன்னுள்: "இதோ பார், இந்த மாளிகையில் சில தலைமுறைகளுக்கு முன்னே, நவாபின் உத்தியோகஸ்தன் ஒருவன் இருந்தான். நான் அவனுடைய

நாயகிகளில் ஒருத்தி. என்னை அவன் சிறைப்பிடித்து வந்துவிட்டான். அதாவது கள்ளத்தனமாய் ஆள் விட்டு என்னைத் தூக்கி வந்துவிட்டான். என் தந்தை ராஜ வம்சத்தில் பிறந்தவர். சிற்றரசர் என்ற பட்டம் உள்ளவர். ஆகவே நான் ஓர் அரசகுமாரி. என் இளமைப் பருவத்திலே நான் ஒரு வாலிபனுடன் காதல் கொண்டேன். அவனுக்கும் என்னிடம் அள வற்ற காதல். நாங்கள் ஒருவரை ஒருவர் மாலையிட இருந்த சமயத்தில், இந்த துர்ப்பாக்கியம் எனக்கு நேர்ந்தது. நான் அந்த வாலிபனை மறக்கவே முடிய வில்லை. அவனுக்கு ரகசியமாய்த் தூது அனுப்பினேன். அவனும் பெண் வேஷம் பூண்டு, இங்கே வந்து என் வேலைக்காரியாக அமர்ந்துகொண்டான். இப்படி நானும் அவனும் பலகாலம் இன்பமாக வாழ்ந்தோம். பிறகு, ஒருநாள் அவனைக் காணவில்லை. இந்த மாளிகையின் அதிபதிக்கு ரகசியம் தெரிந்து, அவனை இவன் தொலைத்துவிட்டான் என்றுதான் இப்போது நிச்சய மாய் நினைக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால், என்னையும் விஷமிட்டுக் கொன்றுவிட்டான் இந்தக் கிராதகன்.

"அல்பாயுசிலே அநியாயமாக நான் துர்மரண மடைந்தேன். இந்த உலகத்தைவிட்டு நான் எப்படிப் போவேன்? எத்தனையோ வருஷங்களாக இந்த மாளிகையைச் சுற்றிக்கொண் டிருக்கிறேன். இங்கே தானே நான் செத்தேன்? என் காதலன் வருவானோ வருவானோ என்று காத்துக் காத்து என் உள்ளம் உடைந்து போயிற்று. இப்தி, இப்தி, உன்னைக் கண்டதும், நான் மோகமுற்றேன். இப்தி உன்னைப் போலவே இருப்பான் என் காதலன். அப்படியே அவனை உரித்து வைத்திருக்கிறது உன் உருவம். சாயல், குணம், நடை, பேச்சு, பாவனை அத்தனையிலும் அவனேதான் நீ. இப்தி நான் உன்னை விடமாட்டேன்.

இப்தி என்னை விட்டு ஓடிப்போய்விடாதே நீ. இப்தி, இப்தி, என் மனோகரா, என் மாணிக்கமே....!"

மோகினி இப்தியைக் கெட்டியாய்க் கட்டிக் கொண்டாள்.

இப்தி நடு நடுங்கிப்போனான். "ஐயோ! ஐயோ! சங்கர், கோபி வாருங்களேன்; எல்லாரும் வாருங்களேன். இவள் விடமாட்டேன் என்கிறாளே" என்று அலறினான். இப்போது அவன் வாய் திறந்துவிட்டது.

நண்பர்கள் ஓடினார்கள். ஒருவன் நல்லவேளையாக விளக்கை ஞாபகமாக எடுத்துக் கொண்டு வந்தான்.

இப்தியை மண்டபத்திலே ஒரு மூலையில் கண்டார்கள். அவன் தலை திரும்பியிருந்தது முகம் பார்க்க பரிதாபமாக இருந்தது. கண்கள் ஒரேயடியாய் வெறித்து மருண்டிருந்தன. அவன் நின்றுகொண்டு ஒரு உருவத்தைக் கட்டிக் கொண்டிருந்தான். ஆனால் அந்த உருவத்தைப் பார்க்கப் பயந்து அவன் மறுபுறம் திரும்பிக்கொண் டிருந்தான்.

"என்னப்பா இது? அதை விட்டு விட்டு இப்படி வா" என்றான் சங்கர்.

"அவள் விட்டால்தானே நான் வர முடியும்? என்னை விடுவியுங்களேன்" என்று கோரப் பார்வையுடன் கெஞ்சினான் இப்தி.

நண்பர்கள் நகைத்தார்கள். கிட்டப்போய் இப்தியின் கையை விடுவித்தார்கள். இப்தி அப்படியே, "அப்பாடா!" என்று மூர்ச்சித்து விழுந்தான்.

முகத்திலே தண்ணீர் அடித்து, விசிறியால் விசிறி குடிக்க ஜலம் கொடுத்து, இப்தியை நண்பர்கள் மயக்கம் தெளிவித்தார்கள். கைலாகு கொடுத்து, படுக்கைக்குக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

இப்திக்குச் சுயநினைவு வந்தது. "எங்கே, எங்கே, என் அரசகுமாரி எங்கே? ஐயோ, அவளை விரட்டி விட்டீர்களா?" என்றான்.

"உன் அரசகுமாரிதானே? அவள் அங்கேயே இருக்கிறாள். பத்திரமாய் இருக்கிறாள். வெள்ளி முளைத்துவிட்டது. கொஞ்சம் பொறு. நன்றாய் வெளிச்சமானதும், உன் அரசகுமாரியை நீ சந்திக்கலாம்" என்று சிரித்துக்கொண்டே சொன்னான் கோபி.

சூரியோதயம் ஆகிவிட்டது.

இப்தியைக் கோபியும் சங்கரும் நடு மண்டபத்துக்கு அழைத்துச் சென்றார்கள். "இந்தாப்பா, இதோபார் உன் அரச குமாரியை. வேண்டுமானால் மறுபடியும் கட்டிக்கொள்" என்று சொல்லி, அந்த மூலையில் கிடந்த பீரோவை அவனுக்குச் சுட்டிக் காட்டினார்கள்.

"என்ன இது! என்ன புரளி! கேலியா செய்கிறீர்கள்?" என்று கேட்டான் இப்தி.

"இந்த பீரோவைத்தான் அப்பா நீ கட்டிக் கொண்டிருந்தாய். அடேயப்பா! கையை என்னமாய்க் கொக்கி போட்டு பின்னிக் கட்டியிருந்தாய்! அதை விடுவிப்பதற்குள் எங்கள் பாடு பெரும் பாடாய் போய்விட்டதே!" என்றான் சங்கர்.

"பொய், பொய், பொய்" என்றான் இப்தி. வேலைக்காரனும் மர பீரோவுந்தானா அவன் கண்ட மோகினி! இப்தி ஒரு நாளும் இதை நம்ப முடியாது; நம்பவில்லை. அந்த அரச குமாரியின் ஆவி உண்மையில் அந்த மாளிகையைச் சுற்றியதோ இல்லையோ; இப்போது இப்தியின் மனத்தில் ஐயம் திரிபறப் பலமாய் சுற்றத் தொடங்கி விட்டது.

இதற்குப் பிறகுதான், இப்தி நிஜமாகவே கவிதை புனைய ஆரம்பித்தான். கவிதை என்றால், இசைக்கவிதை; பாட்டுக்கள்; கருப்பஞ்சாறு போன்ற சிங்கார ரச சாகித்தியங்கள். இப்தியின் பாட்டுக்களுக்குச் சினிமா உலகத்தில் பிரமாத டிமாண்டு.

அவன் என்ன செய்தாலும் சரி, அவனைப் பைத்தியக் கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பவே கூடாதென்று குறுக்கே விழுந்து தடுத்த புண்ணியமும் சினிமா உற்பத்தி நிபுணர்களையே சேர்ந்ததாகும்.

★

மரத்தடிக் கடவுள்

வா மகனே, இப்படி வா! அடடா! இந்த மழையிலே இப்படித் தவிக்கிறாயே! பாவம்! ஆமாம், இதுதான் என்ன உக்கிரமான மழை! நகரத்தை நரக மாக்கும் மழை அல்லவா இது? ஜலதாரையை ஒளித்து நவநாகரிக நகரத்தை நிர்மாணிக்கிறான் மனிதன். மனிதன் ஒளித்ததை இந்த மழை அம்பலமாக்கி விடுகிறதே! அடேயப்பா! இந்த மழையின் சரவீச்சிலே வேதனை தாளாத மண்ணுந்தை மாதிரி கட்டிடங் களெல்லாந்தான் எப்படி நெளிகின்றன! 'வெல்வெட்டு ஆடை போர்த்த முதலைகள் மனித குலத்திலேதான் உண்டு என்று நினையாதே; இதோ என்னைப் பார்' என்பதுபோல, ரஸ்தாக்களெல்லாம் தார் உரிந்து கரடு முரடான கப்பிக் கற்களைக் காட்டி நிற்கின்றன. மதுவுண்டு வெறிகொண்டு அடியற்று விழப்போகும் வீரர்கள் ரணகளத்திலே ஆடுவதுபோல ஆடுகின்றன இந்த மரங்களெல்லாம். வானும் மண்ணும் பொரும் போரோ இது? அல்லது பிரளயந்தானா?—இப்படி யெல்லாம் நீ அஞ்சுகிறாய் அல்லவா? அல்ல மகனே, அல்ல; இதுதான் தேவர்கள் உலா வரும் நேரம்; விளையாடும் நேரம்; பேசும் நேரம். அதனால்தான் நான் உன்னோடு பேசுகிறேன். ஆம், நான் ஒரு தெய்வந்தான். தெய்வந்தான் உன்னோடு பேசுகிறேன். ஆனால் உலா வந்த தெய்வம் அல்ல; சிறைப்பட்ட தெய்வம்.

எங்கே பார்க்கிறாய்? இடிபடும் மேக மின்னலின் நடுவே இருக்கிறேன் என்றா? மரத்தினூடே ஏன்

பார்க்கிருய்? உச்சாணிக் கிளையிலே உட்கார்ந்திருக்கும் குரங்கல்ல நான். கிளைக் குரங்கு என்னைவிடப் பாக்கியசாலியாயிற்றே! குரங்காட்டியின் குரங்கைப் போல்தான் இன்று என்னையும் மனிதன் ஆட்டிவைக்கிருன். நான் தெய்வம். கடவுள், அப்பா, கடவுள்! ஹஹ்ஹா!

இன்னும் என்னை நீ கண்டுபிடிக்கவில்லையா? அடேடே! ஏன் ஓடப் பார்க்கிருய்? பயமா? என்ன பயம் வந்தது என்னிடம்? உடல் நனையக் கால் வலிக்க மனம் பதைக்க மூச்சு வாங்க ஓடாதே. இங்கே இந்த மரத்தடியிலே தங்கு; இதோபார்: ஒரு சிறு மாடம் மாதிரி கட்டிய பொம்மை வீட்டில், சந்தனப் பொட்டிட்டு மஞ்சளும் குங்குமமும் பூசிச் செங்கல் உருவமாய் அமர்ந்திருக்கிறதே, அந்தக் கடவுள் நான் தான். ஏன் ஆச்சரியப்படுகிருய்? கிராமபோன் கத்திளுல் நீ ஆச்சரியப்படவில்லை; ரேடியோ குழறிளுல் ஆச்சரியப்படவில்லை. ஜடத்தை மனிதன் பேசவைக்க முடியும்; கடவுள் பேசவைக்க முடியாதா? நான் கடவுள்! கடவுள்! செங்கல் அல்ல; செங்கல்லுக்குள் இருக்கும் கடவுள்!

ஆ! இதுதான் சரி. அப்படி உற்றுக்கேள். என் கதையைச் சொல்லுகிறேன். நான் பிறந்து வளர்ந்து வாழ்ந்த கதையைச் சொல்லுகிறேன். தெய்வங்களுக்கும் பிறப்பு உண்டு; வளர்ச்சி உண்டு; வாழ்வு உண்டு; சாவும் உண்டு. அப்படியாளுல், தெய்வம் சுயம்பு என்பது பொய்யா என்று சந்தேகிக்கிருயோ? அது வேதாந்தம். வேதாந்தத்தின் முடிவு சூன்யம். விவகாரத்திலே நீயும் நானும் ஒன்றுதான். இனிக் கேள் என் கதையை:

கொஞ்ச நாளைக்கு முன் ஒரு நாள் மாலையில் இந்த ரஸ்தாவிலே ஒரு குடும்பத்தார் வந்துகொண்டிருந்தார்கள். மனிதக் குடும்பந்தான். கடற்கரையில் காற்று வாங்க எத்தனையோ பேர் வருகிருர்கள்

அல்லவா? இவர்களும் அந்தக் கும்பலோடு கும்பலாகத் தான் வந்துகொண் டிருந்தார்கள். ஒரு வாலிபன்; அவன் மனைவி; அவர்களுடைய இரண்டு குழந்தைகள். மூத்தது ஐந்து வயதுப் பெண். அடுத்தது மூன்று வயது மழலை மொழிச் சிறுவன். இன்னுங்கூட அவன் வாயில் பால்மணம் மாறவில்லை. பெண்தான் என்ன? பச்சைக்கிளி மாதிரி இருந்தாள். கொஞ்சிக் கொஞ்சித் தான் பேசினாள். தாய் மகனைக் கைபிடித்து அழைத்துச் செல்ல முயல்வாள். குழந்தை ஒரு நிமிஷம் சிரித்துக்கொண்டே தள்ளாடித் தள்ளாடி இரண்டடி நடப்பான். பிறகு, "ஊ! ஊ! தூக்கு.... தூக்கு" என்று கைகளை அகல விரித்துவிடுவான். தகப்பன் நகைப்பான். தாய் உள்ளம் பூரித்தாலும் முகம் சிணுங்கி, "பொல்லாது; பொல்லாது" என்று முணுமுணுத்தபடியே சிறுவனை வாரி எடுத்துக் கொள்வாள். அதோபார், அந்தப் பாலத்துக்குப் பக்கத்தில் ஒரு மரம் இருக்கிறதே, அதன் அடியில் இவர்கள் சென்றுகொண் டிருந்தபோது, "சுந்தா, சுந்தா!" என்று ஒரு குரல் ரஸ்தாவின் மறு பக்கத் திலிருந்து கேட்டது. அது இந்த வாலிபனின் ஆபீஸ் தோழன் அழைத்த குரல்தான். அவனும் அவனுடைய புதிய மனைவியும் இவர்களிடம் வந்தார்கள். புருஷனும் புருஷனும், பெண்ணும் பெண்ணும் பேசத் தொடங்கினார்கள். குழந்தைகள் என்ன செய்வார்கள்? அவர்கள் விளையாடத் தொடங்கினார்கள்.

மரத்தடியில் ஒரு செங்கல் கிடந்தது. அதைக் கையில் எடுத்தாள் கமலி. இதுதான் அந்தப் பெண் குழந்தையின் பெயர். அவளுடைய சட்டைப் பையிலே சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம், ஊதா, வெள்ளை இப்படிப் பல வர்ணச் சாக்குக் கட்டிகள் இருந்தன. அவள் அவற்றை எடுத்து, அந்தக் கல்மீது குறுக்கும் நெடுக்குமாகக் கோடுகள் கிழித்தாள். சிறுவ னும் பக்கத்திலே உட்கார்ந்து, காக்கைபோல் தலையை

இப்படியும் அப்படியும் சாய்த்து, ஆனந்தம் பொங்க, "ஊ...ஊ...ஊ" என்று முனகிக்கொண்டேயிருந்தான்.

கிறுக்கி முடிந்தது. சிறுமி என்னை - ஆம், என்னைத்தான் மகனே! அந்தக் குழந்தைகளின் கள்ள மற்ற ஆனந்தத்திலே நான் பிறந்துவிட்டேன்; அந்தக் கல்லிலே சாந்நித்தியம் ஆகிவிட்டேன். குழந்தைகள் உங்கள் உலகத்திலே – மானிட உலகத்திலே – இருப்பதாக நீங்கள், மானிடர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அவர்கள் உங்களுக்கு நடுவே இருந்தாலும், உண்மையில் குழந்தைகள், தேவர்களின் உலகத்திலே – அற்புதக் கனவு உலகத்திலே வாழ்கிறார்கள். அவர்களுடன் கல்லும் மண்ணும் மரமும் பேசும்; அவற்றினுள் இருக்கும் ஆண்டவனே அவர்களுடன் பேசுகிறான். மரப்பாச்சியுடன் குழந்தை பேசும்போது அது உங்களுக்குப் பித்துக்கொள்ளித் தனமாய்த் தோன்றலாம். மரப்பாச்சி உண்மையிலே குழந்தையோடு பேசுகிறது. ஏனென்றால், தேவர்களே குழந்தையோடு விளையாடுகிறார்கள்; கூடிப் பேசிக் குலவுகிறார்கள். மந்திரத்தை முணு முணுத்தால், தேவர் வருவரென்று நீங்கள் நினைக்கிறீர்கள். மந்திரச்சொல் உண்டு. ஆனால், பார்வதி பரமேசுவரர் போல, அந்தச் சொல்லிலே பொருள் இணைபிரியாது இழையும்போதுதான் அதில் மந்திர சக்தி ஏறுகிறது. வறட்டுச் சொல்லுக்குத் தேவர்கள் கட்டுப்பட மாட்டார்கள். தெய்விகக் கனவு உலகத்திலே வாழும் நிஷ்களங்கமான குழந்தைகளுக்குச் சொல் என்ற சாதனம் எதற்கு? கமலி என்னைக் கையிலே வாரி எடுத்தாள். இடுப்பிலே அணைத்துக் கொண்டாள். "கோபால கிருஷ்ணுடு! கோவிந்த ராமுடு!" என்று தெலுங்கு மொழியில் பாடினாள். எதிரே நின்ற சிறுவனும் அதற்கு ஏற்ற படி குதித்து குதித்து ஆடினான். நான் அந்தக் கல்லிலே சாந்நித்தியம் ஆகிவிட்டேன்.

அந்தக் குழந்தைகளின் பாட்டும் ஆட்டமும் என்ன இன்பமாக இருந்தன! அவற்றிலே நான் லயித்துக் கிடந்தேன். ஆடிக்கொண்டேயிருந்த சிறுவன், "ஊ....ஊ" என்று கையை நீட்டி என்னைத் தொட்டான். மெத்தென்று பட்ட அந்த விரலின் ஸ்பர்ஸம், புளகாங்கிதம் உண்டாக்கியது. சிறுமி அசைந்து திரும்பி, அவன் கைப் பிடியிலிருந்து என்னைப் பிடுங்கினாள். சிறுவன் அழுதான். அந்த அழுகையும் ஓர் அழகாய்த்தான் இருந்தது. தாய் திரும்பிப் பார்த்தாள்; சிடு சிடுப்புடன், "இந்தா, கமலி, குழந்தையை அழவிடாதே. அந்தக் கல்லை அதனிடம் கொடு. இல்லாவிட்டால் அடிப்பேன்" என்று சொல்லி, மீண்டும் தன்பேச்சிலே ஈடுபட்டாள். இவ்வளவுதான்! அந்தச் சின்னஞ்சிறு கமலிக்குத் தான் என்ன பயம்! அவள் உடனே என்னைச் சிறுவனின் கையில் கொடுத்தாள். சிறுவன் என்னை வாங்க முடியாமல் வாங்கினான். அவனால் தூக்கமுடியவில்லை. என்றாலும், என்னைக் கைவிடவில்லை. கத்திக் கொண்டே என்னையும் போட்டுக்கொண்டு, தானும் விழுந்தான். என் மீது சிறுமி போட்ட வர்ணக் கோடுகளை யெல்லாம் சிறுவன் அழிக்கத் தொடங்கினான்.

"இந்தாடா, கண்ணா, ஸ்வாமியை அழிக்காதேடா! அப்புறம் கண்ணை குத்திப்புடும்" என்று சொல்லிக்கொண்டே, கமலி சிறுவனின் கையைப் பிடித்துக்கொண்டாள். ஆகா! அவர்களின் விளையாட்டும் பேச்சும் சண்டையும் அழுகையும் இந்த அத்தனையுமே எனக்கு மிக்க இன்பமாக இருந்தன. சிறுவன் சிரித்துக்கொண்டு, "தூ... தூ... தூ..." என்று சிறுமியின்மீது எச்சிலை ஊதினான்.

இந்தச் சமயத்தில், பெரியவர்களின் பேச்சு முடிந்தது. புறப்பட்டார்கள். "அட சனியனே! இந்தக் கல்லை ஏன் தூக்கிக் கொண்டு வருகிறாய்?"

என்று எரிந்து விழுந்து, என்னை அந்தத் தாய் பிடுங்கி எறிந்தாள். அவர்கள் போய்விட்டார்கள்.

நான் அந்த மரத்தடியிலேயே கிடந்தேன். அன்றிரவு இரண்டு மூன்று ஆட்கள் அந்தப் பக்கமாக வந்தார்கள். அவர்கள் அரை குறையான கள் மயக்கத்தில் ஒயால் பாடிக்கொண்டே வந்தார்கள். நிலா வெளிச்சத்தில் அவர்களில் ஒருவன் கண்ணில் நான் தென்பட்டேன். என்மீது இருந்த கோடுகளைக் கண்டதும், "அடே சாமிடா!" என்று அவன் கத்தினான். உடனே அவனோடு பிறரும் சேர்ந்து கொண்டார்கள். என்னை அந்த மரத்தடியிலேய குத்திட்டு நிறுத்தி பிரதிஷ்டை செய்தார்கள். என் முன்னே விழுந்து விழுந்து கும்பிட்டார்கள்.

இரண்டொரு நாள் சென்றதும், என் யோகம் வலுத்துவிட்டது. என் பக்த கோஷ்டி பெருத்து விட்டது. தினந்தோறும் இரவிலே ரஸ்தாவின் சந்தடி அடங்கியதும், பலர் கூடி என்னை வணங்கினார்கள். பூ. குங்குமம், மஞ்சள், சந்தனம், வெற்றிலை பாக்கெல்லாம் கொண்டு வந்து எனக்கு அலங்கார உபசாரங்கள் நடத்தினார்கள். உடுக்கும் கையுமாய் ஒரு பூசாரியும் வந்து சேர்ந்தான்.

மகனே, உங்கள் உலகத்தில் எதற்கெடுத்தாலும் பூசாரி வந்து தோன்றிவிடுகிறானே, இது ஏன்? வியாபாரம் என்றால் தரகன் உருவம் எடுக்கிறான் அந்தப் பூசாரி. அரசியல் என்றால், அவன் பெரிய தலைவனுக்குப் பக்கத்திலே சிஷ்யகோடி உருவமெடுக்கிறான். இலக்கியத்துக்கு விமரிசகன் பூசாரி. சட்டத்துக்கு வக்கீல் பூசாரி. சாஸ்திரத்துக்குப் பண்டிதன் பூசாரி. ஜனநாயகத்துக்கு முதலாளி பூசாரி. சுயமரியாதைக்கு கலை விரோதி பூசாரி. புரட்சிக்கு நாஸ்திகன் பூசாரி. அப்பப்பா! எதெற்கெடுத்தாலும் ஒரு பூசாரி தேவையாயிருக்கிறான்! உழைப்பவனின் வாயிலே மண்ணைத் தெள்ளிப் போடத் தரகன்

வந்தால், நீதியை ஆழ குழி வெட்டிப் புதைக்க வக்கீல் வருகிறுன். கவிஞனின் கவிதையைச் சமாதி செய்து கோரி கட்டி, தன்னைப் பார்த்து மக்கள் கன்னத்தில் போட்டுக் கொள்ளச் செய்கிறுன் இலக்கியப் பூசாரி. தெய்வத்துக்குத் திரை கட்டி மறைத்து வைக்கிறுன் கோயில் பூசாரி. எனக்கும் இப்படி ஒரு பூசாரி வந்து சேர்ந்தான்.

பாட்டும் பூஜையும் ஆட்டமும் வலுத்தன. கரகம் எடுக்க ஆரம்பித்தார்கள். கோழிகளின் தலைகளையும் என் முன்னே திருகிப் போட்டார்கள். ரஸ்தாவில் பாதிவரையில் கூட்டம் அடைத்துக் கொள்ளத் தொடங்கியது.

என்ன மகனே, அங்கே பார்க்கிறுய்? என் கதை பிடிக்கவில்லையா? புறப்பட்டுப் போகலாம் என்று என்னை எண்ணுகிறுயா? ஓ! மழை வெளிவாங்கி விட்டது. இனிக் கிளம்பலாம் என்ற எண்ணமா? சற்றுப் பொறு. புயலுக்கு முன்னே அமைதி நிலவும். இன்னொரு பாட்டம் மழை பலமாக அடித்துவிட்டே நிற்கப்போகிறது. அதற்குள்ளே என் கதையைச் சுருக்கமாகச் சொல்லி முடித்துவிடுகிறேன். அதைத் தான் நான் எவ்வளவோ சுருக்கிவிட்டேனே. உன்னை ஓர் உதவி கேட்பதற்காகத்தான் உனக்கு நான் இத்தனை கதையையும் சொல்லுகிறேன். இன்னும் கொஞ்சம் பொறுமையாய்க் கேள், சில நிமிஷ நேரம்.

உனக்கு ஒரு சந்தேகம்; இல்லையா? அதோ அந்த பாலத்தடி மரத்தின் கீழே அல்லவா இவ்வளவும் நடந்ததாகச் சொன்னேன்? அங்கே கிடந்த நான் இங்கே எப்படி வந்தேன்? இது உன் சந்தேகம்; நியாயமான சந்தேகம். ஒரு நாள் கூட்டம் மகா பலமாக இருந்தது. என் எதிரே அலங்கரித்த மதுக் குடங்களும் படையல் குவியல்களும் இருந்தன. "மழை மேகம் போலே போலே" என்று பாடித் தலையைப் பலமாக ஆட்டி உடுக்கை அடித்தான் பூசாரி. இந்த

நேரத்திலே தடிகளுடன் சில போலீஸ் ஜவான்கள் அங்கே வந்தார்கள். ரஸ்தாவில் வண்டிப் போக்கு வரத்துக்குக் கேடாக இருப்பதாகச் சொல்லி, இந்தக் கூட்டம் உடனே கலையவேண்டுமென்று அவர்கள் கட்டளை போட்டார்கள். அந்தக் காலம் கொஞ்சம் பரபரப்பான காலம்—அரசியல் பரபரப்பு. போலீஸ்காரர்கள் என்ன செய்தாலும் கேட்பாரில்லை. அவர்கள் அப்போது சர்வாதிகாரிகள். ஜனங்கள் ஓட்டம் எடுத்தார்கள். பூசாரி உடுக்கைத் தூக்கிக் கொண்டு கிளம்பினான். ஜவான்கள் என்னைத் தூக்கி வீசி எறிந்தார்கள். அட பாவிகளா! அவர்களுக்குத் தான் என்ன துணிச்சல்! ஆனால், அவர்களை நான் என்ன செய்ய முடியும்? ஜில்லா கலெக்டர் துரை கண்ணைத் திறந்து பார்த்து, அவர்களைத் தண்டிக்க மாட்டாரா என்று பிரார்த்தித்துக்கொண்டே நான் ஆகாயத்தில் பறந்தேன். என் சொந்த பலத்தால் நான் பறக்கவில்லை. ஜவான்களின் புஜபலம் எனக்குள் பொழிந்த சக்தியாலேயே பறந்தேன். அப்போது இந்த மரத்தடியிலே ஒரு குப்பை முட்டு இருந்தது. கணக்காய் அதைக் குறிபார்த்து வந்து விழுந்தேன். இல்லாவிட்டால் நான் உடைந்து சுக்கு நூருய்ப் போயிருப்பேன். அப்படித்தான் தொலைந் தேனா! பின்னால் இப்படி என் நிம்மதி குலையாமல் தப்பியிருப்பேனே! யாருக்குத்தான் அழிய மனம் வருகிறது? கழியை ஊன்றிக் கூனிக் குறுகி ஒவ்வோர் அடியிலும் ஒடிந்து விழுவதுபோல் நடக்கும் கிழமுங் கூட உலகத்திலே சாசுவதமாய் இருக்கத்தான் விரும்பு கிறது. அழிவு: *அப்பாடா! அது மகா பயங்கர மானது!

நான் இந்த மரத்தடியிலே வந்து விழுந்தேனா; பூசாரி மெல்ல மறுபடியும் என்னிடம் வந்து சேர்ந்தான். ஓர் உண்டியல் பெட்டியும் தயாரித்து என் முன்னே வைத்தான். ஒரு கொத்தனை அழைத்து,

எனக்கு ஒரு சிறு மாடம் கட்டினான். குதிரை வண்டிக் காரர்கள், ரிக்ஷாக்காரர்கள், கடைசியில் டாக்ஸிக் காரர்களுங்கூட‌த்தான் உண்டியலில் காசு போடத் தொடங்கினார்கள். பழையபடி உடுக்கடியும் பூஜை களும் ஆரம்பமாகிவிட்டன. இப்போது நான் பலமாய் ஸ்தாபிதமாகி விட்டேன். எனக்கு நடந்த வைபவங் களெல்லாம் எனக்கே சற்று வேடிக்கையாய் இருந்தன. கொஞ்சம் சந்தோஷம், சிறிது வேதனை எல்லாம் கலந்திருந்தன. இந்த இடம் வண்டிப் போக்கு வரத்துக்கு அவ்வளவு இடைஞ்சல் இல்லையோ, அல்லது போலீஸ்காரர்களின் சர்வாதி காரத்துக்குச் சிறிது வீழ்ச்சி ஏற்பட்டதோ, எது காரணமென்று தெரியவில்லை. ஜவான்கள் இப்போது குறுக்கிடவில்லை. இப்படியாக நான் பிறந்து ஐந்தாறு மாத காலம் ஆகிவிட்டது. என்னோடு ஒரே காளவாயில் வெந்த சகோதரக் கற்களை யெல்லாம் பற்றிச் சிந்தித்துப் பார்த்தபோது என் மனம் பூரித்தது. பாவம்! அவற்றில் சில, ஒரு கட்டிடச் சுவரிலே இடித்து நெருக்கி நின்று ஓர் உத்தரத்தைத் தாங்கிக்கொண் டிருந்தன. மற்றும் சில மாடிப் படிக் கட்டிலே மனிதர்களின் காலடி பட்டுத் தேய்ந்து கொண்டிருந்தன. கொத்தர்கள் ஒரு வண்டியிலே என் சகோதரக் கற்களோடு என்னையும் ஏற்றிக் கொண்டு போனபோது, தறிகெட்டுக் கீழே விழுந்த நானோ இதோ என்ன கோலாகலத்துடன் வாழ்கிறேன்! 'ஓடிப்போனவனுக்கு ஒன்பதாமிடத்தில் ராஜா' என்பது உண்மை மகனே, உண்மை! ஆனால் இப்போது இப்படி நான் நினைக்கவில்லை; அப்போது நினைத்து மகிழ்ந்தேன்.

நான் பிறந்து ஐந்தாறு மாதகாலம் ஆகிவிட்டது என்று சொன்னேன் அல்லவா? நான் எப்படிப் பிறந்தேன்? குழந்தைகளின் நிஷ்களங்கத்திலே பிறந்தேன் என்பதுதான் உனக்குத் தெரியுமே;

முதலிலேயே சொல்லியிருக்கிறேனே. படைப்பின் ரகசியமே இதுதான். அறிவாராய்ச்சியிலே படைப்பு எதுவும் நிகழ்வதில்லை. அணுவைப் பிளக்கும் ஆயுதம் விஞ்ஞானியின் கற்பனையிலே பிறக்கிறது. கவிஞனின் கனவிலே பிறக்கிறது கவிதை. பிரம்மத்தின் மாயையிலே பிறக்கிறது பிரபஞ்சம். பக்தன் குழந்தையாகும்போது பிறக்கிறது தெய்வம். குழந்தையின் விளையாட்டே உன்னதமான பக்தி. என் பிறப்புக்குக் காரணபூதனமான அந்தக் குழந்தைகளைப் பின்னால் வெகுநாள் வரையில் காணவில்லை.

வழக்கம்போல, நேற்றிரவு எனக்குப் பூஜை நடத்திக்கொண்டிருந்தான் பூசாரி. சுற்றிலும் பல ஜனங்கள் சூழ்ந்திருந்தார்கள். கூட்டத்தின் ஓரத்திலே, அந்த வாலிபன்-கமலியின் தகப்பன்-வந்து நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். அவன் கையைப் பிடித்துக்கொண்டு, அந்த அழகிய சிறுமி கமலியுந்தான் நின்றாள். அவளைக் கண்டதும், எனக்கு ஒரு குதூகலம் உண்டாயிற்று. அன்று போல் மீண்டும் அவள் கையிலே போய்க் கொஞ்ச வேண்டும் என்று ஆவல் உண்டாயிற்று. 'கோபால கிருஷ்ணுடு, கோவிந்த ராமுடு' என்ற தேவ கானத்தை மீண்டும் கேட்க வேண்டும்போல் ஒரு வேட்கை எழுந்தது. ஆம்; இதோ அவளும் என்னைக் கண்டுகொண்டாள். அவள் கிழித்த சில வர்ணக் கோடுகள், ஆறு மாதமாகியும் அழியாமல், புடைத்த நரம்புகள் போல் என்மீது விளங்கியதைத்தான் அவள் கண்டுகொண்டாளோ; அல்லது வேறு என்ன அடையாளம் கண்டாளோ? அந்தக் கோடுகளைத்தான் அழியவொட்டாமல், மீண்டும் அவற்றின்மேல் கெட்டி வர்ணச் சாயம் பூசியிருக்கிறானே பூசாரி. அவற்றைத்தான் அவள் கண்டிருப்பாள். "அப்பா! என் கல்லு, என் சாமி!" என்று இதழ் விரிந்த மலர்ச் சிரிப்புடன், கண்ணை அகல விழித்துக்கொண்டே

காலி கத்தினாள். தகப்பனின் கையைத் திமிறிக் கொண்டு, என்னை எடுக்கக் கூட்டத்துக்குள்ளே பாய்ந்தோடி வந்தாள். குழந்தைக்கு ஏதோ சாமி ஆவேசம் வந்துவிட்டது என்று எண்ணி, கூட்டங் கூட வழி விலகிக் கொடுத்தது. குழந்தை உள்ளே வந்துவிட்டாள். என்னை அவள் கைவிரல் நுனிகூடத் தீண்டிவிட்டது. ஆஹா! என்ன சுகமாயிருந்தது அது! ஆனால், பூசாரி விடுவானா? "போ அப்பாலே!" என்று உறுமி, அந்தக் கையை முரட்டுத்தனமாய்த் தள்ளிவிட்டான். "சாமி உனக்காகவா ஏற்பட்டது?" என்று கத்தினான் பூசாரி. சாமி பூசாரிக்காக அல்லவா ஏற்பட்டது? அவனது உண்டியல் பெட்டி நிறை வதற்காக அல்லவா ஏற்பட்டது?

குழந்தை மூர்ச்சித்து விட்டாள். அவளால் அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. பூசாரி தள்ளியது அதன் காரணமல்ல. அன்றொரு நாள் எனக்கு உயிர் கொடுத்து என்னை விளையாடிக் கொஞ்சிய என் தாய் அவள். இன்று நடுவிலே முளைத்த ஒரு பூசாரி. அவள் என்னைத்தொடவும் கூடாதென்று தடுத்ததால் அவளுடைய உள்ளத்திலே ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது. அவள் மூர்ச்சித்தாள். தெய்வக் கோளாறு என்றார்கள் மூட ஜனங்கள்: எனக்கு கற்பூர தீபாராதனை எல்லாம் காட்டினார்கள். அவள் அதையெல்லாம் பார்க்கவில்லை. வாலிபன் அவளைத் தோளிலே சாய்த்து வீட்டுக்குத் தூக்கிச்சென்றான். அவளுக்குக் காய்ச்சல் வந்துவிட்டது. அதே பூசாரியை அழைத்துத் 'துண்ணூறு' போடச் செய்திருக்கிறார்கள். அவன் அங்கேயும் உண்டியல் பெட்டி சகிதம் போய்க் காலை மாலை இருவேளையும் உடுக்கடித்துத் 'துண்ணூறு' போட ஆரம்பித்து விட்டான். அவன் 'துண்ணூறு' போடும் வரையில் சிறுமியின் காய்ச்சல் தீராது. மகனே, குழந்தையை

காப்பாற்ற ஒரே ஒரு வழிதான் உண்டு. அது அந்த பூசாரியைத் தொலைப்பதுதான்.

ஆனால், ஐயோ, நான் என்ன செய்ய முடியும்! ஊர் ஜனங்களின் கண்ணைக் குத்த என்றால் முடியும். பூசாரியை நான் ஒன்றும் செய்யமுடியாது. பாவிக்கும் பக்தர்களை நான் ஆட்டி வைத்தருள முடியும். என் அருளையே விலைக்கு விற்கும் தரகனை நான் என்ன செய்ய முடியும்? முதலைக்குத் தண்ணீர் பலம். பூசாரிக்கு நான் பலம். நான் தொலைந்தால் பூசாரிக்கு வேலை இராது. ஆகையால் மகனே, நீ எனக்கு ஒரு காரியம் செய்யவேண்டும். உனக்குக் கோடி புண்ணியம் உண்டு. இப்படியே என்னைப் பெயர்த்தெடு. நேரே கிழக்கே போ. அதோ பார், அங்கே ஆரவாரமாக ஆர்ப்பரித்துப் பொங்கியெழுந்து அலை வீசிக்கொண் டிருக்கிறதே ஆழங்காணாத கருங் கடல், அதன் நடுவே என்னை வீசியெறிந்து விடு. இதுதான் மகனே, நான் உன்னைக் கேட்கும் வரம்.

★

பொம்மை யானை

இதோ என் கண் முன்னே ஒரு தலையாட்டிப் பொம்மை படாத பாடு படுகிறது. என் தம்பி குழந்தையின் உதை தாங்காமல் இந்தப் பொம்மைச் சேர்மியர், தத்தளிக்கிறார்; ஆடுகிறார். இதே மாதிரி தான், அந்த மர யானையும் என் கையில் அந்த நாளில் அவதிப்பட்டது. அது ஒரு மரப்பாச்சி யானை.

சின்ன வயதிலே, எனக்கு விளையாட்டு முழு வதும் அந்த மர யானையோடுதான். ஊர்க் குழந்தை களெல்லாம் 'சகடை'கள் போட்ட மர யானைகளைத் தெருவிலே இழுத்துக்கொண்டு செல்லும். என் மர யானைக்கு அப்படிச் சகடை ஒன்றும் கிடையாது. ஆகையால், தெருவிலே இழுபடும் தொந்தரவு அதற்கில்லை.

பாட்டி வீட்டிலே நான் இருந்தேன். சிற்றன்னைகள் பலபேர்; ஒவ்வொரு வயசு; ஒவ்வொரு விதம். கடைசியாக என் வயசுக்கு இரண்டு மூன்று வருஷங்கள் மூத்த ஒருத்தி உண்டு. அவளுடன்தான் நான் ஓயாமல் விளையாடுவேன்; சண்டையிடுவேன். அன்பும் அவளிடந்தான் எனக்கு அதிகம். சின்னப் பிராயத்திலே என்னோடு விளையாடிய மர யானையைப் பற்றி நினைக்கும் இந்த நேரத்திலே, அவளைப்பற்றியும் நான் எப்படி நினையாதிருக்க முடியும்?

மர யானையை நான் சிங்காரிக்க ஆரம்பித்து விட்டால், அவள் சிரித்துக்கொண்டு என் அருகே வந்து உட்கார்ந்துவிடுவாள். "சுவாமிக்கு உற்சவமா, தம்பி" என்று கேட்பாள். ஆமாம்; அந்த மரயானை, எப்போதுமே உற்சவ யானைதான். அதன் முதுகிலே ஓர் ஆணி அடித்து வைத்திருந்தேன். திருப்பதி வேங்கடாசலப் பெருமாள் மரப்பாச்சி ஒன்று என்னிடம் இருந்தது. யானைக் குட்டியின் முதுகில் அடித்த ஆணியோடு அந்த மரப்பாச்சியைச் சேர்த்துக் கட்டுவேன். என் சிற்றன்னைகளின் ரவிக்கைச் சீட்டிகளில் மிஞ்சி மிகுந்த பச்சை, நீலம், சிவப்பு முதலிய பல வர்ணத் துண்டுத் துணிகளைச் சுவாமிக்கு உடுத்துவேன். ஒரு சிறிய ஸ்படிக மணிமாலையைக் கழுத்திலே போடுவேன். அலங்காரம் பூர்த்தியாகும். யானை வாகன மகோற்சவமும் நடக்கத் தொடங்கிவிடும். இல்லை, அதை மறந்து விட்டேனே; யானை வாகன மகோற்சவம் மட்டுமல்ல; சேஷவாகன மகோற்சவமும் ஏக காலத்தில் என் பெருமாளுக்கு நடக்கும். அதெப்படி என்று கேளுங்கள். எங்கள் பாட்டி வீட்டுக் கொல்லையில் ஓர் இலவ மரம் உண்டு. இலவங்காயை இரண்டாகப் பிளந்த பாதி ஓடுகள், சில சமயம், சர்ப்பத்தின் தலை படம் விரித்த மாதிரி இருக்கும். அந்த மாதிரி ஓடுகளில் ஒன்றைப் பொறுக்கி வந்து, என் சுவாமியின் தலை மீது கவிந்

திருக்கும்படி கட்டி விடுவேன். என் சுவாமியின் உற்சவாலங்கார ஸம்பூர்ணம் இதுதான்.

"ஏண்டா, தம்பி! சுவாமிக்கு இன்னிக்கு, என்ன நைவேத்தியம்?" என்பாள் கமலம் – அவள்தான், என் சிற்றன்னை.

"ஏ பாட்டி!...." என்று கூவிக்கொண்டே, உள்ளே ஓடுவேன்.

பாட்டிக்கு விஷயம் தெரியும். அதுவும் நான் செல்லப் பேரன். அவள் முதல் முதலாக வாரியெடுத்து, மார்பில் அணைத்துக் கொஞ்சிய பேரன் நான்தான்: மூத்த பெண்ணின் மகன். பேரன் படுத்துவது அவளுக்குப் பேரின்பம். பேரனுக்கு ரஸஞ்சாதந்தான் பிடிக்கும்; உருக்காத விழுது நெய்தான் வேண்டும்; கையிலே தங்கக்காப்பு அணிய வேண்டும் – இதெல்லாம் பாட்டியின் பாசமும் ஆசையும்.

"பாட்டீ!" என்று நான் அழைக்கும் குரலைக் கேட்டு அவளுடைய உள்ளம் பூரிக்கும். என் குரலுக்காகவே அது வரையில் காத்திருந்தவளைப் போல, "என்னடா ராஜா! என்ன வேணும்?" என்று முகம் நிறைந்த புன்சிரிப்புடன், வாய் நிறையக் கேட்பாள்... ஐயோ! அவள் போய்விட்டாள். என்றும் மலர்ந்த அவள் முகம் - அந்த அன்பினால் நரைந்த மேனி - என் கண்ணை விட்டு அகலவில்லை.

எனக்கு என்ன வேணும் என்று அவள் என்னைக் கேட்கவா வேண்டும்? அவளுக்கு அது நன்றாய்த் தெரியும். இருந்தாலும் என் வாயால் அதைக் கேட்பதிலே, பாட்டிக்கு ஒரு சந்தோஷம்.

"குடு, பாட்டீ! தின்ன, ஏதாவது குடு!" என்று கத்துவேன். அவள் ஏதாவது கொடுக்கத்தான் வேண்டும்; கொடுக்க எப்போதும் என்னவாவது வைத்துக்கொண்டும் இருப்பாள். என்றாலும்,

பேரனோடு கொஞ்சம் 'பேரம்' நடத்தியாக வேண்டும்!

"தின்னத்தானே? வா, சாதம் போடறேன்."

"சாதமா? சாதந்தான் தின்னறதோ? அது சாப்பிடறது; பசிக்குச் சாப்பிடறது. வேறே ஏதாவது குடு" என்று சொல்லி, அவளது சேலைத் தலைப்பைப் பிடித்து இழுப்பேன்.

பாட்டிக்கு வாய் எல்லாம் பல்லாய்ப் போய் விடும்; அவ்வளவு சிரிப்பு: "அடேடே! புடவையை விடுடா! கிழிச்சுப்பிடாதே. தறேன்; தறேன். விட்டுடு."

"மாட்டேன். குடு; குடுத்தாத்தான் விடுவேன்."

அப்படியே என்னை இழுத்துக்கொண்டு உள்ளே போவாள். அங்கே போன பிறகாவது உடனே கொடுப்பாளா? அங்கேயும் கொஞ்சம் பேரம், தர்க்கம் எல்லாம் நடந்த பிறகுதான், ஏதாவது கொடுப்பாள்.

ஒரு நாள் கொஞ்சம் சீடையும் முறுக்கும், பாட்டி தந்தாள்.

என் சுவாமிக்கு அவைகளை நைவேத்தியம் செய்தேன். பிறகு அவைகளை, நான் தின்ன ஆரம்பித்தேன்.

"எனக்குடா!" என்று தலையைச் சாய்த்து, கொஞ்சும் குரலில் கேட்டாள் கமலம்.

ஒரே ஒரு சீடையையும், மிகச் சின்ன முறுக்கு விள்ளல் ஒன்றையும் அவளிடம் நீட்டினேன்.

"இத்துனூண்டுதானா? எனக்கொண்ணும் வாண்டாம்" என்று சொல்லி, அதை அவள் கீழே போட்டாள்.

"வாண்டாத போனா, போ" என்று, என் கையிலே அதையும் எடுத்துக்கொண்டேன்.

கமலம் இரண்டொரு நிமிஷம் முகத்தைச் சுளித்த படி உட்கார்ந்திருந்தாள். பின்பு, "அடே தம்பீ! எனக்கு வேண்டாம்டா! சுவாமியை யானை தூக்கறதே; அதுக்குப் பசிக்காதா? சீடையும் முறுக்கும் அதுக்குக் குடடா!" என்றாள்.

"அது தின்னாது."

"ஏன் தின்னாது? நன்னாத் தின்னும்."

"சுவாமியே தின்னலியே. யானை எப்படித் தின்னும்?" என்று நான் கேட்டேன்.

"சுவாமி எல்லாருக்கும் பெரியவர்; எல்லாரையும் காப்பாத்தறவர். அவர் தின்னமாட்டார். பாட்டி நமக்கெல்லாம் பெரியவள். எதையும் நமக்குக் குடுத்து மிஞ்சித்தானே, அவள் சாப்பிடறா: அந்த மாதிரிதான் சுவாமியும். யானை அப்படி இல்லே; அது சாப்பிடும்" என்றாள் சிற்றன்னை.

"அப்படியானா, சரி" என்று சொல்லி, ஒரு முறுக்கு விள்ளலை யானையின் தும்பிக்கையில் வைத்துத் திணித்தேன்.

யானை என்ன செய்யும்?

என்ன செய்தது?

என் முறுக்கு விள்ளலைத் தின்றுவிட்டது; விழுங்கி விட்டது! முறுக்கு விள்ளல் மாயமாய் மறைந்தது!

நான் குதூகலம் அடைந்தேன். அடுத்த விள்ளல், அதற்கப்புறம் ஒரு சீடை, மீண்டும் ஒரு சீடை; இப்படியே கையிலிருந்த தின்பண்டத்தை எல்லாம் யானையிடம் நீட்டினேன். ஒன்றுக்குப் பின் ஒன்றாய் எல்லாம் மறைந்தது. நான் தின்னும் ஆசையையே மறந்து விட்டேன்; கமலமும் தனக்குத் தரும்படி கேட்கவில்லை. எல்லாச் சீடையும் முறுக்கும் யானைக்கே நிவேதனம் ஆகிவிட்டது.

அன்று இப்படிச் சீடையும் முறுக்கும் தின்ன ஆரம்பித்த யானை, மறு நாள் தோசை, இட்டிலி எல்லாம் தின்றது. பிறகு, ஒவ்வொரு நாளும் என் பட்சணங்களில் முக்கால்வாசியை அது தின்று வந்தது. ஆனால் அந்த ஒவ்வொரு நாளும் கமலமும் கூடவே இருப்பாள். கமலம் இல்லாமல் எனக்கு விளையாட்டே கிடையாது.

கமலம் மகா புத்திசாலி. அவளுடைய சூட்சும அறிவை ஊரெல்லாம் வியந்து கொண்டாடுவார்கள். அவளுடைய நிழல் நான். அவளுக்கு நான் மகன் முறையே என்றாலும், "தம்பீ, தம்பீ" என்றே என்னை அவள் அழைப்பாள். அவள் மாத்திரமா, ஊர் முழுதுமே என்னைத் "தம்பீ" என்றுதான் அழைப்பார்கள். பின்னால் சில வருஷங்களுக்குப் பிறகு, என் பெயருக்கு ஒரு ப்ரொமோஷன் கிடைத்தது, "பெரிய தம்பீ!" என்று. ஏனென்றால் ஊரிலே இன்னொரு தம்பி தோன்றிவிட்டான். அவன் 'சின்னத் தம்பி'. அவன் வேறு யாரும் அல்ல; கமலம் பெரியவளாய், மணமாகிப் பெற்றெடுத்த குழந்தைதான். அவன் பிறப்பதற்கு முன்னே எத்தனையோ நடந்து விட்டது. உலகத்திலே எத்தனையோ மாறுதல்; ஊரிலே எத்தனையோ மாறுதல்; என்னிடமும் கமலத்திடமுமே எத்தனையோ மாறுதல்! — மாறுதலா? அவனை நான் எங்கே, எப்போது, எப்படிப் பார்த்தேன்!...

கமலம் பூச் சவுக்கங்கள் போடுவாள். அவள் போட்ட ஒரு சவுக்கத்திலே, நான் விளையாடுவேனே, அந்த மர யானை மாதிரி ஓர் உருவம் போட்டாள். அதைப் போட்டுப் பூர்த்தி செய்தவுடனே என்னிடம் காட்டி, "தம்பீ, இதோ பார். இது என்னடா?" என்று கேட்டாள்.

"யானை - என் யானை!" என்று கத்திக்கொண்டே அதைப் பிடித்து இழுத்தேன்.

“இந்தாடா! அதைப் பிச்சுப்பிடாதே” என்று, வெடுக்கென்று, அதை அவள் என் கையிலிருந்து பிடுங்கினாள். அட பகவானே! அது என்ன விபரீதத்தில் கொண்டுபோய் விட்டது! இன்று நினைத்தால், அதெல்லாம் பெரிய மாயையாகத் தோன்றுகிறது. மனித உள்ளம், ஒரு காட்டாறு; அதன் உணர்ச்சி வெள்ளம் அறிவுக் கரைகளை உடைத்துக் கொண்டு பொங்கி எழும்போது, ஆண்டவனேகூட அதற்கு அணை போட முடியாது என்றுதான் தோன்றுகிறது.

பூச் சவுக்கத்தை, கமலம் என் கையிலிருந்து பிடுங்கியபோது, என் தாய் அங்கே வந்தாள்.

“ஏண்டி, மூதேவி! உன் சவுக்கத்தைக் குழந்தை கடிச்சா முழுங்கிப்பிடுவன்! நாய் கவ்வறமாதிரி விழுந்து பிடுங்கறையே!” என்று சீறிக் கமலத்தை என் தாய் ஓர் அறை அறைந்தாள்.

உடனே கமலம் அழுதுகொண்டே சவுக்கத்தை என் மூஞ்சியில் எறிந்துவிட்டு, “இனிமே இந்தச் சனியன் பிடிச்ச வீட்டிலேயே நான் இருக்கப் போறதில்லே” என்று சொல்லி வாசலிலே ஓடினாள்.

அன்று பகல் சாப்பிடவே அவள் வரவில்லை. எங்கே தேடியும் அவளைக் காணவுமில்லை. தெரு முழுதும் எல்லா வீட்டிலும் தேடியாயிற்று. எல்லாக் கிணறுகளையும் குட்டைகளையும் கலக்கியாயிற்று. அவள் அகப்படவில்லை. அந்தக் கோபத்திலே, என் தாயைப் பாட்டி ஏதோ திட்டினாள்.

“என்னவோ, என் வாய் அடைத்துக் கிடக்காதோ? கூடப் பிறந்ததுதானேன்னு நினைச்சு ஒரு வார்த்தெ சொல்லிப்புட்டேன்; ஒரு தட்டுத் தட்டிப் பிட்டேன். அது இத்தனை அனர்த்தமாப் போச்சே!” என்று கண்ணீர் விட்ட என் தாய் சாப்பிடவில்லை.

பாட்டி பெருமூச்செறிந்தாள். அவளும் சாப்பிட வில்லை. ஆளுக்கு ஆள் எல்லாரும் என்னவோ முணு முணுத்துக்கொண்டேயிருந்தார்கள்.

"நீ வாடா ராஜா! நீ ஏன் சாப்பிடாதிருக்கே?" என்று இரங்கிய குரலில் என்னை அழைத்தாள் பாட்டி.

"இதனாலேதான் இத்தனையும் வந்துது! இதுக்கு என்ன சோறு இந்த வீட்டிலே? கிடக்கட்டும் பட்டினி" என்று என்னை ஓர் அறை அறைந்தாள் தாய். நான் சுருண்டு விழுந்து அப்படியே தூங்கி விட்டேன்.

மாலையில்தான் விழித்தேன்.

மாக்கல் தீபம், சுவாமி படத்துக்கு அருகே சுவரில் மாட்டியிருந்த ஒரு மரத்தட்டில் மினுக்கு மினுக்கென்று எரிந்துகொண்டிருந்தது. அந்தத் தீப நிழலிலே, முனகலும் பெருமூச்சுமாய், என் தாய் உட்கார்ந்திருக்கிறாள். அவளருகே நின்றபடி, "ஏண்டி கோமு, இப்ப என்னடி வந்துடுத்து? எழுந்திருடி. நீயும் பட்டினி; குழந்தையும் பட்டினி. யாரு என்ன அப்படிப் பெரிய குத்தம் பண்ணிப்பிட்டா? ரெண்டும் சிறிசுகள். என்னமோ அப்படித்தான் இருக்கும். சாப்பிடியம்மா" என்று பாட்டி கெஞ்சிக்கொண்டிருந்தாள்.

மற்றொரு பக்கத்தில், கூடத்திலிருந்து முற்றத்து நிலவிலே, தன்னந்தனியாய் அணில் குஞ்சுபோல், குதித்துக் குதித்து விளையாடிக்கொண்டிருந்தாள் கமலம். அவளை எங்கேயோ ஊருக்கு வெளியே தோப்பில் கண்டுபிடித்து, வீட்டுக்கு அழைத்து வந்திருக்கிறார்கள்.

நான் கண்ணைக் கசக்கிக்கொண்டு எழுந்து உட்கார்ந்ததைக் கண்ட கமலம், "தம்பீ, ஓடி வா. நிலாப் பூச்சி, நிழல் பூச்சி ஆடுவோம்" என்று அழைத்தாள்.

நானும் சிரித்துக்கொண்டே எழுந்து, அவளிடம் ஓட முயன்றேன்.

முடங்கிக் கிடந்த சர்ப்பத்தைக் குத்திவிட்டது போல், சீறி எழுந்தாள் என் தாய். "ஏ புத்தியில்லாப் பிணமே! வா இங்கே. அந்தப் பெரிய மனுஷியோடே உனக்கென்னடா விளையாட்டு?" என்று சொல்லி, ஓடிவந்து என் கையைப் பிடித்து இழுத்து, ஒரு மூலையில் சுவரருகே என்னை உட்கார்த்திவிட்டாள்.

"அடி கோமு, இவ்வளவுதான் தெரியுமா உனக்கு? இன்னும் உண்டோ?" என்று வருத்தத்தோடு கேட்டாள் பாட்டி.

நயந்தும் கோபித்தும் பரிந்தும் பலவிதமாய் என் தாயைச் சமாதானம் செய்து பார்த்தாள் பாட்டி. தாய் ஒன்றுக்கும் மசியவில்லை.

அன்றிரவு என் தாய் பட்டினி; பாட்டியும் பட்டினிதான். வீடே அழுது வழிந்தது.

மறுநாள் என் தாய் என்னை அழைத்துக்கொண்டு புக்ககத்துக்குப் புறப்பட்டுவிட்டாள்.

இந்த வருத்தம் பல வருஷங்கள் வரை நீடித்தது; தீராத மனஸ்தாபமாக வளர்ந்தது. பாட்டி வீட்டிலே எத்தனையோ வாழ்வு தாழ்வுகள் ஏற்பட்டன. ஒன்றுக்கும் நாங்கள் போகவில்லை.

கமலத்துக்கு எங்கேயோ கல்யாணம் நடந்தது. அதற்கு நானோ, தாயோ, வேறு யாருமோ போகவில்லை. கமலம், கணவனின் வீடு சென்றாள்; குழந்தை பிறந்தது. எல்லாம் கேள்விப்பட்டோம். ஒரு வைபவத்தையும், எங்கள் கண்ணாரக் காண, நாங்கள் கொடுத்து வைக்கவில்லை.

ஆனால், நான் மாத்திரம் அடிக்கடி, கமலத்தைப் பற்றி நினைப்பேன்; அப்போதெல்லாம் அந்தப் பின்னல் சவுக்கமும் மர யானையும் ஞாபகத்துக்கு வரும். என்ன ஆச்சரியமான யானை! எத்தனை பட்சணங்களைத் தின்ற

யானை! உண்மையிலே யானையா தின்றது? என்றால் அதை நம்ப முடியவில்லை. வயசாகிவிட்டது; அநுபவமும் கல்வியும் பெற்றிருக்கிறேன். ஓ! ஒரு பொம்மை யானை தின்பண்டங்களை யெல்லாம் எங்கேயாவது தின்றிருக்க முடியுமா? இனியும் அதை நான் நம்ப முடியுமா? இல்லவே இல்லை; யானை தின்னவே இல்லை. அது நிச்சயம், பின்னே?

அந்த யானையோடு நானும் கமலமும் விளையாடிய காட்சியைத் தினம் தினம் ஞாபகத்துக்குக் கொண்டு வருவேன். யானை எப்படி நிற்கும்? நான் எப்படி உட்கார்ந்திருப்பேன்? கமலம் எப்படி உட்கார்ந் திருப்பாள்? இதையெல்லாம் யோசித்து யோசித்துப் பார்ப்பேன். என் பட்சணங்களை யானை தின்றிருக்க முடியாது; ஆனாலும், அவை மாயமாய் மறைந்து போயின; கமலந்தான் எப்படியோ கைச்சாதுரிய மாய்ப் பட்சணங்களைக் கவர்ந்திருக்கிறாள்; வேறு வழியே இல்லை. ஆனால், அது எப்படி? என்றால் அதைக் கற்பனை செய்யவே முடியவில்லை. வெறும் ஊகந்தான்.

இத்தனை வருஷம் கழித்து அந்தக் காட்சியை நான் நினைக்கும்போதெல்லாம், எனக்குத் துளியும் கோபம் வருவதில்லை; நகைப்புத்தான் வரும். மனத்திலே என்னை அறியாத ஒரு களிப்பும் உண்டாகும். குறும்புக்காரக் கமலத்தின் சிரித்த முகமும் என் கண் முன்னே வந்து நிற்கும். பட்சணங் களை என்னிடமிருந்து பறிப்பதிலே அவளுக்கு ஆனந்தமில்லை. எத்தனையோ தடவை, தன் பங்கு பட்சணங்களையும் வேறு பண்டங்களையும் அவள் எனக்கு அன்போடு கொடுத்திருக்கிறாள். என்னை ஏமாற்றுவதிலேதான் அவளுக்கு ஆனந்தம். ஏமாந்து போவதிலே நானுந்தான் அன்று ஆனந்தம் அடைந்தேன். இப்பேர்ப்பட்ட கமலத்தைப் பார்த்து, எத்தனை வருஷம் ஆயிற்று! அவள்தான் பாவம்

பண்ணினுள்; அன்புக் களஞ்சியமான பாட்டியைக் கூடப் பார்க்க முடியவில்லையே! எத்தனையோ நாள் ஏங்கினேன்; பெருமூச்செறிந்தேன். பல நாள் கனவிலே, நான் மீண்டும் பாலகனுகிப் பாட்டியுடன் கொஞ்சி, கமலத்தோடு விளையாடி, யானைக்குத் தின்பண்டம் அளித்ததுதான் எனக்குக் கிடைத்த ஆறுதல். சில சமயம் கமலத்தின் குழந்தையைக் கூடக் கனவிலே கண்டிருக்கிறேன்; அப்போதும், நான் சிறுவனுய்த்தான் இருப்பேன்.

''அம்மா! பாட்டியைப் பார்க்க எனக்கு ஆசையாயிருக்கே; உனக்கு ஆசையாய் இல்லையா?'' என்று ஒன்று இரண்டு முறை தாயைக் கேட்டேன்.

''எனக்கு அம்மாவும் கிடையாது; தங்கையும் கிடையாது. நீ வேணுமானு, போய் உறவு கொண்டாடிட்டு வா'' என்று சலித்துக்கொள்வாள் தாய். அவள் மகா திடசித்தம் உள்ளவள்; வீம்பு மிகுந்தவள்; நெஞ்சழுத்தம் நிறைந்தவள். அவளுக்கு இல்லாத உறவு எனக்கேது?

ஒரு சமயம் என் தாய்க்கு உடம்பு அசௌக்கியம் ஏற்பட்டது.

''சகாயத்துக்கு, உன் அம்மாவை வரவழைக்கட்டுமா?'' என்று அவளைக் கேட்டார் என் தகப்பனுர்.

அவருக்கும் அதே பதில்தான்: ''எனக்கு அம்மாவும் கிடையாது; தங்கையும் கிடையாது. உங்கள் அம்மாதான் என் அம்மா. உங்கள் தங்கை தமக்கைகள்தான் எனக்கும் தங்கை தமக்கைகள். அவர்கள் செய்யும் ஒத்தாசை எனக்குப் போதும்.''

அத்தைமாரும் தகப்பனுரைப் பெற்ற பாட்டியுமே பக்கத் துணை. ஆனாலும், தாயின் நோய் சற்றுக் கடுமைப்பட்டது. எல்லாரும் பயந்துவிட்டார்கள். என் தாயைப் பெற்ற பாட்டிக்கு, யாரும் அறியாமல், என் தகப்பனுர் ஒரு கடிதம் எழுதிப்போட்டார்.

சில தினங்களில் பாட்டியும், சிற்றன்னைகள் மூவரும் ஓடி வந்தார்கள். கமலம் தன் குழந்தை யோடு வந்தாள். என் மனம் துள்ளிக் குதித்தது. மட்டற்ற மகிழ்ச்சியால், என் உள்ளம் குதூகலித்தது. அதிலேதான் என்ன வேதனை!

படுக்கையில் இருந்த தாயிடம் ஓடோடிச் சென்றேன். "அம்மா! அம்மா! கமலம் வந்திருக்கா. அவ குழந்தை வந்திருக்கு. பாட்டி வந்திருக்கா. எல்லாரும் வந்திருக்கா" என்று கண்ணீரோடு கூச்ச விட்டுக்கொண்டு சொன்னேன்.

தாய் தலை நிமிர்ந்தாள். அந்தத் தள்ளாத நிலையிலும், அவள் கண்களில் ஆத்திரம் ஜொலித்தது. கம்பீரமான குரலில், "அவாளெல்லாம் யாரு? யாரையுமே எனக்குத் தெரியாது. யாரும் இங்கே வரவேண்டாம், என்னைக் காப்பாத்த வேண்டாம்னு சொல்லு" என்று துடுக்கோடு சொன்னாள்.

பெண்ணைத் தேடிவந்த பாட்டியின் காதிலே அது விழுந்தது. அவள் அதைச் சட்டை செய்யாமல் உள்ளே வந்தாள். கமலம் மட்டில் இந்தக் கர்ண கடோரமான சொல்லைக் கேட்டு, உள்ளே வரப் பிடிக்காமல் கூடத்திலேயே நின்றுவிட்டாள். நான் அவளிடம் திரும்பி ஓடினேன். அவளுடைய குழந்தையோடு கொஞ்சினேன்.

"சின்னம்மா! இதும் பேர் என்ன?"

"வெங்கடேசன்."

"ஓ! திருப்பதிப் பெருமாள் பேரா?"

"ஆமாம். உன் மரப்பாச்சிப் பெருமாள் இல்லே; அதும் பேரு. ஆனா, கண்ணன்னுதான் கூப்பிடறோம்."

"சின்னம்மா, உனக்கு அது ஞாபகமிருக்கோ - நம்ப விளையாட்டு யானை ஞாபகமிருக்கோ? அது சீடை, முறுக்கு, பட்சணமெல்லாம் தின்னுமே; அது ஞாபகமிருக்கோ?" என்று பரபரப்புடன் கேட்டேன்.

மேகம் சூழ்ந்த வானத்திலே சிறிது இடைவெளி தோன்றி ஜொலித்த சூரியனைப்போல், வாடிய அவள் முகத்திலே ஒரு பிரகாசம் தோன்றியது. அவள் களுக்கென்று சிரித்தாள். ஆனால் ஒன்றும் பேசவில்லை.

"சின்னம்மா, நிஜமாய்ச் சொல்லு: நீதானே என்னை ஏமாத்தினே? யானை சாப்பிடவே இல்லையே?" என்றேன்.

அவள் மீண்டும் சிரித்தாள். பதில் கிடையாது.

இதற்குள் பாட்டி உள்ளே யிருந்து கண்ணீரும் கம்பலையுமாய், "எனக்குக் குடுத்து வெச்சது அவ்வளவு தான். என்னைக் கண்டா அவளுக்கு வெப்பங் காயாக கசந்து போச்சு. பெத்த மனம் கேக்கறதோ! எப்படியாவது அவ மகராஜியா இருந்தாப் போரும். நாம்ப போவோம்; வாம்மா கமலம். அவ முகம் குடுத்துப் பேசாதபோது, அப்புறம் இங்கே நமக்கு என்ன இருக்கு?" என்று வருந்திக்கொண்டே வெளியே வந்தாள். என்னைப் பார்த்ததும், அவளுடைய அழுகை அதிகமாயிற்று. என் கண்ணும் கலங்கிவிட்டது. "உன்னைக் கொண்டாடக்கூட எனக்குப் பாத்தியமில்லாமல் போயிடுத்துடா, ராஜா" என்று சொல்லி, அவள் என் முகத்தைத் தடவி முத்தமிட்டுக்கொண்டாள்.

அப்புறம், பாட்டியும் சிற்றன்னைகளும் அதிக நேரம் தாமதிக்கவில்லை. அவரவர் ஊருக்குப் போய் விட்டார்கள்.

தெய்வ கிருபையால் ஒன்றும் அசம்பாவிதம் நேரவில்லை. இந்தக் கண்டத்துக்கு என் தாய் பிழைத்து விட்டாள். ஆனால், அவள் உடம்பு மிகவும் தளர்ந்திருந்தது. மனத்திலும் நிம்மதியில்லை. மனம் சலித்துக்கொண்டே, பல வேளை முனகுவாள். "அம்மா!......தங்கை!......தமக்கை!......உறவு!......" என்று முணுமுணுப்பாள்.

பாட்டியும் மற்றவர்களும் வந்துபோன விஷயத்தைப் பற்றி எப்போதாவது அவளிடம் பேச்செடுத்தால், அவளுக்கு ஏதோ மனவேதனை உண்டாகும். "ஐயோ! ஏன் ரகு என்னைத் தொல்லைப் படுத்தறே? .....அவ மகா உத்தமி..... கமலம்.....அவா எல்லாருமே நல்லவா....என் தலையெழுத்து.... எனக்குப் பாக்கியமில்லே" என்று பாதி வார்த்தைகளை விழுங்கிக்கொண்டே ஏதோ சொல்லி நகர்ந்து விடுவாள். ஆனால் அவளுடைய வீம்பு மட்டும் குறையவில்லை; உறவு கொண்டாடவும் அவள் இஷ்டப்படவில்லை.

திடீரென்று ஒரு நாள் ஒரு கடிதம் வந்தது. பாட்டி வீட்டிலே, கமலம் வந்திருக்கிறாள்; சாகக் கிடக்கிறாள்—இதுதான் விஷயம்.

அம்மா மனசு மாறிவிட்டது. உடனே போக வேண்டுமென்று அவள் ஆத்திரப்பட்டாள். இறக்கை இருந்தால், அவள் நிச்சயமாய்ப் பறந்தோடியிருப்பாள்; அவ்வளவு பரபரப்பு அவளிடம் தென்பட்டது.

அப்பா, அம்மா, நான் மூவரும் பிரயாணம் ஆனோம். வழியிலெல்லாம், என் தாய், "ஐயோ! வீட்டுக்கு வந்தவளை வான்னு அழைக்கலையே. முகத்தைக்கூடப் பார்க்காமே விரட்டினேனே. முக முழியாவது கிடைக்கிறதோ இல்லியோ!" என்றெல்லாம் கதறிக்கொண்டே வந்தாள்.

பாட்டி வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தோம். கமலத்தின் நிலைமை மோசமாய்த்தான் இருந்தது. என் தாயும் பாட்டியும் ஒருவரையொருவர் கண்டதும், வாய் பேசாமல் கண்ணீர் விட்டார்கள். இன்னும் என்னைச் சிறு குழந்தை போலவே பாவித்த பாட்டி, வாரியெடுத்துத் தன் மடிமீது உட்கார்த்திக் கொண்டாள்.

கமலத்தின் படுக்கையருகே நாங்கள் சென்ற போது, ''கமலம், கமலம்! கண்ணை முழி. யார் வந்திருக்கா, பாரு. ரகுடீ, ரகு!'' என்றாள் பாட்டி.

கமலம் உடம்பை வளைத்துக்கொண்டு, சிரமப் பட்டுத் திரும்பி, கண்ணை விழித்துப் புன்சிரிப்புச் சிரித்தாள். வாயைக் குவித்து ஏதோ பேச முயன்றவள், முடியாமல் மீண்டும் மூடிக்கொண்டாள். என் தாய், தன் முகத்தை மூடிக்கொண்டு, சோக உருவாய் நின்றாள்.

அப்போது, எனக்குப் பழைய காட்சி நினைவுக்கு வந்தது. கமலம் விழித்திருந்தால், அன்று தாய் சொன்னது போல்தான் இன்று கமலமும் சொல்லி யிருப்பாளோ? இல்லை. மாலையில் கமலம் விழிக்கத் தான் விழித்தாள். என் தாயைக் கண்டதும், ''வா, அக்கா! எங்கே கையை நீட்டு'' என்று அன்போடு அழைத்தாள். கண்ணீரோடு நீட்டிய என் தாயின் கையிலே, கமலம் தன் கையை வைத்து, அழுத்தினாள்.

''கமலம்! கமலம்!'' என்று தீனக்குரலில் உச்சரித்துப் பெரிமூச்சு விட்டாள் தாய்.

கமலத்தின் உடம்பு தேறவில்லை. இரண்டொரு நாள் இப்படியே கழிந்தது. கூடத்திலே நான் உட்கார்ந்திருந்தேன். பாட்டி எனக்கு ஏதோ பலகாரம் கொண்டுவந்து வைத்தாள். யார் எப்படிச் சாகக் கிடந்தால் என்ன? எந்த விபரீதம் நடந்தால் என்ன? நம் பாழும் வயிறு கேட்கிறதா? இன்று தானே தொலைக்கவேண்டி யிருக்கிறது? நான் பலகாரத்தை விண்டு துளிதுளியாய்த் தின்ன ஆரம் பித்தேன். வேண்டா வெறுப்போடும் வேதனையோடுந் தான் தின்றேன். கமலம் பிழைக்க மாட்டாளா? அந்தப் பழைய கால விளையாட்டு மீண்டும் என்றாவது திரும்புமா? இப்படி என்ன என்னவோ அர்த்த மில்லாத எண்ணங்கள்.

இப்போது என் பக்கத்தில் சுவருக்குச் சமீபத்தில் கமலத்தின் குழந்தை, அந்த மர யானையை வைத்து விளையாடிக்கொண் டிருப்பதைக் கண்டேன்; பக்கத்திலே யாருமில்லை. பாட்டியும் உள்ளே போய் விட்டாள்.

“கண்ணு, இங்கே கொண்டா அதை” என்றேன்.

குழந்தை அந்த யானையை என்னிடம் கொண்டு வந்தான். யானையைத் தடவிக் கொடுத்தேன். அதன் முதுகிலே நான் அறைந்திருந்த ஆணியை யாரோ பிடுங்கி விட்டார்கள். ஆனால், அந்த வடு மாத்திரம் அப்படியே இருந்தது. யானை ஏதோ வேதனை தாங்காமல் அழுவதுபோல் தோன்றியது.

திடீரென்று என்னை அறியாமலே, என் கை ஒரு தோசை விள்ளலை, அந்த யானையின் வாயருகே கொண்டுபோய் நீட்டியது. என் அறிவை மீறிய பழக்கத்தின் காரியம். மறுவிநாடி, யாராவது கவனிக்கிறார்களோ என்ற வெட்கத்தால் நாற்புறமும் பார்த்துக்கொண்டு, கையைப் பின்னால் இழுத்தேன்.

என்ன அதிசயம்! கையிலே தோசை விள்ளலைக் காணோம். என்னைத் தூக்கிவாரிப் போட்டது. ஏதோ ஒரு பயங்கர சம்பவம் நிகழ்ந்ததுபோல் நடுங்கியபடி யானையை வெறித்துப் பார்த்தேன்.

பக்கத்திலே, சிறுவன் சிரித்துக்கொண்டு, “எனக்குத்தானே, அண்ணா, தந்தே இது?” என்று சொல்லி அந்தத் தோசை விள்ளலைத் தின்றுகொண் டிருந்தான்.

எனக்குச் சிரிப்பு வந்தது. என்ன மூடத்தனம்!

“ஆமாம்; உனக்குத்தான், கண்ணு! சாப்பிடு.”

இப்படி நான் சொல்லிக்கொண்டே யிருக்கும் போது, “அடே ரகு! ஓடியாடா. குழந்தையைக் கொண்டா, அவள் கூப்பிடறாடா” என்று உள்ளே யிருந்து, அம்மா அழைத்தாள்.

குழந்தையைத் தூக்கிக்கொண்டு உள்ளே போனேன். கமலம் படுத்த படுக்கையாய், நினைவு பிசகாமல் ஈனக்குரலில், ''கண்ணு! ரகு! எங்கே? அவர்கள் வரல்லையா இன்னும்?'' என்று முனகிக் கொண்டிருந்தாள்.

''இதோ கண்ணன்.... இதோ ரகு இருக்கான், கமலம்.''

இருவரும் கமலத்தின் பக்கத்தில் போய் நின்றோம்.

குழந்தையைக் கமலம் உச்சி முதல் உள்ளங்கால் வரையில் ஒரு முறை தடவிக் கொடுத்தாள். தலை நிமிர்ந்து முத்தமிட முடியாததால், வாயை மட்டும் குவித்து, முத்தமிடும் பாவனை செய்தாள்.

பிறகு, ''கிட்ட வா, தம்பீ'' என்று என்னை அழைத்தாள். அவள் கண்கள் பளபளத்தன. முகத்திலே புன்சிரிப்பு மாறவில்லை.

மூச்சுத் திணறிக்கொண்டே, மங்கிய குரலில், ''தம்பீ! சமத்தாயிரு. நீ அப்ப கேட்டியே, யானை பட்சணம் சாப்பிட்டதான்னு-ஏண்டா அசடே, அது எங்கேயாவது சாப்பிடுமா? – நான்தான்டா உன்னை ஏமாத்தினேன் – அதை மறந்துடு; மனசிலே வெச்சுக் காதே-வெச்சுக்கலேன்னு சொல்லு - அந்தச் சவுக்கம் இருக்குப் பாரு; அதை....'' என்றாள். அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. பிறகு, அவள் பேசவே இல்லை. வீடு கண்ணீர் வெள்ளத்தில் அமிழ்ந்தது.

★

நாகரத்தினம்

மல்லிகைப் புதர் மறுபடியும் துளிர்த்துவிட்டது. அதிலே அரும்பு எடுக்கும்போதுதான், உளுந்தாயியின் உள்ளத்தில் என்ன என்னவோ எண்ணங்கள் - இன்பக் கனவுகள் - எழும். அந்த மணிப்பாம்பு

வசித்ததும் இந்தப் புதருக்கு அடியில் இருந்த வளை களிலேதான்.

சில நாளைக்கு முன்னே தழை மண்டிக் கிடந்தது இந்த மல்லிகைப் புதர். ஒரே ஓர் அரும்புகூட அப் போது அதில் முகிழ்க்கவில்லை. உளுந்தாயி புதரைச் சுற்றிச் சுற்றி வருவாள். அரும்பே அகப்படாது. கையிலே அரும்பு நிறையும்போதுதானே அவள் உள்ளத்திலே எண்ணங்கள் கொப்பளிக்கும், குதூகலம் உண்டாகும்? அரும்பைக் காணமல் உளுந்தாயி ஏமாற்றமடைவாள்; ஏங்குவாள். இந்த மல்லிகைப் புதரிலே அவள் அரும்பு எடுக்கும்போது தான் மாணிக்கமும் பெரும்பாலும் வந்து அவளிடம் கேலிக்கு ஆளாவான். எது பூ அரும்பு, எது இள அரும்பு என்று தெரியாமல் எல்லாவற்றையுமே அவன் பறித்து விடுவான். எத்தனை நாள் அந்த வித்தியாசத்தை அவள் எடுத்துச் சொல்லியும் அவனுக்குப் புரியவே இல்லை. திரும்பத் திரும்ப அந்தப் பிசகை அவன் செய்துகொண்டேயிருந்தான். அது கண்டு உளுந்தாயிக்கு ஒரு பக்கம் உண்மை யிலேயே கோபம் வரும்; மறுபக்கம் சிரிப்பு வரும். சீறுவாள்; கேலி செய்வாள். இத்தனையையும் அள வற்ற பொறுமையுடன் மாணிக்கம் பொறுத்துக் கொள்வான். அவனுங்கூட ஊருக்குப் போய் விட்டான். அவன் போனதை அறிந்துதான் இந்தப் புதரும் இப்படித் தழை மண்டி விட்டதோ, ஒருவேளை!

அந்தியில் நிலாக் கண்டதும், இந்தப் புதரிலே அரும்புகளைப் படிபடியாய் உளுந்தாயி எத்தனையோ முறை பறித்திருக்கிறுள். இரவில் ஒரு பானை தண்ணீரிலே அந்த அரும்புகளைப் போட்டுவைத்தால், விடியும்போது மலர்ந்து அவை என்ன அற்புதமாய் மணம் வீசும்! அவற்றை அவள் மிகவும் நேர்த்தியாய்த் தொடுப்பாள். அரசமரத்துப் பிள்ளையாருக்கு

அணிந்தது போக, மீதியைத் தன் தோழிகளுக்கெல்லாம் கொடுத்து, தன் கொண்டையிலும் கொஞ்சம் செருகிக்கொள்வாள்.

என்றும் பூத்துவந்த அந்தப் புதர் ஏன் திடீரென்று ஒரு நாள் தறை மண்டி, அரும்பே கட்டாமல் நின்றது? பூவாத அசோகமரங்கூட அழகியின் கால் பட்டால் பூக்கும் என்பார்கள். உளுந்தாயி அரும்பு எடுக்கும் போதெல்லாம் நித்தமும் அவள் காலடியில் மிதிபட்ட மல்லிகைப் புதருக்கு ஏன் இந்தச் சண்டித்தனம்?

"அப்பா, இதென்ன பூக்கவே மாட்டேங்குது?" என்று முகம் சுளித்தபடி தகப்பனைக் கேட்டாள் உளுந்தாயி.

அவள் இன்னமும் கன்னி கழியாத கட்டழகி. அவளுக்கு என்ன தெரியும், இந்தப் பூச்செடி ரகசியமெல்லாம்?

அவளுடைய தகப்பன் சாமிச்சேந்தன் புன்சிரிப்புப் பூத்தான். தன் ஒரே செல்வமகளின் வெகுளித்தனமான கேள்வி அவனுக்குக் களிப்பூட்டியது. மனைவியை இழந்தது முதல், தன் மகளிடம் அவனுக்கு அளவற்ற அன்பு. 'பாவம், தாயில்லாப் பெண்!' என்று நினைக்கும் போதெல்லாம் அவன் உள்ளம் நெகிழும். அவனுக்கு என்ன, செல்வத்தில் குறைவா? மதிப்பில் குறைவா? அவன் மச்சுவீட்டுக்காரன். எல்லாருக்கும் நல்லவன். நல்ல உழைப்பாளி. சுவாமிக்குப் பயந்தவன். 'சாமியார்' என்றே அவனை ஊரிலே எல்லாரும் சொல்வார்கள். அவ்வளவு பற்றற்றவனாய் அவன் வாழ்ந்தான். ஆனால், அவனுக்கு இன்று வாழ்க்கையில் ஒரே ஓர் ஆவல், ஒரே ஒரு கவலை மட்டும் உண்டு. மகள் உளுந்தாயி எந்நேரமும் சந்தோஷமாக இருக்க வேண்டும்; அவள் துளிமுகம் சிணுங்கினாலும் அவனால் பொறுக்க முடியாது.

"என்ன சிரிக்கிறீங்களே! இனிமே இது பூவே பூக்காதா?" என்று மறுபடியும் கேட்டாள் உளுந்தாயி.

"ஒரே வாரத்தில் அதைக் கொள்ளை கொள்ளையாய்ப் பூக்கச் செய்கிறேன். கவலைப்படாதே, தங்கம்" என்றான் சாமிச்சேந்தன்.

நிறைய வைக்கோலை எடுத்துப் புதரைச் சுற்றிலும் போட்டான்; கொளுத்திவிட்டான். மல்லிகை இலைகள் வாடிக் கருகின. இரண்டே நாளில் அத்தனை சருகும் உதிர்ந்து புதர் முழுவதும் மொட்டையாய் நின்றது. மீண்டும் எருவிட்டுத் தண்ணீர் பாய்ச்சினான் சாமிச்சேந்தன். மல்லிகைப் புதரில் மெத்தென்று தளிர்கள் உதயமாயின. அத்தனையும் ஒரே அரும்புகளாய் முகிழ்த்துக் குலுங்கின. உளுந்தாயியின் உள்ளமும் பூரித்துக் குதூகலித்தது. அவள் அரும்பு எடுக்கத் தொடங்கினாள்.

இப்போதுதான் அவளுக்கு அந்த நாகப் பாம்பின் ஞாபகம் வந்தது. 'அன்னக்கி அப்பா வைக்கலைப் பரப்பிக் கொளுத்திச்சே. அப்போ வளைக்குள்ளே இருந்த பாம்பு என்ன ஆச்சுதோ; மாண்டு போயிருக்குமோ?' என்று அவள் எண்ணினாள். "ஐயோ பாவம்!" என்று தனக்குத் தானே சப்புக் கொட்டிக்கொண்டாள்.

சேந்தனுக்குச் செடி கொடிகளெல்லாம் குழந்தைகள் போல. அவன் சிறிது தூரத்திலே ஒரு கத்திரிச் செடியில், பூச்சி அரித்த இலையைக் கிள்ளி எறிந்து, அன்புடன் அதன் மற்ற இலைகளைக் கோதிவிட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

நாகம் மாளாதிருக்குமானால், இரவில் உளுந்திதான் அதைக் கண்டுகொள்ளலாமே! ஆனால், என்னவோ சில நாளாக அவளுக்கு அந்த ஞாபகமே இல்லை. அவளுக்குத்தான் ஞாபகம் இல்லையா?

அல்லது அதுதான் மாண்டு விட்டதோ? "இன்னக்கி ராவிலே அதைப் பார்த்துட்டாப் போவுது" என்று அவள் தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். இருந்தாலும் உளுந்தியின் மனத்துக்குச் சமாதானம் ஏற்படவில்லை. "அப்பா, நீங்க வைக்கலைப் போட்டுக் கொளுத்தினீங்களே, அப்போ அந்தப் பாம்பு செத்திடுச்சோ, என்னமோ!" என்று அவள் தகப்பன் காதில் விழச் சொன்னாள்.

"என்ன சொல்றே?" என்று அரைச் சிரிப்புடன் கேட்ட சேந்தன், "பாம்பா? அதுவா சாவும்? எதிக்கவும் தெரியாமெ ஓடவும் தெரியாமெ அடிவாங்கற அநாதைங்க மனிசங்களிலேதான் உண்டு. பாம்பு, பறவையெல்லாம் அப்படி இல்லே. பாம்பு அப்பவே ஓடிப்போயிருக்கும்" என்றான்.

இந்தச் சமயத்தில், "என்ன அம்மான், வந்திட்டேன். உளுந்தி என்ன, பூப் பறிக்குதா?" என்று கேட்டுக்கொண்டே மாணிக்கமும் வந்து சேர்ந்தான்.

"வாடாப்பா" என்று அவனை வரவேற்றான் சேந்தன்.

உளுந்தி அப்படியே சட்டென்று புதருக்குள்ளே மறைவாக உட்கார்ந்து ஒளிந்துகொண்டாள்.

"ஓ! நான் பாக்கலேன்னு நெனைச்சுக்கிட்டே? சும்மா எளுந்திரு, குட்டி!" என்றான் மாணிக்கம்.

இடியிடியென்று சிரித்துக்கொண்டே, "வா, அத்தான்! இந்தப் பச்சைக் கொளந்தைங்க மென்னியையெல்லாம் திருகலாம், வா" என்று எழுந்தாள் உளுந்தி.

"அடடா! நீதான் ரொம்பக் கெட்டிக்காரி, மத்தவங்களுக்கு என்ன தெரியும்?" என்று சொல்லிக் கொண்டே புதரின் கிட்டச் சென்றான் மாணிக்கம்.

அவனும் அரும்பு எடுக்க ஆரம்பித்தான். தூவெள்ளையாக இருக்கும் அரும்புகளை விட்டு,

பசுமை மாருத தளிர் அரும்புகளை யெல்லாம் அவன் பறித்துவிட்டான். தர்க்கம், சீற்றம், சிரிப்பு எல்லாம் தொடர்ந்தன.

"அது கெடக்கு, மாணிக்கம். நாளைக்கு அந்தத் தென்னங் கன்னுகளுக்குத் தண்ணி இறைக்கணும். வருவியா? காலையிலே பத்து நாளிகைக்குள்ளே எறைச்சு முடிச்சிடணும். அதுக்கு மேலே புழுக்கம் தாங்காது" என்றான் சேந்தன்.

"நல்லா வர்றேன்" என்று மாணிக்கம் பதில் தந்தான்.

"ஏன்? கொள்ளை நெலாக் காயுதே. இப்பவே அத்தான் நாலு சால் எறைச்சாப் போவது. பாத்தியிலே நான் தண்ணி கட்டிடுவேன். நீங்ககூட உடம்பை வாட்டிக்கிட வாணும்" என்றாள் உளுந்தி.

"அடேயப்பா! பாத்தியா மாணிக்கம்! உளுந்தி வளந்திடுச்சு. அப்பனை வேலையே செய்யாமெ குந்த வெச்சுச் சோறு போடப் போவுது" என்றான் சேந்தன்.

"அதைப்பத்திக் கவலெப்படாதீங்க, அம்மான். அது போடாட்டியும் நான் போடறேன்" என்று உளுந்தியைக் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டே சொன்னான் மாணிக்கம்.

உடனே உளுந்தி கொல்லென்று சிரித்தாள். சேந்தன் வாய்க்குள்ளேயே சிரித்துக்கொண்டான்.

சேந்தனுக்குத் தெரியும்: ஊரிலே 'இதுகள் ரெண்டுந்தான் சரியான ஜோடி.' தன் மகளுக்கு அவன் வேறே வரன் பார்க்கப் போவதில்லை. ஆனாலும் இந்த வயசிலே 'இதுகள்' இரண்டும் இப்படிக் கும்மாளம் போடலாமா என்பது மட்டில் அவனுக்குக் கொஞ்சம் சந்தேகமாகவே இருந்தது. என்றாலும், அவன் இவர்கள் விஷயத்தில் அதிகமாய்க் குறுக்கிடுவதில்லை.

"சரி, பதனமா அரும்பு பறிச்சிட்டு, சடுதியா வந்திடுங்க. நான் கஞ்சி குடிக்க ரெண்டு இலை தைக்கிறேன்'' என்று சொல்லிய சேந்தன், திண்ணைக்குப் போய்விட்டான்.

பாம்பு மனைப்பாம்பாக இருந்தாலும், விஷ ஜந்துவே அல்லவா? அதனிடம் சற்று ஜாக்கிரதை யாகவே இருக்கவேண்டும் என்பது சேந்தனின் அபிப்பிராயம். மகள் அரும்பு பறிக்கும் போதெல்லாம் 'பதனம்' 'பதனம்' என்று அவளை எச்சரித்துக் கொண்டே இருப்பது சேந்தனின் வழக்கம்.

உளுந்திக்கு அந்தப் பயம் கிடையாது. கொஞ்ச நஞ்சம் அவளுக்கு இருந்த பயத்தையும் மாணிக்கம் போக்கிவிட்டான். மனைப்பாம்பு ஒரு தீங்கும் செய்யாது என்பது அவனுடைய திடமான அபிப் பிராயம்.

ஊருக்குள்ளே மெத்தப் படித்தவன் மாணிக்கம். அவன் மானம்பூப் பள்ளிக்கூடத்திலும் படித்திருக் கிறான்; பாதிரி பள்ளிக்கூடத்திலும் படித்திருக்கிறான். திருப்புகழை எடுத்தால் அவன் மாதிரி 'கட கட' என்று படிக்க அந்த நாட்டிலேயே யாராலும் முடியாது. காமன் பண்டிகையில், எரியாத கட்சிப் பாட்டை அவன்தான் பாடுவது வழக்கம். அவனுக்கு எத்தனையோ கதைகள் தெரியும். அவற்றில் சில வற்றை உளுந்திக்கும் சொல்லியிருக்கிறான்.

சேந்தன் அப்பால் போனபின்பு, "அப்புறம் அந்த நாகரத்தினக் கதையை முடிக்காமெயே போயிட்டேயே. பிறகு, அந்த பொண்ணு என்ன ஆச்சு?'' என்று கேட்டாள் உளுந்தி.

"பூப் பறிச்சுது'' என்று ராகம் இழுத்துச் சொன்னான் மாணிக்கம். மேலும் சிரித்துக்கொண்டே, "இதோ இந்த அரும்பைப் பறிக்கலாமா? நீ சொல்லு'' என்று உளுந்தியின் தோள் அருகே இருந்த ஓர்

அரும்பைத் தொடுவதுபோல, அவளுடைய தோளைக் கிள்ளிவிட்டான்.

"இந்தா, இந்தச் சரசமெல்லாம் நம்பகிட்ட வெச்சுக்காதே!" என்று உடலை உலுப்பிச் சீறினுள் உளுந்தி.

"அப்போ கதை வேண்டாமா? நான் போறேன்" என்றான் மாணிக்கம்.

"உன்னை என்னதான் பண்றது?" என்று சொல்லி, முப்பத்திரண்டு பல்லும் தெரியச் சிரித்தாள் உளுந்தி.

"அடடே! அரும்பெல்லாம் போச்சே!" என்றான் மாணிக்கம்.

"எங்கே போச்சு?"

"உன் வாயிலே. உன் வாய் நிறைய அரும்பாய் இருக்குதே!" என்று குறும்பாகக் கண்ணடித்தான் மாணிக்கம்.

இன்னும் கொஞ்ச நேரம் இப்படியே கேலியும் சிருப்புமாகப் போயிற்று. இதற்குள்ளே, "ஏ குட்டி உளுந்தி, கஞ்சி குடிக்க வா. மாணிக்கமும் வர்றானா?" என்று அழைத்தான் சேந்தன்.

மாணிக்கம் வீட்டுக்குப் போய்விட்டான். உளுந்தியும் தகப்பனும் மட்டில் கஞ்சி குடித்தார்கள்.

சேந்தனுக்குப் பெரிய திண்ணையிலே படுத்தால் தான் தூக்கம் வரும். அதற்குப் பக்கத்திலேயுள்ள தொழுவத்து மாடுகள் அசை போடும் லேசான சத்தம் அவன் குறட்டைக்குச் சுருதி போட்டுக்கொண் டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவன் கண் மூடாது. சேந்தன் பெரிய திண்ணையில் படுத்துவிட்டான்.

உளுந்தி சின்னத் திண்ணைக் கட்டிலில் படுத்தாள். ராஜாத்திக்குப் பூ மெத்தையின் சுகம் தெரியுமென்றால், உளுந்திக்குக் கயிறு பின்னிய மெத்தென்ற கட்டிலின் சுகம் நன்றாகத் தெரியும். கற்றாழை

கொண்டுவந்து அழுகப்போட்டு இழைத்து நார் எடுத்துச் சுத்தமாகக் கயிறு திரித்து, சேந்தனே தன் அருமை மகளின் கட்டிலுக்குக் குறுக்குப் பின்னல் பின்னிக் கொடுத்தான். கோத்து வாங்கிப் பின்னும் அந்தப் பின்னல் அந்த ஊரிலேயே அவனைத் தவிர வேறே யாருக்கும் தெரியாது. ஒரு சமயம் ஒரு மலைக் குறவனிடம் அதை அவன் கற்றுக் கொண்டான்.

உளுந்தி படுத்தாள். அவளுக்குத் தூக்கம் வரவில்லை. அவள் மனம் பூரித்திருந்தது. சில எண்ணங்கள் அவள் மனத்திலே வளைய வளைய வட்டமிட்டுக்கொண்டிருந்தன. 'ஆடு பாம்பே, தெளிந்தாடு பாம்பே?' என்று மாணிக்கம் பாடுவானே, அந்தச் சித்தர் பாட்டின் அடி ஞாபகம் வந்தது. மல்லிகை பூத்தது. மாணிக்கம் வந்து விட்டான். பாம்பு என்ன ஆயிற்று? ஐயோ பாவம்! ஆனால், இந்த இரவில் கவனித்துவிடலாம். அதைக் கண்டு பிடிக்காமல் தூங்குவதேயில்லை. — இப்படி அவள் தீர்மானித்துக் கொண்டாள்.

கர்ர்ர்!

ஓஹோ! பாம்பா? - உளுந்தி உற்றுக் கேட்டாள். கலீர் என்று அவளுக்குச் சிரிப்பு வந்தது. அது பாம்பின் அரவம் அல்ல; அப்பனின் குறட்டைச் சப்தம். "இவுங்க என்ன இப்பிடிக் குறட்டை விடறுங்க!" என்று அவள் தனக்குத்தானே முணுமுணுத்துக்கொண்டு சிரித்தாள்.

வாசலிலே தென்னம்பிள்ளைகளின் நிழற் கோலம் மெல்ல மெல்ல மங்கியது. நிலவு குறைந்து சாய்ந்து விட்டது. இருளும் சூழ்ந்தது. இதுவரையில் எவ்வளவுதான் கண்ணை மூடினாலும் வராத தூக்கம் இப்போது மெல்ல உளுந்தியின் இமைகளைப் பற்றத் தொடங்கியது. உளுந்தியின் மனம் சலித்துச் சோர்ந்தது. அவள் அரைத் தூக்க நிலையில் இருந்தாள்.

உஸ்ஸ்ஸ்!

பாம்புக்குச் செவியே இல்லை என்று இந்தக் கால உயிர் நூல் புலவர்கள் சொல்லுகிறார்கள். பாம்புக்குச் செவியில்லாதிருக்கலாம். ஆனால், உளுந்திக்குப் 'பாம்புச் செவி'; பழமையாக நாம் நம்பி வருகிறோமே அந்தப் 'பாம்புச் செவி.'

புஸ்ஸ்ஸ்!

உளுந்தியின் கண் விழித்துவிட்டது. அவள் தூக்கம் கலைந்தது. பாம்பின் சத்தத்தை நன்றாகக் கேட்டாள். பாம்புதான்; சந்தேகமில்லை. நிச்சயமாக அதுதான். இதோ, மல்லிகைப் பூ வாசனை வருகிறதே! மல்லிகைப் புதரில் வாழும் நாகத்தின் வாசனை மல்லிகை வாசனையே. அவள் இந்த வாசனையை முன்னே எத்தனையோ நாள் நுகர்ந்திருக்கிறாள்.

'உஸ்ஸ்ஸ் - புஸ்ஸ்ஸ், உஸ்ஸ்ஸ் - புஸ்ஸ்ஸ்' என்று பாம்பு சுவாசம் விடத் தொடங்கியது. இதை உளுந்தி இதற்கு முன் எத்தனையோ இரவு கவனித்திருக்கிறாள். இந்தப் பாம்பின் சுவாசம், கேட்டுக் கேட்டு அவளுக்கு ஸகஜமாகிவிட்டது.

வீட்டெதிரே வேலியருகே செவ்வரளி, கார்த்திகைக் கிழங்கு இரண்டு செடிகளும் ஒட்டி நிற்கும் இடத்திலே தினந்தோறும் இரவில் அந்த நாகப்பாம்பு வந்து, கருக்கல் வெளுக்கு மட்டும் இப்படிச் சீறிக் கொண்டிருந்துவிட்டுப் போவது வழக்கம். உளுந்தி இடையிடையே விழிக்கும் போதெல்லாம் இந்தச் சீறல் அவள் காதில் விழும். இதைக் கேட்டால் அவளுக்குப் பயம் இல்லை. அது மாத்திரம் அல்ல; அவள் ஓர் உற்சாகங்கூட அடைவாள். வேண்டுமென்று வாசலிலே எழுந்து போய் அந்தச் செவ்வரளிக்குச் சிறிதே எட்டியுள்ள தங்க அரளியின் அடியிலே எச்சில் உமிழ்ந்து விட்டு வருவாள். துரோபதை அம்மன் கோயிலிலே உளுந்தி பாரதம்

தேட்டிருக்கிருள். பாம்பு சிவபிரானின் மாலை; திருமாலின் படுக்கை. குழந்தை கர்ணனின் பெட்டியிலே தாய் குந்திதேவி வைத்த சேலை, அவனுக்குத் தாயென்று சொல்லிப் பொய்யாய் வந்த பெண்களையெல்லாம் பாம்பாகவே சீறியது. இந்த மணிப் பாம்பு கன்னிப் பெண்ணுனை தனக்கு வந்த காவலாகவே, உளுந்திக்கு என்னவோ ஓர் எண்ணம் தோன்றியது. தன்னை ஒரு தெய்வப் பெண்ணுகக்கூடச் சில சமயம் அவள் கற்பனை செய்து கொண்டு விடுவாள்.

உஸ்ஸ்ஸ் – புஸ்ஸ்ஸ்!

பாம்பு சாகவில்லை. உளுந்தியின் மனம் நிம்மதி அடைந்தது. அவள் தூங்கிறுள்.

மறுநாள் போது விடிந்தது. சொன்னது சொன்னபடி தென்னங் கன்றுகளுக்குத் தண்ணீர் இறைக்க மாணிக்கம் வந்துவிட்டான்.

கேணியின் விட்டத்திலே உருளையை மாட்டினுன். தாம்பின் ஒரு முனையிலே சாலைக் கட்டி மறு முனையில் கல்லைக் கட்டினுன். தண்ணீர் இறைக்கத் தொடங்கினுன் மாணிக்கம். பாத்திக்குத் தண்ணீர் கட்டினுன் சேந்தன்.

உளுந்தி பல் விளக்கிச் சுள்ளி பொறுக்கி அடுப்பு மூட்டிக் கஞ்சி காய்ச்சும் வேலையில் ஈடுபட்டாள்.

மாரிமழை பொய்த்தாலும்
மாளாத பொற்கேணி!
கோடைவெயில் சுட்டாலும்
குளிர்ந்திருக்கும் நற்கேணி!
வீராதி வீராவர்
வில்லெடுத்து நாணிழுத்து
நேராக விட்டசரம்
நேடிவரும் அந்நேரம்
பேராது நின்றதிருப்
பெரும்பசுவைப் போல்சுரந்து
தீராத தேம்பாகைத்
தெள்ளிவரும் பாற்கேணி!

இப்படி ஓர் ஏற்றப் பாட்டைப் பாடினான் மாணிக்கம். பாடியபடியே சால் சாலாகத் தண்ணீரை இறைத்தான். பாட்டைக் கேட்டுக்கொண்டே கஞ்சி காய்ச்சினாள் உளுந்தி. சேந்தனுக்குப் பாட்டைப் பற்றிக் கவலையில்லை. எந்த எந்தத் தென்னம் பிள்ளை 'நாலு குரும்பை' வைத்திருக்கிறது என்பதையே கவனித்துக்கொண்டு அவன் தண்ணீர் பாய்ச்சினான்.

உளுந்தி நடு நடுவே கேணிக்கு வந்து, சால் தண்ணீரில் பானை தண்ணீர் ஏந்திக்கொண்டு போனாள். அப்படி வந்து செல்லும் ஒவ்வொரு தடவையும் மடக்கிய அவள் உதட்டையும் மீறிப் புன்சிரிப்பு அவள் கண்ணிலே ஒளிர்ந்தது. மாணிக்கமோ சால் தண்ணீரை வேண்டுமென்றே வீசியடித்து உளுந்தியின் சேலை நுனியைப் பாதிக்கு மேல் நனைத்துக் குறும்புச் சிரிப்புச் சிரித்தான்.

மாணிக்கம் தண்ணீர் இறைத்து முடிக்கும் சமயத்தில், சேந்தன் வீட்டு வாசலில் பல சிறுவர்கள் காச்சு மூச்சென்று கூச்சல் போட்டுக்கொண்டு கூடி விட்டார்கள். அந்தக் கூட்டத்துக்கு நடுவிலே வந்தான் ஒரு பாம்புப் பிடாரன். கறுப்பான ஆட்டிடையன் - கம்பளி யொன்றை அவன் தோளிலே போட்டுக்கொண் டிருந்தான். கையிலே மகுடியும் கட்கத்திலே பாம்புப் பெட்டியும் வைத்திருந்தான்.

ஊருக்கு வந்து ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பாம்பு பிடித்து, சம்மானம் பெற்று வருகிறானாம். அவன் பாம்பு பிடிக்கும் வேடிக்கையைப் பார்ப்பதற்காகத் தான் அந்தச் சிறுவர் கூட்டம் வீடு வீடாக அவனைப் பின்தொடர்ந்தது.

தன் வீட்டுப் பாம்பையும் பிடாரன் பிடித்துப் போகச் சேந்தன் சம்மதித்து விட்டான்.

"வேண்டாம், அப்பா; அது இருந்துவிட்டுப் போகட்டுமே" என்றாள் உளுந்தி.

"நீ சும்மா இரு, குட்டி. அவன் பிடிக்கிறதைத் தான் பார்ப்போமே" என்று அவளிடம் சொன்ன மாணிக்கம், "ஆமாம், நல்ல பாம்பை நீ பிடிப்பியா?" என்று பிடாரனைப் பார்த்துக் கேட்டான்.

"வீட்டுக்கு வீடு நல்ல பாம்புதான் பிடிச்சுக் கிட்டு வர்றேன், எசமான்."

"உனக்கு என்ன சம்மானம் கொடுக்கணும்?"

"ஏழைக்கி என்னங்க வேணும்? ஒவ்வொரு வீட்டு மகராசாவும் ஒரு துணி, ஒரு படி அரிசி, கால் ரூபாய்க் காசு கொடுக்கிறாங்க; எசமானும் அப்படிக் கொடுக் காமெயா போறீங்க!"

உஷாந்திக்குப் பாம்பைப் பிடாரன் பிடித்துப் போவதில் சம்மதமே இல்லை. என்றாலும், அவன் பாம்பு பிடிப்பதை வேடிக்கைப் பார்க்க மெத்த ஆசைதான். கடைசியில், அவளும் அதிக ஆட்சேபம் சொல்லாமல் மௌனமானாள்.

பிடாரன் மகுடி ஊதினான். வெகுநேரம் ஊதினான். இடையிடையே மகுடியின் கண் அடைத் துக் கொண்டது.

"பார்த்தீங்களா! பொல்லாத பாம்பு, சாமி. வெகு தொல்லை பண்ணுது; சண்டித்தனம் பண்ணுது. வெள்ளென வரமாட்டேங்குது. அதை யார் விடுறா!" என்று சொல்லிவிட்டு மகுடியைப் பின்னும் பலமாக ஊதினான் பிடாரன்.

முடிவில் பாம்பு வந்துவிட்டது. பார்த்தனின் மார்பை நோக்கிச் சீறிவந்த வாசுகியைப் போலப் பாய்ந்து வந்தது சர்ப்பம். ஆனால், அது பிடாரனை நோக்கிச் செல்லவில்லை. அங்கும் இங்கும் திரும்பி ஓடப் பார்த்தது. பிடாரன் விடுவானா? குனிந்தும், உட்கார்ந்தும், நிமிர்ந்தும், எழுந்தும் ஆடியாடிப் பாம்பின் எதிரே மகுடியைச் சுழற்றிச் சுழற்றி ஊதினான்.

பாம்பு படம் எடுத்தது; சீறியது; வால்நுனியைப் பூமியிலே பதித்து, முக்கால் உடலைத் தூக்கிச் செங்குத்தாக நின்று துள்ளி விழுந்தது; மகுடியைக் கொத்த வந்தது; கண்களால் அனல் சொரிவதுபோல் விழித்தது. நாமமிட்ட அதன் படம், பிசாசாடுவதுபோல் மகுடி போன திசை யெல்லாம் திரும்பியது. பிடாரன் ஆடினான்; மகுடி ஆடிற்று; பாம்பு ஆடிற்று; குழந்தைகளெல்லாம் ஆடின. எல்லாருக்கும் தலைகால் புரியாத வெறி உண்டாயிற்று. ஆனால், உளுந்தியின் உள்ளம் மாத்திரம் நடுங்கி ஒடுங்கியது. செவ்வரளிச் செடிக்குக் கீழே தினந்தோறும் இரவிலே சீறுவது இந்தப் பாம்பா? ஐயோ! இதை இந்தப் பிடாரன் பிடித்துக்கொண்டு போவதே நல்லதென்று அவளுக்கு இப்போது தோன்றியது.

முடிவிலே பிடாரன் ஏதோ ஒரு வேரைப் பாம்பின் முகத்துக்கு எதிரே நீட்டினான். மயக்கமருந்தை மோந்த மனிதனைப்போல அடங்கி ஒடுங்கித் தலையைக் கீழே போட்டது பாம்பு. தோளில் இருந்த கறுப்புக் கம்பளியை அப்படியே பாம்பின்மீது போட்டுப் பிடித்து, அதைத் தன் பெட்டிக்குள்ளே போட்டு மூடினான் பிடாரன். தனக்குரிய சம்மானத்தைப் பெற்றுக்கொண்டு, சிறுவர் படை புடைசூழ அகன்றான்.

"இனிமே உளுந்திக்குப் பயமில்லே. அஞ்சாமெப் பூப்பறிக்கலாம்" என்று சொல்லிச் சிரித்தான் மாணிக்கம்.

"ஆமாம், தம்பீ" என்று உதடசையாமல் சொன்னான் சேந்தன்.

உளுந்தி மட்டில் பேசவில்லை. வெறுமையே சப்புக் கொட்டினாள். 'ஆமாம், பாம்பு தொலைஞ்சது நல்லதாச்சு!' என்று அதற்கு அர்த்தமா? அல்லது, 'ஐயோ! பாம்பு போயிடுச்சே!' என்று அர்த்தமா?

இரண்டு அர்த்தங்களுமே அதில் தொனித்தன. அவள் உள்ளமே அப்போது அந்த நிலையில்தான் இருந்தது.

"சரி; கஞ்சி குடிக்க வாங்க" என்றாள் அவள்.

சேந்தனும் மாணிக்கமும் தொன்னை தைத்துக் கொண்டு கஞ்சி குடித்தார்கள். பிறகு, 'புளகு வெத்திலை' போட்டுக்கொண்டார்கள்.

அன்று இரவு கட்டிலிலே படுத்தபோதும், உளுந்திக்குத் தூக்கம் வரவில்லை. 'ஆடு பாம்பே' என்ற பாட்டடி ஞாபகம் வந்தது. அன்று மாணிக்கம் பாடிய ஏற்றப் பாட்டிலே வந்ததே, அது என்ன பசு? காராம் பசுவா? அந்தப் பசுவும் அவளுக்கு ஞாபகம் வந்தது. பாம்பு போய்விட்ட இப்போதுதான் அவளுக்கு இன்னொன்றும் ஞாபகம் வந்தது. மாணிக்கம் சொன்ன கதையில், ஒரு நாகம் கக்கிய நாகரத்தினம் ஒரு கன்னிப் பெண்ணுக்குக் கிடைத்ததே; அது மாதிரி இந்தப் பாம்பும் தனக்கு ஒன்று கக்கும் என்று ஆசை கொண்டாள். அடடா! பாம்பு போய் விட்டதே. இனி நாகரத்தினம் அவளுக்கு எங்கே கிடைக்கப் போகிறது? உளுந்தி ஏங்கினாள்; மனம் வெதும்பினாள். அவளுக்கு வெகு நேரம் தூக்கம் வரவில்லை. தென்னைகளின் நிழல் மறைந்து நிலவும் சாய்ந்துவிட்டது. இன்னமும் அவளுக்குத் தூக்கம் வரவில்லை; நேற்று மாதிரி அரைத் தூக்கங்கூட வரவில்லை.

காக்கை குருவிகளெல்லாம் ஒடுங்கிவிட்ட நிச்சப்தமான நள்ளிரவு நேரம். ஒரே ஒரு பல்லி மட்டில் 'கெக்–கெக்–கெக்' என்று ஏதோ கவுளி சொல்லியது. உளுந்தி திடுக்கிட்டாள். அன்று அந்தச் சர்ப்பம் காளிங்கனைப்போல் ஆடிய பயங்கர நர்த்தனத்துக்குப் பின்பு இந்தக் கவுளிச் சப்தங்கூட அவளுக்குப் பயமூட்டியது. ஆனாலும், அப்பாடா! அந்தச் சர்ப்பந்தான் போய்விட்டதே! இப்படி அவள் நினைத்து முடிக்கவில்லை.

உஸ்ஸ்ஸ் — புஸ்ஸ்ஸ்!

நாகம் சீறியது. உளுந்தி பதறிவிட்டாள். நாகம் போகவில்லை. அது இன்றும் வந்துவிட்டது. மல்லி கைப் பூ மணத்தோடே அது இதோ வந்துவிட்டது. அந்த மணந்தான் மூக்கைத் துளைக்கிறதே! உளுந்தி கோரைப் பாயை இழுத்துச் சுற்றிச் சுருட்டிப் படுத் துக்கொண்டாள். ஆடாமல் அசையாமல் படுத்துக் கொண்டாள். கருக்கல் வெளுக்கும் அளவும் பாம்பின் சீறல் ஓயவில்லை; அவள் தூங்கவும் இல்லை.

நல்ல வேளையாய்ப் பொது விடிந்தது. சூரியன் உதித்தது.

சேந்தன் கஞ்சி குடித்துவிட்டு வயல் வெளியைப் பார்க்கப் போனான்.

அந்த வீட்டில் பகலிலே தனியாய் இருக்கக்கூட உளுந்திக்கு இன்று பயமாக இருந்தது.

ஆனால், மச்சு வீட்டுக்கு வராமல் மாணிக்கத்துக் குப் பொது போகுமா? அவன் வழக்கப்படி வந்து விட்டான். வரும்போதே வாயெல்லாம் பல்லாகச் சிரித்துக்கொண்டே வந்தான். அவன் தலையைக் கண்டதும் உளுந்திக்குத் தைரியம் பிறந்தது. "வா, அத்தான்" என்று வரவேற்றாள்.

"அட, இதென்ன புதுமையா இருக்கு! ஓடாமெ ஒளியாமெ நீகூட என்னை வர்றபோதே அழைக் கிறையே! மழை தான் வரப்போவுது" என்றான் மாணிக்கம்.

திண்ணையிலே வந்து அவன் குந்தினான். "அம் மானை எங்கே காணோம்?" என்று கேட்டான்.

"வயல் பக்கம் போயிருக்காங்க."

"அப்ப நான்கூடப் போகவேண்டியதுதான்."

"வேணாம், போகாதே. இங்கேயே இரு."

"ஏனாம்?" என்று அழகு காட்டிக்கொண்டே கேட்டான் மாணிக்கம்.

"இந்தப் பரிகாசமெல்லாம் வேணும், அத்தான். போகாதே."

"வீட்டுக்குக் காவலா? உனக்குக் காவலா?"

"இரண்டுக்குந்தான்" என்று கொஞ்சும் குரலில் சொன்னாள் உளுந்தி.

"என்ன கூலி கொடுப்பே?"

"என்ன கேட்டாலும் தாறேன்."

"நிச்சயமா?"

"நிச்சயம்."

துள்ளி எழுந்து நின்று, இரண்டு விரலைத் தலைக்குமேலே தூக்கிக்காட்டி, "என்னை இந்த வருசமே கலியாணம் கட்டிப்பியா?" என்று கேட்டான் மாணிக்கம்; அப்போதுதான் அவன் முகத்திலே அசடு வழிந்தது.

உளுந்தி கம்பீரமாக நிமிர்ந்தாள். மாணிக்கத்தை விழுங்கி விடுபவள்போல உற்றுப் பார்த்தாள். பிறகு, "உனக்கு இது இன்னும் சந்தேகமா, அத்தான்? இதுக்குத்தானா இந்தக் கேள்வி கேட்டே?" என்று கேட்டாள்.

மாணிக்கத்துக்கு ஒன்றும் பதில் சொல்லத் தெரியவில்லை. மந்திரத்தில் பாம்பு கட்டுப்படுமோ கட்டுப்படாதோ; 'மந்திரத்தில் கட்டுண்ட பாம்பு' போல அவன் நின்றான். சொல்ல முடியாத பரவசம் ஒன்று அவன் உள்ளத்திலே குறுகுறுத்தது.

'பொன்மானே எனப்பயந்தேன்;
புள்ளிமான் வசமாச்சு.
கண்பெற்ற குருடனைப்போல்
கணக்கிறந்த மகிழ்ச்சியுற்றேன்'

என்று பித்தனைப்போல் பாடினான். அவன் பட்டணத்துச் சினிமாவெல்லாம் பார்த்தவனல்ல. உளுந்தியை அவன் தொடவில்லை. கட்டியணைத்து முத்த

மிடவும் இல்லை. இந்த நிமிஷந்தான் அவனுக்கு அவள் மிகவும் புனிதமாய்த் தோன்றினாள். தான் தொட்டுத் தாலி கட்டப்போகும் கட்டழகியல்லவா அவள்? துளியும் மாசு மறுவில்லாத கன்னியையே மணம் புரிந்து கைப்பிடிக்க வேண்டுமென்பது அவன் ஆவல். தன்னை மறந்து திண்ணையிலே அவன் உட்கார்ந்தான். உளுந்தி உள்ளே போய்விட்டாள்.

மாணிக்கம் சிறிது நேரத்துக்கெல்லாம் நிதான மடைந்தான். தன் நினைவு வந்தது. "ஏ உளுந்தி!" என்று செல்லமாகக் கூப்பிட்டான்.

"ஏன்?" என்று கேட்டுக்கொண்டே உளுந்தி வெளியே வந்தாள்.

மாணிக்கம் அர்த்தம் இல்லாமல் சிரித்தான். அவளும் சிரித்தாள்.

"அந்தப் பாம்பு..." என்று என்னவோ சொல்ல ஆரம்பித்தான் மாணிக்கம்.

"ஐயோ! அது போகல்லே. அதுதான் எனக்குப் பயமாயிருக்குது" என்றாள் உளுந்தி.

"அந்த ரகசியம் உனக்குத் தெரியுமா? பிடாரன் அதைப் பிடிக்கவே இல்லே" என்று புதிர் மாதிரி சொன்னான் மாணிக்கம்.

"பின்னே?"

"அவன் கிட்ட முன்னாடியே ஒரு பாம்பு இருந் திருக்கிறது. அதையே வீட்டுக்கு வீடு விட்டுப் பிடிச்சிருக்கான்" என்றான் மாணிக்கம்.

இதை மாணிக்கம் எப்படிக் கண்டுபிடித்தான்? ஊர்க்கோடியிலே உள்ள ஆலமரத்தடியில் நேற்று மாலை அந்தப் பிடாரன் தங்கியிருந்தான். அப்போது ஊர்க் குழந்தைகளுக்கு அவன் பாம்பாட்டி வேடிக்கை காட்டிக்கொண் டிருந்தான். குளத்தங்கரைக்குத் தலைமுழுகப்போன மாணிக்கம் அதைக் கண்டான். பிடாரனிடம் ஒரே பாம்புதான் இருந்தது. அதன்

உண்மையை மாணிக்கம் விசாரித்தான். பிடாரன் முதலில் உண்மையைச் சொல்லவில்லை. வேட்டியும் காசும் கொடுத்து அவனைச் சிநேகம் பிடித்த பிறகு அவன் சொன்னான். மகுடி எடுத்து ஊதினால் எல்லாப் பாம்பும் சுலபமாக வெளியே வராதாம். பொந்தும் இருப்பிடமும் அற்ற பழைய பாம்பு மட்டுமே. தான் அடையும் பெட்டியைத் தேடி வருமாம். பிடாரன் தன் பாம்பையே வீட்டுக்கு வீடு விட்டுப் பிடித்தானும்.

“அப்படியா! ஊரையே என்ன களுதெப்புரளி பண்ணிப்பிட்டான் அந்தப் பிடாரன்!” என்றாள் உளுந்தி.

“ஆனால் பாம்பை வசியப்படுத்தற வேரை அவன் எனக்குக் கொஞ்சம் கொடுத்திருக்கான். ஓர் ஓலையைச் சுருக்குப் போட்டுக்கூடப் பாம்பு பிடிச்சிடலாமாம்; மந்திரமுமில்லெ, மாயமுமில்லெயாம். எல்லாம் தந்திரந்தான் வேணுமாம்” என்றான் மாணக்கம்.

திறந்த வாய் திறந்தபடி இதையெல்லாம் ஆச்சரியத்தோடு கேட்டுக்கொண்டு நின்றாள் உளுந்தி. கடைசியில் சிரித்துக்கொண்டே, “அது கிடக்கு. எனக்கு நீ என்ன பரிசம் கொடுக்கப்போறே?” என்று கேட்டாள்.

“உனக்கு என்ன வேணும்?”

உளுந்தி தயங்கித் தயங்கி, “நிசம்மா உனக்குப் பாம்பு பிடிக்கத் தெரியுமா?” என்றாள்.

“தெரியும். பாம்பு எதுக்கு? மாலையா போட்டுக்கப் போறே?”

“இல்லே. நீதானே நாகரத்தினக் கதை சொன்னே. நம்ம வீட்டுப் பாம்பின் தலையிலே நாகரத்தினம் இருக்குமே. அதைக் கக்கவைப்பியா?”

“கக்கினா அது செத்துப் போவுமே.”

"சாகட்டுமே."

"கொல்லாமெப் பிடிக்கணும். கொன்னு நாக ரத்தினம் மாயமாப் போகும். கொல்லாமெப் பிடிச்சுக் கக்க வைக்கணும். சக்கினுச் செத்துப் போவும். இப்படித்தான் கதையிலே வருது" என்றான் மாணிக்கம்.

"அது என்னமோ, எனக்கு நாகரத்தினம் வேணும்."

"ஐயோ பாவம்! பாம்பு செத்துப் போவுமே."

"ஓஹோ! உனக்குப் பயம். சும்மா வாய்வீரம் பேசறே!" என்று இகழ்ச்சியாகச் சொன்னாள் உளுந்தி.

மாணிக்கம் ரோஷம் கொண்டான். "அப்படியா நினைக்கிறே? இப்பவே இதோ பிடிச்சு வர்றேன் பார் பாம்பை" என்று எழுந்தான்.

"இந்தா, கஞ்சி காய்ச்சியாயிடிச்சு; கையைக் காலைக் கழுவிட்டு. கஞ்சி குடிச்சுப்பிட்டுப் போயப் பாம்பு பிடிக்கலாம்" என்றாள் உளுந்தி.

"வேணும்" என்று பாய்ந்தெழுந்தான் மாணிக்கம்.

உளுந்திக்குத் தன்னை அறியாத ஏதோ ஓர் உணர்ச்சியால், இருதயம் படபடத்தது. அவள் சிரிக்க முயன்றாள்; சிரிக்கவில்லை. மௌனமாய் வீட்டுக்குள்ளே சென்றாள்.

மாணிக்கம் முன்பின் பாராமல் துள்ளி நடந்தான்.

மல்லிகைப் புதரைக் கலக்கினான். அதற்கடியிலே யிருந்த பாழையெல்லாம் குச்சியால் குடைந்தான். கடைசியில் சர்ப்பம் சீறிக்கொண்டு வெளியே வந்தது. புஸ் என்று படமெடுத்துத் தலையைத் தூக்கி ஆவேச மாய் வந்தது. கையில் இருந்த வேரை நீட்டினான்

மாணிக்கம். பாம்பு அதை லட்சியம் செய்யவில்லை. சொடேர் என்று அவன் கையைக் கொத்திவிட்டது.

மாணிக்கமும் விடவில்லை. அந்த நிமிஷமே அதைத் தடியால் அடித்துக் கொன்றுவிட்டான்.

வீட்டுக்குள்ளே இருந்த உளுந்திக்கு இதெல்லாம் தெரியாது. அவள் மனத்திலே ஒரு குதூகலம் பொங்கியது. ஆனல், அது தூய குதூகலமாயில்லை; ஒரு வேதனையும் அதிலே கலந்திருந்தது. அகப்பையால் கஞ்சியைக் கிளறி விட்டுக்கொண்டே, பானையில் கொந்தளித்த குமிழிகளைப்போல் தன் மனத்திரையிலும் பல எண்ணங்கள் குமிழியிடத் துரிதமாய் வேலை செய்துகொண்டிருந்தாள். 'இதோ மாணிக்கம் மாணிக்கத்துடன் வந்து சேர்ந்து விடுவான்' என்று ஒரு விநாடி எண்ணினுள். அந்த நேரத்தில் அவள் காதிலே ஓர் ஓலம் கேட்டது.

''ஏ உளுந்தி! இனி நான் உன்னைத் தொட்டுத் தாலி கட்டப் போவதில்லை. என் விதி முடிந்தது. இப்போது கொடு ஒரு முத்தம்; ஒரே ஒரு முத்தம்!'' என்று கூச்சலிட்டான் மாணிக்கம்.

உளுந்தி அலறிப் புடைத்துக்கொண்டு, "என்ன என்ன!'' என்று அரற்றியபடி ஓடிவந்தாள்.

இதற்குள்ளே மாணிக்கத்துக்குத் தலை சுழன்றது; கண் இருண்டது; கால்கள் தள்ளாடின. அவன் சுருண்டு விழுந்தான். பக்கத்திலே பாம்பு மாண்டு கிடந்தது.

உளுந்தி அவனைக் கையிலே வாரியெடுத்துத் தூக்கித் தோளிலே சார்த்திக்கொண்டாள். திண்ணையிலே கொண்டு வந்து கிடத்தினுள். ஓலமிட்டாள்; கதறிப் புலம்பினுள். ''ஐயோ! மாணிக்கம்! என் ராசாவே! நாகமணி கேட்டேனே, பாவி! நாகமணி கேட்டு, என் சீவமணியை - மாணிக்கத்தை - இழந்தேனே! புத்தி கெட்ட நான்தான் கேட்டேன். நீயும்

அதை ஒப்புக்கொள்ள வேணுமா? ஐயோ! என்னை மோசம் செய்தாயே! மாணிக்கம்! மாணிக்கம்!'' என்று கதறினாள்.

மாணிக்கம் போய்விட்டான். மனைப் பாம்பு போய்விட்டது. மல்லிகை அரும்புகள் மதிப்பாரற்று மலர்ந்து புதரிலேயே வாடி உதிர்ந்தன. மனைப் பாம்பு போய்விட்டது. ஆனால், இன்று உளுந்தியே அந்த வீட்டின் மனைப்பாம்பாகிவிட்டாள்; எந்த வாலிபனும் அந்த வீட்டை அண்ட முடியாத நாக மாகிவிட்டாள். கன்னி கழியாமலே பல வருஷ காலம் அவள் வாழ்ந்துவிட்டாள். ஆனால், அவளைக் கேட்டால், தான் கன்னி கழியாதவள் என்று அவள் ஒப்புக் கொள்வதில்லை, 'கட்டுக்கழுத்தி' என்றே இன்றும் சொல்கிறாள்.

★

நாகத்தின் பிராயச்சித்தம்

[''மாணிக்கத்தை நீங்கள் கொன்றிருக்கக் கூடாது. அவன் அன்பு செய்யப் பிறந்தவன்; கிராமவாசிகளின் ஆண்மைக்கும் பால்போன்ற உள்ளத்துக்கும் உதாரண மகன். இதை நான் நாகத்திடம் சொன்னேன்; ஆம் என்று அது ஒப்புக்கொண்டது; பிராயசித்தமும் செய்து விட்டது. எனவே, இந்தக் கதை.''—என் நாகரத்தினக் கதையைப் பற்றிய இந்தக் குறிப்புடன், பின் வரும் கதையை நண்பர் ஈச்வரன் என்னிடம் கொடுத்தார். அவருக்கு நான் சொல்லும் பதில் இதுவே: ''நான் எப்போதுமே சந்தேகப் பிரகிருதி. இது உங்களுக்குத் தெரியும். நாகம் என்னிடம் பேசவில்லை; அது இயற்கை. நீங்கள் உணர்ச்சிக் கலைஞர். நாகம் உங்களை நம்பி விட்டது; பேசியிருக்கிறது. உண்மையைத்தான் பேசி யிருக்கும். இதற்கு உங்கள் கதையே சாட்சி.''—தி. ஜ ர.]

மாணிக்கம் ஆழ்ந்து தூங்குவதுபோல் கிடந் தான். இளமை கொழிக்கும் அவன் கண்களினின்றும் உலகம் நிரந்தரமாய் மறைந்துவிட்டது. அவன் நல்ல வாலிபத்தில் சர்ப்பம் தீண்டிச் சாவான் என்று,

முந்தியே ஜாதகம் சொல்லியது உண்மையாகி விட்டது. மல்லிகைப் புதரிலே வசித்த மணிப் பாம்பு ஒரு தீங்கும் செய்யாது என்று வீட்டிலுள்ளோர் நம்பினார்கள். ஆனால், அதுவே அவனுக்கு யமனாய் முளைத்தது. வீட்டோடு வீடாக, குடும்பத்தோடு குடும்பமாக வாழ்ந்து வந்தது அந்தச் சர்ப்பம். என்றாலும், விதியின் விபரீதம் அப்படி இருந்தது. கடவுளின் பயங்கர லீலை, கள்ளங் கபடற்ற சாது மக்களையெல்லாம் மனம் அதிரச் செய்கிறது; நம்பிக்கையிழந்து தூற்றவும் செய்கிறது. என்றாலும், இறுதியில், அவர் பரம கருணாநிதி என்று அவர்கள் உணர்ந்துகொள்ளுவார்கள். விதி! விதி என்பது ஒரு தெய்விக மருந்து; மக்களின் வேதனையைக் குறைத்து ஆறுதல் அளிக்கும் மருந்து. பண்படாத மனம் அடைந்த சோகம் அடங்கிய பின், அந்த ஞாபகத்தை வற்றாத ஊற்றான வேதாந்த சிந்தனையிலே பாது காத்து வைக்கிறான் மனிதன். இப்படிப் பாதுகாத்து வைத்த பொற்பாவைதான் விதி என்பது.

மாணிக்கம் ஆழ்ந்து தூங்குபவனைப் போல் கிடந்தான். அவன் மார்பிலே ஊசி குத்தியது போல் ஒரு சிறு கறுப்புக் குறி இருந்தது. அவ்வளவுதான். அவன் உடல் நீலம் பாரிக்கவில்லை; அங்கங்கள் திருகிக் கொள்ளவில்லை. அவன் கிடந்த தோற்றம் அவன் இன்னும் ஒரு பத்து வயதுக்கு முந்திய இளமையை அடைந்தது போல் பொலிந்தது. எதனாலும் ஊறு படாத வைரம்போல் பிரகாசித்தது அவன் தேகம்.

சாமிச்சேந்தனின் வீட்டுக்கு இருபது மைல் தூரத்தில் வசித்தார்கள் மாணிக்கத்தின் பெற்றோர். அவர்களை அழைத்து வர, கிராமத்து வாலிபர் சிலர் ஓட்டமாய் ஓடினார்கள். பொழுதுவிடிந்து அவர்களும் வந்து சேர்ந்த பின்புதானே சவச் சடங்குகளை நடத்த வேண்டும்? அதற்காகக் காத்திருந்தார்கள், சாமிச் சேந்தனின் விட்டில் உள்ளவர்கள்.

கோயிலிலே பண்டாரம் ஒரு மணி நேரமாய் ஓயாமல் சேமக்கலம் அடித்துக்கொண் டிருந்தான். அதன் சோக ரீங்காரத்தோடு கலந்து ஒலித்தது தம்பட்டச் சத்தம். இடையிடையே அலறின இரட்டைக் கொம்புகள். இந்தச் சத்தமெல்லாம் இரவின் இருளைக் குடிப்பதுபோல விட்டு விட்டு முழங்கின. அத்தனையும் ஒரே சோகமயமா யிருந்தது. ஆனாலும், நடுநடுவே இந்தச் சத்தம் நின்ற அமைதி யான இடைவெளி நேரங்கள்தான் மகா சோகமாய், பயங்கரமாக இருந்தன.

வாலிபனின் சவத்தை ஒரு வெள்ளைத் துணி மூடி யிருந்தது. அவனுடைய தலைமாட்டில் ஒரு பித்தளை விளக்கு எரிந்துகொண் டிருந்தது. அதன் ஒளியில், அறை முழுவதும் மங்கலாகப் பிரகாசித்துக்கொண் டிருந்தது. இறவாணத்தின் வழியாய்ச் சற்று நேரத்துக்கு ஒரு தரம் அறைக்குள் புகுந்து தயங்கிய காற்று, சுவர்களிலே பல நிழற் சித்திரங்களை விரித்தது; பின்பு, அலைந்து நடுங்கும் தீப ஒளியின் ஆட்டத்துக்கேற்றபடி, அதே காற்று இந்தச் சித்திரங் களை, அந்த அமைதியான சரீரத்தைச் சுற்றிலும் திரட்டிச் சுருட்டி வெளியேயும் தள்ளிவிட்டது.

கதவு திறந்திருந்தது. சடலத்தைக் காத்துக் கொண்டு அந்தக் கதவருகே உட்கார்ந்திருந்தாள் ஒரு கூனற்கிழவி. சற்று நேரத்துக்கு ஒரு தடவை அவள் எழுந்து அந்த விளக்குக்கு எண்ணெய் ஊற்றி, திரியைத் தூண்டிவிட்டுக்கொண் டிருந்தாள். கிரா மத்திலேயே பெரிய கிழவி அவள்தான். சாமிச்சேந்தன் சின்னஞ் சிறு குழந்தையாக இருந்தது முதல் அவனை அவளுக்குத் தெரியும். அவள் அவனுக்குத் தாய் வழியில் எட்டின உறவினள். சேந்தனை அவன் தாய் பிரசவித்தபோது, அவள் உதவி யிருக்கிருள். சேந்தனின் தாய் மாண்டபோது ஒப்பாரி வைத்திருக் கிருள். சேந்தனின் கல்யாணத்தைப் பார்த்திருக்கிருள்.

சேந்தனின் மகள் பிறந்தபோது, அந்தப் பிரசவத்தி லும் உதவியிருக்கிருள். சேந்தனின் சம்சாரம் மாண்ட போதும் ஒப்பாரி வைத்திருக்கிருள். உடைந்து கரகரத்த தன் பழங் குரலைப் பாய்ச்சி உரக்க நீட்டி முழக்கி இன்றும் கிழவி ஒப்பாரி வைத்துவிட்டாள். ஆனல், அவளுடைய கண்களில்மட்டும் ஒரு பொட்டுக் கண்ணீர்கூட வரவில்லை. ஒப்பாரிப் பாட்டுகளுக்குக் கிழவி ஒரு பொக்கிஷம் என்பது ஊரறிந்த-நாடறிந்த-விஷயம்.

சேந்தனுக்கு உள்ளத்திலுள்ளே அந்தக் கிழவி யிடம் மகா வெறுப்பு.

அவள் ஒரு பெரிய வாயரட்டை, வம்புக்காரி என்று அவனுக்குத் தெரியும். என்ருலும், தன் மனைவி இறந்த பின்பு வீட்டிலே தன் பெண்ணைக் கவனித்துக் கொள்ள யாராவது வயதான மனுஷி வேண்டாமா? அதனல் அவள் வம்பைப் பொறுத்துக்கொண்டான்.

கிழவிக்கு ஒரு குடிசை இருந்தது; ஒரே ஒரு மகனும் இருந்தான். அவன் எங்கேயோ சுற்றித் திரிந்துகொண் டிருந்தான். அந்த நாடோடி என்ருவது அத்தி பூத்தாற்போல் கிழவியின் குடிசைக்கு வருவான். வந்து, "சனியனே! நீ இன்னும் சாகவில்லையா?" என்று இவளைக் கேட்பான்; போய்விடுவான்.

கிழவியின் குடிசைக் கூரைக்கு மேலே புகை கிளம்பிய நாளைக் கண்டவரில்லை. அவள் அங்கே அடுப்பு மூட்டி யறியாள். குடிசையில் அவள் சோறு சமைக்கத் தேவையே இல்லை. எப்போது பார்த் தாலும் அவளுக்குச் சேந்தன் வீட்டிலேதான் வாசம். ஆனல், உளுந்தாயி வளர்ந்துவிட்டாள். அதற்குப் பிறகு, கிழவியின் சேவை அங்கே தேவையில்லாமற் போயிற்று. கிழவியின் தூற்றல் வலுத்தது. அவள் உறுமி ஊளையிட்டுக்கொண்டு வெளியேறி விட்டாள். "இந்தக் குடும்பத்துக்கு என் ரத்தத்தைக் கொடுத்து

உழைத்தேன். அதற்கு இதுதான் கூலியா? இந்தச் சின்னக்குட்டி உளுந்தாயி தான் என்ன பவிசு கொண்டாடுகிறது! அப்பனே ஒரு மடையன். பெண்ணுக்குச் செல்லங் கொடுப்பதற்கும் ஓர் அளவில்லையா?'' என்றெல்லாம் கிழவி தூற்றினாள். சாமிச்சேந்தனின் காதிலே இதெல்லாம் விழுந்தது. அவன் லட்சியம் செய்யவில்லை. என்னதான் நன்மை செய்தாலும் சரி; மனிதர்கள் சுலபத்தில் நன்றி காட்டுவதில்லை. இது சேந்தனுக்கு மிக நன்றாய்த் தெரியும்.

கிழவி என்ன என்னவோ குருட்டு யோசனைகள் செய்தபடி, மாணிக்கத்தின் சடலத்தைக் காத்துக் கொண்டிருந்தாள். சுவரிலே அலைந்து ஆடிக்கொண்டிருக்கும் நிழல்களோடு அவள் நிழலும் கூடி ஆடிக் கொண்டிருந்தது. மாலையில் நிகழ்ந்த துர்ப்பாக்கிய சம்பவங்களைப்பற்றிக் கிழவி பிரமாதமாய்க் கவலைப் படவில்லை. தன் மகனைப்பற்றியே அவள் சிந்தித்துக் கொண்டிருந்தாள். என்னதான் 'அழுகற் பூசணிக்கா' யாக இருந்தாலும், தான் பெற்ற பிள்ளையைக் கைவிட முடியுமா? கூனிக் கோணிய அவளது கிழ இருதயம் மகனிடம் வாஞ்சை நிறைந்திருந்தது. புளிச்சை பொங்கிய அவள் கண்களில் ஒரு கதம்ப சித்திரம் எழுந்தது – உளுந்தாயியும் தன் மகனும் மணையிலே ஜோடியாய் அமர்ந்திருக்கும் திருமணச் சித்திரம். இந்தத் திருமண யோசனையை ஒரு முறை துணிந்து சாமிச்சேந்தனிடமே அவள் சொல்லிவிட்டாள். அவன் சொன்ன பதில் கிழவியை ஒரேயடியாய் வாயடைத்து விட்டது. ''தொட்டிலிலேயே அவளுக்கு வரன் நிச்சயம் ஆகிவிட்டது. கண்மணி உளுந்தியை மாலையிடப் பிறந்திருப்பவன் மாணிக்கமாக்கும்'' என்று அவன் சொல்லி விட்டான். பல்லுப்போன அந்தக் கிழவி கோபங் கொண்டாள்; பித்திபோல் சிரித்தாள்; 'உ-ளு-ந்-தா-யி, உ-ளு-ந்-தி, உ-ளு'' என்று அழகு

காட்டுவதுபோல் வெட்டி வெட்டித் தனக்குத்தானே கூறிக்கொண்டாள்.

மாசற்ற மாணிக்கம் தன் மாமனைப் பார்க்க வந்தான் ஒரு நாள். ஆனந்தமான வரவேற்பும் சுவையான விருந்தும் காத்திருந்தன. அவற்றையெல்லாம் விட்டுவிட்டு, முன்னோர் போன வழியே அவன் போய் விட்டான். சர்ப்பம் அவன் ஜோலிக்கு வராதபோது, சர்ப்பத்தை அவன் போய்ச் சீண்டியிருக்கக்கூடாது. தன் சாகச ஆசையை அவன் அடக்கிக் கொண்டிருக்க வேண்டும். மாணிக்கம்! ஜோதி வீசும் பழுதற்ற மாணிக்கம் அல்லவா அவன்?

திரியிலே சுடர் தட்டியது. விளக்கு அணைந்தது. கிழவியின் சிந்தனை குலைந்தது. அறையிலே இருள் சூழ்ந்தது. கண்ணுக்குத் தெரியாத விதியின் கரங்கள் தனக்கு மாமியின் பீடத்தை இருளிலே தயாரித்துக் கொண்டிருப்பதாக அவளுக்குத் தோன்றியது. அந்தக் கரங்களிலேயிருந்து அவள் மகன் சொக்கனின் பாக்கியநாதன் நம்பிக்கையோடு எட்டிப் பார்ப்பது போலவும் அவளுக்குத் தோன்றியது. அறையின் மூலையிலே அரசிலைபோல் அமைந்த ஒரு மாக்கல் விளக்கு மங்கலாய் ஒளி செய்துகொண் டிருந்தது. கிழவி தட்டித் தடவி அதனிடம் சென்று அதை எடுத்துக்கொண்டு வந்து பித்தளை விளக்கை மீண்டும் ஏற்றி, அதில் எண்ணெயும் வார்த்தாள். மறுபடியும் கதவருகே போய் முன்போல் உட்கார்ந்தாள். சிறிதும் பற்றற்றவளாக வெறுப்போடு சவத்தை உற்றுப் பார்த்தாள்.

பொழுது விடிந்ததும் இந்தச் சவத்தைக் கழுவிக் குளிப்பாட்டுவார்கள். மாணிக்கத்தின் தாய் இருந்தால், அவள் ஆறுயக் கண்ணீர் பெருக்குவாள்; விரல் பதிந்து தழும்பேற மாரடித்துக் கொள்ளுவாள்; மண்ணிலே விழுந்து புரளுவாள்; தொண்டை வறண்டு கம்மக் கதறியழுவாள். 'இத்தனையெல்லாம் செய்

தாலும், என்னைப்போல் வக்கணையாய் ஒப்பாரி வைக்க அவளால் முடியுமா?' என்று எண்ணினாள் கிழவி. சவத்தை ஒரு முறை குனிந்து பார்த்தாள். அதன் முகத்தை உள்ளங்கையால் தடவிப் பார்த்தாள். அடுத்த கணத்திலே திடுக்கிட்டு நடுங்கிக் கையைப் பின்னே இழுத்துக்கொண்டாள். சவத்தின் கன்னங்கள் கதகதப்பாயிருந்தன. மூக்குங் கூடத்தான் அப்படி இருந்தது. கண்ணிமைகள் விதிர்த்தன. இதென்ன வெறும் பிரமையா? அல்லது திறந்த கதவின் வழியே புகுந்து விளக்குச் சுடரையும் சுவர் நிழல்களையும் அலைத்த காற்றின் வேலைதானோ? பொல்லாத சர்ப்பம் தீண்டிச் சுமார் ஆறு மணி நேரம் கழிந்து விட்டது. இன்னமும் மாணிக்கத்தின் உடம்பிலே கதகதப்பு மாறவில்லை; அது மிருதுவாகவே இருக்கிறது. அவன் ரத்தத்திலே ஏதாவது அபூர்வ சக்தி இருந்திருக்குமோ? விஷத்தின் வேகத்தை அது முறித்திருக்குமோ? அவன் ஆழ்ந்த மயக்கத்திலேதான் விழுந்து கிடக்கிறானோ? அது தெளிந்து மீண்டும் விழித்தெழுந்து விடுவானோ? என்ன அதிசயம்! என்ன அதிசயம்! கிழவி மறுபடியும் சவத்தின் முகத்தைக் கூர்மையாய்ப் பார்த்தாள். தன் பிரமையைப்பற்றித் தானே புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டாள். அவன் சந்தேகமின்றிச் செத்துப் போனான். செத்தும் சில பேரின் உடம்பு சீக்கிரத்திலே விறைக்காது. மாணிக்கமோ உரம்படைத்த காளை அல்லவா?

இரவிலே இரண்டாம் ஜாமம் முடிந்தது. வான விதானத்தில் தாரகைகள் வேறு கோலம் போட்டன. வீட்டுக்கு வெளியே பெரிய திண்ணையில் சேந்தன் தூங்கிக்கொண்டிருந்தான். மரண தண்டனை அடைந்தவனுக்கு உலகமே பாழடைந்து இருளாய்த் தோன்றும். சித்தமும் அறிவும் சூன்யமாய்ப் போகும்; ஏதுமே புரியாது. இப்படி மரணதண்டனை அடைந்தவனைப்போல்தான் சேந்தனும் அடியோடு சோர்ந்து

கிடந்தான். இடி விழுந்தது போல் அவனுக்கு இந்தத் துயரம் நேர்ந்தது. தன் தங்கையையும் அவள் புருஷனையும் எந்த முகம் கொண்டு இவன் சந்திப்பான்? உற்றாரும் உறவினரும் சூழக் கல்யாணத்துக்கு வரவேண்டிய அவர்கள் இப்போது அவன் இழவுக்கு வருகிறார்கள். மகளை எத்தனையோ சமாதானப்படுத்தினாலும், தன்னைத்தானே சமாதானப் படுத்திகொள்ளச் சேந்தனால் துளியும் முடியவில்லையே! நேர்ந்திருக்கும் துன்பம் மகா கொடுமையானது.

துக்க ஏக்கத்தில், உளுந்தாயி தன்னையே நொந்து கொண்டாள். மல்லிகைப் புதரிடம் போன மாணிக்கத்துக்கு அவள் துணைதான் சென்றாளா? நாகமாணிக்கம் வேண்டுமென்று கேட்டு, யமனிடமன்றோ அவனை அவள் அனுப்பிவிட்டாள்! அவள் கேலிக்காகக் கேட்டதை உண்மை என்று நம்பி, அவன் கிளம்பி விட்டான். அவள்தான் மகாபாவி; அவளையன்றோ அந்தச் சர்ப்பம் தீண்டியிருக்க வேண்டும்? — உளுந்தாயி இப்படியெல்லாம் கதறினாள்; தன்னைத் தானே திட்டிக் கொண்டாள்; பித்துப் பிடித்ததுபோல் ஆனாள். கன்னிப் பெண்ணுக்கு இருக்கவேண்டிய நாணத்தை யெல்லாம் காற்றிலே தூற்றிவிட்டாள். அவனைக் கட்டியணைந்தாள்; முத்தமிட்டாள்; கண்ணீர் சொரிந்தாள். அவனை மணம் புரிய நிச்சயம் செய்திருந்த பெண் அவள். இது ஊருக்கெல்லாம் தெரியும். அது போதும்; வேறு என்ன வேண்டும்? தன் ஆசை பாழானால் என்ன? வருங்காலம் துக்க மயமானால்தான் என்ன? மாணிக்கத்தின் உடல் அருகே அவள் உட்கார்ந்தாள்; மெல்லப் பேசினாள். அவனை அன்போடு அழைத்தாள்; ஆழ்ந்து தூங்கும் குழந்தையை எழுப்புவது போல் கெஞ்சி எழுப்பினாள். ஆனால், அவன் போய்விட்டான்; ஒரு நாளும் அவளிடம் திரும்பி வராத இடத்துக்கு அவன் போய்விட்டான்!

இந்த வேதனையால் அவள் ஒடிந்து விழுந்தாள். என்றாலும், மாணிக்கத்தை விட்டு அப்பால் நகர மறுத்து விட்டாள். அவன் மார்பிலே தன் தலையைப் புதைத்துக் கொண்டாள். திராணியற்றுச் சோர்ந்த அவள் கண் இமைகள் மூடிக் கொண்டன. அவளைச் சேந்தன் அப்படியே தன் கைகளால் ஏந்தித் தூக்கிக் கொண்டு போய் மெல்லச் சின்னத் திண்ணைக் கட்டிலிலே கிடத்தினான். இதில்தானே எப்போதும் இரவில் அவள் தூங்குவது வழக்கம்?

தூக்கத்தில் அவள் புரண்டு படுத்தபடி என்னவோ முனகினாள்.

இதோ சில மணிநேரத்துக்கு முன்புதானே நடந்தது? அது கேவலம் எப்படி ஞாபகத்தில் போய் முடங்கும்?

பிரத்தியட்சமாய் அந்தக் காட்சி இன்னமும் நிகழ்ந்துகொண் டிருப்பது போலவே அவளுக்குத் தோன்றியது.

''உளுந்தி உளுந்தி'' என்று கொஞ்சும் குரல் ஒன்று அவள் காதிலே கிசுகிசுத்தது. வேதனையால் ஓலமிடும் கீத இனிமை அந்தக் குரலிலே தோய்ந்திருந்தது.

அந்தி மயங்கியது. அவள் சமையல்கட்டிலே இருக்கிறாள்.

''உளுந்தி, மல்லிகை அரும்பு உன்னைக் கூப்பிடுது; வா.''

அடுப்பிலே கொதித்துக்கொண் டிருந்த கஞ்சியை அகப்பையால் துழாவிக்கொண்டு அவள் நின்றாள். அவன் குரல் காதில் விழாததுபோல் பாசாங்கு செய்து பேசாதிருந்தாள். திரும்பத் திரும்ப அந்த அன்புக் குரலைக் கேட்பதிலே அவளுக்கு ஆசை. அவள் இதழ்க்கடையிலே புன்னகை அரும்பியது.

"அத்தனையையும் நானே பறிக்கணும் என்றிருக்கியா?"

அவள் சட்டென்று அவன் முகத்துக்கு நேரே திரும்பி, "ஆமாம்; பச்சை அரும்பு அத்தனையையும் நீ பறிக்கணும் என்றிருக்கேன்" என்று சொல்லிக் குறும்புச் சிரிப்புச் சிரித்தாள்.

"அரும்பு என்று கட்டினால் பூ மலருது. எந்த அரும்பாய் இருந்தால் என்ன?"

"அது நெசந்தான். ஆனா அதெ நீ மலர விட்டால் தானே மலரும்? நீதான் பச்சைக் குளந்தை மென்னியைத் திருகுறாப்பிலே பச்சை மாறாத அரும்பையே பறிச்சிடுறையே!"

"இதோ இந்த மாதிரியா?" என்று சொல்லிய அவன், கள்ளத்தனமாய் அவள் கன்னத்தைக் கிள்ளினான்.

"இந்தா, இந்தச் சரசமெல்லாம் நம்ம கிட்ட வெச்சுக்காதே!" என்று அவள் சீறிவிட்டு, புதரைச் சுற்றி ஓடத் தொடங்கினாள்.

அவன் அவளைத் துரத்தித் தன் கைகளிலே பிடித்துக் கொண்டான்.

அவள் இருதயம் விம்மியது. உள்ளத்தே வெடித்தெழுந்த ஜோதியொன்று முகமெல்லாம் சூழ்ந்த ஒரு புன்சிரிப்பாய்ப் படர்ந்தது.

திகிலடைந்ததுபோல் திடீரென்று, "இதோ பார்!" என்று அவன் கூறினான்.

"என்ன?" என்று அவள் கவலையோடு கேட்டாள்.

"அரும்பெல்லாம் போச்சே!"

"எங்கே போச்சு?"

"உன் வாயிலே!"

இருவரும் சிரித்தார்கள்.

"மீதிக் கதையைச் சொல்லு; சுருக்க. அப்பா வரத்துக்குள்ளே சொல்லு. பிறகு அந்தப் பொண்ணு என்ன ஆச்சு? சர்ப்பம் என்ன ஆச்சு? அது அவளுக்கு நாகரத்தினத்தைப் போட்டுதா?" என்று அவள் மூச்சு விடாமல் கேட்டாள்.

"பொண்ணு...நாகரத்தினம்...சர்ப்பம்..." என்று அவன் இழுத்தான்.

அவன் குரல் மாறுபட்டதைக் கண்டு, உளுந்தி திடுக்கிட்டாள்.

"மாணிக்கம்! மாணிக்கம்!" என்று அவள் கத்தினாள். உடம்பெல்லாம் வியர்வையிலே முழுகியவளாய் விழித்தெழுந்தாள். எங்கேயோ தூரத்தில் எழுந்த எதிரொலிபோல வார்த்தைகள் அவள் வாய்க்குள்ளே மடிந்தன. அவள் உள்ளத்திலுள்ளே ஏதோ ஒரு சக்தி பொங்கி எழுந்தது. அந்த வேகம் தாங்காமல் சுற்று முற்றும் பார்த்தாள். அமானுஷ்யமான என்னவோ ஒரு மாயப்பாசம் தன்னை வந்து மயக்கிப் பிடித்திழுப்பதுபோல் தோன்றியது. அவள் பயத்தால் வெளிறிப்போய் நடுங்கினாள். வேறொன்றும் அல்ல; அந்த மல்லிகைப் புதர்தான். ஆனால், அவள் நாள்தோறும் அன்பு கனியப் பார்ப்பாளே, அப்படியில்லை இப்போது அது.

பிறைச்சந்திரன் வானத்திலே ஒளி வீசிக்கொண்டிருந்தது. புதர் ஒரே அக்கினி ஜ்வாலைபோல் பிரகாசித்தது. வானத்திலிருந்து வரும் நிலவொளி அல்ல இது. இந்த அற்புத ஜ்வாலையின் கர்த்தா, புதர் அருகேயிருந்த வேறு ஒரு ஜீவனே. அது அந்தச் சர்ப்பமேதான்.

ஒருபுறம் பயம் சூழ, மறுபுறம் கவர்ச்சி உந்த உளுந்தி பார்த்தாள். அந்திம நேர வேதனையிலே சர்ப்பத்தை மாணிக்கம் கொல்லத் தவறிவிட்டானோ என்னவோ என்று திடீரென்று அவளுக்கு ஓர்

எண்ணம் உதித்தது. தட்சணமே அவள் பயம் குறைந்தது. ஆனால், விறும் தன் ரத்தத்தைச் சுட்டெரித்தபோது சர்ப்பத்தைத் தன் கைத் தடியால் ஒரே போடாய்ப் போட்டு தீர்த்துவிட்டதாக அவன் நிச்சயமாய்ச் சொன்னனே: என்றாலும் அந்த இருளி லும் குழப்பத்திலும் அதை யாரும் சோதித்துப் பார்க்கவில்லை. அல்லது அது உண்மையிலே செத்துப் போயிருக்க, ஒருவேளை அதன் ஆவி இந்த உலகத்தை விட்டுப் போகாமல் இப்படிச் சுற்றிக்கொண்டிருக் கிறதோ? பாம்புகளுக்கும் ஆவி இருக்கலாம்; இல்லை யென்று யார் கண்டார்?

ஆவியோ, உண்மைச் சர்ப்பந்தானே? எப்படி யானாலும், அவளை அது மனோவசியம் செய்து விட்டது. அதன் ஜோதி அவள் கண்ணைப் பறித்தது. சுருண்டு படுத்துக்கொண்டிருந்த சர்ப்பம் துள்ளி யெழுந்து தலையெடுத்து மெல்ல மெல்ல நீண்டு நிமிர்ந்து, சரமாரியாய்ப் பலவர்ண மத்தாப்புப் போல் ஒளி வீசிக்கொண்டே, வால் நுனியைப் பூமியிலே பதித்து நின்று படம் விரித்தாடியது. பிளவுபட்ட அதன் நாக்கு வெளியே நீண்டது. உ-ஸ்-ஸ்-ஸ் என்று சீறிய பெருமூச்சு அதன் வாயினின்று வீசியது. அப்போது திடீரென்று ஓர் அதிசயம் நிகழ்ந்தது. மல்லிகைப் புதர் தன் இருதயத்திலே ஒளித்து வைத் திருந்த ஒரு சூறுவளியை வெளி விட்டதுபோல், ஒரு குலுங்கு குலுங்கியது. அதன் அரும்புகளும் மலர்களும் சந்தடியற்ற மலர்மாரி போல் சர்ப்பத்தின் படத்திலே சொரிந்தன. சர்ப்பம் தன் மணி மகுடத்திலிருந்து ஒரு மாணிக்கத்தை அந்த வீட்டை நோக்கி மகாவேக மாய் வீசி உமிழ்ந்தது. உளுந்தாயியின் கண்ணுக்கு முன்னே மீண்டும் சர்ப்பம் அந்தப் புதரிலே போய் முடங்கியது. அவள் இதையெல்லாம் கண்டாள். ஓடிப்போய்த் தகப்பனைத் தூக்கத்திலிருந்து எழுப்ப எண்ணினாள். ஆனால் அவள் அசையவில்லை; கத்தவும்

இல்லை. கட்டிலிலேயே கிடந்தாள். செத்துப் பிறந்த குழந்தைபோல், அவளுடைய எண்ணம் அவள் மனத்திலேயே மடிந்தது. கிலிகொண்ட மனத்திலே மின்னல்போல் பாய்ந்த எண்ணந்தானே அது? பனிக்கட்டி தீண்டியதுபோல் உடம்பு விதிர்த்தது; கிலி அடங்கியது.

பின்பு, அவள் மிகவும் அதிசயமான மற்றும் சில நிகழ்ச்சிகளைக் கண்டாள். இரவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு, மதுரகீதம் ஒன்று அவள் காதிலே விழுந்தது. இப்படிப்பட்ட கீதத்தை எத்தனையோ முறை அவள் கேட்டிருக்கிறாள். அருவியில் பாயும் நீர், பருக்கை மணிகளின்மீது சலசலத்துச் சுழல் எழுப்பிக் குமிழியிட்டு மடிவதுபோன்ற மதுரகீதம். அதை அவள் உற்று உற்றுக் கேட்டாள். அவள் கண்கள் அந்தப் புதரிலே ஒருமுனைப்பட்டுப் பதிந்தன. மகுடியிலே மந்திர கீதம் எழுப்பிய பிடாரன்தான் அங்கே நிற்கிறானோ என்று அவள் கவனித்தாள். பிடாரனின் உருவத்தை அங்கே காணவில்லை. ஆனால், அவனைப் போலவே சர்ப்பமும் அந்தக் கீதத்தைக் கேட்டிருக்கிறது. ஏனென்றால், அது துள்ளி எழுந்து, நாகப் பிரதிஷ்டைச் சிற்பம்போல் நிமிர்ந்து நின்றது. அடுத்த கணத்தில் அது உயிர்பெற்று நர்த்தனமாடியது; முன்னும் பின்னும் ஆடிச் சுழன்றது. தழுதழுத்துக் கார்வையான கமகம் பேசியபோது, சர்ப்பத்தின் உடலெல்லாம் புல்லரித்தது. ஸ்வரங்கள் மாறி, மணி உதிர்வதுபோல் அடுக்கடுக்காய் உதிர்ந்து, ஆரோகணித்து உச்சஸ்தாயியை எட்டியபோது, சர்ப்பம் உப்பிச் சுழன்று கரணங்கள் போட்டது; சீறிச் சீறி, வாயினின்றும் எண்ணற்ற சொர்ணப் பொறிகளை உதிர்த்தது. பின்பு திடீரென்று மின்னலைப் போல் பாய்ந்து, புதரை வலம் வந்தது; படமெடுத்துத் தரையிலே ஒரு முறை, இரு முறை, மும்முறையும் கொத்தி ஆணையிட்டது. உடனே,

புதரில் ஓர் அக்கினி ஜ்வாலை கிளம்பியது. உளுந்தி ஆச்சரியமும் பயமும் நிறைந்தவளாய் இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் பார்த்துக் கொண்டேயிருக்கும்போது, சில நிமிஷ நேரத்தில் புதர் பஸ்மமாய் எரிந்து தரை மட்டமாகி விட்டது. கீதமும் நின்றது.

காலை நேரத்தில் உளுந்தி ஆழ்ந்து தூங்கினாள்.

யாரோ அவள் தோளைத் தொட்டுக் குலுக்கிக் கொஞ்சும் குரலில் அழைத்தார்கள். அவள் திடுக்கிட்டு எழுந்தாள். அவளை எழுப்பியவன் அவள் தகப்பன் தான்.

"உளுந்தி, என் கண்ணே, மாணிக்கம் உன்னை அழைக்கிறான்."

"யாரு?" என்று பேராச்சரியத்துடன் கேட்டாள் உளுந்தி. அவள் தலை சுழன்றது; மூச்சுத் திணறியது.

"நெஞ்சைத் திடப்படுத்திக்கொள், மகளே!" என்று சொல்லிய சேந்தன், அவளைத் தன் புஜத்திலே தூக்கி அணைத்துக்கொண்டான். கலவரம் அடைந்தவளாய், தகப்பனின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள் உளுந்தி.

"மாணிக்கந்தான்; உன் மாணிக்கமேதான். அவன் நமக்குச் சாமி கொடுத்த வரம். பாம்பு அவனைத் தீண்டவில்லை; லேசாய்க் கீறியிருக்கிறது. அவன் ரத்தத்திலே விஷம் ஏறவில்லை. அதிர்ச்சியால் அவன் பெரு மயக்கம் போட்டு விழுந்திருக்கிறான். கொஞ்சம் பலவீனமாகி இருக்கிறான்; அவ்வளவுதான்."

உளுந்திக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. உதய சூரியனின் செங்கதிர்களும் காலையிளம் புதுமையும் குருவிகளின் கீதமும் தன் ஆத்மாவிலிருந்தே வெளியில் பரந்து பரிணமித்ததுபோல், அவள்

குதூகலம் கொண்டாள். மாணிக்கம் கிடந்த அறைக் குள்ளே பாய்ந்தோடினாள்.

* * * *

மாணிக்கமும் உளுந்தாயியும் மணம் புரிந்து கணவனும் மனைவியும் ஆனார்கள்.

இதைவிட அழகான, ஆனந்தமான திருமணத் தையோ, தம்பதிகளையோ கிராமத்திலே அதற்கு முன் யாரும் கண்டதில்லை.

மணவறையில் தானும் தன் கணவனும் தனியே இருக்கும்போது, உளுந்தாயி அன்றிரவு தான் கண்ட அற்புதங்களை அவனிடம் சொன்னாள். அப்போது மாணிக்கம் அதை நம்பவில்லை. தான் கொன்ற சர்ப்பத்தின் அடையாளத்தைப் புதர் அருகே சென்று தேடினான். அந்த அடையாளம் ஒன்றும் அங்கே கிடைக்கவில்லை. ஆனால், ஒரு நாகரத்தினமே கிடந்தது. அதைக் கண்டபின்பே உளுந்தி சொன்ன அற்புதங் களை அவன் நம்பினான். சர்ப்பம் மறைந்துவிட்டது. எங்கே போயிற்றோ, யார் அறிவார்?

அந்த நாகரத்தினம் சேந்தன் குடும்பத்தின் ரகசிய உடைமையாகும். மாண்ட மாணிக்கத்தின் உடம்பி லிருந்து விஷத்தை நாகம் தானுகவே திருப்பி எடுத்துக் கொண்டு, அவனைப் பிழைப்பு மூட்டிவிட்டது என்றே உளுந்தி நிச்சயமாய் நம்புகிறாள்.

சர்ப்பக் குறி போட்ட சின்னஞ்சிறு பருக்கைமணி ஒன்று மல்லிகைப் புதரிலுள்ள பொந்தின் வாயருகே இன்றும் கிடக்கிறது.

ஒவ்வொரு நாள் காலையிலும் பக்தி சிரத்தையாய் உள்ளங் குழைந்து ஒரு குவளை பாலை உளுந்தாயி அந்தப் பருக்கை மணிமீது ஊற்றி வருகிறாள்.

வருஷம் முழுவதும் இந்த மல்லிகைப் புதர் பூத்துச் சொரிகிறது. உளுந்தாயியின் மல்லிகைச்

செடி பூத்துச் சொரியும் பூவைப்போல வேறெந்த மல்லிகைப் பூவும் இவ்வளவு அழகும் இவ்வளவு மணமும் வாய்ந்திருக்கவில்லை என்று கிராமத்தார் சொல்கிறார்கள். இந்த மல்லிகைப் பூவின் அழகும் மணமும் எவர் உள்ளத்தையும் கொள்ளை கொண்டு விடுகின்றன.

இப்படி எல்லோரும் புகழ் பாடும்போது, ஒரே ஓர் அபஸ்வரக் குரல் மட்டும் கேட்கிறது. அது அந்தத் தூறு சொல்லும் கூனற் கிழவியின் குரல் தான். அவள் வாசனையே தன் வீட்டில் படக்கூடாதென்று சாமிச்சேந்தன் அவளை விலக்கிவிட்டான்.

முற்றும்

B... ...ed by the University
c... Co-op. Stores, Madurai.